ஸ்ரீ

மத்யார்ச்சுன ஸ்தல மான்மியம்

என்னும்

மருதவன புராணவசனம்.

இஃது
திருவாவடுதுறை ஆதீனம் ஐஸ்கூல்
தமிழ்ப்பண்டிதர்
திருவிடைமருதூர்
ம. சோ. பிச்சைய தேசிகர்
இயற்றியது.

1924
யதார்த்தவசனீ பிரஸ்,
கும்பகோணம்.

விலை ரூ 1.

ஸ்ரீ

மத்யார்ச்சுன ஸ்தல மான்மியம்

என்னும்

மருத்வன புராணவசனம்.

இஃது

திருவாவடுதுறை ஆதீனம் ஐஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

திருவிடைமருதூர்

ம. சோ. பிச்சையதேசிகர்

இயற்றியது.

1924

யதார்த்தவசனீ பிரஸ்,

கும்பகோணம்.


விலை ரூ. 1.

முகவுரை.

இச் சோழவள நாட்டிற் சிறந்த கும்பகோணத்தருகிலிருக்கின்ற கொட்டையூரிற் புலவர் சிகாமணியாய் விளங்கியிருந்த ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகமூர்த்தி இத் தமிழுலக முய்யும் வண்ணந் தமிழ்ச் செய்யுளாகச் செய்தருளிய மிக்க பெருமைபெற்ற மருதவன புராணத்தைச் சொல்லக் கேட்டு, மூர்த்தி தலந் தீர்த்தமாகிய மூன்றின் பெருமைகளை நன்குணர்ந்து மகிழ்வுற்ற, சிவநேசச் செல்வராகிய டிப்டி சர்வேயர் கனம் A. R. சுந்தரசாமி ஐயரவர்கள் இதனை வசனரூபமாகச் செய்து வெளிப்படுத்தின லித்தமிழுலகிற் கல்வி யறிவி லெளியவர்களும் வாங்கி, வாசித்தறிந்து, வழிபாடு செய்துய்வார்களெனக் கருதித் திருவிடைமருதூர் தெற்குராதவீதியிலிருக்கிற கனந்தங்கிய சோமசுந்தர தேசிகமூர்த்தி குமாரரும், திருப்பனந்தாளாதீனங் காசிவாசிச் சுவாமிகளாய்க் கற்றவர்க்கு நற்றுணையாய்க் கல்விக் கடலாய் விளங்கியிருக்கிற ஸ்ரீ-ல-ஸ்ரீ சொக்கலிங்க சுவாமியவர்களிடத்திலும், என்னிடத்திலும் இலக்கியமுமிலக்கணமுங் கற்றுக் கொண்டவருமாகிய பிச்சையதேசிகரைத் தமிழில் எளிய நடையில் வசனரூபமாகச் செய்து வெளியிடும்படி வேண்டிக்கொள்ள அவ்வாறே செய்தனர். அவ்வாறு செய்த இம் மருதவனபுராண வசனத்தை யானும் மேற்கூறிய ஸ்ரீ-ல-ஸ்ரீ சொக்கலிங்க சுவாமியவர்களும் பார்வையிட்டு, தமிழுலகிற் குபகாரமாக எளிய நடையி லெழுதி யிருப்பதையும், இவ்விதமாக வெழுதத் துணிந்து முன்வந்ததைப் பற்றியும் மிகவும் மகிழ்ச்சியடைந்தோம். யாங்களிருவருஞ் சுதந்தரம்பற்றி மகிழ்ச்சியுறுவ தியல்பேயாமெனவிடுத்துத் திருக்கைலாயபரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்தி லெழுந்தருளியிருக்கிற அருந்தவத்துப் பெருந்தகைமையுற்ற கருணை வள்ளலாகிய மகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ வைத்தியலிங்க தேசிக சுவாமியவர்களிடத்திலும், காசிவாசிச் சுவாமிகளாகி இளவரசுப் பட்டத்திலிருக்கிற, அதிநுட்ப விவேக திவாகர விதரண சிந்தாமணியாய் விளங்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ சாமிநாத சுவாமி அவர்களிடத்திலுங் காட்ட இருவருந் திருக்கண்சாத்தி நன்று யிருக்கிறது. உலகிற் குபகாரந்தானென்று திருவாய் மலர்ந்தருளினர்கள். ஆதலாலிதனை வாங்கி வாசிப்போரும், மனையில் வைத்துப் பூசிப்போரும் இம்மை, மறுமைப் பயனடைந்து பேரானந்தப் பெருவாழ்வையு மடைவார்களென நினைத்திருக்கின்றேன். சுபம்.

இங்ஙனம்

திருவாவடுதுறை யாதீன வித்துவானும்
மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் சைவநூற் பரிசோதகருமாகிய
சே. ரா. சுப்பிரமணியக் கவிராயர்.

உ

சிவமயம்.

ஸ்ரீ மகாலிங்கஸ்வாமி துணை.

மருதவன புராண வசனம்.

பாயிரம்.

கடவுள் வாழ்த்து.

ஆண்ட விநாயகர்.

உலகமுணர்ந் திடுகருணை யதனொடுநெஞ் சகமதினீ டுவகையெய்தி
யலகில்புக ழுறுகவிகை நிழலதின்மெய் யன்பர்குல மதனைக் காக்கக்
குலவுமுப ரிடதவரி யணைமீது பரசெழிற்செங் கோல்கைக் கொண்டாங்
கிலகுமிடை மருதாண்ட விநாயகனை யெப்பொழுது மிறைஞ்சி வாழ்வாம். 1

வாழ்த்து.

வேறு.

பூவுல கிதனு ளெங்கும் புகழுறு சுருதி வேள்வி
மேவுமா கமநன் னூல்கள் விளங்குக வளங்க ணீடு
பாவுக மதிக்கோர் மூன்று பயின்மழை பொழிக நாளுங்
காவிரி வருக வாரி காவலன் செங்கோல் வாழ்க. 2

நூற்பயன்.

வேறு.

போற்றலுறு மருதவனப் புராணமென்னப்
புகலிதனைப் படிப்பவர்கள் கேட்போரியாரு
மாற்றரிய வினையினொடு பகையைவென்று
மன்னுநெடுஞ் செல்வமொடு மகவுமெய்தித்
தேற்றலுறு புவியினிடை நீடுவாழ்ந்து
திகழுறுவின் னுலகில்வள ரின்பந்துய்த்துச்
சாற்றரிய பரஞான மருவியீசன்
சரணபங் கயநிழல்வீற் றிருப்பர்மன்றே. 3

மகாலிங்கேசர்.

வேறு.

பூமேவு திசைமுகன்மா லெனுமவரும் போற்றரிதாய்ப் பொருவி லாதாய்
நாமேவு செழுமறையி னுட்பொருளா யகண்டிதமாய் நளின மென்னு
மாமேவு மலர்வாவிக் கயல்வாவிக் கனியுதிர்க்கும் வளத்தி னீடு
தேமேவு பொழில்புடைசூ ழிடைமருதின் வளரொளியைச் சிந்தை செய்வாம். 4

ஏகநாயகர்.

தேறுபுக ழிடைமருதி லுறையேக நாயகன்றன் செய்ய தாளு
மூறுமது மலர்க்கூந்தற் பசியமயி லுறையிடமு மோங்கு கங்கை
யாறிலகு சடைமுடியு மைம்முகமு நாற்றோளு மணிமுக் கண்ணுங்
கூறுதிற லிருமானு மொருமழுவு மனவரதங் குறித்து வாழ்வாம். 5

மருதவாணர்.

ஒருதவள மால்விடைமேற் புகலவுறு மொருசிருட்டி யுதயந் தன்னிற்
பொருதனிவான் சிலைநுதல்வேற் றடங்கணுமை யணங்கினொடு புவன முய்யக்
கருதிமையோர் கணம்புடைசூழ் கயிலையினின் றணைந்தனைய கயிலை யென்னு
மருதநிழ லிடத்துறையு மருதவாணக் கடவுண் மலர்த்தாள் போற்றி. 6

பெருநலமாமுலையம்மை.

பொன்னிலகு பனிவரைக்கண் முளைத்தருள்வண் டளிர்குழைத்துப் பொற்பி னோங்கிப், பன்னுமிள மதிச்சடிலப் பவளமலை யிடத்தினிது படர்ந்து மேன்மை, யென்னுமுகை முகிழ்த்துவகை பூத்துமணங் கிடைமருதி லிமை யோர் போற்ற, மன்னுபுகழ்ப் பெருநலமா முலையெனச்சொல் பசுங்கொடியை வணங்குவா மால். 7

வயிரவர்.

வேறு.

மேலையோர் கற்பத் திறுதியிற் கதிர்கண் மேவுடுக் கணங்கள்கீ ழுறத்தீம்
பாலையொத் திடுசங் கீன்றமுத் தினங்கள் பரந்திடப் புவியிடத் தெழுந்த
வேலையின் மிதந்த புகலியந் தோணி விளங்கிடு வடுகனுங் கடவுள்
காலைமென் போதை யுச்சியிற் கொள்வாங் கடுந்துயர் மாலைதீர்ந் திடவே. 8

படித்துறைவிநாயகர்.

வேறு.

வடித்துறைவே லனகருங்கட் பாவையர்க ளொடுமெருதம் வயங்கு வாள் விற், பிடித்துறைநன் களிக்குழுகி லுலவுமலர்ப் பொழிலினிடைப் பெருகு செக்தேன், குடித்துறைவண் டினங்களுமோ திடைமருதின் மருதீசர் கோயின் மேவு, படித்துறைக்குஞ் சரத்தின்மலர்ப் பதத்துணையை மனத்துணையாப் பதித்து வாழுவாம். 9

குமாரக்கடவுள்.

சத்திதனை யனைவள்ளி காந்தனைக்கந் தனையசுரர் தம்மை வென்ற
சத்திதனை யுறுமலர்க்கைத் தலத்தனையன் போர்கடமி தயமாம் பங்க
சத்திதனையிடைமருதூர்க்குமரனைநெஞ்சேபணியென் றன்பான் மன்னே
சத்திதனை யவனுகர்தின் னருளெனக்குத் தருமதன் சகாயமா மால். 10

திருநந்திதேவர்.

முழுதுலகு நிறைபிரமம் பரமனே யெனமறைகள் மொழியுந் தன்மை
வழுதியின்பான் மூதுகிலடி படுபொழுதிற் கண்டிருந்து மயங்கு வோர்க்குக்
குழுவுறுமால் விரிஞ்சன்முதல் வானவர்மேற் கைப்பிரம்பு கொண்டு தாக்கிச்
செழுமணித்தண் கயிலையின்பாற் றெளிவிக்கு மவன்மலர்த்தாள் சிரத்திற்
[கொள்வாம். 11

நாமகள்.

எழுத்தசைசொற் பொருளுதவு மணிகளிரு வகைபெறுபா வினங்கள் கொண்டு
மழுத்தடக்கைக் கடவுளிடை மருதவனு வடசொனுறு மான்மியத்தை
வழுத்திடத்தென் றமிழுதிரு மினிதுபுரிந் திடுகவென மகிழ்ந்து வண்டின்
குழுத்தமைப்பெற் றிடுதவள பங்கயத்தி லுறைந்திடுபூங் கோதை தானே. 12

தமிழாசிரியர்.

புவியினகத் திருளொதுக்கி வானெய்தி யறியவுறு பொருள்கள் காட்டிச்
சவிமருவிப் பொலிபரிதித் தமிழினிது தோன்றுகுண சயிலந் தன்னைக்
குவிதிரைத்தண் பெருங்கடலை நெடுங்கிரியை யடக்குசிறு குடங்கை யானை
நவியமெடுத் திடுபரனுக் குரியவனைப் பணிகுவதே நமக்கு வேலை. 13

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

சிவஞானக் கடலருந்திக் கருமைகொடு திசைகளெங்குந் தெரிய மின்னித்
தவரினஞ்சூழ்ந் திடவுலக முணரவிடித் தமண்கோடை தணப்ப வோங்கு
புவனமதிற் சைவநெடும் பயிர்தழைப்பப் பரங்கருணைப் பொருப்பின் மீது
கவிமழைகள் சொரிபுறவக் கவுணியக்கொண் டலைநாளுங் கருத்துள் வைப்பாம்.

திருநாவுக்கரசுநாயனர்.

வடமருவு தென்னிழ்லிற் கருணைவடி வாய்விளங்கு வரதன் மேலை
விடமமிர்த மெனப்பருகிச் சூலந்தோண் மிசையேற்று விடைமேற் கொண்டு
தடமருவு தாணியிடைத் திகழ்ந்திடுவா கீசர்பத சரோருகத்தைத்
திடமுறுமன் பொடுதினமுஞ் சிந்திப்போந் துயர்களெல்லாஞ் சிந்திப்போமால்.

சுந்தரமூர்த்திநாயனார்.

முதலைவள ராருறு தந்திடவை யாறெய்தி முடிவில் லாத
முதலைநெடுந் தமிழொடுசெந் தமிழ்க்கவிதை யாற்றுதித்து மொழியா விக்கண்
முதலையொரு மகவுதரச் செய்துகந்த முன்னோனை முகிழ்மென் கொங்கை
முதலையிதழ்ப் பரவைமணா ளனைவணங்க நமதெண்ண முற்றுந் தானே. 16

மாணிக்கவாசகசுவாமிகள்.

வந்திதனிச் சிவலோகம் பெறவமுதி பவநீங்க மனத்தி னீடார்
வந்திதலைக் கொம்மைமுலை யுமையவள்பால் வைத்தபரன் மகிழ்வி னாடல்
வந்திதம்பெற் றிடப்பல்லோர் வைகையின்பாற் கண்டிடச்செய் மறையோன்
வந்திதக வுறமனமே நந்தமைமெய் யன்பரிடை வைக்கு மன்றே. [றன்னை

பட்டினத்துப்பிள்ளையார்.

விளம்புகா ரெனுமிடற்று மருதிறைவன் றிருவருளின் மெய்ம்மை நோக்கிக்
களம்புகார் வினமதன் றன் படைமகளிர் புவியாசை கருதுங் காத
லுளம்புகா ராகிவெறுத் தனைத்தொரூஉம் மணிக்கோவை யுகந்து நல்கும்
வளம்புகார்ப் பட்டினத்துப் பிள்ளையெனும் பெரியவர்தாண் மனத்துள் வைப்
[பாம். 18

சண்டேசநாயனார்.

நேசமுறு தாதைபுரி தவறுமவன் றாளைப்பதமு நீக்கி நீடு
பாசமகற் றிடுபரம பதத்தினொடு சண்டேச பதமும் பெற்றோன்
வாசமலர்ப் பதந்தனையாம் வணங்கிடுது மனையதனி வணக்க மாகும்
பேசரிய பேரின்ப மருவுதற்கோர் பதமென்னப் பெரிது மன்றே. 19

கடவுள்வாழ்த்து

முற்றிற்று.

உ

சிவமயம்.

மருதவன புராண வரலாறு.

ஆதிகாலத்தில் அநேக இருஷிகள் ஒன்றுசேர்ந்து பிரமதேவரை அடைந்து வணங்கி "ஏ கிருபாசமுத்திரமே! நாங்கள் நல்ல தவத்தைச் செய்து மேலான பலனை அடைய ஓர் இடத்தைச் சொல்லியருளல் வேண்டு" மெனப் பிரார்த்திக்க, அப்போது பிரமதேவர் தன் அருகிலிருந்த ஒரு தர்ப்பையை எடுத்துச் சக்கரமாகச் செய்து உருட்டிவிட்டு, "ரிஷிகளே! இச்சக்கரம் அகண்டபரிபூரண சச்சிதாநந்த சிற்சொரூப சர்வசாக்ஷியின் திருவருளால் விளங்காநின்ற உலகின்கண் நவகண்டங்களுட் சிறந்த பரதகண்டத்தில், எவ்விடத்து நிற்கின்றதோ, அவ்விடமே நீங்கள் தவஞ்செய்து உய்தற்குரிய இடமாம்" என்றருள, உடனே இருஷிகள் அதன் பின் தொடர்ந்து செல்ல கங்காநதி தீரத்திலே காசியின் ஈசான்ய திசையில் அச்சக்கரம் தங்க, அக்காரணத்தினால் அவ்வனம் நைமிசாரணியம் எனப்பெயர் பெற்றது. அந்த வனமானது அநேக திவ்ய தேமா முதலிய கனி விருக்ஷங்களும், சிவபெருமானுக்குரிய நால்வகைப் புஷ்பங்களும் நிறைந்து, பார்ப்போர் மனதைக் கவரும்படியான திவ்ய வனமாக இருந்தது. அவ்வனத்து ஜோதி சொரூப தியான நிஷ்டர்களும், வாயுபக்ஷணி, ஜலபக்ஷணி, கந்தமூலபக்ஷணிகளும், ஆத்மதத்துவ ப்ரம்மக்ஞானிகளும் ஸ்ரீ பஞ்சாட்சரத்தை உச்சாரணம் செய்யும் நாவுடையவர்களும், இன்னும் பலவித தபோநிதிகளுமாகிய அந்த இருஷிகள் பர்ணசாலை முதலியவை ஏற்படுத்தித் தவஞ்செய்து வருகின்ற ஒரு காலத்தில் ததீசி முதலிய அநேக இருஷிகள் கூடி யாகமும் செய்தார்கள்.

அவ் வேள்வியைப் பார்க்கும்பொருட்டு, ஜனன மரண வாதை யொழிந்தவரும், சிவாநந்தானுபவ மேலிட்ட உள்ளமுடையவரும், சிவரகசியம் முற்று முணர்ந்தவரும், அஷ்டாதச புராணங்களோதி நாத்தழும்புற்ற வியாச மாணாக்கரும் பூத பௌஷிய வர்த்தமானங்களை உணர்ந்தவருமான சூதமாமுனிவர் அங்கெழுந்தருளினார். அப்போதங்கிருந்த ரிஷிக்குழாங்கள் எழுந்து அந்த முனி

புங்கவரை எதிர்கொண்டு ஆனந்தத்துடன் கண்டு பக்தியுடன் தங்கள் ஆசிரமத்துக்கு வரவேற்று ஒரு திவ்யாசனத்தி லெழுந்தருளுவித்து அவரது பாதங்களை நறுமலர்களினால் அருச்சித்துத் துதிக்க, அம் மாமுனிவரும், அவ்விருஷிகளுக்கு இனிய வசனங்கள் கூறிப் பரமானந்தமுடையவராய் வீற்றிருக்க யாகமும் பூர்த்தியானது. பின், சூதமாமுனிவரை மஹரிஷிகள் வணங்கி "ஹே சுவாமின்! தீர்த்த விசேடமும், தல விசேடமும் மூர்த்திவிசேடமும் ஒருங்கு பெற்றுச் சொற்பநேரத்திலேயே மனோபீஷ்டமெல்லாம் எளிதில் அளிப்பதாயும், கொடிய வினைகளெல்லாவற்றையும் ஒழிப்பதாயும், சிவபெருமான் கருணையோடு வீற்றிருப்பதாயுமுள்ள, ஒரு ஸ்தலத்தை எங்களுக்கு விளங்குமாறு அருளிச்செய்ய வேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள்.

அப்போது சூதமாமுனிவர் மகருஷிகளை நோக்கி "பஞ்சேந்திரியங்களை வென்ற தவ சிரேஷ்டராகிய முனிவர்களே! நீங்கள் விரும்பும் ஸ்தலம் பூவுலகிலுள்ளது. அஃது இடைமருதூர் என்று உரைக்கும் ஸ்தலமாம். அது அளவற்ற சிறப்பினைவாய்ந்தது. லெக்ஷிமி மகிழ்ந்து உறைவதாயு முள்ளதாம்" என்றருளி அத் தலத்தையும், மருதவாணரையும், பெருநலமாமுலை அம்மையையும் தம் மனதில் தியானித்து மெய்ம்மறந்து மயிர்சிலிர்த்து பேராநந்தக்கடலிடை மூழ்கி ஒரு முகூர்த்தகாலம் சித்திரம்போல் மௌனமாக எழுந்தருளி யிருந்தார். பின்பு மஹரிஷிகளைப் பார்த்து, "ஹே மஹருஷிகளே! எனது குருவாகிய தவத்திற் சிறந்தவரும், பதரிகாச்சிரமத்தில் வேதங்களை நால்வகைப்படுத்தினவருமான வேதவியாச பகவான், அமுர்தத்திலும் இனிய பதினெண் புராணங்களையும் உலகோர் உய்யுமாறு எனக்கு உபதேசித்தருளி யிருக்கிறார். தவ சிரேஷ்டர்கள் எவரேனும் பக்தி சிரத்தையோடு கேட்பவர்களுக்குச் சொல்லும்படி ஆக்ஞாபித்தும் இருக்கிறார். அதற்கு இப்பொழுது தான் சமயம் வாய்த்திருக்கிறது. பக்தியிற்சிறந்த மஹருஷிகளே! கேளுங்கள் :—

"புராணங்கள் பதினெட்டுள் சிவபெருமானுக்குப் பத்தும், மகாவிஷ்ணுவுக்கு நான்கும், பிரமதேவருக்கு இரண்டும், சூரியபகவானுக்கு ஒன்றும், அக்கினிபகவானுக்கு ஒன்றும் உரியன. சிவபுராணம் பத்தாவன :—ஸ்காந்தபுராணம், வாமனபுராணம், பிரமாண்டபுராணம், மார்க்கண்டேயபுராணம், இலிங்கபுராணம், கூர்மபுரா

ணம், மச்சபுராணம், வராகபுராணம், பவுஷிக புராணம், சைவபுரா ணம் என்பனவாம். விஷ்ணுபுராணம் நான்காவன :—நாரதீயபுரா ணம், விஷ்ணுபுராணம், கெருடபுராணம், பாகவதபுராணம் என்ப னவாம். பிரமபுராணம் இரண்டாவன :—பதுமபுராணம், பிரம புராணம் என்பனவாம். சூரியபுராணமாவது :—பிரமகைவர்த்த புராணம். அக்கினி புராணமாவது :—ஆக்கினேயபுராணமாம்.

" இப்பதினெண்புராணங்களுட் சிவபுராணமாகிய ஸ்காந்தபுரா ணமும், இலிங்கபுராணமும், சூரியபுராணமாகிய பிரமகைவர்த்த மும், இடைமருதூரென்னும் க்ஷேத்திரத்தின் மகிமையை உரைக் கும்" என்றருளிச்செய்து சூதமாமுனிவர் நைமிசாரணிய மகருஷி கள் மகிழும்படி இத்தல மகிமையை வடமொழியில் அருளிச்செய் தார். அதைக் கொட்டையூர் வாசியாயும், தஞ்சை சமஸ்தான அரண் மனை, தமிழ்வித்துவான்களுள் தலைமைபெற்றிருந்தவர்களுமான ஸ்ரீமத் சிவக்கொழுந்து தேசிகரவர்களால் தென்மொழியில் அருளிய மத்தியார்ச்சுன மான்மியமென்னும் இம்மருதவன புராணத்தை வச னரூபமாக அடியேன் அன்னவர்களின் பதமலர்களைச் சிரமேற்கொ ண்டு மருதவாணர் கிருபையால் சொல்லுவாம்.

புராண வரலாறு
முற்றிற்று.

உ

முதலாவது

தலவிசேடச் சருக்கம்.

ஆதிகாலத்தில் காவேரியி னுற்பத்தி ஸ்தானமாகிய சையகிரியி னடிவாரத்தில் ஒருநாள் வசிஷ்டமா முனிவரும், சுமந்து முனிவரும், விசுவாமித்திர முனிவரும், கௌதம முனிவரும் ஆகிய இருஷிகள் சேர்ந்து பூவுலகில் எந்தத்தலம், யாகம், தருமம், தவம் இவைகளைச் செய்தால் விரைவில் மிக்க பலனை அளிப்பதென்று ஆராய்ந்தார்கள். ஒவ்வொருவரும் காசி முதலான க்ஷேத்திரங்களில் சில க்ஷேத்திரங்கள் விசேஷமா யிருக்கலாமென்று யோசித்துக் கொண்டிருக்கையில் ஸ்ரீ முருகக்கடவுள் சமுத்திரத்தில் சூரியனுதித்தாற்போல அநேக தேவர்கள் சூழ மயில் வாகனத்தி லேறிக்கொண்டு எழுந்தருள, அப்போது இந்த மகருஷிகளெல்லாம் சீக்கிரமாக எழுந்து நமஸ்கரித்து சிம்மாசனமிட ஸ்ரீ சுப்பிரமணியக்கடவுளும் அதில் வீற்றிருந்தருள, அவர்கள் பூசை செய்து நமஸ்கரித்து சூரபத்மாதி அசுரர்களை சம்ஹரித்து தேவர் சிறை மீட்டருளிய கிருபாசமுத்திரமே! இங்கெழுந்தருள நாங்கள் என்ன தவம் இயற்றினமோ என்று சொல்லி, நாங்கள் ஒரு யாகஞ் செய்ய எண்ணினோம், அப்படி அவ்வேள்வி செய்யுங்கால் மந்திரங் கிரியை திரவியம் இவைகளில் யாதேனும் ஒரு குறைவு ஏற்படும்பக்ஷத்தில் அதனால் இராக்ஷஸர்கள் அப்பலனை அபகரித்துக்கொள்ளாதபடித் தன்னுடைய மகாத்மியத்தினாலே குறைவுபடாமல் விசேஷ பலனை அளிக்கத் தக்கதோர் மகிமை வாய்ந்த திவ்விய ஸ்தலத்தை எங்களுக்கு அருளிச் செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அப்போது ஸ்ரீ முருகபிரான் அம்முனிவர்களைப் பார்த்துச் சொல்லியருளுகின்றார் :—எங்கள் பிதாவாகிய சிவபெருமான் எமது தாயாகிய உமாதேவியாருக்கு உத்தமமாகிய புராணங்களை உபதேசித்தருளும்போது யாம் விளையாட்டோடு தாயின் மடியிலிருந்து உய்த்துணர்ந்து கேட்டுக்கொண்டிருந்தோம். அதை வ! தபோதனர்களே சொல்லுகின்றேன் கேளுங்கள். ஜோதியென்றும் ஸ்தலங்களென்றும் இரண்டு உண்டு.

"அதில் ஜோதியாவன:—வேதம், ஆகமம், புராணம், ஆசாரியர், யோகிகள், மந்திரம், சூரியன், அக்கினி, விபூதி ஆகிய இவைகளாம். இவற்றிலும் நாம் இடமாகக் கொண்டு வசிப்போம். ஸ்தலமாவன:—காசி, திருவண்ணாமலை, சிதம்பரம், திருவாரூர், திருவெண்காடு, குடந்தை, இடைமருதூர் இவை முதலான ஸ்தலங்கள் ஆநந்தமாம். இவைகளிலும் நாம் வாசம் பண்ணுவோம். அவற்றுள், இடைமருதூர் எல்லாவற்றினும் மேன்மையுடையது. அநாதியாய் விளங்குவது. நாம் எப்போதும் விரும்பி வாசம்பண்ணத்தக்க ஸ்தலமாம்." என்றருளிச்செய்து "சில மகாத்மியங்களையும் எமது பிதாவாகிய சிவபெருமான், தாயாகிய பார்வதி தேவியாருக்கு உபதேசித்தருளியதை நாம் அறிந்திருக்கின்றோம்."

விருத்தம்.

அணிமருவு மிடைமருதீ சருக்கு நந்தி
யாவடுதண் டுறைசோமாக் கந்த ராரூர்
திணிபுகழா லங்குடியிற் குருமூர்த் தியானைத்
திருமுகத்தோன் வலஞ்சுழியே ரகத்திற் செவ்வேள்
கணிதருமாப் பாடியிற்சண் டேசன் றில்லைக்
கதிர்ப்பொதுவி னடக்கடவுள் வடுகன் காழி
பணிமருவு மாந்துறையி னிரவி யாகும் பரம
னெழிற் பதமலருக் கன்பு மிக்கீர்.

"மேற்கூறிய செய்யுளின்படி திவ்விய க்ஷேத்திரங்களாகிய சிதம்பரம் முதலான பெரிய க்ஷேத்திரங்களையே தனக்கு நடராஜப் பெருமான் முதலாகிய மூர்த்திகள் வசிக்கும் ஆவரண ஸ்தானமாக, ஒரு ஆலயத்திற்கு ஏற்பட்ட திக்கு நியமனப்படிக் கொண்டருளி, இத்தலமே சிவலிங்கப்பெருமானுடைய ஆலயம்போலவும், மற்ற ஸ்தலங்களெல்லாம், பரிவார தேவதைகளின் ஆலயம் போலவும், மகாலிங்கமென்னும் பொதுப்பெயரையே தனக்குச் சிறப்புப் பெயராய்க் கொண்டு சிவபெருமான் எழுந்தருளி யிருப்பதினாலும், அடியார்கள் செய்யும் தவமுதலானவைகளுக்கு அவைகளில் நேரிடும் குற்றங்களை நோக்காது அவர்கள் வேண்டும் போக மோக்ஷங்களை தாமதியாது அனுக்கிரகஞ் செய்வதினாலும் அத்தலத்தை அடைந்து, நீங்கள் குறித்த யாகத்தை அங்கே செய்யுங்கள்" என்றருள, அப்போது

அம்மகருஷிகள், "அந்தத் தலத்தின் மகிமையையும் விரிவாக எங்களுக்கு அருளிச்செய்யவேண்டு" மென்று பிரார்த்திக்க ஸ்ரீ முருகபிரான் அருளிச் செய்கின்றார்.

"அந்த க்ஷேத்திரம் சண்பகாரணியம், சத்திபுரம், வில்வவனம், தபோவனம், ஜோதிபுரம், சர்வதீர்த்தபுரம், செல்வவிருத்திபுரம், தர்மவிருத்திபுரம், முத்திபுரம், இடைமருது, வீரசோழபுரம், பூலோகசிவலோகம், எனப் பன்னிரண்டு திருநாமங்களை யுடையது. மேலும் நல்ல தவம், தருமம், பொறுமை, பொருள், கல்வி, யாகம், ஆத்மவர்க்கங்கள், ஆகிய இவைகளைத் தாயென்ன வளர்ப்பது. இன்னும் அங்குள்ளோர், பிரம்மாவினுடைய, விதியையும் எமனையும் வெல்லுவார்கள். அத்தலவாசிகளை எமதூதர்கள் வேறுஊரிற் கண்டபோதிலும் அஞ்சுவார்கள். நவக்கிரகத்தினாலே துன்பம், பிசாசுகளினாலே பயம், இவைகள் பொருந்தமாட்டா. அங்குசெய்யும் தவம் முதலானவைகளுக்கு இடையூறு செய்யும் இராக்ஷஸர் முதலானவர்கள் வயிரவக்கடவுளின் ஆக்ஞைக்குப் பயந்து அங்கு போகமாட்டார்கள். ஆகையினாலே எவ்வகை இடையூறும் வந்துறாது. எள்ளளவு தானஞ்செய்தாலும் மேருவளவாகிய பலனை அளிக்கும். கன்னிகாதானஞ் செய்தவர்களும், கனி, காய்களைத் தானஞ் செய்தவர்களும், வேண்டிய இன்பங்களை யெல்லாம் அடைந்து வாழ்வார்கள். வேதத்தை மறந்த வேதியரும், நாட்டை யிழந்த அரசரும், பொருளை யிழந்தவர்களும், திரும்பப் பெறுவார்கள். புத்திர பாக்கியம் இல்லாதவர்களும், புதல்வர்களை அடைவார்கள். வியாதி உடையவர்களும், சித்தப்பிரமை யுடையவர்களும், கூன், குருடு, செவிடு, முதலானவைகளை உடையவர்களும் பிணிகள் நீங்கி சுகமடைவார்கள்." என்றும்.

விருத்தம்.

" இடைமருதீ சனைப்பணிதற் கொருவ ரெண்ணுற்
றெழுந்திடி லங்கவர்வினையு மெழுந்து நிற்கும்
நடையுறிலவ் வூர்நோக்கிப் புறவூர் நோக்கி
நடக்குமது சொல்லாம லவர்க ளேகத்
திடமிலரா யுடனொருகாற் றிரும்பி னாலுந்
திரும்பாது சென்றவினை சென்ற தேயாம்
புடவிபுகழ் காசியினுற் றிலகு கங்கைப்
புனல்படிந்து வருபலன்மற் றவருக் கெய்தும்." என்றும்

"இதர ஸ்தலங்களில் பட்டினி, முதலானவைக ளிருந்து செய்யும் விரத பலனும், அநேக வருடம் வருந்திச் செய்யும் தவத்தின் பேறும், ஒரே நாழிகையில் மூலமந்திரத்தைச் செபித்தலினாலேயே கிடைக்கும். அந்த ஸ்தலத்தில் எமது தாயாராகிய உமாதேவியாரும், தமையனாராகிய விநாயகரும், பிதாவாகிய சிவபெருமானைப் பூசை செய்ததும் தவிர, சிவபெருமானே தம்மைத் தாமே பூசை செய்திருக்கின்றார். அதுவுந் தவிர இந்திரன் முதலாயினோர் இத்தலத்திற்கு வந்து பூசித்துத் தங்கள் பழியையும் நிவர்த்தி செய்து கொண்டி மிருக்கிறார்கள். ஹே மகருஷிகளே! ஆதிசேஷனும் தன் ஆயிரநாவினாலும் ஆயிரமுறை எடுத்து உரைத்த போதிலும் இடைமருதூரின் பெருமையின் ஆயிரத்தில் ஒரு பாகமாவது முற்றப் பெறாது" என்று ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுள் அருளிச்செய்ய, அப்போது அம்மகருஷிகள் ஸ்ரீ முருகக் கடவுளை வணங்கி, "ஹே கருணையங்கடலே! உமாதேவியார் எதன் பொருட்டுத் தவஞ் செய்தார்? அச்சரிதையைச் சொல்லி யருள வேண்டு" மென்று பிரார்த்திக்க அப்போது ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுள் அக்கதையையும் சொல்லி யருளினார். என்று சூதபுராணிகர் நைமிசாரணிய மகருஷிகள் மகிழும்படி அருளிச் செய்கின்றார்.

தலவிசேடச் சருக்கம்

முற்றிற்று.

உ

இரண்டாவது
உபதேசச் சருக்கம்.

ஸ்ரீ கைலாச கிரியானது உயர்ந்த வெள்ளி மயமாகவே விளங்கிக் கொண்டிருக்கும். அநேக பூதகணங்கள் மலையடிவாரங்கள் எங்கும் சந்தோஷமாகவே சிவபெருமானுடைய புகழைப் பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் வெகு உல்லாசமாகத் திரியும். ஆயிரம் இதழ்களையுடைய உத்தம தாமரை யோடைகளும், ஆயிரயோசனை தூரம்

கமழ்கின்ற புட்ப நந்தனவனங்களும், நவரத்ன கசிதமயமாய்விளங்கா நின்ற பற்பல விசித்ர வீதிகளும், தேவர் உருத்திரகணங்கள் முதலானோர் வந்து தங்கும்படியான மாளிகை வரிசைகளும், தவசிரேஷ்டர்கள் உறைவிடமாகிய மடாலயங்களும், கணக்கற்ற ரமணீகரமான மண்டபங்களும் அமையப்பெற்று, இவைகளின் மத்தியில் ஏழு பிரகாரங்கள் சூழ, இப் பிரகாரங்களில் நாற்புறங்களிலும் மகாமேரு பருவதம் போன்றுயர்ந்த கோபுரங்களுடன் அம்மலையின் உச்சியில் திவ்விய ஜோதிமயமான ஒரு கோவில் விளங்கிக் கொண்டிருக்கிறது. அதில் சொர்ணமயமான தூண்கள் நிறுத்தப் பெற்றும், இந்திர நீலக்கற்களினால் போதிகை வைத்தும், மரகதத்தினால் உத்திரம் போட்டு, பதுமராகத்தினால் கொடுங்கைகள் அமைத்து, சந்திரகாந்தக் கற்களினால் விட்டங்கள் பரப்பப் பெற்று, முத்துக்களாலாகிய மேற் கட்டிகள் கட்டி, பார்ப்போர் கண்களைக் கவரும்படியாய் ஆயிரங் கிரணங்களை யுடைய சூரியன் பிரகாசிப்பது போல் ஓர் அழகிய விமானத்தை யுடைய மண்டபம் ஒன்றுளது.

ஆங்கு பிரும்மா விஷ்ணு உருத்திரர் முதலானவர்கள் தம்முன் தெரிசனார்த்தம் வந்து சூழ்ந்து ஒருவரோடு ஒருவர் நெருங்கி நிற்பதனால் அவரவர்களுடைய கிரீடங்கள் மோதி, அதனால் அவைகளிலிருந்து பற்பல நிறங்களை யுடைய நானாவித கற்கள் உதிர்ந்து குவியல் குவியலாய் பிரகாசிக்கவும், அம் மண்டபத்து நடுவில் நவரத்னங்களால் பதிக்கப்பெற்ற சிம்மாசனத்தில் எமது கடவுளாகிய சிவபெருமான் உமாதேவியுடன் எழுந்தருளி யிருக்குங்கால், ஓர் சமயம் உமாதேவியாருக்கு ஆகமங்களை உபதேசிக்க, அவைகளைப் பக்தியோடு கேட்டுக் கொண்டிருந்த உமாதேவியார் "ஹே என் நாதா! தாங்கள் உபதேசிக்கும் ஆகமத்தின் பொருளை பன்முறை எனக்கு கிருபையோடு விளக்கினீர்கள். ஆனால் அவைகள் ஒன்றுக் கொன்று மாறுபாடாயிருப்பதால் எனக்குச்சந்தேகம் உண்டாகியிருக்கின்றது. வேதங்கள் கூட தங்கள் குணத்தை முற்றும் உணராது மயங்குகின்றன. ஆகையால் என்னை மன்னித்து சந்தேகம் தீர்த்தருளல் வேண்டும். 'உலகம் என்னிடத்து உளது. அந்த உலகத்தில் நான் உள்ளேன். ஆணும் நான், பெண்ணும் நான், அலியும் நான்,' என்று அருளினீர்கள். ஆண் பெண் அலி இம்மூன்றில் தாங்கள் எது என எப்படி அறிவேன். வெகு சாந்தராகவும் உக்கிர குணமுடையவராகவும் இருக்கின்றீர்கள். விரகதாபம் ஊட்டும்படியான மன்மதனை

எரித்தீர்கள். என்னிடத்து உமக்கு உள்ள தாபமோ அளவிடத் தகாது. 'மாயையிற் பொருந்தோம்' என்றருளினீர்கள். ஆனால் தாங்கள் செய்யும் மாயைகளோ அநந்தம். யாதொரு தொழிலு மில்லை என்று புகலும் தாங்கள் புரியாத தொழில் ஒன்று மில்லை. அரூபி என்று சொன்ன தாங்கள் வெகு தூயதாம் வடிவோடு இருக் கிறீர்கள். எவ்வுயிர்க்கும் மங்களமுண்டாகச் செய்யும் தாங்களே சம்ஹாரத்தையும் செய்கிறீர்கள். பிச்சைத் தொழிலை எடுக்கும் தாங்களே தங்களை பக்தியுடன் நினைப்பவர்களுக்கு வேண்டியன வேண்டியவாறு அளிக்கின்றீர்கள். ஒருவராயும் காணப்படுகிறீர் கள். அநேகராயும் காணப்படுகிறீர்கள். ஆகையால் தங்கள் சொரூ பத்தை உண்மையாக எப்படி அறிவது என்பதை விளக்கி யருள வேண்டு" மென உமாதேவியார் பிரார்த்திக்க, சிவபெருமான் சந்தே கங்களை ஒப்புக் கொண்டு அவை நீங்க, முறையே விளக்கி யருளு கின்றார்.

"ஏ பெண்ணே! ஆதியில் நம்மிடத்து இருந்த மாயையை நம் மைப் பிரியும்படிப் பார்த்தோம். உடனே, பிரிந்து எதிர்நிற்க, அதை நோக்கி புவன முதலானவைகளை சிருட்டிக்கக் கடவா யென்று ஆக்ஞாபித்தோம். நுண்ணிய ஆலம் வித்தில் பெரிதா யுள்ள ஆலவிருக்ஷம் பரிணமமுற்றுத் தோன்றுவது போல, மாயை யில் ஜகமெல்லாம் அடங்கி யிருந்தாலும் தனக்கென அறிவின்மை யால் நம்மையல்லாது தன்னால் புவனாதிகளை சிருட்டிக்க இயலாது என்று சொல்ல, நம்மிடத்தினின்றும் இச்சை ஞானம் கிரியை ஆகிய இம்மூவகைச் சத்திகளை உண்டுபண்ணி, அதில் யாமும் ஓர் ரூபமாய் இருந்துகொண்டு தனு கரண புவன போகம் என்னும் இவைகளை மாயையி னின்றும் விரிவாய்த் தோன்றும்படி செய்து அந்தந்த ஆன் மாக்களின் நன்மை தீமைகளுக்கு இசைய தனு முதலாகிய நான்கை யும் கொடுப்போம். அவ்வாறாக அவ்வுயிர்கள் ஜனன மரணப்பட்டு வருந்தும் மாயையில் நாம் சிறிதேனும் மயங்க மாட்டோம். இந் திரசால வித்தை, காட்டுகிறவனை நீக்கி, மற்றுள்ளோர்களை யெல்லாம் மயக்குதல் போல மாயையும் நம்மை நீக்கி எல்லா உயிர்களையும் மயங்கிடச் செய்யும். இச்சை ஞானம் கிரியை என்னும் சத்திக ளில் பொருந்தி இருத்தல் எதன் பொருட்டென்றால் சத்தியும் நாமும் வேறல்ல. பூவும் மணமும் போலவும், சூரியனும் அதன் கிர ணமும் போல்வோம்.

சத்தியாவது:—நித்தியமாய் அநாதியாய் விளங்கும். இச்சாசத்தியாவது:—ஒடுங்கிய உயிர்களைக் கிருபையினால் எடுக்கும். ஞானசத்தியாவது:—அந்தந்த உயிர்களின் வினைகளை அறிந்து அதற்கேற்ற பலன்களை அளிக்கும். கிரியாசத்தியானது:—ஆத்மாக்களுக்கு உரிய அவயவங்களை உண்டாக்கும். நாமும் விளையாட்டாகவே பஞ்ச கிருத்தியத்தை விரும்பிச் செய்வோம். அந்த ஞானமானது:—கற்பனை, கரணம் என்றும் இரண்டு விதம். கற்பனையாவது:—சத்தியினாலே மாயையை நீக்குதல். கரணமாவது:—பஞ்ச கிருத்தியங்களையும் செய்தல். நம்முடைய உருவம் நிட்களம், சகளம், வித்தை, மாயை. என நான்காகும். மாயையில் நின்றும் ஓர் உருவந்தோன்றி மற்ற மூவகை உருவத்தையும் அதிஷ்டித்து அடியார் செய்யும் பூசையை ஏற்றுக்கொள்வோம். வித்தியா சொரூபமானது:—மந்திர வடிவாய் ஆகமத்தில் சொல்லிய உபசாரங்களையெல்லாம் பெற்று சத்தியமே வடிவமாகி அடியார்கள் துதிக்க வீற்றிருந்து அவர்களுக்கு வேண்டிய அநுக்கிரகத்தைச் செய்யும். சகள சொரூபமானது:—மூவகைச் சத்தியினாலாகிய வடிவையுடையது. மகான்களுடைய தியானம் பூசை ஸ்தோத்திரம் ஆகிய இவைகளை ஏற்பது. நிட்கள ரூபமாவதும் இதுவே. ஆவாகனஞ்செய்து ஒடுக்கிக் கொள்ளுதலும் சகளரூபமேயாம். நிட்களமாவது:—ஆகமம் அநுமானம் பிரத்தியக்ஷம் ஆகிய இப் பிரமாணங்களுக்கு அதீதப்பட்டு ஜோதி முதிர்ந்த ஞானமே சொரூபமாகித் தன்னைத் தியானிப்பவர்களுக்கு அவ்வித ரூபமாகத் தானே விளங்கி உயிர்க்குயிராகி குருவின் அனுக்ரகத்தினாலேயிருந்த பக்குவத்தில் அநுக்கிரகஞ் செய்யும்.''

''நீயே சகளம். நீயே நிட்களம். நீயே என்னை அஷ்டமூர்த்தி உருவத்தைக் கொள்ளும்படிச் செய்பவள். நீயே பஞ்சகிருத்தியங்களைச் செய்பவள். உன்னிடத்து நாம் மகிழ்ச்சியோடு வசிப்போம். நீயும் இவ்வாறு என்னிடத்தில் வசிப்பாய். உருவத்தோடு பெயர் வேறல்லாமல் நாம் இருவரும் ஒன்றே. நீரும் அதன் குளிர்ச்சியும் போல உன்னிடத்து விளங்கும் பூரணப் பொருளாகவிருந்து பஞ்ச கிருத்தியத்தையுஞ் செய்து சகல உயிர்களுக்கும் போக மோக்ஷங்களை எல்லாம் கொடுக்கும் பொருட்டே, பற்பல உருவங்களையும், செய்கைகளையும் கொண்டோம். ஆகையினாலே, முன்னம் உரைத்ததே உண்மையென்று அறிந்து கொள்ளக் கடவாய்.'' என்று உமாதேவியை நோக்கிச் சொல்லியருளிய மாத்திரத்தில் தேவியார் மகிழ்ச்சியு

டன் வணங்கி, "ஏ நாயகரே! உம்முடைய வாக்கினால் அருளிச் செய்தலினின்றும் சந்தேக விபரீதம் நீங்கித் தெளிந்துகொண்டேன். இனி உலகத்தினுடைய அழகைக் காட்டவேண்டு" மென்று பிரார்த்தித்தாள். அப்போது சிவபெருமான், 'நம்முடைய ரூபத்திலுள்ள உலகத்தின் இயல்போ, அல்லது வெளியிலுள்ள உலகத்தின் இயல்போ' என்று கேட்க, 'உம்முடைய திருமேனியிடத்துள்ள உலகத்தின் இயல்பை ஞானத்தினால் அறிந்துகொண்டேன். புற உலகத்தின் இயல்பைத்தான் காணுதல் வேண்டும். 'அப்புற உலகத்தின் கண்ணே விசேஷமாய் மகிழ்வுடன் தேவர்கள் போற்ற தேவரீர் விரும்பி எழுந்தருளியிருக்கும் ஸ்தலம் எதுவோ அதையும் காண்பிக்கவேண்டும்' என்று பிரார்த்திக்க, பதியாகிய சிவபெருமான் மகிழ்வுற்று, 'அப்படியே செய்வோம்' என்று தேவியாரோடு புறப்பட்டார்.

உபதேசச் சருக்கம்.

முற்றிற்று.

மூன்றாவது

திருவிளையாடற் சருக்கம்.

அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவபெருமான் நந்தியை நினைத்தார். ஆங்கு அது வைரமலை போல் வந்தது. அதில் சிவபெருமான் உமாதேவி சமேதராய் எழுந்தருளி திருக்கைலாயத்தினின்றும் ககனமார்க்கமாகத் தெக்ஷிண திசையை நோக்கி மெல்லச் செலுத்தினார். அவ்விதம் செல்லுங்கால் ஆங்காங்குள்ள மலைகளையும் காடுகளையும் நதிகளையும் க்ஷேத்திரங்களையும் தேவியாருக்குக் காண்பித்து அதனதன் பெருமைகளையும் எடுத்துரைத்துக் கொண்டு, காவேரிநதியை அடைந்து, அருகிலுள்ள தலங்களின் மகிமைகளையுஞ் சொல்லிக் காவேரியின் தென்புறத்தில் மருதவனமென்கிற இத்தலத்திற்கு நேராக எழுந்தருளுகையில், கைலாசகிரியானது தமது பிரிவாற்றாமையால் அழகிய ஓர் மருத விருக்ஷமாகி, ஆங்கு நிற்கக் கண்டு அதனிழலில் விருஷபத்தை

நிறுத்தி, உமாதேவியாரை நோக்கி "ஏ நாயகியே! இந்த ஸ்தலம் அநாதியாய் உள்ளது. இதற்கு ஒப்பான ஸ்தலம் இவ்வுலகில் இல்லை. இங்குள்ள நல்ல புஷ்பச்சோலைகளையும், அழகிய தடாகங்களையும், இதன் அழகையும், காண்பாயாக" என்று அருளிச்செய்ய உமாதேவியார், அங்குள்ள தபோதனர்கள் தவஞ் செய்யும் காட்சியையும், தெய்வீகத் தன்மையையும், சண்பகப்பூஞ் சோலையின் அற்புதத்தையும், பார்த்து, மனமுருகும் காலத்தில் உமாதேவியாருடைய கண்களிலிருந்து ஆநந்தபாஷ்பம் பெருகின. அந்தத் தீர்த்தம் கீழ்த்திசையில் வந்தது. அது உலகத்தார் எல்லாரும் போற்றும்படி 'காருண்ணியாமிர்ததீர்த்தம்' எனும் பெயருடன் விளங்கிக் கொண்டிருப்பதாம். பின்பு சிவபெருமான் தேவியாருடைய நேத்திரங்களிலிருந்து கிருபையோடு ஜலம் வருவதைப் பார்த்து, 'உலகத்தில் உள்ள அற்புதங்களைப் பார்த்தாயோ?' எனக்கேட்க தேவியார் சிவபெருமானை வணங்கி, 'என் நாயகரே! கண்டேன்.' என்று சொல்லியருளினாள். இவ்வாறுச் சொல்லியருளினமாத்திரத்தில் எமது கருத்தாவாகிய சிவபெருமானுக்கும் கண்களில் நின்றும் கருணை நீர் பொழிந்தது. அந்நீர் இரண்டு பிரிவாகி ஒரு பிரிவு பொன்னிறத்தை யுடையதாகி வாயு திக்கிலும், மற்றொரு பிரிவு தெக்ஷிண திக்கிலும் உள்ள தடாகத்திற் போய்ச் சேர்ந்தது.

அப்போது வடமேற்குத் திக்கிலுள்ள தடாகத்தில் ஜலமில்லாமையினாலே உலர்ந்து போயிருந்த, மச்சங்களெல்லாம் சிவபெருமான் திருக்கண்ணினின்று பெருகிய அமுதம் பட்ட மாத்திரத்தில் உயிர் பெற்று, அந்த மச்சங்களெல்லாம் தனது உருவம் மாறி உருத்திரர்களாக, கோடி சூரியப்பிரகாசம் போல் விமானம் வர, அதில் ஏறின. அவ்விமானத்து பூமாரி பெய்ய, ஏறிய உருத்திரகணங்களும், தேவர் கூட்டங்களும் மருதமூலில் ஆகாசத்தில் விருஷபாரூடராய் நிற்கின்ற பார்வதி பரமேஸ்வரரைப் பிரதக்ஷிணம் செய்து, அளவில்லாத புஷ்பங்களினால் பஞ்சவாத்தியங்களெல்லாம் முழங்க, அர்ச்சனை செய்தார்கள். தாம் பார்வதியோடு இவ்விதம் வந்ததும், நடந்த சமாசாரமும் அங்குள்ள மகருஷிகள் அறியாதபடி ஒரு முகூர்த்தம் தங்கியிருக்க, அச்சமயம் மருதவனவாசிகளாகிய மகருஷிகளிடத்து அகஸ்தியர் வர, சந்திரனைக் கண்ட சமுத்திரம்போல் மகிழ்வுற்று, நமஸ்கரித்து, எழுந்து, அகஸ்தியரோடு இருந்தார்கள். அப்போது அகஸ்தியரை நோக்கி "யாகாதிகர்மங்களைச்

செய்தால் அதற்குப்பலன் கொடுப்பது அந்த யாகாதிகர்மந்தானோ? வேறொருவரோ? அதை எங்களுக்குப் புலப்படும்படி உரைத்தருள வேண்டும்." என்று பிரார்த்தித்தார்கள். அகஸ்தியர், "உங்களுக்குஇது மட்டுந்தானோ? வேறு ஏதேனும் சந்தேகங்களும் உண்டோ?" என அப்போது இருஷிகள் "வேதங்கள் விதித்த யாகங்கள், தவங்கள் இவைகளைச் செய்தால் அவைகளின் பலனை ஏற்று சிவபெருமான் பிரத்தியக்ஷமாவார் எனும் முறைமையும் எங்களுக்குச் சம்மதப்பட வில்லை. ஏனென்றால் மனோ வாக்கு காயம் முதலிய காரணங்கள் காணு ததினாலே சிவபெருமான் ஒருவர் உண்டு என்பது பொய்யே. இவ்வுல கத்திற் செய்த நல்வினைகளே வேறு ஜன்மத்தில் சுவர்க்கம் முதலாகிய இடத்திற்சென்று அவ்வாத்மாக்களே இன்பத்தை அனுபவிக்குமெ ன்பதும் நம்பிக்கை இல்லை. இதுபோல் இன்னும் கேள்விகள் அனந்தம் உண்டு. இவைகளுக்குச் சொல்லும் நியாயத்திலிருந்தே மற்றவை களுக்கு எல்லாம் அறிந்துகொள்ளக்கூடும். ஆகையினாலே எங்கள் சந்தேகம் தீரச் சொல்லியருள வேண்டும்"என்று பிரார்த்தித்தார்கள்.

அப்போது அகஸ்தியர், "ஏ மகருஷிகளே! நீங்கள் தெளியும் படிச் சொல்லுகின்றேன். என்மீது கோபிக்காதீர்கள். உங்களுடைய வம்சத்தோடு குலத்தின் சிரேஷ்டமும், தவமும், மேலான அமுர் தத்தை வெடிப்பில் கொட்டியதுபோல விருதாவாக ஆக்கினீர்கள். கருமங்களும் உடம்பும் அறிவில்லாத பொருள் என்று சாஸ்திரங்கள் எல்லாம் கூறும். ஆதலால் அக்கருமங்களின் பயனை முற்றறிவும் முற்றுத்தொழிலும் உடைய ஒருவன் கூட்டி வைத்தால் அன்றி தா மே உயிர்கள் பலனை அடைய மாட்டாவாம். தவம், யாகம், முதலான வைகள் செய்தால் அப்பலனை அடைவது உயிரே. தனு, கரண, புவன போகங்களைத் தவறாமல் கொடுத்தருளுவோன் முற்றறிவு முதலிய அறுகுணங்களை உடைய சிவபெருமானே, என்றறிவீர்களாக. 'உயி ரும் கருமமும் தாமே பலனை அடையு மென்று எண்ணுதல் குருட னும் முடவனும் ஆகிய இவர்கள் மேரு மலையின் சிகரத்திலே சென்று அங்குள்ள தேனை எடுத்து சாப்பிட்டதை நான்பார்த்தேன்' என்று சொல்லுவது போலும். அரசனை வேடர்கள் வெல்வார்களா னல் அதற்கு வெகுமானம் அளிப்பவர் யார்?"

"ஏ இருஷிகளே! சிவபெருமானை ஒருபொருளாக மதித்து வணங்காத தக்கன் செய்த யாகமும், அசுரர்களுடைய திரிபுரமும்,

பிரும்மாவினுடைய தலையும் சிவபெருமானைப் பெரும்பொருளென மதித்த சண்டேசுரருடைய மகிமையும், மார்க்கண்டேயர் அடைந்த பாக்கியத்தையும், என்னுடைய கைத்திறத்தையும், யோசித்துப்பாருங்கள். பரமசிவனை மதிக்காதவருடைய மனங்களெல்லாம் விளக்கில்லாத இருட்டறையும், சூரியன் இல்லாத ஆகாசமும், மனு முறை அறிந்த அரசனில்லாத நாடும், ஜலமில்லாத பயிரும், புருஷனை இழந்த அழகுள்ள யௌவன ஸ்திரீயும், போலாகும். 'மன முதலானவைகளால் பரமசிவனைக் கண்டிலோம்' என்று சொன்னீர்களே. அச்சிவ பெருமான் மெய்யருக்கு மெய்யராகவும், பொய்யருக்குப் பொய்யராகவும், இருப்பார். ஆதலின் கருமமே பலனைத் தரும் என்கிற உங்களது எண்ணத்தை விட்டு, பரமசிவனே ஆன்மாக்களுக்கு சகல பலனையும் அளிப்பவர் என்று மனதிலே கொண்டு இத் தலத்தில் தவஞ்செய்யுங்கள். நமது கடவுளாகிய சிவபெருமான் பிரத்தியக்ஷமாவார். இது உறுதியே." என்று அகஸ்தியமுனிவர் சொல்லியருள இருஷிகள் மகிழ்ந்து கடவுள் ஒருவர் உண்டென்பதை மனதில் தெரிந்து 'இவ்வளவு காலம் அறிந்து வணங்காது வீணாகப்போனோமே,' என்று வருந்தி இருவினை ஒத்திட சத்தினி பாதம் உண்டாகி முனிவரை வணங்கி "ஏ முனிபுங்கவரே! தரித்திரதிசையிலே மிகுந்த பாக்கியம் கிடைத்தாற் போலவும், வேனிற்காலத்தே நல்ல மழை பெய்தது போலவும், தாங்கள் எங்கள் எதிரில் தோன்றி 'வேதாகமாதி சமஸ்த சாஸ்திரங்களினுலும் கருத்தா ஒருவர் இருக்கிறார்' என்பதைத் தெளிவாக நம்பிக்கை உண்டாகும்படி உரைத்து அருளினீர்கள். ஏ சுவாமின்! அக் கர்த்தாவைப் பிரத்தியக்ஷமாய்த் தெரிசிக்கும்படியான மார்க்கங்களை அருளிச்செய்ய வேண்டு" மென்று இம்மருதவன வாசிகளாகிய இருஷிகள் அகஸ்தியரைப் பிரார்த்தித்தார்கள்.

அப்போது அகஸ்தியமாமுனிவர் "ஏ மருதவன வாசிகளே! பிரகாசம் பொருந்திய நல்ல இரத்தினப் பரீக்ஷையைக் கண்ணில்லாதவன் பார்ப்பதையும், விதை மாடு முதலானவைகள் இல்லாதவன் பயிர் செய்ய விரும்புதலையும்போல உண்மையாகிய பரம் பொருளாயுள்ள சிவபெருமானைப் பக்தியில்லாதவன் அறிய விரும்புதலாகும். அநேக காலம் அரிய பெரிய தவமில்லாமல் பக்தியுண்டாகாது. இன்னுமொரு மார்க்கத்தைச் சொல்லுகிறேன், கவனியுங்கள். வேதங்களுக்கும், அனுமானாதிப் பிரமாணங்களுக்கும் எட்டாத ஞான

சொரூபியாகிய சிவபெருமானை, 'அவனருளால் அவன்றாள் வணங்க வேண்டும்,' என்பதினாலே கண்ணிருந்தும், ஒளியில்லாத பக்ஷத்தில் ஒரு பொருளைப் பார்த்தறிய முடியுமோ? முடியாது. அதுபோல அவனருளாகிய சக்தியினாலே அவனை அறிய முயற்சி செய்யவேண்டும். சிவபெருமான் அருளினால் உருத்திரன், விஷ்ணு, பிரும்மா ஆகிய மூவரும் உண்டாக, பராசத்தியினிடத்திலிருந்து, உமாதேவி, இலக்ஷிமி, சரஸ்வதி, ஆகிய மூன்று சத்திகளும் உண்டாகி, அந்த மும்மூர்த்திகளுக்கும் முறையே தேவியாரானார்கள். சரஸ்வதியானவள் வேதமாதி சகல சாஸ்திரங்களையும் விளங்கச் செய்வாள். இலக்ஷிமிதேவியானவள், பல செல்வங்களையும் தருமநெறியால் உண்டாக்கி வைப்பாள். உமாதேவியார், சிவபெருமானை நமக்குப் பிரத்தியக்ஷமாகச் செய்வாள். ஆதலின் இம் மூவகையாகிய அருட் சத்தியை வழி பட்டால் சிவபெருமான் பிரத்தியக்ஷமாவார்'' என்று சொல்லி யருளினார்.

இவ்வாறு குறுமுனிவர் சொன்னதையும், அவ் வரிய தவத்தை யுடைய இருஷிகளின் கருத்தையும், பார்வதி தேவியார் ஆராய்ந்து திருநீலகண்டராகிய சிவபெருமானை நோக்கி 'இவ்விருஷிகளுக்கெல்லாம் பிரத்தியக்ஷமாகக் காட்சி கொடுப்போம்' என்று அறிவிக்க சிவபெருமான் "ஏ பிரியே! நமது பக்தனாகிய அகஸ்தியன் உன்னைக் குறித்துத் தவஞ் செய்து, உன் மூலமாக நம்மை அடையவேண்டுமென்று, சொன்ன வார்த்தைக்கு விரோதமாகப் போய்விடும். அதுவும் அல்லாமல், ஒரு பொருளை வருந்தி அடைந்தாலல்லது அதன் அருமை தோன்றாது. ஆதலின் நமது பக்தன் சொன்ன முறையே இம்முனிவர்கள் உன்னைக் குறித்து இயற்றுந் தவத்தால் முன்னர் நீ பிரத்தியக்ஷமாகிப் பின் நீ செய்யும் தவத்துக்கு நாமும் பிரத்தியக்ஷமாவோம்.'' என்று அருளிச்செய்தார். இவ்வாறு இருஷிகள் சொன்னதையும், அகஸ்திய முனிவர் உரைத்ததையும், உமாதேவியார் அருளியதையும், சிவபெருமான் அநுக்கிரகித்ததையும் மருதவனத்தின் மகிமையையும் இடபதேவர் கேட்க, ஆனந்தத்துடன் தன் தலையை அசைத்திட, அவர் கழுத்தில் இருந்த மணி பூலோகமும், தேவலோகமும் அதிர, தபோதனர்கள் இதென்னவென்று ஆச்சரியமுறக் 'கணீர்' என ஓசை உண்டாயிற்று.' அப்போது சிவபெருமான் புன்னகை செய்ய, உமாதேவியார், "ஏ கிருபாசமுத்திரமே! உம்முடைய திரு விளையாடலாகிய உலகியல்பை அறிய வல்லவர்

யாவர்?" என்று சொல்லித் துதித்தாள். அதைக் கேட்டு மகிழ்வுற்று 'இனித் திரும்பி கைலைக்குப் போவோம்' என்று விருஷபாரூடராகவே கைலயங்கிரியை அடைந்து இனிமையாக எழுந்தருளியிருந்தார்கள். இது தேவியார் காணவேண்டி சிவபெருமான் இயற்றிய திருவிளையாடலாகும்.

இனி தேவியார் இம் மருதூரின் கண் எழுந்தருளித் தவஞ்செய் வளமையைச் சொல்வாம்.

திருவிளையாடற் சருக்கம்.

முற்றிற்று.

நான்காவது

தவநிலைச் சருக்கம்.

இம்மருத வனவாசிகளான மஹாருஷிகள் அகஸ்தியமுனிவர் சொல்லியருளியபடி வேதாதி சகல சாஸ்திரங்களிலும் வித்பன்னர்களாய் மெஞ்ஞானத்தை அடையும்வண்ணம் முதலில் கலைமகளைக் குறித்துக் கடுந்தவம் புரிய, அக்கலைமகளும் அன்னவாகனாரூடியாய் காட்சி கொடுத்து மகிழ்வுற்று, இவ்வுலகத்தோர் உய்யும் பொருட்டு சகல கலைகளையும் கடாக்ஷித்தருள, இவ்விருஷிகள் கல்வியில் தேர்ந்தவர்களாய் பேரறிவுற்று ஞானியர்களாகி ஸ்ரீ மகாலக்ஷ்மியை நாடித் தவம் புரிந்தார்கள். அவ் விலக்குமியும் திருப்தியுற்று கெருடாரூடியாய் பிரசன்னமாகி இருஷிகளின் வேண்டுகோளின்படி யாகாதி கிரியைகளுக்கு வேண்டிய உபகரணங்கள், சகல தானியங்கள் குறைவின்றித் தாமரைத்தடாகம், கனகமணிமண்டபங்கள், சம்பகச் சோலைகள், நவரத்னக்குவியல்கள், காமதேனு, கல்பகவிருக்ஷம் முதலிய சகலபோகங்களும் இத்தலத்தில் எங்கும் விளங்கும்படிச் செய்தருளினாள். மஹாருஷிகளும் வெகு சந்தோஷத்துடன் ஸ்ரீ மகாலக்ஷ்மியை நோக்கி "மஹா கிருபாநிதியே! பின்னும் இத்தலத்தில் வாழ்குனர் எவர்க்கும் இனிய பெருஞ் செல்வங்களைக் கொடுத்துக் கொண்டு இங்கேயே என்றும் மகிழ்வுடன் வசித்தருளவேண்டும்."

எனப் பிரார்த்திக்க, இலக்குமிதேவியும் புன்முறுவலுற்று அவ்வாறே சம்மதித் தருளினாள். அதன் காரணத்தினாலேயே இத்தலத்திற்கு 'திருவளர் நகர்' என்றும், சம்பகமலர்ச் சோலை எங்கும் நிறைந்திருத்தலினால் 'சண்பகாரணியம்' என்றும் நாமங்கள் உண்டாயிற்று.

பின்பு தபோதனர்களும் அகத்திய மாமுனிவரும் கூடி ஸ்ரீ உமாதேவியைக்குறித்து சிவபூஜை, பற்பலவேள்விகளியற்றல், வேதோக்தமான பிராம்மணர்களுக்கும் எவ்வகைப் பட்ட சிவனடியார்களுக்கும் விசேஷ அன்னதானம், ஆகியவைகளை அளவறச் செய்தல் முதலான புறக்கிரியைகளுடன் சதாகாலம் தேவியாரின் திருவடிகளைத் தியானித்துக் கொண்டு பலநாள் தவஞ்செய்தும் தேவியார் பிரசன்னமாகாததைக் கண்டு, கும்பமுனிவர் மனக்கிலேசமுற்று, இருஷிகளுக்குத் தாம் கொடுத்த வாக்கு குறைவுபட்டு விடுமோ என்று தளர்ந்து சிந்தை கலங்கி, "உமாதேவியார் யாது காரணம் பற்றி பிரசன்னமாகவில்லை! நாம் என்ன பாபம் செய்தோமோ! இருந்தாலும் எக்காரியமும் இறைவனருளன்றி இடையில் ஒருவர் முயற்சியால் கிட்டுவது அரிது." என மனதைச் சமாதானப் படுத்திக் கொண்டிருக்குங்கால், உமாதேவியானவர் சிவபெருமானைப் பார்த்து "என் பிராணநாதரே! நமது பக்தன் அகத்தியன் அன்போடு அநேக காலம் அருந்தவம் புரிவது உங்கள் திருவுளத்தில் இன்னும் பற்றவில்லையோ!" என அன்புடன் கூறவும், சிவபெருமான் அம்பிகையை முன்னே போகும்படி அருளிச்செய்ய, அத்தேவியாரும், சிவபெருமான் திருவடிகளை வணங்கிக்கொண்டு, ஆகாசத்தில் மின்னல்போலச் சென்று மருதவனமடைந்தருளினாள். சிவபெருமானே, சக்திஸ்வரூபமாகிய தேவியாரின் பிரிவாற்றாமையால் தேவியார் மருதூர் சேருமுன்னே, முனிவர்கள் யாவரும் அறியாதவண்ணம் இத்தலத்தில் எழுந்தருளினார். அச்சமயம் பராசக்தியும் பலதோழிமார் சூழ, இருஷிகளெல்லோரும் தரிசித்து ஆனந்திக்கும்படி, அக்கினியில் உருகுகின்ற செம்பொன்மலைபோலும், அளவில்லாச் சூரியர்கள் நெருக்கமாய் உதயம்செய்வன போலும், ஆகாசத்தில் ஜோதிர்மயமாய் விளங்கியருளினாள். இந்த உருவத்தைக் கண்ட முனிவர்கள் ஆச்சரியமும் ஐயமும் அடைந்து தமக்குள் ஒருவர்க்கொருவர், "தேவர்கள் பூமாரி பெய்கிறார்கள்! பஞ்சவாத்யங்கள் முழங்குகின்றன! இதோ தெரியும் மின்னல்போன்ற பிரகாசம் எங்கிருந்து

உற்றதோ, இது எப்பொழுதும் இங்கு தோன்றிக் கொண்டிருந்தது தானோ! மந்திரத்தோடு கூடிய யாகத்தில் உண்டான வஸ்துவோ! இதுகனவோ! நினைவோ! யாதும் அறியோம்!" என அலமலந்து இன்னது பேசுவது இன்னது செய்வது என்று மயங்கி ஒன்றும் தோன்றுதவர்களாக நிற்குங்கால், அவ்விருஷிகளின் யாகத்தினின்றும் உண்டான புகையாகிய மேகத்தினின்று தேவர்களால் பொழியப்பட்ட புஷ்பமாரியின் இடையில் மின்னல் கொடிபோன்ற உருவத்தையுடைத்தாகி தேவியார் ஓர் பெண்ரூபமாக யாகசாலையில் இருஷிகளுக்குக் காட்சி கொடுத்தருளினுள். அந்த ரூபமானது எழுதரிய அவயவங்களும், நவரத்னகசிதமான ஆபரணங்களும், நிகரற்ற ஆடைகளும், ஜொலிக்கின்றகிரீடங்களும், வரத அபயங்களோடு கூடியகரங்களும் முகமலர்ச்சியும், செம்பொன்னுலாகிய கச்சும், கற்பகப்பூமாலையும் தாங்கினதாகி, தும்புருநாரதர் இசைத்தேன் பொழிய, துர்க்கையும் காளியும் உடைவாள் ஏந்த, இந்திராணி தாம்பூலம் தாங்கிவர, சரஸ்வதி துதிசெய்ய, வேதங்கள் வாழ்த்த, தெய்வப்பெண்கள் சாமரம் வீச, கமலினி வெண்கொற்றக்குடை தாங்க, திலோத்தமை நடனஞ்செய்ய இன்னும் பற்பலவிதமான குதூகலத்துடன் இருஷிகளுக்கு நேத்திரானந்தத்தை உண்டாக்கிற்று. உடனே அம்மஹாருஷிகள் அம்பிகையின் பாதமலர்களில் நமஸ்கரித்து, கைகூப்பி, கண்ணினின்றும் ஆநந்தபாஷ்பம் சொரிய, மெய்ம்மறந்து மனதை ஒருவகைப்படுத்தி தேவியாரின் சமீபம் அணுகி பத்மாசனத்தில் எழுந்தருளுவித்து மனமாரப் பூஜைசெய்து வாயாரப் பன்முறை தோத்திரம் செய்து, "ஏ ஜகன்மாதா! நாங்கள் பூர்வத்தில் செய்த நல்வினையின் பயன் இன்றுதான் பலித்தது. தங்கள் தரிசனத்தினுல் அளவில்லா ஆநந்தமுற்றோம். எங்களுக்கு இனி ஏதும்குறைவில்லை. இனி உங்களருளால் பரமபிதாவாகிய எமது சிவபிரான் திருவருளையடையவும் தடையுண்டோ!" எனப் பலவாறு பிரார்த்தித்தார்கள்.

இம்மொழிகளை அன்புடன் கேட்டருளிய உமாதேவியார் இருஷிகளைப் பார்த்து "ஏ முனிவர்களே! சந்தனம் சரீரத்தின்மேலே பூசப்படும்திரவியமாகவும் வாசனைக்கு உபயோகமான பொருளாகவும் இருப்பதுபோல நீங்கள் அந்தணர்கள் என்ற வருணத்தின் பெயரையும் அந்தணர் என்ற பதத்தின் பொருளாகிய எவ்வுயிருக்கும் செந்தண்மை பூண்டு ஒழுகும் தன்மை வாய்ந்தவர்களாயும் இருக்கிறீர்கள். சூரியன் முதலில் தன்னையும் பின் விண்ணுதியுலகங்களையும்

விளங்கிடச் செய்தல்போல இப்பூவுலகின்கண்ணே நீங்கள் உங்கள் ஒழுக்கத்தினால் மேன்மையடைந்தும் உங்களைச் சார்ந்தோர் எவரும் மேன்மை அடையும்படியும் செய்தீர்கள்! உங்கள் மனோபீஷ்டப்படி சரஸ்வதியும் இலக்குமியும் மகிழ்வோடு அநுக்ரஹித்தார்கள். நாமும் உங்கள் மனம்போல் பிரசன்னமாகினோம். நமது நாயகராகிய சிவபெருமானும் வந்தருளுவார் என்பதற்கு ஐயமில்லை. நீங்கள் பயப்படவேண்டாம். மனக்கிலேசம் வேண்டாம். உலகத்தில் சந்திரனில்லா வானம், அமைச்சனில்லா நாடு, எப்படி விளங்காதோ அதுபோல் குருவிலான்வித்தை தவம் முதலிய எவ்விதப்பயனையும் விளைவிக்காது. ஆதலால் நம்முடைய மனோபீஷ்டம் பூர்த்தியாகும்பொருட்டு நம் பதியாகிய சிவத்தைக் காண நாமும் இங்கு அருந்தவம்புரிவம், நீங்களும் தவஞ்செய்தல் வேண்டும்.'' என மொழிந்தருள, முனிபுங்கவர்கள் அதிசீக்கிரத்தில் தேவலோகத்திலுள்ள கற்பகமலர்களினால் சண்பகச்சோலையின் மத்தியில் நவரத்னகசிதமாக மண்டபம் ஒன்று அமைத்து, அதில் அஷ்டமங்களங்களும் பொருந்தச் செய்தார்கள். உமாதேவியார் அம்மண்டபத்துட் சென்று வடக்கு முகமாய் ரத்னசிம்மாசனத்தில் எழுந்தருளி, இலக்குமி, சரஸ்வதி, பைரவமூர்த்தி இன்னும் கைலாசத்திலிருந்து வந்த பெண்மணிகள் உட்புறங் காக்க, பிரும்மாதிதேவர்கள் வெளிப்புறங்காக்க, சிவபெருமானைக் காணத் தவக்கோலம் பூண்டருளினாள்.

இத் தவக்கோலத்தைக் கண்ட இருஷிகள் "ஹே அம்மையே! குழந்தையின் பிணியை நீக்கத் தாய் மருந்து உண்பதுபோல, சிற்றறிவினையுடைய எங்கள்பொருட்டு நீங்கள் தவஞ்செய்கின்றீர்கள்! என்ன ஆச்சரியம்! நீங்களும் சிவபெருமானும் வேறல்ல. நீங்கள் வாசனையும் எம்பெருமான் புஷ்பமுமாக விளங்குகின்றீர்கள். வாசனையுள்ள இடத்து புட்பமும் இருக்குமன்றோ! யோசிக்குங்கால் உங்கள் தவமானது எம்போன்ற சிற்றறிவாளர்கள் சிவபெருமானைக் காண மார்க்கம் இன்னது என்று அநுஷ்டித்துக் காட்டுவதுபோல் தவஞ்செய்வதாகத் தோன்றுகிறது. வாசனையாகிய உங்களைக் கண்டபின் மலராகிய பரமசிவத்தை எப்போது காண்போம்!'' என்று பலவாறு உரையாடினார்கள்.

இருஷிபத்தினிகள் தேவியாரின் பக்கத்தில் சிரமேற் கரங்கூப்பி தவக்கோலத்தின் மகிமையைக் கண்ணுற்று, "பரதெய்வமே!

உங்கள் ரத்னகிரீடமாகிய சூரியனும், முகமாகிய சந்திரனும் எங்கும் பரந்திருக்கும் இருளை நீக்க தனியே சூரியசந்திரர்கள் எதற்காக ஏற்பட்டிருக்கிறார்கள்? உங்கள் கண்களே படைக்கவும் காக்கவும் இருக்க, பிரும்மாவும் விஷ்ணுவும் எதற்காக? உங்கள் கிருபாசமுத்திரம் எங்கும் பரவிக்கிடக்க, திரைகடல் எதற்கு? உங்கள் குணம் என்னும் மலை புவனமெல்லாம் நிறைந்திருக்க புறமலைகள் எதற்கு? ஏ! எந்தாயே! இவைகளெல்லாம் உலகத்தின்பொருட்டு உங்களது திருவிளையாடலன்றோ! தேவியாரின் பிரிவாற்றாமையால் சிவபெருமான் ஒருகணங்கூட தனித்திரார். இன்னும் ஈண்டு எழுந்தருளாத காரணம் யாதோ?'' என்று பேசிக்கொண்டிருக்கையில் திடீரென்று ஹோமாக்கினி வலஞ்சுழித்தெழுவதையும் பசுக்கூட்டங்கள் தாமே தம்மையறியாமல் பால் சொரிவதையும், பசுவும் புலியும் ஒருதுறையில் தண்ணீர் அருந்தும் தன்மையையும், சோலைகளினிடையில் மந்தகாசமான தென்றல் வீசுவதையும், கண்டு பூவைகளும் கிள்ளைகளும் இச்சின்னங்கள் சிவபெருமான் வருகைக்குமுன்னுள்ள அறிகுறி யென்றும் சொல்வதைக் கேட்டும் தேவியாரிடம் இவ்விஷயங்களை அறிவித்தார்கள். தேவியாரும் தமக்குத் தோன்றிய சில புறச்சின்னங்களைக் கொண்டும் இருஷிபத்தினிகள் வார்த்தைகளைக் கொண்டும் சிவபெருமான் சீக்கிரம் எழுந்தருளி விடுவாரென்று மனதில் நிச்சயித்து மந்தகாசத்தோடு தக்ஷிணகங்கையாகிய காவிரியில் ஸ்நானஞ்செய்து நித்ய கர்மானுஷ்டானங்களுடன் பஞ்சாக்ஷரத்தை ஜபித்து, சரஸ்வதி இலக்குமிதேவிகள் பூஜைக்குவேண்டிய பணிவிடைகள் புரிய, அகத்திலும் புறத்திலும் சிவபிரானையே தியானித்து ஹோமங்கள் செய்து, மோனநிலையில் நின்று பக்திமேலீட்டினால் சிவோஹம் பாவனையினாலே மெய்ம்மறந்து ஆநந்தபாஷ்பம் கண்ணினின்று பொழிய அசையாமல் நின்றுவிட்டாள். இம்மூர்த்தமே 'மூகாம்பிகை' யென்று வழங்குகிறது.

நிர்மலமான அம்பிகையின் ஹிருதயகமலத்தில் அவ்வமயம் ஜோதிரூபமாயும் வெளியில் இருஷிகள் கண்டு மகிழும்படி அண்டமுகடுகளுக்கு அப்பால் பரவினதாயும் பிரும்மாதி தேவர்களாலும் அளவிடமுடியாததுமான ஜகஜ்ஜோதிரூபமாய் சிவபெருமான் எழுந்தருளினார். மகா சம்ஹார காலத்தில் சகல உயிர்களும் பரமசிவனிடத்து ஒடுங்குவது போல தேவியாரும், மருதவன வாசிகளாகிய இருஷிகளும் அஜ்ஜோதியில் அடங்கினின்றார்கள். அதனால் அவ

ரவர்கள் திக்குத் திசை யறியக்கூடாமல் திகைத்து நின்றார்கள். உமாதேவியார் தெளிந்தாள். ஜோதியைத் தரிசித்தாள். தம் நாயகராகிய ஜோதிரூபத்தை துதிசெய்து "என் பிராணநாதா! இருஷிக் கூட்டங்கள் முதலான யாவரும் இஜ்ஜோதியைக் கண்டு அலமலந்திருக்கிறார்கள். அவர்கள் தரிசித்து ஆநந்தமுற விளங்கும்படிப்" பிரார்த்திக்க, சிவபெருமானும் உவகைபூத்து, நாற்புறமும் அழகு கனிந்து ஒழுகுகின்ற காசரணுதிகளுடனும், இளம்பிறை தரித்த முடியுடனும், கரங்களில் மான், மழு, வரதம், அபயம் முதலியவைகளைத் தாங்கி பவளமலை ஓங்கி நின்றாற்போல் ஒரு இலிங்கரூபமாய் பார்ப்போர் கண்களையும் மனதையும் கவரத்தக்க ஜோதியையுடைத்தாகி விளங்கினார். தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள். குபேரன் கனகமாரி வருஷித்தான். கந்தருவர்கள் வீணை கானம் செய்தார்கள். பூதகணங்கள் துந்துபி முழங்கினார்கள். எங்கும் வேத ஒலி முழங்கின. தேவியாரும் பேரானந்தமுற்று சிவபெருமானின் திருவடிகளில் வணங்கினாள். இருஷிகளும் ஏனையோரும் மகிழ்வுற்று பசிப்பிணி நீங்கிப் பேரானந்தத்தில் மூழ்கி நின்றார்கள்.

[இந்தப்பிரகாரம் இத்தலத்தில் தேவியாரின் தவமகிமையினால் சிவபெருமான் ஜோதிரூபமாய் ஸ்ரீ மகாலிங்கமென்றும், காசரணுதிகளுடன் ஏகநாயகமூர்த்தியாயும், தம்மை அடைந்தோருக்கு இம்மை மறுமைப் பயன்களை வெகு எளிதில் வேண்டியன வேண்டியவாறு அருள, அம்பிகையும் முனிவர்களும் தம்மைத் தரிசிக்க இயற்றிய தவநிலைச்சருக்கத்தைக் கூறி, இனி சிவபெருமான் அருச்சனை செய்யும் முறையைத் தெரிவிக்க, தம்மைத்தாமே அருச்சனை செய்து காட்டிய முறையைக் கூறுவாம்.]

தவநிலைச் சருக்கம்

முற்றிற்று.

ஐந்தாவது

தம்மைத் தாம் அருச்சித்த சருக்கம்.

ஏகநாயக மூர்த்தியாய் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் தவத்தினுல் சிறந்து விளங்கும் ஸ்ரீ உமாதேவியாரின் முகத்தை நோக்கி, "என்பிரியே! நீ அளவற்ற கடுந்தவம் புரிந்து சரீரம் இளைத்தனை போலும்! உன் இஷ்டப்படி நமது அகத்தியன் சொல் தவருவண்ணம், நாமும் இம்மருதவனவாசிகள் மகிழும்படி காட்சி கொடுத்தருளினும். தேவாதி தேவர்களும் அறிய முடியாதபடி பாலில் நெய் போல அரூபியாய் விளங்கும் நம்மை, நீ, மருதவன வாசிகளிடத்து உள்ள பேரன்பினுல், கடுந்தவம் புரிந்து இப்புவனத்திலுள்ளோர் மகிழ, பாலைக் கடைந்து நெய்யைப் பிரித்துக் காட்டுவதுபோல் நம்மை வெகு சுலபமாக பிரத்தியக்ஷமாகும்படி செய்வித்தாய். என் தவநாயகமே! உலகமெங்கும் உன் புகழ் பரவிக் கிடக்கிறது. நீ எந்த இடத்திலிருந்து தவம் செய்தாய்! அங்கு உன்னுடைய ஆகாராதிகள் யாவை? நம்மை விட்டுப் பிரிந்த பின் நம்முடைய ஞாபகம் உன் மனதில் இருந்ததா? உன் தவத்தை வெகுவாய் மெச்சினும்! அதற்காக உனக்கு நாம் யாது வரம் கொடுப்பது! சிறப்புற்ற கைலையங்கிரியை கொடுப்போமென்ருல் அது நீ உல்லாசத்துடன் வசிக்கிற உன் சொந்த உறைவிடமாயிருக்கிறது! அஷ்ட ஐசுவரியங்களைக் கொடுப்போமென்ருல் அவைகள் உனக்கு பணிவிடையாளர்களாய் இருக்கிருர்கள்! உன்னிடத்துள்ள மாயையை நீக்குவோமென்ருல் நீயே மெய்ஞ்ஞான சொரூபியாயிருக்கிருய்! காமாதி பாசங்களிலிருந்து விலக்குவோமென்ருல் அவைகளின் பற்று உனக்கோகிஞ்சித்தேனு மில்லை. உன்னை அடைந்தோர்க்கு அன்புடன் போக மோக்ஷங்களைப் பரிவுடன் அளிக்கும் சக்தி உன்னிடமே உளது! ஆகையால் உனக்கு நான் அளிக்கத் தகுந்த வர மொன்று மில்லை. உன் கனிவாயினின்று பொழியும் இன்ப ரஸத்தை நாமுண்டு மகிழும்படி நீயே எனக்கு ஒரு வரமளிப்பாய்!" எனச் சொல்லலுற்ருர்.

அது கேட்ட உமாதேவியார்

'சங்கர! நீலகண்ட! சம்பக வனேச! நீடு
பொங்கர வணிந்த வேணிப் புண்ணிய! மூர்த்தியெங்குந்
தங்கர! வுலகநாத! சம்புவே! மறி மானேந்தும்
அங்கர! மருதினீழ லமர்ந்திடு முதல்வ! போற்றி'!

னைத் துதித்து, "ஏ பிராணநாத! என்னைத் தாங்கள் அன்பினால் பலவாறு புகழுகிறீர்கள். தாங்கள் ஒன்றும் அறியாதவர்கள் போல் வினைப் பலவிடுத்தீர்கள். நான் உண்மை உரைத்தல் வேண்டும். என் தவத்தினால் பரமானந்தக் கடலில் மூழ்கி, பரம் பொருளைக் கண்டு அதனையே தொடர்ந்து ஆகாரமாகக் கொண்டேன். மனம் வாக்குக்காயத்திற்கு எட்டாத, வேதத்தின் பொருளாய் விளங்கும் ஜோதியை அன்போடு நாறுவித நறுமலர் கொண்டு அகத்திலும் புறத்திலும் பூஜை செய்து உங்கள் அடியார்களைப் போல் உங்களிடம் பேரன்பு கொண்டவளாய் சதா தங்களையே தியானித்துக் கொண்டிருந்தேன். நான் தவம் செய்யுங்காலை இரவு பகல் தோன்றவில்லை. என்னையும் மறந்திருந்தேன். ஆனால் தங்களை அன்றும் கண்டேன். இன்றும் கண்டேன். என்றும் கண்டேன். ஆகாயத்திடை வாயு போலவும், இரவியின் முன் திங்கள் போலவும், தங்கள் முன் நான் எக்காலமு மிருந்தேன்." எனப் பணிவுடன் உரைத்தலும், சிவபெருமான் உவகைபூத்துச், சொல்லுகிறார். "தவத்தின் பெருமையை உணர்த்தும்படி நீ செய்து காட்டிய தவத்தின் சிறப்பைக் கண்டு மகிழ்ந்தோம். ஜோதி ரூபமாய் காட்சியும் கொடுத்தோம். எவருங் காண ஜோதிர் மகாலிங்கமாய் விளங்குகின்றோம். அவ்விலிங்கத்தை பூசனை செய்யும் முறையை நாமே பூஜை செய்து காண்பிக்கின்றோம். வேண்டியன வேண்டியாங்கு அளித்திடு கற்பகம் போல் பரம் பொருளாயும் சுயம்புவாயும் விளங்குகின்ற இவ்விலிங்கந்தன்னை எவனொருவன் பூஜை செய்வதற்கென்று எண்ணி முற்படுகின்றானோ, அவன் முன் தோன்றும் கர்ம வினைகளை நாம் ஒழித்திடுவோம். உள்ளன்போடு எவனொருவன் ஒருதினம் அருச்சனை செய்கின்றானோ அவன் இகத்தில் அளவற்ற கல்வி, ஞானத்தையும், பற்பல செல்வங்களையும், மனைவிமக்களுடன் இன்புற்ற வாழ்க்கையையும், அனுபவித்து பரத்தில் பாசம் நீங்கி பர முக்தியையும் அடைவது நிச்சயம். அவ்விலிங்கத்தை ஒருதரம் தெரிசனம் செய்தாலும் மகா பாதகங்களெல்லாம் தீயிற்பட்ட பஞ்சுபோல் பறக்கும். இரவியின் முற்பட்ட இருள் போல அவனுடைய பகைவரும் அழிவர். சகல பிணிகளும் நீங்கும். இன்னும் எண்ணிய பொருள் எண்ணியவாறே கைகூடும்." என்று சொல்லி, சிவபெருமான் பூஜை செய்யும் பொருட்டு அம் மூர்த்தியின் சமீபம் அணுகினார்.

அச்சமயம் பூதேவி அழகிய நவரத்தின மணிகளால் இழைக்கப்பட்ட ஆசன மளிக்க, தேவதச்சன் பளபளப்பான அழகிய மண்டபம் அமைக்க, இரண்யகர்ப்பன் பூநூல் பவித்திரம் கொடுக்க, வருணன் கங்கையாதி புண்ய தீர்த்தங்கள் நிறைந்த குடங்களைச் சேர்க்க, வாயு நானாவித நறுமலர் தொகுக்க, குபேரன் சிறந்த ஆடையாபரணங்களை அளிக்க, பொதியமலை சந்தனாதி திரவியங்கள் சேர்க்க, அக்னி தூப தீபம் கொடுக்க, புவனேஸ்வரி பால் தயிர் அன்னாதி நிறைக்க, தேவேந்திரன் தாம்பூலம் தாங்க, நிருதி குடை கண்ணாடி சாமரம் வீச, சூரிய சந்திரர்கள் விளக்காய் நிற்க, எமன் தன் சேனையோடும் எத்திசையும் காவல் காக்க, வேதங்கள் கோஷிக்க, அஷ்டவசுக்கள் பல்லாண்டுகூற, கந்தர்வர் கீதம் பாட, முனிவர்கள் வாழ்த்த, தேவஸ்திரீகள் நிர்த்தனம் செய்ய, தேவர்கள் புஷ்பமாரி பொழிய, பூதகணங்கள் வாத்தியம்முழக்க, மகாவிஷ்ணு அங்குவரும் பூஜா திரவியங்களை வாங்கிக் கொடுத்து ஏவல் பணிவிடை புரிய, சிவபெருமான் மகிழ்வுடன் வேத ஆகமங்களின் முறை தவருது இஜ்ஜோதி மகாலிங்கத்தை பூஜை இனிதாக பக்தியோடு செய்தருளினார்.

அதன்பின் சிவபெருமான் தமக்கு ஏவற் பணிவிடை செய்த தேவர் முதலிய எவர்க்கும் மேலான வரங்களை யருளி அவரவர் இருப்பிடம் அனுப்பி விட்டு, பார்வதி தேவியாரின் மலர் போன்ற முகத்தை நோக்கி, புன்சிரிப்புற்ருர். தேவியார், "ஹே என் பிராணநாத! தேவாதி தேவர்கள் தங்களை பூஜித்து வருவதல்லவா நியாயம்? தாங்கள் இந்த மூர்த்தியில் யாரை பூஜித்தீர்கள்? என்னை மன்னித்தருளல் வேண்டும்." எனக் கேட்கலும், சிவபெருமான், "ஏ பெண்நாயகமே! பூஜை செய்தவரும் நாமே. அப்பூஜையை யேற்றுக் கொண்டவரும் நாமே. ஈண்டுள்ள மகருஷிகள் நீண்டகாலமாக பூஜை செய்யும் முறையை முற்றிலும் மறந்திருக்கிருர்கள். ஆகையால் அம்முறையை அவர்கள் அறியும் வண்ணம், நாமே நேரில் செய்து காட்டினேம்." என்ருர். தேவர் குழாம் கண்டு மகிழும்படியான ஜோதி ரூபத்தை மருத வனவாசிகள் இன்புறும்படி காட்டி, அதைப் பூஜைசெய்யும் முறையையும் சிவபெருமான் அவரிடத்தே கொண்ட அன்பின் மிகுதியினுல் தாமே செய்து காட்டி, பின் உமாதேவியாரின் வேண்டுகோளுக் கிணங்கி தம் அருள்வாக்கினுல் அவ்விருஷிகளை ஆனந்தமுறச் செய்து, "ஏ முனிவர்களே! உங்களிடத்

தில் 'பக்தி' யென்னும் கற்பகம் நிலைபெற்று அதன் காரணத்தால் பிரமாதி தேவர்களாலும் கண்டறிய முடியாத நம்மை உங்கள் முன் வெகு எளிதில் தருவித்து விட்டது. நம்மை பக்தியோடு எவனொருவன் சிந்திக்கிறானோ அவனுக்கு நாம் வெகு எளிதில் கட்டுப்படுவோம்.'' என்றருளினார்.

இதைக் கேட்ட முனிவர்கள், ''ஹே கிருபா சமுத்திரமே! எங்களுக்கு உங்களிடம் பக்தி உண்டாகச் செய்வதும் அப் பக்தியை ஏற்றுக்கொள்வதும் வினைப் பயனாலாய துக்கத்தை நீக்கி நித்யாநந்த முறச் செய்வதும் நீங்களே தான்! நாங்கள் ஏதும் அறிந்திலோம். அப்படிக் கிருக்க தங்கள் திருவாக்கினால் 'மிக்க அன்புடையீர்' எனச் சொல்லி யருளினீர்கள். நாங்கள் மேன்மையை யடைந்தோம். எங்களுக்குத் தங்கள் தரிசனம் கிடைத்ததற்குக் காரணம். பரம தயாளுவாகிய எமது அன்னை உமாதேவியாரும், முத்தமிழ்த் தலைவராயும் எங்களுக்குத் தலைமை பூண்டவருமான அகத்திய முனிவருமே தான் காரணம்'' எனச் சொல்லி அகமகிழ்ந்தார்கள்.

சிவபெருமான் மருதவன வாசிகளாகிய, தவமியற்றினோர், சும்மா இருந்தோர், யாவருக்கும், கல்வி, செல்வம் முதலான அஷ்ட ஐசுவரியங்களையும் நிறைவுற அருளி, அகத்தியன் உரைத்தபடி தாம் நேரில் பிரசன்ன மானதாயும் தெரிவித்து அவரவர்களுக்கு வேண்டிய வரன்களைக் கேட்கும்படி உரைத் தருளினார். இருஷிகள் உடனே தங்களுக்கு சிவ ஞானத்தையும் அதை அடையும் மார்க்கத்தையும் அருள வேண்டுமென பிரார்த்திக்க, பிரணவ சொரூபமாயுள்ள இவ் விலிங்கத்தில் அமர்ந்திருக்கும் தம்மை வணங்கின மாத்திரத்தில் சிவஞானம் உண்டாகும் என்று சொல்லி அதையும் சிவபெருமான் இருஷிகளுக்கு அனுக்ரஹம் செய்தார். இதைக் கேட்டு முனிவர்கள் ஆச்சரியமுற்று, பிரணவத்தின் சிறப்பையும் கேட்டுத் தெரிய ஆவலுற்றார்கள். சிவபிரானும் முறுவலுற்று, ''முனிவர்களே! பிரணவம் ஓர் உருவமா யிருந்தாலும் அது அநாதியானது. ஒரு சமயம் ஓர் பிரும்மா யாகம் செய்யக் கருதி, வேதமுடிவை நினைத்தும் அது சிறிதும் தோன்றாததால் எம்மைக் குறித்து நீண்டகாலம் அருந் தவம் புரிய, நாமும் பிரத்தியக்ஷமாகி, பிரணவத்தின் தன்மையை உபதேசித்தோம். அப்பிருமா அப்பிரணவமாகிய சமுத்திரத்தை சிறப்புற்றோங்கும் ஞானமென்னும் மத்தினால் கடைந்திடவும், அதினின்று வியாகிருதி முற்பட, உடன் ஸ்ரீ காயத்ரீ தேவியும்

தோன்றினாள். அதிலிருந்து வேதங்கள் உண்டாயின. பிரும்மா விஷ்ணு ருத்திரர் தோன்றினார்கள். இம்மூவரையுங்கொண்டு யாகமும் முடிவடைந்தது. இந்த யாகத்திலிருந்து பதினான்கு உலகங்களும் தோன்றின. எமது திருவருளால் உங்களுக்கும் சிவஞானம் உண்டாகி எம்மையும் நேரில் தரிசிக்கலானீர்கள். ஆகையால் எம்மை யறிதற்கும், முக்தி யளிப்பதற்கும் ஆதி காரண வஸ்துவாகிய இப்பிரணவத்தை ஜபிப்போர்களுக்கு எவ்விதமான, சோக, மோகங்கள் கிட்டா." எனக் கூறலும், இருஷிகள் பரமானந்தத்தில் மூழ்கியிருந்தார்கள். இவ்விதம் பிரணவத்தின் மகிமையை உணர்ந்து, சிவஞானம்பெற்று, சிவபெருமானை நோக்கி, "ஏ கருணையங் கடலே! எங்களுக் குண்டான பல சந்தேகங்களும் தெளிந்தோம். இவ்விலிங்கம் ஒன்று தானோ! பல வுண்டோ! பூஜையை ஏற்றுக் கொண்டு அனுக்ரஹிக்கும் மூர்த்தி வேறு உண்டானால் அதையும், அதைப் பூஜை செய்யும் முறையையும் யாங்கள் அறியும் வண்ணம் செய்தருளல் வேண்டும்," எனப் பிரார்த்தித்தார்கள். சிவபெருமான் தம் பக்தகோடிகள் அபிப்பிராயத்துக்கு என்றும் எளியவராதலால் உடனே பூஜை செய்தற் குரிய, பாவனை, வடிவம், பக்தி, மதக் கொள்கைகளையும், அவைகளைச் சொல்லும் அநந்தமான சாஸ்திரங்களையும் கொண்டு, வைதீகபூஜை, தாந்திரீகபூஜை, மிச்ரபூஜை ஆகிய அநேகம் பூஜைகள் செய்யலாம். இவற்றுள் எவரேனும் ஏதேனும் ஒரு வடிவிலே ஓர் விதியை அனுசரித்து பூஜித்தவர் சீவன் முக்தர் ஆவது நிச்சயம். எந்த வடிவமாகக் கொண்டு பூஜித்தாலும் சில முக்கியமான அம்சங்களைத் தவறாது செய்துவர வேண்டும். உங்களிடம் நமக்கு உள்ள அன்பினால் சிவபூஜை செய்யும் முறையை விரிவாக உரைத்தருளினோம்."

"செல்வம், ஆற்றல் உடையவர்கள், செய்யும் பூஜையில் மந்திர லோபம், கிரியா லோபம் முதலான லோபம் உண்டானால் தரித்திர நிலையை யடைவார்கள். அவரவர்கள் இடம், பொருள், ஏவலுக்கு ஏற்றவாறு பக்தியோடு பூஜை செய்தல் வேண்டும். அப்படிச் செய்பவர்கள் இம்மையில் எண்ணிய எண்ணிய வாங்கே பெற்று மறுமையில் மோக்ஷத்தையும் அடைவார்கள். அன்போடு நம்மைப் பூஜை செய்பவர்களே மானிடர்கள். அல்லாதார் மிருகாதி பக்ஷிகளாம். ஒரு மலரையாவது அன்புடன் ஜோதி ரூபியாகிய நம்மிடத்து எவனொருவன் சாத்துகிறானோ அவனுக்கு எல்லாப் புகழும் உண்டா

கும். தவம், தருமம், விரதம் வேண்டுவதில்லை. பூஜை செய்பவரு டைய பெருமையை அளவிடமுடியாது.'' என்று ஏகநாயகப் பெரு மான் முனிவர்களுக்கு அருளிச்செய்தார்.

அகத்தியாதி முனிவர்கள் இதைக் கேட்டு, தாமும் தினம் ஜோதிலிங்கத்தை பூஜை செய்ய வேண்டுமென உட்கொண்டு, அத ற்கு வேண்டியபடி ஆலயாதிகள் நிர்மாணிக்க தேவதச்சனைக் குறி த்து நினைத்தார்கள். நினைத்த மாத்திரத்தில் தேவதச்சனும் முனி வர்கள் இஷ்டப்படி, சிற்ப சாஸ்திரத்தில் உத்தமோத்தமமான விதி யை உன்னினன். உடனே பொன் மயமான ஆலயம் உண்டாகியது. அதில் பத்ம மண்டபம், அர்த்த மண்டபம், நிர்த்த மண்டபம், மகா மண்டபம், வசந்த மண்டபம், யாகசாலை, பாகசாலை, இரட்டை மாளிகைப்பத்தி, திருமதில்கள், மேருவுக்கு ஒப்பானகோபுரங்களும், வலது புறத்து அம்பிகையின் ஆலயங்களும், விநாயகராதி கடவுள் ஆலயங்களும் க்ஷணப் போழ்தில், எல்லோரும் கண்டு ஆச்சரியப்ப டும்படி அமைக்கப் பெற்றது.

இம் மருதவன வாசிகளான மகருஷிகள் ஏகநாயகப் பெருமா னையும் உமாதேவியாரையும் வணங்கி, தம் பரிவார தேவதைகளு டன், கோவிலுட் சென்று அவரவர்களுக்கென்று சமைக்கப்பட்ட தானத்தில் அமர்ந்து, தாங்கள் தினம் செய்யும் பூஜையை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று பிரார்த்திக்க, பக்தர்களின் இஷ்டப்படி அவரவர்க்குரிய தானங்களில் எழுந்தருளினார்கள். அன்று முதல் காமிகாகம விதிப்படி அகத்தியர் முதலான இம் மருதவன வாசி கள், பெருநலமாமுலையம்மை சமேத ஸ்ரீ ஜோதிர்மய மஹாலிங்க மூர்த்தியையும் விநாயகராதி கடவுளையும் பக்தி சிரத்தையோடு தினம் பூஜை செய்து ஆநந்தக் கடலில் மூழ்கியிருந்தார்கள். இந்த விதமாக, பரமசிவனும் பார்வதியும் எழுந் தருளியிருக்க, முனிக் கூட்டங்களும், தேவகணங்களும், கின்னரர், கிம்புருடர், கந்தருவர் முதலான யாவரும் வந்து பூஜை செய்ய, அவரவர்களுக்கு வேண் டிய வரங்களையும் அருளி, பக்திமான்களுக்கு வெகு எளிமையுடை யவராய் ஏகநாயகமூர்த்தியாய் யாவரும் இறைஞ்ச, வீற்றிருக்கிறார்.

[அடியார்கள் தம்மை பூஜை செய்யும் முறையை விரிவாகத் தாமே காட்டியருளியதை சூதமாமுனிவர் நைமிசாரண்ய வாசிகளுக்கு உரைத்து, பின் இத்தலத்தில் பக்ஷி ஜாதிகளிலொன்றாகிய காகமானது ருத்திர ரூபத்தை யடைந்த விதத்தைக் கூறினதை சொல்வாம்.]

தம்மைத் தாம் அருச்சித்த சருக்கம்

முற்றிற்று.

ஆறாவது

காகமான்மியச் சருக்கம்.

ஒரு காலத்தில் சைவ வைதீக ஒழுக்கு வழுவாத நடை யுடையவராயும், திரிகால ஞானியராயும், நீண்ட ஆயுளை யுடையவராயும், எவ்வுயிர்க்கும் வேண்டுவன அளிப்பவராயும், தவம் என்னும் இலக்குமியை பூரணமாய் அடையப் பெற்றவராயும், 'போக மோக்ஷங்களை அளிப்பவர் சிவபெருமானே' யென்று தெளிந்தவராயும், சரீரமெல்லாம் உரோமங்களால் நிறைந்து அநேக விஷ்ணுப் பட்டங்களுக்கு ஒருமுறை ஒவ்வொரு உரோமங்களாய் உதிர அப்படி எல்லா உரோமங்களும் உதிரும் காலம், தான் சிவபெருமான் திருவடியைச் சேரும் சமயம் என்கிற காரணத்தால் உரோமசர் என்னும் பெயர் பூண்ட மகருஷி, தன் சிஷ்ய வர்க்கங்களோடு இப்பூவுலகின் கண்ணுள்ள பல தலங்களிலும் யாத்திரை செய்வாராயினர். அச்சமயம் இவ்விடைமருதூர் வந்து காவிரியில் கல்யாண தீர்த்தம் என்று சொல்லப்பட்ட கட்டத்தில் ஸ்நானம் செய்து, கனகதீர்த்தக் கரையில் வரும் காலை யதேச்சையாக அந்த கனக தீர்த்தத்தில் ஒரு காகம் மூழ்கி எழுந்து அருகிலிருந்த ஒரு மருதமரக்கிளையின் உச்சியில் உட்கார்ந்தது. உட்காரலும், அந்தக் காகம் தன் கருநிறம் மாறி மாற்றுயர்ந்த பொன் வடிவம் பெற்றது. இந்த சம்பவத்தைக் கண்ணுற்று அக்காகம், "ஆஹா! இது என்ன ஆச்சர்யம்! இத் தீர்த்தத்தின் மகிமையே மகிமை! இதன் தெய்வீகத் தன்மையே தன்மை! எத்தகைய ஜீவராசிகளும் என்னுடைய கருநிறம் போன்ற தம் தீவினைகள் நீங்கி ஸ்வர்ணமயமான சிறப்புற்ற நற்பயனை அடைய இந்த தீர்த்தஸ்நானமே பரம விசேஷம்!" என்று பலவாறு தீர்த்தத்தின் பெருமையையும் அதைப் பெற்றுள்ள மருதூரையும் அங்கு வீற்றிருக்கும் கருணாநிதியாகிய சிவபெருமானையும் மனமாரத் துதிசெய்து உறும் காகத்தை நோக்கி, உரோமசர் "ஏ, காகமே! நீவிர் யாவீர்? தேவரோ, முனிவரோ, அல்லது மாயையோ, அல்லது உள்ளபடி காகந்தானோ? எனக்குத் தெளியச் சொல்லும்" என வினவ, அக்காகமானது தன் வரலாற்றைச் சொல்லுகிறது.

" ஆதியில் நான் ஒரு பிராமணன். வேதாகம புராணங்களை வழுவற உணர்ந்தவன். மிகுந்த செல்வமுடையவன். ஒரு சமயம் சூரிய கிரகண காலத்தில் புண்ணிய தீர்த்தத்தில் எல்லோரும் ஸ்நானம் செய்து அவர் அவர் சக்திக்குத் தகுந்தபடி தானம் செய்தார்கள். அக்காலத்தில் நான் ஒரு கொடிய தீவினையைச் செய்தேன். அதை நான் செய்யத் தகாது என்று தெரிந்தும் நான் செய்தது பெரும் தவறு. தேவர்களும், மனிதர்களும், முனிவர்களும், நல்ல வரப்பிரசாதங்களை அடையும் பொருட்டுத் தவம், தர்மம், தானம் முதலியன இயற்றி, சிவபெருமான் அருளை அடையுங்கால், இராக்கதர்கள் தங்களுக்கு கிடைக்கக் கூடிய பிரயோசனம் யாதென்னக் கேட்க, சிவபெருமான் 'கிரகணாதி புண்ணிய காலங்களில் விருப்போடு செய்யப்படுகிற தானம், தவம் முதலானவைகளைக் குற்றமறச் செய்தால் அவைகளுக்கு எளிதில் உத்தமபலன் உண்டு. அவைகளில் ஏதேனும் குற்றங்குறைகள் உண்டானால் அதனால் உண்டாகும் நற்பலன்களை நீங்கள் அடைவீர்கள்' என்று இராக்கதருக்கு அருளிச் செய்தார். இதுவும் எனக்குத் தெரியும். எத்தகைய புண்ணியமும் எவரையும் மேன்மைப் படுத்தும். பாவம் எவரையும் கடு நரகில் வீழ்த்தி உழலச் செய்யும். சிறியோர் பெரியோரைச் சார்ந்தால், பூவுடன் நாறும் மணம் பெற்றது போலவும், சிவபெருமானை அடைந்த நாகம் போலவும் பெருமையுற்று வாழ்வர். இவைகளுக் கெல்லாம் காரணம் ஒருவன்செய்யும் நற்றவம், தானம், தருமம் இவைகளேயாம். இவ்வளவும் எனக்கு நன்றாய்த் தெரியும். தெரிந்திருந்தும் அந்தோ! கொடிய ஊழ்வினை யாரைவிட்டது! பிரம்மாதி தேவர்களும் மன்னாதி மன்னர்களும் அதன்பால் பட்டு வருந்தினார்கள் என்றால் இவ்வெளிய அந்தணனாகிய நான் எப்படித் தப்ப முடியும். அக்காலத்து சத்தியம் தோன்றாது. தருமம் கிட்டாது. புகழ் பற்றாது. புத்தி நிலைக்காது. பாவச் செய்கைகளே மேலிட்டு மயக்கமே மிகுந்து வரும். "ஏ முனிபுங்கவரே"! இத் தன்மை என்னைப் பற்றிக் கொண்டது.

நான் அப் புண்ணிய தினத்தில் ஸ்நானம், ஜெபம், முதலிய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, ஓர் மன்னவரால் கொடுக்கப்பட்ட ஒரு தானத்தை ஏற்றுக் கொண்டதோடு, பின்னும் கொஞ்ச நேரத்துக் கெல்லாம் பேராசையினால் மற்றொரு மன்னனிடத்தில் தானம் பெறும் பொருட்டுச் சென்றேன். அம்மன்னன் என் மார்பிலுள்ள சந்தனாதி வாசனைத் திரவியங்களைக் கண்டு, நான் முதலில்

தானம் பெற்றிருந்த விஷயத்தைக் குறிப்பால் தெரிந்து கேட்டலும், பொய் யுரைக்கத் துணியாத நான் நடந்ததை நடந்த வாறே உரைத்தேன். அம்மன்னனும் என்னிடம் கோபமுற்று, நீ காகம்போல் பின்னும் இத்தானத்துக்கும், அலைந்து வந்ததால், காக ரூபத்தை யடையக் கடவாய்! என சபித்து விட்டான். உடனே என் மனம் துடிதுடித்து ஆவேசமுற்று மன்னனுக்குப் பிரதி சாபம் கொடுக்க எத்தனிக்கையில், அம்மன்னனுடைய குலகுருவாகிய சுசங்கியரென்பவர், ஓடிவந்து, 'ஏ பிராம்மணோத்தமரே! நீவிர், சிரேஷ்டர். உத்தம குணம் வாய்ந்தவர். மன்னன் உமக்கு சாபம் கொடுக்காவிட்டாலும் உமது ஊழ்வினைப்பயனால் நீர் காகமாக மாறுவது திண்ணம். இவ்விஷயம் இம் மன்னன் காரணமாக உமக்குச் சாபம் ஏற்பட்டது. நீர் பிரதிசாபம் கொடுத்தாலும் உமக்கு ஏற்பட்ட ஊழ்வினைப் பயன் மாறாது. உமது சாபம் அரசனுக்குப் பலித்துவிட்டால் அவன் செய்யும் தான முதலியவைகள் பயன் பெறா. நீரும் இவ்வுருவம் மாற முடியாது. எப்பொழுதும் காகமாகவே விளங்குவீர். பிரதி சாபம் வேண்டாம். சிவபெருமான் அருள் உமக்குண்டு. மன்னன், தானம் தவம் ஒழுங்குறச்செய்திருந்தாலன்றி குடிபடைகள் க்ஷேமத்தை யடையமுடியாவாம். தவிர, ஒருவரால் நமக்கு ஏற்படும் தீமையை ஊழ்வினைப்பயன் என்று பொறுமையாய் ஏற்று அதற்குப் பிரதி செய்யாமல் நமக்குற்ற தீ வினையைத் தீர்க்க வேண்டிய முயற்சிகள் செய்தால் சாபம் ஒழிந்து, பின் நமக்கு நன்மையும் சிவபெருமான் அருளும் கிடைக்கும் என்பது நமக்குத் தெரியாததன்றோ? தீமைக்குப் பிரதி, தீமை செய்யும் சுபாவம், கொஞ்சமேனும் இல்லாத தன்மை யுடையவர்களாதலால் நமக்கு 'அந்தணர்' என்னும் காரணப் பெயர் ஏற்பட்டிருப்பதை மறந்து விட்டீர் போலும்' எனப் பலவாறு இனிய சமாதான வசனங்கள் கூறவும் என் கோபம் தணிந்து விட்டது.

"இவ்விதமாய் இந்த உருவடைந்து நான் பூர்வ ஞானத்துடனே, கண்ணீர் சொரிந்து, கிலேசமுற்று, மலைகளென்ன, காடுகளென்ன, பட்டணங்களென்ன, கிராமங்களென்ன, பல இடங்களிலும் என் இனத்தாரோடு சென்று அலைந்தேன். அந்நாந்த தலங்களின் தீர்த்தத்தில் மூழ்கினேன். தேவாலயங்களில் இடப்பட்ட பலி அன்னத்தைப் புசித்தேன். காய் கனிகளைத் தின்றேன். இவ்வாறு உழலும் நாளில், இம் மருதூருக்கு வந்தேன். இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானமும் செய்தேன். ஆஹா! என்ன ஆச்சரியம்! பூர்வ ஜன்

மத்தில் நான் செய்த சிறிதளவு நற்றவத்தின் பயனோ! என் உருவம் பொன் வடிவமாக மாறி நான் இங்கு விளங்குகிறேன், தங்களையும் தரிசிக்கப் பெற்றேன். ஏ முனிபுங்கவரே! தங்கள் தரிசனம் கிடைத்த மாத்திரத்தில் நான் பரிசுத்தனுனேன். இனி நான் நற்கதியடைவதற்கும் ஐய முண்டோ? இது தான் என் வரலாறு.'' என்று காக ரூபியான பிராம்மணோத்தமர் தன் வரலாற்றைக் கூறினர்.

உடனே, சிவபெருமான் திருவருளால் கோடி சூரியப் பிரகாசம் போன்ற விமானம் ஒன்று தேவ கணங்களால் தாங்கி வரப் பெற்று, அக்காகமானது உருமாறி, நாற்றோளும் நெற்றிக் கண்ணும் உடைய உருத்திர ரூபத்தை யடைந்து, அவ்விமானத்தின் மீதேறலும், தேவமகளிர் நிர்த்தனஞ் செய்யவும், சாமரம் வீசவும், பற்பல வாத்திய கோஷங்கள் முழங்க, தேவ கணங்கள், உருத்திர கணங்கள் புடை சூழ, தேவர்கள் பூமாரி பொழிய, சுந்தர வதனமும் கருணைக் கடலுமாகிய உமாதேவியாரையும் சிவபெருமானையும் தன் மனதில் தியானித்துக் கொண்டே அளவில்லாத ஆனந்தத்தையுடையதாய் கைலைக்கு இந்த உருவம் சென்று, இன்புற்று வீற்றிருந்தது. என்ன ஆச்சரியம்!

[இம் மருதூரில் மேல வீதியின் கீழ்சார்பாக இற்றை நாளிலும் காணப்படும் தடாகத்தில் காகமானது ஸ்நானம் செய்து பொன்னிறமடைந்து, அழகியருத்திர ரூபம் பெற்று தேவ விமானத்தில் கைலைக்கு ஏகின காட்சியை உரோமச முனிவராதிகள் கண்டு மனதில் அடங்காத மகிழ்ச்சி கொண்டார்கள். இதன் காரணத்தினுலேயே அதற்கு 'கனகதீர்த்தம்' என்றும் 'காகதீர்த்தம்' என்றும் வழங்கி வருகிறது. இக் காட்சியைக் கண்ட உரோமசர் உத்தம தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தவராகி, அரிய மெய்ஞான வடிவுடன் விளங்கப்பெற்றும் இக்கனக தீர்த்தத்திலும் ஸ்நானம் செய்து, இம் மருதீசனைப் பூஜை செய்த, வரலாற்றைச் சூதமாமுனிவர் நைமிசாரண்ய இருஷிகளுக்குக் கூறியதை இனி சொல்லத் தொடங்குவாம்.]

காகமான்மியச் சருக்கம்

முற்றிற்று.

ஏழாவது

உரோமசச் சருக்கம்.

இவ் வற்புதங்களைக் கண்ட உரோமசமாமுனிவர் அக் கனக தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து ஸ்ரீ ஜோதிர்மய மகாலிங்கத்தை தரிசிக்கக் கோவிலுக்குப் போகுங்கால் அங்கிருந்து கீத ஓசையும், வாத்திய முழக்கங்களையும் கேட்டுத் தன் சிஷ்யவர்க்கங்களோடு விரைவாக ஆலயத்துட் சென்றார். அங்கு பற்பல நவரத்னம்போல் ஜொலிக்கின்ற தீபவரிசைகளும், அலங்காரமான மேற்கட்டிகளும், வாசனை பொருந்திய புஷ்பமாலைகளும் நானாவிதத் தோரணங்களும் விளங்கிக் கொண்டிருந்தன. ஆனால் மனிதர்களாவது மற்றும் யாருமாவது காணப்படவில்லை. இதைக் கண்டு உரோமசர் ஆச்சரியமுற்று, அவ் வற்புதக் காட்சிகளை இயற்றியவர் இன்னார் என்று அறிய முடியாமல், ஸ்ரீ மகாலிங்கத்தின் சந்நிதியில் சென்று, அப்பெருமான் முடிமீது அன்று மலர்ந்த நானாவித நறுமலர்கள் அருச்சிக்கப் பெற்றிருக்கும் அழகையும் கண்டு ஒன்றுந் தோன்றாதவராய், சிரமேற் கரங்குவித்து மெய்ம் மறந்து புளகாங்கிதராய்ச் சிவபெருமானையே தியானித்துத் துதிகள் பலவும் செய்து "ஹே சர்வலோகநாயகனே! கருணாநிதியே! பார்வதிபாகனே! ஏகநாயகமூர்த்தியே! என்னையும் தங்கள் திருவடிக்கு ஆளாக்கிக் கொள்ள வேண்டும்." என்று பிரார்த்தித்தார். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் சந்நிதியினின்றும் சற்று விலகிப் புறம் வந்து இந்த அற்புதமான வைபவங்களை தனக்குத் தெரியும்படிச் சொல்பவர் இன்னாரென்று தெரியாமல் சிவபிரானையே தியானித்து நிற்கையில், கைகளில் பிரம்பு, கத்தி, மான், மழுக் கொண்டு, மார்பில் பூநூல் தரித்தவராய், சரீரமெல்லாம் விபூதி அணியப் பெற்று நெற்றிக் கண்ணையுடையவராயும் திருநந்திதேவர் அம்முனியின் முன் தோன்றினார். ஸ்ரீ நந்திதேவரை நமஸ்கரித்து அம்முனிவர் "ஏ சுவாமின்! இவ் வாலயத்தில் தீபமுதலான சிறப்புக்கள் யாதொரு குறைவுமில்லாமல் காணப்படுகின்றதே! மனிதர் ஒருவரையும் காணேனே! புஷ்பங்கள் இப்போதுதான் அருச்சிக்கப் பட்டவைகளாயிருக்கின்றன! இந்த அற்புதங்களுக்குக் காரணம் யாது? நான் அறியும்படி உரைத்தருளல்வேண்டும்." எனப் பிரார்த்தித்தார்.

நந்திதேவர் அம் முனிபுங்கவரை நோக்கி, சிருஷ்டியாரம்பத்திலே உமாதேவியார் சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்ய, சர்வேசுவரனும், சோம சூரிய அக்கினி என்னும் முக்கண்களையுடையவருமான எம்பெருமான் பிரசன்னராகி, இருஷிகளுக்கும் தேவர்களுக்கும் வேண்டிய வரங்களைக் கொடுத்து அருளி, சண்பகச்சோலைகளால் நிறைந்த இத்தலத்தில் அமர்ந்தார். அக்காலே அகஸ்தியர் முதலான பல இருஷிகளும் கூடி இம் மருதபிரானை பக்தியோடு முறை தவறாது நித்திய நியமத்தோடு பூஜை செய்து கொண்டு வந்தார்கள். இப்படிப் பல நாட்கள் செல்ல, ஒரு சமயம் சில இருஷிக் கூட்டங்கள் வந்து, முனிச்சிரேஷ்டரும், கடல் நீரை ஆசமனம் செய்தவரும், கும்பமுனி வருமாகிய அகத்தியரை வணங்கி, "பரிசுத்தமான மனமுடையவரே! பரம பரிசுத்தர்களால் புகழப்படும் 'சுவேதாரணியம்' என்று சொல்லப்படும் திருவெண்காட்டில் சிற்றறிவுடையோமாகிய யாங்கள் செய்ய உத்தேசித்திருக்கிற யாகத்திற்குத் தாங்கள் விஜயம் செய் தருளல் வேண்டும்." எனப் பணிவுடன் பிரார்த்தித்தார்கள். அகஸ்தியர் இவ் வுலகமெல்லாம் அழியும் காலம் வந்தாலும் தான் இத் தலத்தைவிட்டு நீங்குவதில்லை என்றும், இதுவே தன் மனதுக் குற்ற தலமென்றும் ஒரே பிடிவாதமாகச் சொல்லவும், அவ்விருஷிகள் ஸ்ரீ மகாலிங்கமூர்த்தியின் சந்நிதியிற் சென்று வணங்கித் துதித்து, "ஹே அன்பர்க்கு எளியனே! நாங்கள் செய்வதாக உத்தேசித்திருக்கும் உங்களுடைய யாகத்துக்கு அகஸ்திய மகாமுனிவர் வந்து விஜயஞ் செய்தாலன்றி எங்களுக்குத் திருப்தி உண்டாகாது. அவர் வர முடியாதென்று உறுதியாய்ச் சொல்லுகிறார். அவர் வந்தால்தான் உங்களதுயாகத்திற்கு அழகு. ஆகையால் அகஸ்தியமுனிவரை யாகத்துக்கு வரும்படிச் செய்ய வேண்டும்." எனப் பிரார்த்திக்க, சிவபெருமான் அகஸ்தியரைப் பார்த்து, 'அன்பனே! நீ இவ்விருஷிகளுடன் திருவெண்காட்டிற்குச் சென்று, அவ் வேள்வியைப் பூர்த்தி செய்துவரவும். நீ திரும்பி வரும் காலத்தை நாம் பரிவுடன் எதிர்பார்த்துக்கொண்டிருப்போம்.' என ஆக்ஞாபனம் செய்யவும், குறுமுனியும் சிவபெருமான் தாள் வணங்கி, இருஷிகளுடன் திருவெண்காடடைந்தார்."

"கேளும் உரோமச முனிவரே! அகஸ்தியர் முதலான இருஷிகள் எல்லாரும் திருவெண்காடு சென்று பலநாள் ஆயின. ஆகையால் சிவபூஜைக்குரிய ஆசாரியர் ஒருவரு மில்லை. சரியை, கிரியை,

யோகம், ஞானம் ஆகிய நாற் பதத்தோடு நடந்த சைவ வைதீக மார்க்கங்கள் அழிந்து போகலாயின. பகலவனுக்குப் பின் இரவில் திருடர்கள், முதலான துஷ்டப் பிராணிகள் மேவுற்று சஞ்சரித்துப் பரவுதல் போல, ஆசாரியரின்மையால் இச் சைவ மதம் குன்றி, பௌத்த சமண மதங்கள் மேலிட்டுப் பரவலாயின. புலிக்கொடியை யுடையவனும் அக்காலத்தில் இப் பதிக்கு அரசனுமான சோழராஜன், காலத்திற்கேற்ப, தன் மதி மயங்கி சமண மதத்தைச் சார்ந்தான். இதை யறிந்த பாண்டியன் சோழராஜனுடன் போர் புரிந்து, அவனை வென்று, அவன் ராஜ்யத்தையும் கைப்பற்றிக் கொண்டு தன் நகரமாகிய மதுரைக்குப் போய் விட்டான். சிறிது காலத்திற்கெல்லாம் அப்பாண்டியனும் சமணர்களுடைய துர்ப்போதனைக்குட்பட்டுத் தானும் சமண மதத்தைச் சார்ந்தான். காலக்கிரமத்தில் செங்கோன் மன்னனாயிருந்த பாண்டியன் தன் மதியிழந்து நீதி முறை தவறி அரசு செலுத்தி வந்த தன்மையை அறிந்த ஓர் வேடுவன் அவனோடு போர் புரிந்து அப் பாண்டியனுடைய நாட்டையும் கைப்பற்றி, அவனையும் கானகத்துக்கு ஓடும்படிச் செய்துவிட்டான். அரசன் வெருட்டப்பட்டதும் அவனைச் சார்ந்த சமணர்களும் வனவாசமானார்கள்.

"இவ்வாறு உலகம் சமணர்கள் ஆதிக்கப்பட்டு சைவம் குன்றியிருந்தகாலையில், விநாயகக் கடவுள் ஸ்ரீ மகாலிங்கப் பெருமானை வணங்கி, 'ஏ என்பிதாவே! இது என்ன விபரீதம்! சிருட்டி ஆரம்ப காலத்திலேயே இச் சமணர்குழாங்கள் எங்கும் பரவிவிட்டனரே? இத் தேசத்து மன்னன் தன் மதி இழந்து அச்சமண சமயத்தில் சார்ந்து விட்டதன் காரணம் யாது? உங்களுக்கு நடக்க வேண்டிய பூஜையோ குறைவுபட்டு இருக்கிறதே? இவைகளுக் கெல்லாம் காரணம் என்ன?' என்று வினவ, ஸ்ரீ மகாலிங்கப் பெருமான், தன் மூத்த பிள்ளையாகிய விநாயகக் கடவுளை அருகில் அழைத்து, உச்சி மோந்து, பரம கிருபையுடன், 'என் அருமைக் குழந்தாய்! நமது சைவ சமய மார்க்கங்களின் பெருமையை யாவரும் நன்கு உணரும்படிச் செய்திருக்கிறோம். நிழலின் அருமை வெய்யிலின் பின் தான் நன்றாய்த் தெரியும். இச்சமணர்களை வேறோடு தொலைக்க நம் அன்பன் ஒருவன் வரப்போகிறான். அவன் உருவத்திற் சிறியனாயினும் நம்மிடத்து பக்தியிற் பெரியன். தவத்தில் சிரேஷ்டன். அவன் வந்து நம்மை தரிசனை செய்து பூஜிப்பான். அதுவரை நீயே நம்மை பூஜை செய்து கொண்டு வரவும். அம்முனிவன் நம்மை பூஜை

செய்துக் கொண்டுவரும் காலையில் ஒரு சமயம் சோழவம்சத் தரசர்களில் ஒருவன் இங்கு வந்து நம்மை தரிசித்தும் பூஜைசெய்தும் உலக மெங்கும் சைவம் நிலை பெறும்படி செய்வதோடு இத் தலத்திலும் நமது பூஜை பிரகாசிக்கும்படி செய்வான். ஆகையால் நீ மனக்கிலேசம் அடைய வேண்டாம்.' என அன்போடு கூறலும், விநாயக மூர்த்தி தம் தந்தையின் திருவிளையாடல்களைக் கேட்டு மகிழ்ந்து, அன்று முதல் முறைப்படி ஸ்ரீ மகாலிங்கத்தைப் பூஜை செய்து, உலகத்தில் குன்றிப் போயிருந்த சைவத்தையும் ஆண்டு வந்தார். அப்படி பூஜை செய்யும் விதத்தை தாம் விபரமாய்க் கேட்கிறபடியால் அதையும் சொல்லுகிறேன். ஏ அரிய தபோதனரே, பிரதி தினம் காலந் தவறாமல் வேதத்தின் உட் பொருளாய் விளங்கும் பஞ்சாக்ஷர ஜபத்தை உச்சரித்து, விதிப்படி அகில காரணராகிய சிவபெருமானை மனதினால் எவ்வளவு பூஜா திரவியங்களும் நைவேத்தியாதிகளும் 'ஸ்மகரிக்கக்' கூடுமோ அவ்வளவு தியானம் செய்து மானத பூஜை முடித்து, அதன் பிறகு, தேவ கணங்கள், உலகத்தோர் அறியாவண்ணம், பூஜைக்கு வேண்டிய உபகரணங்களை எந்தெந்த சமயம் எவை எவை வேண்டுமோ அவைகளைத் தாமதியாது கொடுக்க, பூஜை செய்து வருகின்றார். ஆகையால் இங்கு மனிதர் ஒருவருமில்லை. சிவபெருமானும் இப்பூஜையை அன்புடன் ஏற்று, வேண்டிய வரங்களைக் கொடுத்தருளினார். ஸ்ரீ விநாயகக் கடவுளும், அகமகிழ்ந்து, நீதி மன்னர் ஒருவரு மில்லாததால் ஜீவ ராசிகள் துன்புறா வண்ணம், தாமே தம் அருட் சக்தியைக் கொண்டு உலகத்தையும் காத்து வந்தார். இதன் காரணத்தினால் இந்த விநாயகருக்கு 'ஆண்ட விநாயகர்' என்று இன்றும் வழங்குகிறது." எனச் சொல்லியருளி, நந்திதேவர் பின்னும் சொல்லுகிறார்.

"ஏ முனிவரே! இத்தலத்துக் குரியது மருத விருக்ஷம். இம் மரங்கள் அழகு பொருந்தி எங்கும் விளங்கித் தழைத்திருப்பதை அறிந்து, ஒரு காலத்தில் கைலைபங்கிரியானது இங்கு வந்து தானும் ஓர் மருதமரமாகி பரவின கிளைகளையுடையதாய் சிவபெருமானுக்கு நிழலைக் கொடுத்தது. அம்மருதமரம் இக்தலமெங்கும் மருதவனமாகப் பரவி விட்டது. இது நிற்க, பௌத்த மதத்தைச் சார்ந்திருக்கிற சோழ மண்டல அரசர்களில் ஒருவரான தருமசேனன் என்பவருக்கு விக்கிரமன் என்று குமாரன் உதிப்பான். அவன் தருமமே உருக் கொண்டவன். பரம சிவ பக்தன். மகாவீரன். அவன் பெயர் விக்

கிரம சோழன். அவன் உலகத்தைக் காக்குந் தன்மையில் இத்தல த்தை அடைவான். எவரும் தனக்கு ஒப்பில்லாதவன். அவனை நீர் கண்டு, அவனுக்கு 'வீர சோழன்' எனப் பெயரிட்டு, முடியும் சூட்டி, மருதவாணருடைய பெருமையையும் விரிவாகச் சொல்லுவீர். அவனும் அதில் ஈடுபட்டு, பக்தி மேலிட்டு, நீர் சொல்லுகிறபடி யெல் லாம் சிவபெருமானுக்கு வேண்டிய பணிவிடைகளும் செய்வான். நீரும் அகஸ்தியரைப் போல் இத் தலத்தில் தங்கி விநாயகரிடம் சிவபெருமான் சொல்லியருளியபடி, பூஜை செய்து இத் தலத்தை விளக்கமுறச் செய்ய வேண்டும்.'' என, நந்தி தேவர் உரோமசருக் குத் தெரிவித்துவிட்டுத் தானும் மறைந்தார்.

உரோமசர் இதை யெல்லாம் கேட்டு அடங்கா மகிழ்ச்சி கொ ண்டு கோவிலின் உத்தரபாகத்தில் ஓர் பர்ணசாலை போட்டுக் கொண்டு, காவிரியில் மூன்றுகாலமும் ஸ்நானம் செய்து தம்முடைய நித்திய கர்மா னுஷ்டானங்களை ஒழுங்குற முடித்துக்கொண்டு, பூஜை க்கு வேண்டிய, தீர்த்தம், புஷ்பம், சந்தனம் முதலிய திரவியங்களு டன் மருதவாணருடைய ஆலயத்துட் சென்று, மருதவாணரையும் விநாயகக் கடவுளையும் வேத சிவாகமப்படி பூஜை செய்து வந்தார். அங்கு கிடைக்கக் கூடிய காய் கனிகளைத் தனக்கு ஆகாரமாகக் கொ ண்டு, சிவபெருமானையே தியானித்து, உமாதேவி சமேதராய் வட வால விருக்ஷத்தின் கீழ் தனக்கு தெரிசனம் கொடுத்தருளல் வேண் டும், என்று தானும் தன் இருஷி வர்க்கங்களும் பலநாள் அருந்த வம் இயற்றினார்கள்.

இதன் பின்னும் சிவபெருமான் பிரத்தியக்ஷமாகவில்லை. இது கண்டு ஒரே உறுதியாய் சிவபிரானைக் குறித்து சுவாச பந்தனம் செ ய்து நிர்விகற்ப சமாதியை அடைந்து, காமக் குரோதாதிகளிற் பற் றப்படாத உரோமச மகாமுனிவர் ஸ்தம்பம் போல் கடுமையான நிஷ் டையில் இருந்து விட்டார். இதை யறிந்த பிரமாதி தேவர்கள் ஆச் சரியப்பட்டு, பிரசன்னமாகி உரோமச மாமுனிவரை வேண்டிய வரங் களைக் கேட்கும்படி உரைத்தனும், அம் முனிவர் அதைச் செவி கொளாது, தன் மனதில் கொண்ட மூர்த்தியையே தியானித்து மோன நிலையில் நின்றுவிட்ட தன்மையைக் கண்ட அப் பிரமாதி தேவர்கள் கோபமுற்று, அம் முனியினுடைய தவக் கோலத்தை அழித்துப் பங்கம் செய்ய வுன்னி, தேவ கன்னிகைகளைக் கின்ன ரர்களுடன் ஏவ, இரம்பை, ஊர்வசி, திலோத்தமை முதலான அக்

கன்னிகைகள் தம்மாலியன்ற அளவு மத்தள முழக்கங்களோடு ஆர்ப்பரித்து நிர்த்தனம் செய்தார்கள். கந்தர்வர்கள் இசை பாடினர்கள். இவைகளெல்லாம் அம்முனிவரிடம் சிறிதும் பலன் பெறாததால், இக் கன்னிகைகள் கைகால் சோர்ந்து, வெட்கி, மனக்கிலேசமுற்று, தம் மிருப்பிடம் சேர்ந்தார்கள். உடனே சிவபெருமான் முனிவருடைய தவத்தை மெச்சி, உமாதேவிசமேதராய், ஸாம்பதக்ஷிணாமூர்த்தமாகக் காக்ஷி கொடுத்தருளினர். ஆகாயத்தில் தேவர்கள் புஷ்பமாரி சொரிந்தார்கள். கந்தர்வர் தேவகானம் இசைத்தார்கள். வேதங்கள் வாழ்த்தின. இவ்வாறு உரோமசமாமுனிவர் ஸ்ரீ மகாலிங்கத்தை தெரிசனம் செய்து, மெய்ம்மறந்து மயிர்சிலிர்த்து அன்பு மேலீட்டினால் புளகாங்கிதராய் அசைவற்றுப் பேரானந்தக் கடலில் மூழ்கினவராய், உரைதடுமாறி,

பதுமமல ரடிநினைந்தோ ருறுதுயரங்
கடிதகற்றும் பரம போற்றி!
விதுமவுலி யிறைபோற்றி! திரிபுரந்தீ
யெழ நகைத்த விமல போற்றி!
முது மறையுட் பொருள்போற்றி! எவரேது
வேண்டினு முதவு முதல்வ போற்றி!
மதுமலிதண் மலர்க் கூந்த லுமைபவனு
யகமருத வாணபோற்றி!

எனப் பலவாறு தோத்திரஞ் செய்தார். சிவபெருமானும் மகிழ்ந்து, "ஏ தபோதனரே! தேவர்களும் கண்டு அஞ்சும்படி நீர் இயற்றிய தவத்தை மெச்சினேம். மகிழ்வு எய்தினேம். உமக்கு வேண்டிய வரங்களைக் கேளும்." என அருளலும் அம் முனிவர், "ஏ கிருபாநிதியே! தாங்கள் இந்த ஸாம்பதக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபத்துடன் என்றும் இத்தலத்தில் இருந்து தங்களை வழிபடுவோர்களுக்குக் கடாக்ஷித் தருளல் வேண்டும். எனக்கும் தங்கள்பால் பக்தி குன்றாது இருத்தல் வேண்டும். சைவ வைதீக ஒழுக்கங்கள் தழைத்தோங்க வேண்டும். உங்கள் பூஜை பிரபலமாக எத்தலத்திலும் விளங்க வேண்டும்," எனப் பிரார்த்திக்க சிவபெருமான் முனிவர் இஷ்டப்படி இத்தலத்தில் எழுந்தருளி, மற்றுமுள்ள வரங்களையும் அளித்துப் பின், "ஏ முனிபுங்கவரே! சில நாட்களில் சோழ வம்சத்தைச் சார்ந்த ஒரு அரச குமாரன் இங்கு அடைவன். அவன்

உன்னைச் சார்ந்து உனக்கு வேண்டிய ஏவற் பணிவிடைகளும் புரிவான். நீயும் மெய்ஞ்ஞானத்தை யடைவாய்.'' என்று அனுக்ரகஞ் செய்த, ஸாம்ப தக்ஷிணாமூர்த்தியை ஓர் ரத்ன சிம்மாதனத் திருத்தி விதிப்படி பூசனை செய்து, பின் பெருநலமாமுலையம்மை சமேத ஸ்ரீ ஜோதிர்மய மகாலிங்கப்பெருமானையும் ஆண்ட விநாயகரையும் அம்முனிவர் அன்பொடு தினம் பூஜித்துக்கொண்டு தங்கியிருந்தார்.

இப்படியிருக்குங்கால், சேற்றில் தாமரை யுதித்தது போலவும், விஷத்தைக் கொண்ட சர்ப்பத்தினிடம் மாணிக்கம் உண்டானது போலவும், பௌத்த மதத்தில் தன் மதி யிழந்து மயங்கி வரும் சோழ வம்சத்தில் சிவனருளால் காஞ்சி மாநகரில் விக்கிரம சோழன் என்னும் நாமத்தையுடைய ஓர் இராஜகுமாரன் தோன்றினான். அவனுக்குப் பரமசிவத்தினிடத்தில் பக்தி மேலிட்டு, நாளுக்குநாள் அறிவினும், ஆற்றலினும், சிறந்து அரசர்க்குரிய அறுவகைப் படைகளின் வலிமையினால் மற்ற பகையரசர்களுக் கெல்லாம் சிம்மம் போன்றவனாய் விளங்கினான். இன்னும் சகல வித்தியா பாரங்கதனாயும், மன்னுயிரைத் தன்னுயிர்போல் காக்கும் சுபாவமுடையவனாயும், பெரியோர்களால் வாழ்த்தப்பெற்றவனாயும், குடிகளிடத்து ஆறில் ஒருபாகம் கடமை பெற்றும் மற்ற சிற்றரசர்களிடத்து கப்பம் பெற்றும், நீதி தவறாமல் அரசு செலுத்திவந்தான்.

இவ்வாறு விக்கிரம சோழன் காஞ்சி மாநகரத்தில் அரசு புரிந்து வருகையில், நம் மருதூரில் காகமானது கனகதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து தன் கருநிறம் மாறி சொர்ண மயமாய், ருத்ர ரூபத்தை யடைந்து, விமானமேறிக் கைலைக்குச் சென்றதையும், முனிச் சிரேஷ்டர்கள் நம் தலத்தில் பல அரிய தவங்கள் புரிந்து எம்பெருமான் அருளைப் பெற்றும் உரோமசமாமுனிவர் பூஜை செய்து கொண்டு பேரானந்தக் கடலில் மூழ்கி யிருத்தலையும் கண்டோர் வந்து சொல்லக் கேட்டு, இம்மன்னன் மனமுருகி, அத்தலம் சென்று, தவம் புரிந்து தானும் சிவபெருமான் அருளுக்குப் பாத்திரனாக விரும்பினான். உடன் பற்பல சேனைகள் புடைசூழப் புறப்பட்டு, காவிரி நாட்டை யடைந்து அதன் சார்பிலுள்ள மிக்க வளப்பம் பொருந்திய சோலைகளையும் பயிர்களையும் கண்டு மகிழ்ந்து, 'எல்லாம் சிவனருள்' என்று தெளிந்து, அக்காவிரியின் நதிக்கரையிலுள்ள தலங்களை யெல்லாம் தரிசித்து நம் மருதூரை யடைந்து

காவிரியில் ஸ்நானம் செய்து நித்திய கர்மானுஷ்டானங்கள் முடித்துக் கொண்டு, ஆங்காங்கு காணப்பட்ட விநோதங்களை ஏற்கனவே காதாற் கேட்டபடி நேரில் கண்டு மகிழ்ந்தான்.

அம்மன்னன் மருதவனத்துட் புகுந்து அங்கு, நக்ஷத்திரக் கூட்டத்தின் இடையில் ஜொலிக்கின்ற சந்திரன் போல் இருஷிக் கூட்டங்களின் மத்தியில் தவத்தின் மகிமையினாலும் சிவபெருமானுடைய அருட் சிறப்பினாலும் ஜொலித்துக் கொண்டிருக்கிற உரோமச முனிவரை நேரில் கண்ணுற்று, உடனே நமஸ்கரித்துப் பணிவுடன் வணங்கி நின்றான். முனிவரும் அன்புடன், 'அரசே வருக' என்று அழைத்து, இன்புற இனிய வசனங்கள் கூறி, அவனுக்கு 'வீரசோழன்' என்னும் பெயரையும் கொடுத்து, ஏற்கனவே சிவபெருமான் அருளியதையும் சொல்லி, அம்மன்னனை, இருஷிக்கூட்டங்கள் சூழ, மருதவாணர் சந்நிதியிற் கொண்டு போய், பெருநலமா முலையம்மை சமேதராய் சகல பரிவாரதேவதைகளுடன் தரிசனம் செய்வித்தார். அவ்வரசன் இத்தரிசனானந்தத்தைக் கண்டு, மனமார வணங்கி, தோத்தரித்தலும், உரோமசமாமுனிவர், அவரையழைத்து அகத்திய மாமுனி முதலானோர் தவம் இயற்றிய பற்பல இடங்களையும் தெளிவுறக் காட்டிப் பின் வெளியில் வந்ததும், அம் மன்னன் முனிவரை வணங்கி, "ஏ தவச்சிரேஷ்ட உத்தம முனிவ! அடியேன் பூர்வ ஜென்மத்தில் செய்துள்ள நல் வினை காரணத்தால் தங்கள் தெரிசனமும், சிவபெருமான் அனுக்ரகமும் அடையப் பெற்றேன். இனி எளியேனால் ஆக வேண்டிய காரியங்களை அருளிச் செய்ய வேண்டும்." எனப் பணிவுடன்கேட்க, உரோமசர், அரசனை நோக்கி, "ஏ மன்னர் செல்வமே! இளமையும், செல்வமும் நிலையற்றது. கணப் போழ்தில் அழியக்கூடியது. அழிவில்லாதவஸ்து ஒருவன் செய்யும் புண்ணியமே. அப் புண்ணியங்கள் பலவற்றுள் சிவபுண்ணியமே மேலானது. ஒருவர் செய்யும் தவத்தின் மகிமையினால் எதையும் அடையலாம். அதிலும் சிவபூஜையே மேலான தவம். பிரமாதி தேவர் பதவிகளும் இச் சிவபூஜை செய்ததின் பலனே. அதிலும் ஆத்மார்த்த பூஜையே விசேஷம். அப் பூஜையைத் தன் கையினாலேயே செய்தல் விசேஷம். அதுவன்றி பரார்த்தத்தில் பிறரைக் கொண்டு பூஜைசெய்யும் இலிங்கங்களுள் சுயம்பு லிங்க பூஜையே விசேஷம். ஏ மன்னர் பெரும! புதிதாக ஒருவன் ஓர் தருமம் இயற்றுவதினும் முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்ட

தருமத்திற்குப் பங்கமில்லாமல் காத்து வருவதினால் எண்மடங்கு பலன் கிடைக்கும். அதினும் அத் தர்மத்திற்கு ஏதேனும் அழிவு உண்டானால் அப்படிக்காகா வண்ணம் தம் சொந்தப் பொருளைக் கொண்டு அதை ஒழுங்குபெறச் செய்வதனால் தாமாகச் செய்ய உத்தேசித்த தருமத்தின் பலனைக் காட்டிலும் நூறுமடங்கு அதிக பலன் உண்டாகும். சிவனடியார்களுக்கு அளிக்கப்படும் எவ்விதப் பொருள்களும் சிவபெருமானுக்கு நேரில் கொடுத்ததாகவே ஏற்படும். ஆகையால், நீ உத்தம பரிசுத்தமான இத்தலத்தில் சிவபெருமான் எழுந்தருளி யிருக்கும் திருக்கோயில் முழுமையும் அன்புடன் உயர்ந்த திருப்பணிகள் செய்து, அப் பெருமான் மகிழும்படி சிவபூஜை பலவும் புரிவித்து, அடியார் பூஜையையும் இயற்றுவித்து, உமாபதியினுடைய அருளுக்குப் பாத்திரனாவாய்.'' எனச் சொல்லியருளினார்.

இவ்வாறு உரோமசமாமுனிவர் பரிவுடன் உரைக்கக் கேட்ட, அந் நீதிமன்னன், அக மகிழ்ந்து உடனே தன் அமைச்சர் மூலமாய் ஏவலாளர்களைத் தருவித்து, காடுகளை யெல்லாம் அழித்து அந்த இடங்களில் சிற்பசாஸ்திரத்தில் வல்லவர்களைக் கொண்டு, அழகிய நகரங்கள் உண்டாக்கும்படி உத்திரவளித்தான். அவ்வாக்ஞைப்படி ஏவலாளர்கள் காடுகளிலுள்ள மரங்களை வெட்டி அழித்து, நிலத்தை மட்டப்படுத்தி ஆதியில் தேவதச்சன் நினைத்த மாத்திரத்தில் நிர்மாணிக்கப்பட்ட மருதவாணர் ஆலயத்தை அழகுபெறப் புதுப்பித்துப் பின் பலவிதத் திருப்பணிகளும் செய்து, சிறந்த நகரமாக உண்டு பண்ணும் பொருட்டு மலைபோன்ற மதில்களையும் அகழ்களையும் சூழ உண்டு பண்ணினார்கள். இன்னும் ஆகாயத்தை அளாவிய மாடமாளிகை வீதிகளும், விசித்ரமான கடைத்தெருக்களும், அழகிய சந்துகளும், ஏகநாயகக்கடவுள் திருவுலாவரும் விசாலமான வீதிகளும், நிர்த்த சபைகளும், கல்விச் சாலைகளும், இருஷிகள் தங்க மடங்களும், அநேக தருமசாலைகளும், வாசனை பொருந்திய புட்ப நந்தனவனங்களும், கமுகு, தென்னை, வாழை, பலா, மா முதலிய அநேக பல விருக்ஷங்களையும் உண்டாக்கினார். தவிர, பற்பல உத்தமத் தாமரைத் தடாகங்களென்ன, நீலோத்பல ஓடைகள் என்ன, கிணறுகள் என்ன, யானைகளென்ன, குதிரைகளென்ன, அழகு பொருந்திய விசித்திரமான இரதங்களென்ன, இன்னும் அநேகமான வைபவங்களால் குறைவறச் சிறப்பித்தார்கள்.

இதை யெல்லாம் கண்ணுற்ற வீரசோழன் அகமகிழ்ந்து ஆகம சாஸ்திரத்தின்படி அந்நகரத்திற்கும் ஆலயத்துக்கும் சாந்திகள் செய்து, பிர்ம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர் என்னும் நால்வகைச் சாதியார் முதலானவர்களுக்கும் முறைப்படி வீடுகள் கொடுத்து, அவரவர்களுக்கு வேண்டிய திரவிய முதலாதி யாவையும் அளவற ஈந்து, மருதீசருக்குச் சூழ்ந்துள்ள பல நிலங்களை மானியமாகவும், இன்னும் கணக்கில்லாத பட்டுகளென்ன, பீதாம்பரங்களென்ன, இரத்னாபரணங்களென்ன, இன்னும் இவைமுதலான பல பொருள்கள் அர்ப்பணம் செய்து, ஆகமப்படி ஆதி சைவர்களைக் கொண்டு தினம் மூன்று காலங்களிலும் பூஜை நடக்கும்படிச் செய்து, தானும் அந்நகரத்தில் ஓர் உறைவிடம் ஏற்படுத்திக் கொண்டு பகைவர்களுக்குச் சிம்மம்போல் விளங்கி வீற்றிருந்தான்.

இப்படி யிருக்குங்கால் ஒருநாள் வீரசோழன் உரோமசமுனிவரை யணுகி, வணங்கி, "ஏ தவசிரேஷ்டரே! நம் மருதீசருக்குத் திருவிழாச் சிறப்பாக இயற்ற வேண்டுமென்கிற ஆவல் மிகுதியாக யிருக்கிறது. அதற்கு உரிய மாதம் நக்ஷத்திரம் யாது?" என வேண்டினார். இதைக் கேட்ட உரோமசர், மகிழ்ந்து, ஏ அரசர் பெரும! உமது எண்ணம் உத்தமமே. இந்த விரிந்த உலகத்திலுள்ளோர் கொடிய வினைகளை வேரோடு தொலைத்து மிக்க பரிசுத்தர்களாகச் செய்யக் கூடியதும் சர்வ சுபங்களையும் விருத்தி செய்யக் கூடியதுமான உத்திராயணத்தில் சூரியன் பிரவேசிக்கும் முதல் மாதமாகிய மகர மாதமே மிக்கவிசேஷம். அந்த மாதத்தில் உத்தம நக்ஷத்திரமாகிய பூசநக்ஷத்திர தினமே தீர்த்த தினமாகக் கொண்டு, உற்சவம் இயற்றிடல் மேலாகும். புகழ்பெறும் மற்றைய தலங்களில் ஒருகோடி பசும்பொன் தானம் செய்வதனாலாகிய பலனை இப் பூசதினத்தில் இத்தலத்தில் பிராமணோத்தமர்களுக்கு அணுவளவு பொன் தானம் செய்வதனால் அடைந்து விடலாம். ஏனைய தலங்களில் கோடிக் கணக்கான அந்தணர்களுக்கு நால்வகை உண்டி அறுசுவையோடு அளிக்கப்பட்ட அன்னதானத்தின் பலனை, நம் மருதூரில் அப் பூசதினத்தில் சிவனடியார் ஒருவருக்கு ஒரு பிடியளவு அன்னம் அளித்ததினாலேயே அடைந்து விடலாம். இப்படியிருக்க, எவரேனும் அந்தப் பூசதினத்தில் உள்ளன்போடு யாதொரு தானமும் செய்யாவிடில், சில தினங்களுக்குள் அவர் சோரபயத்தினாலும்

பகைவர் தம்மாலும் பல கஷ்டங்களை அனுபவித்து வாழ்வும் குன்று வார்கள். இத் திருவிழாவின் சிறப்பே சிறப்பு!

இதனைக் கண்ணுற்று அக மகிழ்வோர்களும், அச் சிவபெருமானை வணங்கினோரும் என்றும் அழிவில்லாத சிவலோக இன்பத்தை யடைவார்கள். இன்னும்

விழவுநோக் கிடுவா னெழுந்தொரு தடையான்
மீண்டவர் மேவுற நினைந்தோர்
முழவொலி கேட்போர் நோக்கமுற் றடைந்தோர்
முன்னுறக் கண்டவ ரவரை
யெழில்விழாச் சிறப்பு வினவினோர் வருவோ
ரிடத்தினி லெம்பிரான் றனக்கு
மொழிதரு பொருள்யா தேனுமீந் தவர்கள்
முதியசீர்த் தேவராய்த் திகழ்வார்.

என்றபடி, தைப்பூச உற்சவத்தைத் தரிசிக்கும்பொருட்டு புறப்பட்டு, சிலதடைகளினால் போக முடியாமல் திரும்பினவர்களும், போய்த் தரிசிக்க எண்ணினவர்களும், திருவிழாவின் வாத்திய முதலிய முழக்கத்தைப் பற்றிக் கேட்பவர்களும், அதைப் பார்க்க வேண்டுமென்று அங்கு அடைந்தவர்களும், அதை நேரில் கண்டவர்களைப் பார்த்து அதன் சிறப்பைப் பற்றி விசாரிப்பவர்களும், அவ்விழாவை நாடிச் செல்பவரிடம் சிவபெருமானுக்கு அர்ப்பணம் செய்யும்படி ஏதேனும் சிறிது பொருள் கொடுத்தனுப்பினவரும் மிக்க சிறப்பு வாய்ந்த தேவர்களாக விளங்குவார்கள். இவ்வளவு பெருமை வாய்ந்த தை மாதத்தில் தேவகுருவாகிய பிரகஸ்பதியின் நாளான பூசநக்ஷத்திரம் அவருடைய வாரமாகிய குருவாரமும் பூர்ணகலையையுடைய பௌர்ணமி திதியும் ஒத்து வருங்காலம் மிக உத்தமமானதாகும். அப்பேர்ப்பட்ட காலம் இப்பொழுது சேர்ந்து வருகிறது. ஆகையால் நீ நினைத்தபடி உற்சவத்தை உடனே ஆரம்பிக்க." என முனிபுங்கவர் கூறலும், மன்னர்சீலன் உவகையோடு அம்மாதிரியே பிரும்மோற்சவத்தைச்செய்ய ஆரம்பித்தான்.

சகல வளங்களும் பொருந்திய திருவளர் நகரமாகிய இம் மருதூரில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ பிரஹத்சுந்தர குசாம்பிகா சமேத ஸ்ரீ ஜோதிர்மய மகாலிங்க சுவாமிக்குச் சிறப்புறத் தைப்பூச

மகோத்ஸவத்தைப் பிரசுரஞ் செய்ய, இத்தல மகிமையையும் எம் பெருமான் திருவிளையாடல்களையும், குறிப்பாகக் கண்டு, சுபதினத்தில் பலபத்திரிகைகள் எழுதி, கொங்கு, கன்னடம், தெலுங்கு, ஆரியம், மாராடமுதலான தேசாதிபர்களுக்கு அனுப்புவித்தான். மற்றும் உத்ஸவத்திற்கு வேண்டிய விசித்திரமான பற்பல விருதுகளென்ன, உத்தம இலக்ஷணங்கள் வாய்ந்த உயர்ந்த தேர்களென்ன, இரதங்களென்ன, வாகனாதிக ளென்ன பல இயற்றுவித்தான். இன்னும் இவ்வூரெங்கும், பறை அறைவித்து, வீதிகள் தோறும் தோரணங்கள், புஷ்பப்பந்தல்கள், வாழை, கமுகு, முதலியவைகளால் அலங்கரித்து, பூர்ண கும்பம் முதலானவைகள் அமைக்கச் செய்தான். ஆலயத்தின் உள்ளும் புறமும் அழகிய பந்தல்கள் போட்டு, அவைகளில், பாக்கு, தென்னை, வாழை, ஈஞ்சு முதலானவைகளின் குலைகளினாலும், நானாவித காய் கனி வகைகளினாலும், அலங்கரிக்கச் செய்து, உயர்ந்த மேற்கட்டிகள் கட்டி, கூந்தல் முதலிய தோரணங்களினாலுஞ் சிறக்கச் செய்வித்தான். இவ்விழாவைச் சிறப்பிக்க, நானாவித வாத்தியங்களையும் பற்பல நிர்த்தன ஸ்திரீகளையும், இன்புறத் தருவித்தான். வெளிதேசத்து மன்னவர்களும், அவரவர்கள் புடைசூழ, வாத்தியாதி கோஷங்களுடன், சதுரங்க சேனைகளோடு இத் திருவிழாவைக் கண்டு ஆநந்தித்துச் சிவபெருமான் அருளையும் பெற்றுய்யும் பொருட்டு, இத் தலத்திற்கு வந்து, அவரவர்களுக்கு உரிய விடுதியில் தங்கி நிறைந்தார்கள். நம் வீரசோழராஜரும் அவர்களை உபசரித்தார். இவ்விழாவைப்பற்றிக் கேட்டு அறிந்த, பூலோகவாசிகளும், தேவலோகவாசிகளும், அவரவர்களின் வாகனாதிகளுடன் இவ்வைபவங்களைக் காண, வந்து மேவினார்கள். நம் மன்னன் மனமகிழ்ந்து உரோமசமுனிவரை வணங்கி, அவர் ஆக்ஞைப்படி ஐயனார், காளி, முதலான கிராமதேவதைகளுக்கு இன்புற உத்ஸவம் நடத்திப் பின் முறையே விநாயகர், முருகக்கடவுள், இவர்களுக்கும் சிறப்புறத் தனித்தனி உத்ஸவஞ்செய்து, பின்பு உத்திரட்டாதி நக்ஷத்திரங்கூடிய சுபதினத்து பிரும்மோத்ஸவத்திற்கு துவஜாரோகணம் செய்வித்தான்.

அன்றுமுதல் ஸ்ரீ மகாலிங்கப்பெருமான் முதலாகிய சமஸ்த பரிவார தேவதைகளுக்கும் அளவிறந்த அபிஷேகங்கள் மனமாரச் செய்வித்து, விலை உயர்ந்த நவரத்தினங்களாலாகிய மாலைகளும், பதக்கங்களும், கிரீடங்களும், மகரகுண்டலங்களும், பொற்சிலம்பு

களும், அபரிமிதமான பட்டாடைகளும் கொண்டு, நானாவித மலர்களோடு அலங்காரமும்புரிவித்துத் தூப தீப நைவேத்தியங்களோடு சோடசோபசாரங்களும் இயற்றி, அந்தந்த மூர்த்திகளுக்குரிய வாகனாதிகளில் அமர்த்தி, பஞ்சமூர்த்திகளையும் சமஸ்த வாத்திய கோஷங்களுடன் வீதியில் பவனி வருங் கோலத்தின் காட்சியே காட்சி! இவ் வற்புதத்தைக் கண்டானந்திக்க நாரணன் பிரமாமுதலான தேவர்களும், அரம்பை ஊர்வசி முதலான தேவமாதர்களும் வீதிகள்தோறும் நிறையவும், மற்றுமுள்ள மானிடராதிகளும் உயர்ந்த மண்டபங்களின் மீதும், மதில்களின் மீதும், இடம்பெறாது, நெருங்கிக் கலந்து நின்று, தரிசனை செய்தார்கள். தேவர்கள் பூமாரி பொழிய தும்புரு நாரதாதிகள், அவரவர்களின் வாத்தியங்களைக் கோஷிக்க, நீடுறு மறையவர்கள் வேதங்களால் துதிசெய்துவர, பெருநலமாமுலையம்மை சமேத ஸ்ரீ மகாலிங்கப்பெருமானோடு பஞ்சமூர்த்திகள் எழுந்தருளி, வருதலை உபய திருச்சின்னங்கள் ஆர்த்தலினால் தெரிவித்தன. இவ்வாறு, குதூகலத்துடன் நாட்டியப் பெண்கள் நிருத்தனஞ் செய்ய, தேவரம்பையர்கள் சாமரம் வீச, நவரத்தினம் பிரகாசிக்கின்ற எண்ணிறந்த முத்துக்குடைகள் சூழ்ந்துவர, பளபளப்பான மணிகளாலாகிய மேற்கட்டிகள் தாங்க, வீதிகள்தோறும் அலங்கரிக்கப்பட்ட, யானை, குதிரை, ஒட்டகம், இடமாரபாடு ஆகிய இவைகளின் கூட்டங்கள் செல்ல, தமது திருக்குமாரர்களாகிய விநாயகக்கடவுளும், சுப்பிரமணியக்கடவுளும் முன்னே செல்ல, சண்டேசுரர் பின்னேவர, அம்பிகை சமேதராய் ஏகநாயகமூர்த்தி, திருவீதியில் எழுந்தருளினர். வீடுகள்தோறும் பூர்ணகும்பங்களோடு தூபதீபங்களால் அலங்கரிக்கப்பட்டும் இருந்தன.

இவ்வாறாக ஒவ்வொரு தினமும் காலை மாலை இருபோதும் அன்று அன்றைக்குரிய விமானங்களிலும், வாகனங்களிலும், எட்டாந் திருநாள் வரை இம் மாதிரியான காட்சிநடந்து, ஒன்பதாந் திருநாள் தினத்தில் ஸ்ரீ பஞ்சமூர்த்திகளையும் தனித்தனி மகாரதங்களில் ஆரோகணஞ் செய்வித்து, வீதிவலம் வந்து, பத்தாவது திருநாள் தினமாகிய குருவாரமும் பௌர்ணமிதிதியுங் கூடிய பூசநக்ஷத்திரத்தில் பஞ்சமூர்த்திகளையும் விருஷபவாகனாதி காக்ஷிகளுடன் காவிரி நதிக்கு எழுந்தருளச் செய்து புஷ்யதீர்த்தம் என்று இன்றும் வழங்கும் கல்லியாணதீர்த்தத்தில் தீர்த்தங் கொடுத்தருளும்

படிச் செய்தார். இவ்வண்ணம் தம்மை அன்புடன் தரிசிக்கவந்த இமையோர் முதலான யாவர்களுக்கும் வேண்டியன வேண்டியவாறு எய்தும்படி தீர்த்தத்தைக் கொடுத்தருளும்படிச் செய்தவரான வீரசோழமகாராஜா இப் பொன்னிநதியின் தென்பால் இன்றும் விளங்கும் அழகிய மண்டபத்துத் தங்கி யருளும்படிச் செய்து, திரும்பவும் இத்தியாதி வைபவங்களுடன் திருக்கோயிலில் எழுந்தருளச் செய்து, முறைப்படி துவஜா அவரோகணமுஞ் செய்வித்தார்.

பின் இத் திருவிழாவைத் தெரிசிக்க வந்த மன்னர்களுக்கும், மற்றுமுள்ள அன்பர்களுக்கும், உபசார மொழிகள் கூறி, அனுப்பி விட்டு, இத் தைப்பூச உத்ஸவம் என்றும் நடைபெறும் வண்ணம் மான்யங்களும் கட்டளைகளும் பல ஏற்படுத்திப் பின் உரோமசமுனிவரை வணங்கினார். அம்முனிவரும் அகமகிழ்வுடன் அரசரின் பத்தியை மெச்சி, சிவபெருமானை மனதில் தியானஞ்செய்து, அன்போடு ஆசீர்வதித்து, தன் கரத்தினால் அவ் வரசரின் நெற்றியில் திருநீறு இட்டு அனுக்ரகஞ் செய்தார்.

சில நாட்களில் அவ்வரசனும் புத்திரப் பேற்றை யடைந்து, இத் தலத்திலேயே தங்கி மருதீசருக்கு உத்ஸவாதிகள் பலவும் நடத்தி, காலக்கிரமத்தில் தன் குமாரனுக்குத் தன் ராஜ்யத்தைப் பட்டாபிஷேகம் செய்து, பின்பு சிலகாலம் இங்கேயே வாசஞ்செய்து கொண்டிருந்து, சிவபெருமானுடைய சிவலோகத்தை அடைந்து, அவரது திருவடிநீழலில் பிரியாத அன்பு பெற்றிருந்தார். உரோமசமாமுனிவரும் அநேக காலம் இத்தலத்தில் மகாலிங்கப் பெருமானையே தியானித்துத் தவஞ்செய்து கொண்டிருந்தார்.

இவ்வாறு இத் தலத்து ஸ்ரீ ஜோதிர்மய மகாலிங்கத்தை ஆண்ட விநாயகர் பூசை செய்ததையும், ஸ்ரீ நந்திதேவரின் அருள்பெற்று, உரோமசமுனிவர் பூசைசெய்த தன்மையும், அச்சமயம் வீரசோழ மகாராஜன் வந்து, அம்முனிவருடைய அனுக்கிரகத்தையும், ஆக்ஞையையும் பெற்று, இம் மருதவனக்காட்டையும் அழித்து, எழில் பெற நகரமும் உண்டாக்கி, திருக்கோயிற் றிருப்பணிகளும் புரிவித்து, நித்திய பூசையோடு தைப்பூச முதலான உத்ஸவாதிகள் ஏற்படுத்தி, அவைகளும் நிலைபெறச் செய்து அழியாப்பேறும்

பெற்ற வைபவங்களையும், சூதமாமுனிவர் நைமிசாரண்ய இருடிகளுக்குச் சொல்லிப் பின், தவத்திற் சிறந்த மிருகண்டு மாமுனிவரின் அவதார குமாரனான மார்க்கண்டேய முனிவர் இத்தலத்தை அடைந்து, பெற்ற பேற்றைக் கூறுவாராயினர்.

உரோமசச் சருக்கம்

முற்றிற்று.

எட்டாவது

மார்க்கண்டேயச் சருக்கம்.

தவத்தில் சிரேஷ்டரான மார்க்கண்டேய முனிவர் மகா புண்ணியக்ஷேத்திரமாகிய திருக்கடவூர் என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கும் அமிர்தகடேசப்பெருமானின் பூரண அனுக்ரகம் பெற்று, தன்னுயிரைக் கொள்ளவந்த இயம தர்மராஜனை சிவபெருமானுடைய திருவடித் தாமரைகளினால் உதைபடச்செய்து, தாமும் என்றும் பதினாறான ஆயுளையும் அடையப்பெற்று, பின் அர்த்தநாரீசுவர தெரிசனை செய்யும் ஆவல்கொண்டு, பலதலங்களிலும் யாத்திரையாகச் சென்று, தவமுதலானவைகளை இயற்றியும் அத்தகைய தெரிசனை கிடைக்கப் பெறாததால் மிக்க கவலையுற்றார். இப்படி யிருக்குங்கால் ஒரு சமயம் இம் மருதூரை யடைந்து, காவிரியில் ஸ்நானம் செய்து, மருதீசரை மனதில் தியானித்து, சந்நிதிவந்து வணங்கி, தாம் கொண்ட நோக்கத்தை மனதில் உன்னி, ஒருபுறத்தில் இருந்து கடுந் தவம் புரியலானார்.

சின்னாட்களில், தேவர்கள் புஷ்பமாரி பொழிய, அன்பர்க்கெளியராகி எம்பெருமான் உமாதேவியாரோடு அர்த்தனாரீசுவர கோலத்துடன் விருஷபாரூடராய் காக்ஷி கொடுத்தருளினர். ஒரே உருவத்தில் ஒருபாகத்தில், விபூதி, ருத்திராக்ஷத்தின் பிரகாசமும், பிறைச் சந்திரனைத் தரித்த சடைமுடியும், நீல ஒளியையுடைய திருநீலகண்டமும், மார்பில் சர்ப்பாபரணமும், முப்புரிநூலும், புலியுடையாடையும், மழு வேந்திய கரமும், முதலானவைகளை உடைத்தாகிய பரம

சிவன் உருவம் வலதுபாகத்திலும், பச்சைநிறமும், பவளச்செவ்வா யும், அன்றுமலர்ந்த புஷ்பங்கள் சூடிய கூந்தலும், குங்குமத்தோடு கூடிய கண்டமும், கச்சையணிந்து நவரத்னமாலைகளை அணியப் பெற்ற மார்பும், பூம்பட்டாடைகளைத் தரிக்கப்பெற்ற நுண்ணிய இடையையும், வளையல்களை யணிந்த கரமும், பொற்பாடகச் சிலம் புகள் அணியப்பெற்ற பாதமும் விளங்கப்பெற்ற உமாதேவியா ரின் உருவம் இடது பக்கத்திலுமாக, தேவருத்திரகணங்கள்சூழப் பெற்று, ஸ்ரீ மார்க்கண்டேயருக்கு அன்புடன் காக்ஷி கொடுத்தரு ளினார்.

இதைக் கண்டதும் அம்முனிவர் பேரானந்தங்கொண்டு, மெய் மறந்து, புளகாங்கிதத்தை யடைந்து, சற்றுநேரம் ஒன்றுந் தோன் ருமல் ஆநந்தபாஷ்பம் சொரிந்து நின்று, பின் தெளிந்து, இருகர ங்களும் சென்னிமேல், குவித்து அச் சர்வேசுவரராகிய அர்த்தநாரீசு வர உருவத்தைக் கொண்ட ஸ்ரீ ஜோதிர்மய மகாலிங்கத்தை வணங்கி,

நீலமார் மிடற்றுய் பவளமால் வடிவி
னீறணி நிருத்தனே போற்றி
வேலினை நிகர்க்கும் விழியுமை ஒருபால்
விளங்கவந் தெளியனேன் காண
பாலுமின் சுவையும் வேறுவே றிருக்கும்
பரிசென நின்றனை போற்றி
ஏலுமெய் யன்பர்க் கெளியனே பொழில்சூ
ழிடைமரு திறைவனே போற்றி

என்றும் பலவாருகத் துதிக்கச் சிவபெருமான், "ஏ முனிவர்தலைவ! கர்மவினைகளையும் தொலைக்கும்படியான உன்னுடைய கடுமையான தவத்தை மெச்சினோம். உன்னுடைய பக்தியைஅறிந்து நாமும் உவ கை பூத்தனம். நீ கருதிய வரங்களைக் கேட்பாயாக!" என அருள லும், முனிவர், "ஹே கருணாநிதியே! தேவாதி தேவர்கள் முதல் யாவரும் கண்டறியும்படி தாங்கள் உமாதேவி சமேதராய்என் விருப் பப்படிக் காட்சி கொடுத்ததன் பின்னர் அடியேனுக்கு அடைய வேண் டிய பேறு வேறு யாது உளது? சகல மகிமைகளும் பொருந்தி விள ங்குகிற இத்தலத்தில் எவர் வந்து, பக்தியுடன் தங்களை அடைந்து

தெரிசிக்கிறார்களோ அவர்களுக்கு யாதொரு குறையின்றி வேண்டிய வரங்களைக் கொடுத்து, கடாட்சித்தருளல் வேண்டும். அஷ்ட திக்கஜங்களும் நிலைதவறிடினும், கடல் பொங்கிவந்தாலும், சூரிய சந்திரர்கள் திசைமாறினாலும், அடியனேன் தேவரீரிடத்து வைத்துள்ள மெய்யன்பு எள்ளளவேனும் குறைவுறா வண்ணம் அருளி, முடிவில் என்றும் அழிவில்லாத தங்கள் திருவடிகளில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்றும், உங்களுக்கு அன்போடு பணிவிடை புரிபவர்களுக்கும், அடியார்களுக்கு இத்தலத்தில் அளவில்லாத அன்னமாதி அளிப்போருக்கும் என்றும் அளவில்லாத பதத்தை யருளல் வேண்டும்." எனப் பலவாறு வேண்டினார். அப்படியே வேண்டிய வாறு அனுக்ரகித்து, அர்த்தநாரீசுவர சொரூபத்துடன் அன்பர்க்கெளியராக எழுந்தருளியிருக்கிறார்.

[மார்க்கண்டேயமுனிவர் இத்தலத்தில் நீண்டகாலம் தங்கியிருந்து அம்மூர்த்தத்தைத் தெரிசித்து, பூஜைகளும் புரிந்து, இன்புற்றிருந்த வரலாற்றைச் சொல்லிப் பின், உத்தம நீதிமானாகிய சுகீர்த்திமன்னன் இத்தலத்தில் வந்து சிவபெருமானைத் தெரிசித்து அவனருள் பெற்ற சரித்திரத்தை சூதமாமுனிவர் நைமிசாரண்ய இருஷிகளுக்குக் கூறியதை இனிக்கூறுவாம்.]

மார்க்கண்டேயச் சருக்கம்.

முற்றிற்று.

ஒன்பதாவது
சுகீர்த்திமன் சருக்கம்.

மந்தமாருதமாகிய இனிய தென்றல் காற்று உலவப் பெற்ற மாமலர்ச் சோலைகளினின்றும் பொழிய, தேன் துளிகள் ஒன்றுசேர்ந்து ஆங்காங்கு பாய்ந்து அதனால் நகரம் முழுமையும் நறுமணம் வீசப் பெற்று, நீர்வளம் நிலவளம் முதலிய எல்லாச் சிறப்புக்களும் அடையப் பெற்றதாயுமுள்ள காஞ்சிமாநகரத்தைத் தனக்குத் தலைநகராயும், புலிக்கொடியையே தனக்கு விருதாயும், மன்னர்

பெருமானும், அளவிறந்த சைனியாதிகளை யுடையவனும், சோழ மண்டல அரசர்களில் 'மகாதீரன்' என்று பெயர்பெற்று, காரணத்தாலும் இடுகுறியினாலும் 'சுகீர்த்தி' என்னும் பெயரையுடைய ஓர் அரசன் அரசாண்டு வந்தான். அம் மன்னன் கல்வியில் கரைகண்டவன். மன்மதனும் கண்டு மயங்கும்படியான அழகு வாய்ந்தவன். இரப்போர்க்கு இல்லை என்னாது இன்புற்று வேண்டுவன அளிப்பவன். அழகிய விசாலமான புஜத்தையுடையவன். சந்திரவட்டக் குடையின் கீழிருந்து செங்கோல் மாறாது அரசு செலுத்துபவன். திருநீலகண்டத்தையுடைய சிவபெருமானும், அவர் அடியவர்களும், சொல்லும் அதன் பொருளும் போன்று, அமைந்திருக்கும் தன்மையை உணர்ந்து அவர்களை மனமார வாழ்த்தித் துதிசெய்யும் பரிசுத்தமான குணமுடையவன். இன்னும் பகைவர்களுக் கெல்லாம் தென் திசை மன்னன் போன்றவன். ஏழையவர்களுக்குந் தந்தையிடத்துக் குழவி போன்று குலவி நட்புறுவன். இப்புவியில் எளியோர்களுக் குற்ற இடுக்கண்களைத் தன் கண்ணில் உண்டான நோயெனக் கருதித் தீர்த்திடுவன். கொஞ்சமேனும் மனதில் இரக்கமில்லாது பிறர்க்குத் தீமை செய்யும் கொடியர்களைத் தக்கவாறு தண்டித்து, அவர்கள் நன்மார்க்கம் அடையும்படிச் செய்வன். சதா உத்தமமான தருமநெறியை விருத்தி செய்வதிலேயே நோக்கமுள்ளவன். இத்தன்மையான குணங்களினாலும், செல்வப்பெருக்கினாலும் இம்மன்னனுடைய புகழ் எங்கும் பரவியிருந்தது. இத்தகைய நிலைமையில் சகல இன்பங்களையும் பெற்று, சுகித்திருக்குங்காலையில் அம் மன்னனுக்குப், புத்திரப்பேறு இல்லாத காரணத்தினால், மனதில் பெருங்குறை உண்டாகி, அது காரணமாகப் பற்பல விரதங்கள் அனுஷ்டித்தும், பல தலங்களில் தீர்த்தாடனம் செய்தும், விசேஷ சாந்திகள் செய்தும், அந்தணாளர் முதலானவர்களுக்கு அளவற்ற அன்ன தானமும் செய்வித்தான்.

இவ்வளவு செய்தும் மகவு ஒன்றும் உதித்திடாமை கண்டு மன்னன் மனக் கலக்கமுற்று வருந்திட, அதனை யறிந்த அவனது ஆத்ம நண்பர்கள் அவனை ஒருவாறு தேறுதல் அடையச் செய்து, 'முத்தமிழ்த் தலைவராகிய அகத்திய மாமுனிவரை நாடி வணங்கி, அவரிடம் தன் குறைகளைத் தெரிவித்தால் அவர் அனுக்கிரகம் செய்வார், அல்லது புத்திரப் பேற்றை யடையவேண்டிய மார்க்கம் சொல்வார்' என்றுசொன்னார்கள். அதைக்கேட்டு அரசனும் உசிதமாகவே

கொண்டு, அக்கணமே அம் மாமுனிவர் இருக்கும் இடத்தை நாடிச்
செல்வானாயினான். அம் முனிவரைப் பல தலங்களிலும் தேடிக்
கடைசியாகத் திருவெண்கா டடைந்து அவரைக் கண்டு அடிவணங்
கிப் பணிவுடன் நின்ற, சுகீர்த்தி மன்னனை, அகத்தியர் பார்த்துப்
பல ஆசிகளோடு உபசார மொழிகள் கூறி, "ஏ அரசர் பெரும!
உமது குழந்தைகளும் மற்றும் இஷ்ட மித்திர பந்துக்களும்
க்ஷேமமா?" என வினவினார். வினவலும் அரசன் துக்க சாகரத்
தில் மூழ்கினவனாய் ஒன்றும் பேச சக்தி யற்றவனாய் ஸ்தம்பித்து
நின்றதைக் கண்ட முனிவர் பெருமான், அம் மன்னன் அகத்திடை
உள்ள குறையைப் பற்றி விசாரித்தலும், மன்னன், "ஹே முனி
புங்கவரே! தாங்கள் எனக்கு அளவில்லாத செல்வங்களையும் எல்லா
வளப்பங்களையும் யாதொரு குறைவின்றிக் கொடுத் தருளினீர்கள்.
நான் மிகுந்த சந்தோஷத்தை யடைந்தேன். ஆனால் எனக்கு ஒரு
புத்திர சந்தானம் அருளிச் செய்யாததால் இவ்வளவு செல்வ மிருந்
தும் எனக்குத் தீராத மனக்குறைவு உண்டாகி விட்டது. இதன்
பொருட்டு, அநேக புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தேன்.
கணக்கில்லாத பிராம்மணோத்தமர்களுக்குத் தகுந்தபடி பல தானங்
களும் கொடுத்தேன். பற்பல விரதங்களும் அனுஷ்டித்தேன்.
விசேஷமான சாந்திகள் பலவும் செய்தேன். அந்தோ! தவசீலரே!
ஒன்றினாலும் பயன் இல்லை. என் மனம் மிக்க வாட்டமுற் றிருக்கி
றது. உங்கள் அருளால் அளவிடமுடியாத குபேரச் செல்வமிருந்
தென்ன? மன்மதனையும் பழிக்கும்படியான அழகு பெற்றென்ன?
விசேஷ புத்தி நுட்பங்கள் அடைந்தென்ன? கிடைத்தற் கரிய இந்
திர போகங்களெல்லாம் கிடைத்தென்ன? இவ்வளவு வாழ்வு பெற்
றிருந்தாலும் புத்திரனில்லாக் குறைவால் உண்டாகும் மனக்
குறைக்கு ஈடாகுமோ? புத்திர னில்லாத வாழ்க்கையும் ஒரு வாழ்
க்கை யாகுமோ? இத்துணைச் செல்வ மில்லாதிருந்து, ஒரு புத்திர
சந்தானம் மாத்திரம் உண்டா யிருந்தால், மனமானது இவ்வளவு
செல்வத்தினால் உண்டாகும் இன்பங்களைவிடப் பல்லாயிரம் பாகம்
அடையுமன்றோ?" "ஏ அருந்தமிழ்த்தலைவ! இனி என்னை சோதனை
செய்தல் தகாது. இனியேனும் தாங்கள் எனக்கு ஒரு காதலனை அனு
க்ரகம் செய்து, நான் இம்மையிலும் மறுமையிலும் இன்புற்றிருக்
கும்படி அருள் புரிய வேண்டும்." எனப் பணிவுடனும் மிக்க தாபத்
துடனும், அரசன் உரைத்த மொழிகளைக் கேட்டு, அகத்தியர், சிவ
பெருமான் அருளால் கிடைக்கும் எனத் தேற்றிப் பின் சொல்லுகிறார்.

"சுகீர்த்திமன்னவ! மருதம், குறிஞ்சி, நெய்தல், முல்லை, பாலை என்னும் ஐந்திணை இடங்களிலும் தனித் தனியே நிறைந்துள்ள வளப்பங்கள் யாவும் ஒருங்கே அமையப் பெற்றதாயும், ஸ்ரீ உமா தேவியார் சமேத எம்பெருமான் அன்புடன் அடியார்க் கெளியவராய் வீற்றிருக்கும் தலமுமாகிய மருதூரையடைந்து, ஸ்நானமுதலாதிகள் முடித்து, சிவபூஜையும் செய்தபின், உத்தம பூஜைகளில் ஒன்றான பிதுர்பூஜையாகிய சிராத்தத்தையும் செய்தாயானால் அப் பிதுர் பூஜையின் பலனாக உனக்குப் புத்திரசந்தானம் உண்டாகும்." என்னலும் அரசன், 'வேதபோதனரே! எவையும் தம்மை யடைந்தோர்க்கு எளிதில் அளிப்பவன் சிவபெருமான் இருக்க, இப் பிதுர் பூஜை எதன்பொருட்டு?' எனச் சந்தேகிக்க, முனிபுங்கவர் பின்வருவன உரைக்கின்றார். "மன்னர் மன்னவ! கவனமாய்க்கேளும். ஏதேனும் ஒரு காரணத்தினால் துர்மரணத்தை யடைந்து அதன் காரணமாகப் பைசாசரூபத்தை யடைந்தவர்களும், கொடிய தீவினையின் பலனாகக் கடுநரகிற் பட்டவர்களும் கொடிய பசிப்பிணியால் வருந்துங்காலை, இப் பூவுலகிலுள்ள அவரவர்களுடைய வர்க்கத்தாருக்குப் புத்திர சந்தான மில்லாமல் போகக்கடவது என்று சாபமிடுவார்கள். அப்பேர்ப்பட்டவர்களுக்குத் தலைவர்கள் அறநெறியில் நின்று வழுவாத வாழ்க்கை யுடையார்களாகி, இயற்கையான மரணத்தை யடைந்தவர்களாகிய பிதுர்க்களேயாம். ஆகையால் இத்தகைய பிதுர்க்களுக்குத் திருப்திகரமாகப் பூஜைசெய்தால், பைசாசரூபிகளும், நரக அவஸ்தைக்குட்பட்டிருப்பவர்களும் தங்கள் பசிப்பிணி நீங்குவதுந் தவிர, பிதுருக்களும் மகிழ்வுற்று அவர் வம்சத்தாருக்குப் புத்திரப் பேற்றையும் அளிப்பார்கள்." இத்தகைய வரத்தை எம்பெருமான் பிதுர்க்களுக்கு அருளியிருக்கிறார்.

இன்னும் கேளும் "மகாராஜனே! அத்தகைய பிதுருக்கள், பிரேத பிதுருக்கள் என்றும், தேவ பிதுருக்கள் என்றும் இருவகைப்படுவர். இவ்விருவரையும் பூஜைசெய்ய வேண்டியது அவசியம். இவர்களைக்கருதி, சூரிய, சந்திரர்களைப், பூஜை செய்வது உத்தமம். சூரியன் ஈசுவரனுடைய அம்சமாகவும், சந்திரன் உமாதேவியாரின் அம்சமாகவும் விளங்குகிற படியால் பிதுர் தேவதைகளான இவர்களுக்குச் செய்யப்பட்ட பூஜைகள் ஈசுவரனுக்குச் செய்யப்பட்ட பூஜையாகவே ஆகும். நிற்க, சிவபெருமான் பூஜையை ஏற்றுக் கொள்ளும் ஸ்தானம் அநேகமுண்டு. அவற்றுள் பிதுர்க்களும் ஒரு

முக்கிய ஸ்தானமாகும். அப்பிதுர்க்கள் தமக்கு இயற்றப்படும் பூஜையை ஏற்றுக்கொண்டு, அத்தகைய பூஜையை என்றும் நடைபெறும் வண்ணம் தம் வருக்கத்தினருக்கும் புத்திரப்பேற்றை அளிக்கும் சக்திக்கும் சிவபிரானுடைய அனுக்கிரகமே காரணம். இதுதான் ஒழுங்கான முறையாகும்.'' பின்னும் சொல்லுகிறேன், "இத்தகைய பிதுர்பூஜையை மற்ற தலங்களில் செய்வதைக் காட்டிலும் இடைமருதூரில் செய்தல் விசேஷம். அதனால் ஒருவன் அடைய எண்ணும் பலன்கள் எளிதிலே விரைவில் கிட்டும். இது சம்பந்தமாய் ஓர் கதை சொல்லுகிறேன் கேளும்.''

"நான் பௌர்ணமிதோறும் திருவெண்காட்டிலிருந்து திருவிடைமருதூருக்கு எம்பெருமான் இணையடிகளை வணங்கும் வண்ணம் போவது வழக்கம். எம்பெருமானும் என் வரவை நோக்கி அருளுடன் எதிர்பார்த்திருப்பர். இப்படி ஒருசமயம் பகல் காலத்தில் நான் போய்க்கொண்டிருக்கையில், ஆகாயத்தினின்று, "ஐயோ! ஐயையோ! பொறுக்கக் கூடவில்லையே. அபயம் அபயம்.'' என்று கதறுகிற சப்தம் என் காதில் பட்டது. நான் ஆச்சரியத்துடன் இப்பேர்ப்பட்ட துக்ககரமான வார்த்தைகளைக் கேட்டு, உலகம் இவ்வாறு துன்பத்தை யடையும் காரணத்தை நினைந்து 'சிவ, சிவ.' என்று ஜபித்தேன். உடனே கணப்பொழுதில் செந்நிறமான சுருட்டைமயிரையும், குழிந்த கண்களையும், பிளந்த வாயையும், நீண்ட கழுத்தையும், அவலக்ஷணமான அவயவங்களையும் உடைய கோர உருவங்கள் சரீரமெல்லாம் இரத்தம் பெருகப் பெற்றதாய் என்முன் தோன்றின. அவர்கள் கை கால்கள் வெட்டப்பட்டும், காலபாசத்தினால் கட்டப்பட்டும், கண்களினின்றும் தாரை தாரையாய் நீர் பெருக, என்னைப் பலவாறு துதி செய்தார்கள். அவர்களுடைய விருத்தாந்தத்தை நான் கேட்டதும், அவர்கள், "ஏ உத்தமமுனிவ! நாங்கள் பரஸ்திரீயினிடம் காதல் கொள்ளுதல், எளியோர்க்குத் துன்பம் செய்தல், வேதநிந்தை, தெய்வநிந்தை, குருநிந்தை, பெரியோர்நிந்தை முதலான பாபச்செயல்களை இயற்றினோம். இன்னும் மேன்மை மிக்கப் பெரியோர்கள் பசிப்பிணியுடன் வருந்த, நாங்கள் வயிறாரப் புசித்தோம். பஞ்சமகாபாதகங்களையும் செய்தோம். துர்வழக்கு ஆடினோம். செய்ந்நன்றி மறந்தோம். பொய்ச் சாக்ஷியம் கொடுத்தோம். மனம், வாக்கு, காயம் முறண்படவே இருந்தோம். இம்மாதிரியான பாவச் செயல்களையே நாங்கள் விரும்பிய கருமங்களாக நடத்

இவந்தோம். ஆதலால், எமதருமராஜன் ஆக்ஞைப்படி, எங்களுக்கு இப்பேர்ப்பட்ட உருவத்தைக் கொடுத்து காலபாசத்தினால் கட்டி, அக்கினிச்சுடர் போன்ற கண்களையும், நீண்ட கோரப்பற்களையும், மூண்டெழுகின்ற கோபத்தையும், இடிமுழக்கம் போன்ற குரலையும், நள்ளிருள் வடிவத்தையுமுடைய எமகிங்கரர்கள், திரிசூலம், வேல், வாள் முதலிய ஆயுதங்கள் கொண்டு எங்களைக் குத்தியும், வெட்டியும், பலவாறு துன்புறும்படி வருத்தியும், அலற அலற இழுத்துச் சென்றார்கள். இம்மாதிரி கோலத்துடன் எங்களை எமதருமராஜன் முன்னிறுத்தலும், அவ்விராஜன் எங்கள் தலையில் காலதண்டத்தை வைத்து, நாங்கள் இப்பூவுலகில் செய்துள்ள கர்மங்களின் வரலாற்றைக் கேட்டு, அவைகளைச் சித்திரபுத்திரனார் கணக்கின்படி சோதனை செய்து, பின் எங்கள் செயல்களுக்குத் தக்கபடி தண்டனை விதிக்கும்படி ஆக்ஞாபனம் செய்தருளினான். அந்தோ! நாங்கள் பட்ட பாடு நினைக்க வொண்ணாது. உடனே ஆலகாலவிஷம் போலப் பலர் தோன்றி எங்களைச் சூழ்ந்து கொண்டார்கள்.

முனிவர்பெரும! இப்பூவுலகில் உள்ளோர் பிந்தி தாம் அடையும் தண்டனையைக் கொஞ்சமும் நினையாமல் புரியும் காரியங்கள் பற்பலவானவை. என்ன விந்தை! என்ன கொடுமை! எங்களைப் பலவித கொடிய நரகங்களில் வீழ்த்திப் பல துன்பங்களுக்கு ஆளாக்கிய பின்னர், நாங்கள் செய்த ஒவ்வொரு மகாபாதகங்களுக்கும் தனித்தனியே தண்டனை விதிப்பாராயினார்கள். பிறர் மனைவியைச் சேர்ந்த கொடியபாவத்தின் காரணமாக பழுக்கக்காய்ந்த ஓர் செம்பினாலாகிய உருவத்தைத் தழுவி அணையும்படிச் செய்தார்கள். காதல் கொண்டு அவர்களைப் பார்த்த கண்கள் இரண்டையும் பழுக்கக் காய்ந்த கூரிய இரும்புத் துண்டுகளாலாகிய காக்கைகளைக் கொண்டு துன்புறுத்திக் கொத்தி விழிகளைப் பிடுங்கும்படிச் செய்தார்கள். அமாவாசை தினத்தன்று, உருசிமேலிட்டு, பர இல்லத்தில் போஜனம் செய்தவர்களுடைய நாக்கை பழுக்கக் காய்ந்த இரும்புத் துண்டுகளைக் கொண்டு துண்டஞ் செய்து இம்சை செய்தார்கள். தந்தை, தாய், மூத்தோர் முதலானவர்கள் சொன்ன சொற் கேளாத காரணத்தால் ஏற்பட்ட மமதையினாலாகிய கொடிய தீவினைக்காக, கடுந்தீயினாலாகிய செக்கிலிட்டு ஆட்டினார்கள். ஆதலால் மெலிந்து மனம் வாடி அறிவும் இழந்தோம். இன்னும், பிள்ளை, தந்தை, தாய், முதியோர், மற்றுமுள்ள பந்துக்கள் முதலான யாவரையும் பசிப்

பிணியால் வருந்த விட்டு, தாங்கள் மாத்திரம் விலாப் புடைக்கத் தின்றதின் பாவத்திற்காக அநேக நாள்வரை காய்ச்சி உருக்கின செம்பை வாயில் விடுத்து உட்கொள்ளும்படி செய்து, தண்டங்களினால் அடித்துத் துன்புறுத்தினார்கள். பெரியோர்களை நிந்தை வசனங்கள் கூறிய வாக்கிலுள்ள பற்கள், கலகலவென்று உதிரும்படி இரு தாடைகளிலும் அறைந்து பற்களையும் உதிர்த்தனர். பிறர் பொருளை அவர்கள் காணாமல் திருடின கரங்களை, நாங்கள் அலறும்படி, கத்தியினாலும் வாளினாலும் துணித்தனர்கள். ஒரு பொழுதேனும் சிவபெருமான் அடியவர்களுக்காவது, மற்றுமுள்ள எளியவர்களுக்காவது யாதொரு உபகாரமும் செய்யாமல் சதா துன்பமே விளைவித்துக் கொண்டிருந்த கர சரணாதி அவயவங்களை மனம் போனபடி பிடுங்கித் தின்னும் பொருட்டு, செந்நாய், நரி, வெம்புலி, கழுகு, கொடிய விஷப் பாம்புகள் நிறைந்துள்ள கூட்டத்தில் விட்டு, நாங்கள் மனம் வருந்தும்படித் துன்புறுத்தினார்கள். இன்னும் பற்பல விதமான துஷ்ட மிருகங்கள் நிறைந்துள்ள பல நரகங்களிலும் வீழ்த்தி வந்தார்கள். இந்த மாதிரி அந்த எம கிங்கரர்கள் பிரதிதினம் வாயு வேகம் மனோவேகமாகவே பற்பல இடங்களுக்குச் சென்று ஆங்காங்கு இந்த மாதிரியான தண்டனைகளையும் விதித்துக் கொண்டு இங்கு வந்து எங்களை இம்சை செய்வது வழக்கம். அந்தோ! எண்ணும் சரீரமெல்லாம் பதறுகிறது. ஏ அண்ணலே! இன்னும் யாது செய்வார்களோ? மனம் நடுங்குகிறது. இச்சமயம் தாங்கள் 'சிவ சிவ' என்று சொன்ன சப்தத்தைக் கேட்டலும், எங்களை விடுத்து, தங்களை நோக்கி நடுங்கி ஓடலுற்றார்கள். நாங்கள் தங்கள் முன் நின்றோம். இனி எங்களைப் புனிதர்களாக்கிக் காத்து அருளல் வேண்டும்." என்று பணிவுடன் வணங்கிய அப் பைசாச உருவங்களைக் கண்டு மிக்க மன மிரங்கி, ஏ சுகீர்த்தி மன்னவ! அவர்கள் ஹிம்சையைக் கேட்டு மனம் பொறாமல் மருதீசனை மனதில் தியானித்து 'அஞ்சேல்' என அபயமளித்து அவர்களுடன் நம் மருதூரை யடைந்தேன். அங்கு அவர்களை ஸ்ரீ ஜோதிர்மய மகாலிங்கத்தின் சந்நிதியில் வணங்கச் செய்து பின் காவிரியில் ஸ்நானம் செய்வித்து அவரவர்கள் கோத்திர சூத்திர முதலானவைகளைச் சொல்லி பிதுர்க்களுக்குத் திலதர்ப்பணாதி சிரார்த்தபூஜை முதலியன செய்வித்தேன். உடனே அப் பைசாச உருவம் நீங்கி தேவ உருவத்தை யடைந்து, மிக்க வனப்புடையவர்களாகி சிவபெருமான் அருளினால் வரப்பட்ட

தேவ வியானங்களில் ஏறி, தேவர்கள் புஷ்பமாரி பொழிய துந்து மிகள் முழங்க, சொர்க்கலோகம் புகுந்தார்கள். ஏ சுகீர்த்திமன்ன! இத் தலமகிமையையும், பிதுர் பூஜையின் பெருமையையும், அது வும் இத்தலத்தில் செய்வதால் எளிதில் பலன் அடையக்கூடிய தன் மையையும் நீ நன்கு உணர வேண்டும். இவ்வண்ணம் இத்தலத்தில் நற்கதி யுற்றவர்கள் அநேகம் பேர். ஆகையால் நீயும் அத்தலத்திற் சென்று மருதீசரை வணங்கி, தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து, பிதுர் பூஜையையும் முறைப்படிச் செய்வாயாகுல், உன் குலம் விள ங்க, நீ புத்திரனை அடைவாய். அதற்குப் பிறகு, நீ எம் மருதீசரு டைய திருக்கோயிலில் இன்புறத் திருப்பணி பல செய்தல் வேண் டும்.'' என, மன்னன் மனதில் பசுமரத் தாணிபோல் படும்படி, அகத்திய மாமுனிவர் உரைத் தருளிய வசனங்களைக் கேட்டு சுகீர்த்தி மன்னன் அகமகிழ்ந்தான்.

உடனே அம் முனிவர் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து, பல ஆசிகள் பெற்று நம் மருதூரை நோக்கி வந்து, கலியாண தீர்த்தத் தில் ஸ்நாஞதிகள் செய்துகொண்டு ஏகநாயக மூர்த்தமாகிய எம்பிரான் திருவடியிற் படிந்து, மனமாரத்தொழுது, தோத்தரித்து நின்றுன். உடனே இத்தலத்தில் தில தர்ப்பணம் முதலான கிரியைகளுடனே பிதுர் பூஜையையும் வெகு பரிசுத்தமான மனதுடன் செய்து முடித் தான். சில நாட்களில் இம் மன்னன் மன மகிழ்ந்து இன்புறும்படி, மன்மதனும் கண்டு வெட்கித் தலைகுனியும்படியான சரீர தேஜஸும், முருகக்கடவுளே அவதரித்தாற் போன்று, அறிவும் ஆற்றலும் முதிரப் பெற்றவனும், நீண்ட ஆயுளை யுடையவனும், சோழ வம்சம் விளங்கும்படியாயும், பிதுர்பூஜையின் பலனுக சிவபெருமான் அருளால் கோடி சூரியப் பிரகாசம் போல் ஜொலித்துக் கொண்டு ஓர் மகவு உதித்தது. அதை அடைதலும் மன்னவன், அளவில்லாத ஆநந்தங் கொண்டு, அந்தணாதிகளுக்கு மேகம் போல், சொர்ண தானம், விரைதானம், பூதானம் முதலிய உத்தம தானங்கள் கணக் கின்றிச் செய்து, தனக்கு இவ்வளவு பாக்கியமும் உண்டாகும்படிச் செய்த அகத்தியர் முதலாதி பெரியோர்களையும் மனதிலே வண ங்கி, "ஆஹா! என்ன ஆச்சரியம்! கந்த மூல பலாதிகளையே தம க்கு ஆகாரமாகக் கொண்டு பஞ்ச தீபாக்கினி மத்தியில் நின்று கடுந் தவம் புரிந்து, நீண்ட காலம் வருந்தி யடையும் பெரும் பேற்றைப்

பெரியோர்கள் திருவாக்காகிய ஆசி மொழிகளினால் எளிதினில் கிடைத்திடும் என்பது திண்ணம்.'' எனப் பலவாறு உன்னிவுன்னித் தோத்திரமும் செய்தான்.

பிறகு திருக்கோயிலில் மிக்க அழகு பொருந்தும்படி பற்பல திருப்பணிகள் இயற்றி, இன்புற நித்திய பூஜைகள் குறைவறச் செய்வித்து, பிர்ம்ம உத்ஸவம் முதலான விழாக்களைச் சிறப்புற நடத்தி, அதற்கு வேண்டிய நிரந்தரமான மான்யாதிகளும் விடுத்தான். வேதோத்தமர்களாகிய அந்தணர்களுக்கு விசேஷ, பூதானம், சொர்ண தானம் முதலியன அளித்து, மிக்க ஆவலோடு இத்தலத்தில் அநேககாலம் தம்முயிர்க்காதலனுடன் இன்புற்றுத் தங்கி, காலக்கிரமத்தில் தன் குமாரனுக்கு ராஜ்ய பட்டாபிஷேகமும் செய்து வைத்து, தான் ஸ்ரீ ஜோதிர்மய மகாலிங்கப்பெருமானின் திருவருளால் அவருடைய திருவடியை யடைந்து இன்புற்றிருந்தான்.

இவ்வாறு பிதுர் பூஜையின் பெருமையையும், பெரியோர் வாக்கின் மகிமையையும் விளங்கச்செய்து, அதன் பலனைச் சுகீர்த்தி மன்னன் பெற்ற பேற்றையும், சூதமாமுனிவர் நைமிசாரணிய இருஷிகளுக்குக் கூறிப் பின்னர் புண்ணியோத்தமராகிய காசிபமகருஷி இத்தலத்தில் கண்ணபிரானைத் தான் கருதிய வண்ணம் தரிசிக்கும்படியான பாக்கியத்தைப் பெற்ற வரலாற்றைக் கூறுகின்றார்.

சுகீர்த்திமன் சருக்கம்

முற்றிற்று.

பத்தாவது
காசிபச் சருக்கம்.

திருமூர்த்திகளுள் ஒருவராயும் சிருட்டி கர்த்தாவுமாகிய பிரும்மாவின் பிள்ளைகள் பதின்மரில் ஒருவரான காசிபமாமுனிவர், ஒரு சமயம், மகாவிஷ்ணுவின் அவதாரமான ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஆயர்பாடியில் இடைச்சேரியில் குழந்தைப் பிராயமாகச் செய்த திருவிளையாடல்களைக் காண வேண்டுமென்கிற விருப்பத்தைத் தன்

மனதில் கொண்டு, ஸ்ரீ கண்ணபிரானையே தியானித்துப் பலநாள் கழித்தார். இதற்குச் சகலவிதமான போக மோக்ஷங்களை எளிதில் ஈயவல்ல இம்மருதூரில் செய்யப்படும் தவமே காரணமாம் என்கிற விஷயத்தை நினைத்து, அதி சீக்கிரத்தில் தான் கொண்ட எண்ணத்தையடைய விரும்பி, மருதூரில் காவிரியில் ஸ்நானஞ்செய்து நித்ய கர்மானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு, பெருநலமாமுலையம்மை சமேத ஸ்ரீ மருதவாணப்பெருமானையும் மனத்தினிலிறுத்தி, இரவு பகல் தோன்றாமல் அன்னம் ஆகாராதிக ளின்றி சதாகாலம் ஸ்ரீ கண்ணபிரானையே மனதில் தியானித்துக் கடுந் தவம் புரிந்தார்.

இந்நிலையில் சிலநாள் தவம்செய்ய, பாதங்களில் பொற்சிலம்புகளும், இடுப்பில் தொங்குகின்ற சதங்கைகளை யுடைய அரைஞாணும், மார்பில் அழகிய ஒளி வீசுகின்ற நவரத்ன மாலைகளும், இரு காதிலும் இரத்னமயமான மகரகுண்டலங்களும், கைகளிற் பொற்றொடிகளும், சிரசின் முன்பாகத்தில் வைக்கப்பட்ட நவரத்ன சுட்டிகளும், விளங்கப்பெற்று ஸ்ரீ கண்ணபிரான், பாலகிருஷ்ண ரூபமாய், வாய் நிறைய வெண்ணெய் உடையதாகிய சந்திர வதனம் எங்கும் ஒளிவீச, உரலிடைக் கட்டுப்பட்டவராக, காசிபமுனிவர் கருதியபடியே அவர் மனதில் காட்சி கொடுத்தருளினார். முனிவர் இவ்வுருவத்தைக் கண்டதும் அடிபணிந்து, அகமகிழ்ந்து கண்ண பிரானைப் பலவாறு துதிசெய்தார்.

"ஹே முகுந்த! கோவிந்த! அச்சுதா! நந்தநந்தன! அடியேன்மீது கருணை கூர்ந்து காட்சி கொடுத்தருளியதினால் மேன்மை பெற்றேன்." எனப்பலவாறு வேதோக்தமாகத் துதிசெய்தலும், கண்ணபிரான், 'ஏ அன்பனே, நின் தவத்தை நாம் மெச்சினோம். உன்னிடம் மகிழ்வு எய்தினோம். நீ வேண்டிய வரங்களைக் கேள்.' என்றருளிச் செய்தார். அதைக் கேட்டதும் காசிபர், ஒன்றுந்தோன்றாதவராய், என்றும் பரநலத்தையே நாடுபவர் ஆதலால், "ஏ கருணாநிதியே! தாங்கள் இப்போது எனக்குக் காட்சி கொடுத்தருளியபடி, இத்தலத்திலேயே தங்கியிருந்து, இங்கு வந்து தங்களை அன்புடன் வணங்கும் அடியார்களுக்கு வேண்டிய வரங்களை அருளி உய்விக்கவேண்டும். இதுவே என் கருத்து." என்றார். ஸ்ரீ கண்ணபிரான் அப்படியே சம்மதித்து, "ஏ முனிவர்பெரும! உன்னிஷ்டப்படி நாம் இங்கு தங்கி அடியார்களுக்கு வேண்டிய வரங்களைக்

கொடுப்போம். இத்தலம்போன்ற சகல மகிமைகளும் பொருந்திய தலம் எங்கும் இல்லை. இது உண்மை. யாம் அறிவோம். சிவபெருமானை உள்ளன்போடு நினைப்பவர்களுக்கு எண்ணியவெண்ணியவாறே அக்கணமே கைகூடும். இது விஷயத்தை அறிய விரும்புவோருக்கு நீ சொல்வாயாக. நீயும் அச்சிவபெருமானைப் பக்தியுடன் அருச்சனை செய்வாயாக.'' என அருளினர். காசிப முனிவரும் உளமகிழ்ந்து கண்ணபிரானை வணங்கிப் பூஜை செய்து, இத்தலமகிமையை யாவரும் உணரப் பரவச்செய்து, தானும் ஏகநாயகமூர்த்தியைப் பூஜை செய்து பலநாள் இத்தலத்தில் தங்கியிருந்தார். இவ்வரலாற்றை வசிஷ்டாதி மகருஷிகளுக்கு ஸ்ரீ முருகக்கடவுள் கூறிப்பின், அம்முனிவர்கள் செய்வதாக உத்தேசித்திருக்கும் யாகத்தை இம்மருதவன தலத்தில் முறைப்படிச் செய்து வெகு எளிதில் அவர்கள் விரும்பும் பலன்கள் அடையலாம் என்றும் சொல்லியருளலும், அம்முனிவர்கள் மிக்க சந்தோஷப்பட்டார்கள் என்று சூதமாமுனிவர் நைமிசாரண்ய இருஷிகளுக்குச் சொல்லிப்பின் குமரக்கடவுளும் வசிஷ்டாதி மாதவர்களும் இத்தலத்தில் சிவபெருமானைப் பூஜித்த வரலாற்றைக் கூறுவாராயினர்.

காசிபச் சருக்கம்.

முற்றிற்று.

பதினொன்றாவது

குமாரபூசைச் சருக்கம்.

இவ்வாறு வசிஷ்டாதி முனிசிரேஷ்டர்கள் தாங்கள் தவஞ் செய்தற்கு உகந்த, எல்லா வளப்பங்களையும் எளிதில் அளிக்கவல்ல தலம் இம்மருதூரென்று தெளிந்து, யாகம் செய்யும்பொருட்டு அத்தலத்திற்குப் புறப்பட்டதும் முருகபிரானும், உடனே மயில்வாகனருடராய் ஆகாயமார்க்கமாய்க் கிளம்பி முனிவர்குழாம் சூழ, அம் மருதூரை நோக்கிச் சென்றார். செல்லும் மார்க்கத்தில் நக்கீரர் முதலான பல புலவர்களால் துதிக்கப் பெற்றதும், தனக்கென்றே உரியதுமான, திருப்பரங்குன்றம், திருவேரகம், திருஆவினன்குடி

திருச்செந்தூர், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை முதலாகிய தலங்களையே விரும்புவோர் விரும்பியபடி யருளத் தாம் எழுந்தருளி யிருக்கும் தலங்களாகக் கொண்டிருப்பதை, ஸ்ரீ குமாரக்கடவுள், வசிஷ்டாதி முனிவர்களுக்கு நேரில் காட்டுவித்துப் பின் மருதூர் நோக்கிச் சென்றார்கள்.

வெகுதூரத்தில் வரும்பொழுதே மலைபோல் மிக்க உயர்ந்து ஆகாயமளாவிய மதில்களையும், மேகங்கள் உலவப்பெற்ற அழகிய சோலைகளையும், மாட மாளிகை கூட கோபுரங்களின் வரிசையழகையும் உடைய மருதூரையும் அதன் மத்தியிலுள்ள ஜோதிர்மய மகாலிங்கப்பெருமானின் ஆலயத்தையும் கண்டார்கள். காணலும், அடங்காத ஆநந்த சாகரத்தில் மூழ்கினவராகி, மெய்ம்மறந்து, மயிர் சிலிர்த்து, தூரத்திலிருந்தே, அம்மருதூரையும் ஆங்குள்ள மருதவாணரையும், மனமார வணங்கி, துதிபலவும் செய்தனர்கள். இத்துணைப் பேரானந்தத்தோடு குமரக்கடவுள் முனிவர்களை மருதூருக்குள் அழைத்துச் சென்று, ஆங்கு எம்பெருமானை வணங்கித் துதிசெய்து, பிறகு அபிஷேகாதிகளுக்கு வேண்டிய, பொருள்கள் சேகரிக்க ஆரம்பித்தார்.

தீர்த்தங்களில் விசேஷமானதும், தன்னிடம் படிந்தவர்கள் பவப்பிணியை நீக்கும்படியான தன்மையைப் பெற்ற ஸ்ரீ கங்காதேவியை, நினைத்த மாத்திரத்தில், கங்காதேவியும் முருகக்கடவுள் எதிரில் தோன்றி, அவர் ஆக்ஞைப்படி, சிவபெருமானுக்கு அபிஷேகத்துக்கு உபயோகமாகும்படி அருகில் ஈசானிய திக்கிலே கங்காகூபம் என்றழைக்கும்படி அமர்ந்திருக்கிறாள்.

உடனே குமாரக்கடவுள், பால், தயிர், தேன் முதலாதி சாமான்களுடன் கங்காதீர்த்தத்தினால் சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்து, நானாவித நறுமலர் கொண்டு சிவாகமவிதிப்படி அருச்சனைகள் பலபுரிந்து, தாமும் உளமகிழ்ந்தார்.

மற்றைய முனிவர்களும் இம் மருதூரில் காவிரியில் ஸ்நானம் செய்து, நித்திய கர்மாதிகள் முடித்துக்கொண்டு, கங்கா கூபத்திலும், இன்னும் மற்றுமுள்ள எல்லா தீர்த்தங்களிலும் தீர்த்தமாடிப் பின், மனோ வாக்குக் காயங்களுக்கு எட்டாத கிருபாசமுத்திரமாகியும், முக்கண்ணையுடையவரும், மகா மேருவையே வில்லாகவுடையு

வரும் ஆகிய இம்மருதவாணரையும், பெருநலமாமுலை யம்மையை யும், ஆண்டவிநாயகரையும் வணங்கி, பல தோத்திரங்களைப் பாடித் துதி செய்தார்கள். ஆங்கு இரத்னமயமான சிங்காசனத்தில் மயில் வாகனத்தோடு, வேல் ஏந்திய கரத்துடன் வீற்றிருக்கும் முருகக் கடவுளையும் வணங்கி, பஞ்சாட்சரத்தையும் ஜபித்து, மனமாரத் துதியும் செய்தார்கள். பின் அவரவர்கள் செய்யும் யாகத்துக்கு உபகரணாதிகள் சேகரம் செய்துகொண்டு ஓர் புறத்தில் யாகமும் இயற்ற ஆரம்பித்தார்கள்.

இத்தலத்தில் செய்யப்பட்ட இத்தகைய வேள்வியின் மகிமைக்கு மகிழ்ந்து, சர்ப்பத்தையே தனக்கு ஆபரணமாயும், புலித்தோலையே ஆடையாயும், யானைத்தோலையே போர்வையாகவும், பிரமாதிகளுடைய எலும்புத் தொகுதியையே மாலையாகவும், மான் மழு ஏந்தப்பட்ட கைகளையும், வரத அபயம் அளிக்கிற கரங்களையும், பிறைச்சந்திரனையும் கங்காதேவியையும் தரிக்கப்பெற்ற சிரசையும், திருநீறணியப்பெற்ற மேனியையும் உடைய பரமசிவன், இம்மகருஷிகளுக்கு, உமாதேவி சமேதராய் விருஷபவாகனத்திற் காட்சி கொடுத்தருளினர். அப்பெருமானை, வசிஷ்டாதி முனிவர்கள் அடிபணிந்து வணங்கி, ஹே ! கிருபாநிதியே ! உங்களது திருவடியை நாங்கள் என்றும் மறவாமல் நியமப்படி அருச்சனை முதலான எல்லா உபசாரங்கள் செய்யவும், நாங்கள் எண்ணிய எண்ணியவாறே, அஷ்டமாசித்திகள் யாவும் அடையவும் அருள் செய்ய வேண்டும் எனப் பிரார்த்தித்தார்கள். எம்பெருமானும் 'அப்படியே ஆகுக' என மகிழ்ந்து அனுக்ரகித்துத் தானும் மறைந்தார். வசிஷ்டாதி முனிவர்கள் ஸ்ரீ முருகக்கடவுள் அருளினால், வேள்விகள் பல இயற்றி, சிவபெருமான் தெரிசனத்தையும் பெற்று, இத்தலத்தில் பூஜைகள் பலவும் நியமப்படி செய்துகொண்டு, 'இத்தலத்தில் தாம் பெற்ற பேற்றை எத்தலத்திலும் இவ்வளவு எளிதில் கிட்டுவது அரிது' என்று புகழ்ந்து, நீண்டகாலம் அங்கேயே தங்கினார்கள். இப்படி முனிபுங்கவர்கள் மருதவாணர் அனுக்ரகத்தினால் அஷ்டமாசித்திகளை எளிதில் அடைந்து தம்மை யடைந்தோருக்கும் சகல சம்பத்துக்களையும் அருளிக்கொண்டு, அங்கு தங்கியிருந்த வரலாற்றையும், ஸ்ரீ குமரக்கடவுள் சிவபெருமானைப் பூஜை

செய்த முறைமையையும் சூதமாமுனிவர் நைமிசாரண்ய இருஷி களுக்குக் கூறிப் பின், ஸ்ரீ உமாதேவியாரின் திருக்கண்களிலிருந்து பெருகின அருட்கடலாகிய காருண்யாமிருத தீர்த்தத்தின் மகிமை யைக் கூறுவாராயினர்.

குமாரபூஜைச் சருக்கம்

முற்றிற்று.

பன்னிரண்டாவது

காருண்யாமிருத தீர்த்தச் சருக்கம்.

வசிஷ்டாதி முனிவர்கள் இம் மருதூரில் தங்கி பவப் பிணியை ஒழிக்குந் தன்மையை யுடையதாகிய காவிரி, கங்கா கூபம், காருண்யாமிருததீர்த்தம் முதலான பல தீர்த்தங்களி லும் ஸ்நானம் செய்து சிவபெருமானைப் பூஜை செய்துகொண்டி ருந்தார்கள். என்று சொன்ன சூதமாமுனிவரது பங்கயநிகர்க்கும் திருமுகத்தைநோக்கி, நைமிசாரண்ய மகருஷிகள், "ஹே தபோ தனரே! தாங்கள் இதுகாறும் சொல்லிவந்த மருதூரின் ஸ்தல மகிமையைக் கேட்டு அளவில்லா ஆனந்தங்கொண்டோம். ஆனால் அம்முனிவர்கள் ஸ்நானம் செய்த, இத்தலத்திலுள்ள பல தீர்த்தங் களையும், அவைகளை உண்டாக்கினவர்களையும், மற்றும் அவைகளை நாடி இன்புற்றவர்களைப் பற்றியும் எங்களுக்கு விபரமாய்ச் சொல்லி யருளல்வேண்டும்." எனப் பிரார்த்திக்க, அச் சூதமாமுனிவரும் உவகைபூத்துச் சொல்வாராயினர்.

"கேளுங்கள் ஹே இருஷிகளே! இம்மருதூர் முதல் யுகமாகிய கிரேதா யுகத்தில் நான்கு யோஜனை தூரம் எல்லையை உடைத்தா யிருந்தது. பின் ஒவ்வொருயுகத்துக்கு ஒவ்வொரு யோசனைதூர மாகக் குறைந்துவிட்டது. ஆகையால் இக்கலியுகத்தில் இத்தலம் ஒரு யோசனையளவு எல்லைப்புறத்தை யுடையது. உலகத்திலுள்ள அறுபத்தாறுகோடி தீர்த்தங்களும் இத்தலத்தில் அமைந்துள்ளன. அவைகளுள் சிலவற்றைச் சொல்லுகிறேன். மிக்க புகழ்பெற்றதும்

ஸ்ரீ உமாதேவியாரின் திருக்கண்களினின்றும் ஆநந்தத்தால் பொழிந்த கருணாமிர்தம் நிறைந்துள்ளதுமான காருண்யாமிருத தீர்த்தத்தின் மகிமையை அளவிடத்தகாது. அத்தீர்த்தத்தில் மேஷ இராசியில் சூரியன் பிரவேசிக்குங்காலமாகிய சித்திரவிஷு புண்ணியதினத்தன்று மாத்தியான காலத்தில் ஸ்நானம் செய்வது மிகுந்த விசேஷம். அத்தீர்த்தத்திற்கு ஈசானதிக்கில், பிரம, விஷ்ணு, உருத்திரசொரூபமாகிய அசுவத்த விருக்ஷம் ஒன்று உளது. சோமவாரமும் அமாவாசையும் கூடிவருகிற தினத்தில் இத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து அதிகாலையில் அவ்வசுவத்த விருக்ஷத்தை ஏழுமுறை வலம் வந்தால், இவ்வுலகத்தையே பிரதக்ஷணம் செய்ததின் பலன் உண்டாகும்."

"வேதாத்யாயனத்தை விட்ட மறையவரும், பரகதியை அளிக்க வல்ல சிவலிங்கத்தை விக்கிரயஞ்செய்தவர்களும், கன்னிகைகளைப் பொருள் கொண்டு கன்னிகாதானம் செய்பவர்களும், கள்ளுண்டவர்களும், பிதுர் சிராத்தத்தை விட்டவர்களும், பொன் முதலாதிகளைக் களவு செய்தவர்களும், கொலை புரிந்திட்டவர்களும், யாவராலும் போற்றப்படும் குருவை நிந்தித்தவர்களுமாகிய கொடிய பாதகர்கள் எல்லோரும் இத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்த மாத்திரத்தில் சகல பாபங்களும் நீங்கி, ஜீவன் முக்தர்கள் ஆவார்கள்." கேளுங்கள் முனிவர்களே! "இத் தீர்த்தத்தில் ஸ்நானம்செய்கிறவர்கள் பதினன்கு சாஸ்திரங்களையும் அறிவார்கள்; அஞ்ஞானம் நீங்கி சிறந்த மெய்ஞ்ஞானியர்களாகி, தன, தானிய, சம்பத்து முதலான அஷ்ட ஐசுவரியங்களையும் பெறுவார்கள்; கொடியபகைவர்களையும் வெல்வார்கள்; எத்தகைய பிணியினின்றும் நீங்குவார்கள். அழிவில்லாத சிவசொரூபத்தையும் அடைவார்கள். இன்னும் பல தீர்த்தங்களில் மூழ்குவதனுல் உண்டாகக் கூடிய பலனை இந்த தீர்த்தத்தில் ஒரு முறை ஸ்நானம் செய்வதனுல் அடைவார்கள். ஒரு வருஷத்தில் ஏற்படுகிற தொண்ணூற்ருறு பிதுர்தினங்களிலும் செய்யப்படுகிற சிராத்தப்பலனை இத்தீர்த்தத்தில் ஒரு முறை செய்யப்படும் பிதுர்தர்ப்பணத்திஞல், பிதுருக்கள் மகிழ்ந்து, ஒருங்கே, அளிப்பார்கள்." ஒரு காலத்தில், கங்கை, யமுனை, தாமிரபர்ணி, சரஸ்வதி, துங்கபத்திரை, ஸிந்து, கோதாவரி, பவானி, நருமதை, சோணையாதி புண்ணிய தீர்த்தங்களாகிய தேவிமார்கள் கைலயங்கிரிக்குச் சென்று, சிவபிரானை வணங்கி, "ஹே சந்திரசூடா, பார்வதிபாகா! கைலாச

நாதா! இவ்வுலகிலுள்ளோர் இயற்றும் பாவங்களெல்லாம், எங்களிடம் வந்து மூழ்குவதால் எங்களை அடைய, அதனால் நாங்கள் மேனிகறுத்து, எழில் குலைந்தோம். எங்களைப் பற்றியிருக்கும் கொடிய தீவினைகள் எங்களை விட்டு நீங்கும்படி அருளல் வேண்டும்.'' எனப் பிரார்த்தித்தார்கள். தன்னை வழிபட்ட ஆன்மாக்களுக்குச் சுகத்தைச் செய்வதனால் சங்கரன் என்னும் காரணப்பெயரையே இடுகுறியாகக் கொண்ட சிவபெருமான், மகிழ்வுற்று, "ஏ பெண்களே! காவிரி நதிக்குத் தென்சார்பில் திருவிடைமருதூர் என்று ஓர் தலம் உளது. அத்தலத்தில் காருண்யாமிருத தீர்த்தம் ஒன்று உண்டு. அதில் சித்திரைமாதப் பிரவேசமாகிய வருஷப்பிறப்பு தினத்தன்று கடகலக்கினத்தில் ஒருதரம் மூழ்கி எழுந்திடுமுன் நீண்டகாலமாகப் பற்றி வருத்தும் ஊழ்வினைகள் யாவும் அக்கினியிற்பட்ட பஞ்சு போலவும், கதிரவன் முன் தோன்றிய இருள் போலவும் ஒரு நொடிநேரத்தில் நீங்கும். ஆகையால் நீங்களும் அத்தலத்திற்கேகி, அந்தத் தீர்த்தத்தில் அத்தினத்தில் ஸ்நானம் செய்வீர்களானால் உங்களைப்பற்றியுள்ள பாவங்களெல்லாம் நீங்கி, நீங்களும் பரிசுத்தமுடையவர்களாய் ஆகிவிடுவீர்கள்.'' என உரைத்தருளினார். உடனே அத்தேவிமார்கள் சிவபிரானை வணங்கி, விடைபெற்று, மருதூருக் கேகி, காருண்யாமிருத தீர்த்தத்தில் வருஷப்பிறப்பன்று, கடகலக்கினத்தில் ஸ்நானம் செய்தலும், தங்கள் தங்கள் கருநிறம் மாறி, சொர்ணமயமான தேஜஸையும் பெற்று ஆநந்தம் கொண்டு, அத்தலத்தில் விளங்கா நின்ற ஏகநாயகமூர்த்தியைத் தொழுது, தோத்திரங்கள் பலசெய்து தத்தம் இருப்பிடம் சென்றார்கள். அன்று முதல் ஒவ்வொரு தீர்த்த மடந்தையரும் தாங்கள் ஒவ்வொரு வருஷத்திலும் அடையும் பாவங்களை நிவர்த்திசெய்துகொள்ள வருஷபிறப்புத் தினம் கடகலக்கினத்தில் ஒன்று சேர்ந்து வந்து, அக்காருண்யாமிருத தீர்த்தத்தில் ஸ்நானம்செய்து பரிசுத்தர்களாகிச் செல்லுகிறார்கள். இஃது இவ்வாறிருக்கக் கேளுங்கள் மகருஷிகளே!

"கடல்போன்ற அகழ்களினால் சூழப்பட்ட ஆகாயத்தை அளாவிய மதில்களும், நாநாவித நறுமலர்கள் வாசனைவீசும் சோலைகளும் பொருந்திய மிதிலைமாநகரத்தில் மிகுந்த சிவபக்தனாய் இஷ்டரோமன் என்னும் பெயரையுடைய ஒரு நீதிமன்னன் அரசு செலுத்தி வந்தான். அவன் கல்விகேள்விகளிற் சிறந்தவன். அவன், மனதுக்கு உகந்தவளாயும், பணிவிடைகள் செய்வதில் தாஸனைப்

போலவும், புத்தியில் மந்திரியைப் போலவும், இலக்ஷணத்தில் இலக்குமியைப்போலவும், பொறுமையில் பூமியைப்போலவும், வாஞ்சையில் அன்னையைப் போலவும், கற்பில் அருந்ததியைப் போலவுமுள்ள 'சுகேசி' என்னும் பெயரையுடைய மனைவியோடு நீண்டகாலம் இன்புற்று வாழ்ந்தான்.

எல்லாச் செல்வங்களும் ஒருங்கே பெற்றிருந்தும், சகல நற்குண நற்செய்கைகளை அடைந்தும், புத்திரனில்லாக் குறையினால் மனம் நொந்து, பெரியோர்கள் விதித்தபடி அநேக தருமங்களைச் செய்தான். தானங்களும் பல கொடுத்தான். செய்தும் பயன்பெறாமல் சிந்தைகலங்கி நிற்குநாளில், உதங்கமாமுனிவர் அம் மன்னன்பால் அடைந்தார். அப்பெரியாரைக் கண்டு, உளமகிழ்ந்து, நமஸ்கரித்து, உபசாரமொழிகள் கூறி, தன்னால் செய்யவேண்டிய பணிவிடை யாதெனக் கேட்கலும், அம்முனிவர், "ஏ மன்னர்பெரும! நீர் கணக்கில்லாத தருமங்கள் செய்வதையும், உம்முடைய விசேஷமான உதாரகுணத்தையும் கேள்வியுற்றேன். உம்மை நேரில் காணவேண்டுமென்கிற அவாவுற்று இங்கு வந்தேன். நான் மிகுந்த விருப்போடு ஒரு யாகம் இயற்றுவதாக இருக்கிறேன். அதற்கு வேண்டிய சிலபொருள்களை நீரும் கொடுத்தல் வேண்டும். நீரோ மகா தருமசீலர். ஆகையால் நீர் கொடுக்கும் பொருள்களைப் பெற்று சிறப்புப் பொருந்திய அந்த யாகத்துக்கு உபயோகப் படுத்துகிறேன்." என்னலும், அவ்வரசன், அளவில்லாத திரவியங்களை மகிழ்வுடன் வாரிக்கொடுத்துப் பின், "ஏ அருட்கடலாகிய முனிபுங்கவ! தாங்கள் என்னிடம் கொண்ட அன்புக்கு நன்றிபாராட்டுகிறேன். நான் ஒரு எளியன். குழந்தை இல்லாத துன்பம் சதா மனதைத் துன்புறுத்தி, மெலிவடையச் செய்கிறது. நான் மனந்தேர்ந்து இன்புறும்படி ஒரு புத்திரபாக்கியத்தை அடைய அருள் செய்யவேண்டும்." எனப் பிரார்த்திக்க, அம்முனிவரும் சிவபெருமானை மனதில் தியானித்துக் கொண்டு, "ஏ மன்னவ! திருவண்ணாமலை, திருவையாறு, மாயூரம், திருத்தவத்துறை, இடைமருதூர் முதலான தலங்களில் சென்று, தீர்த்தமாடி ஆங்கு ஆங்கு எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்கு வில்வத்தினாலும், தும்பைமலர்களினாலும் இலட்சார்ச்சனைகள் செய்வித்து, உன் மனக்குறையை யுன்னி வணங்குவாயானால் குறை நீங்கி, மகவு உதித்திடும். அவற்றுள் இடைமருதூரில் ஸ்ரீ ஜோதிர்மய மகாலிங்கப்பெருமானின் அருளினால், கண்ணபிரானும், தசரத

சக்கிரவர்த்தியும் இவ்வாருன பூஜைகள் செய்து புத்திரப்பேற்றை யடைந்திருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட ஸ்தலத்தில் நீரும் சென்று ஸ்நானம் முதலானவைகளோடு சிவார்ச்சனையும் செய்வித்தால் புத்திரப்பேற்றை அடைவீர்.'' என அருளி, முனிவரும் சென்ருர்.

இஷ்டரோமன் இவைகளைக் கேட்டு மகிழ்ந்து, அம்முனிவர் உரைத்தபடி, தன் மனைவியோடு திருவண்ணுமலை முதல் நான்கு தலங்களிலும் முறைப்படி ஸ்நானஞ்செய்து, உவப்புடன் சிவார்ச்சனைகள் பல செய்வித்து, ஆங்காங்கு சிலநாட்கள் தங்கி, கடைசியாக தனக்குத்தானே ஒப்பாக விளங்குகிற திருவிடைமருதூர் வந்தடைந்தார். இங்கு வந்து காருண்யாமிருத தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து நுண்ணிய இடையினையுடைய பெருநலமாமுலையம்மை சமேத ஸ்ரீ ஜோதிர்மய மகாலிங்கப்பெருமானை வலம் வந்து, அடிபணிந்து, அர்ச்சனை பல, முறைப்படி அன்புடன் செய்து, அத்தலத்தில் தன் மனைவியோடு ஓர் மனையில் தங்கியிருந்தார். இப்படி சுகித்து இருக்குங்கால் தன்மனையாள் கருப்பம் தரித்திருப்பதை யறிந்து, அரசன் உளமகிழ்ந்து, இம்மருதீசன்பால் பரம பக்தியுடையவனுக இருந்தான். சுகேசியும் கோடிசூர்யன் உதித்தாற்போலப் பிரகாசம் பொருந்திய ஓர் மகவினைப் பெற்ருள். அரசனும் அகமகிழ்வுடன் விசேஷமான தானங்களைச் செய்து, பின் அக்குழந்தைக்கு பிருதுகீர்த்தி என்னும் பெயரும் இட்டனன். மருதவாணருக்கு நித்திய பூஜை, விசேஷபூஜைகள் குறைவின்றி நடைபெறும் வண்ணம் அநேக மான்யங்களும் விடுத்து, கட்டளைகளும் இயற்றினுன். இவ்வாறு கொஞ்சநாள் தங்கி, தன் மனைவியுடனும் அருமைப் புதல்வனோடும் மிதிலை நகரத்துக்குத் திரும்பிச்சென்ருன்.

இளம்பிறைச் சந்திரன்போல், நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக பிருதுகீர்த்தி வளர்ந்து பதினுறு வயது அடைந்த அளவில், இஷ்டரோமன், தன் அமைச்சர்களை நோக்கி, தன் மகனுக்கு விவாகம் செய்துவைக்கத் தான் ஆவல்கொண்டிருப்பதைத் தெரிவித்தான். மந்திரிமார்களும் மன்னன் கொண்டதை மெச்சி மனமகிழ்ந்து, "ஏ மன்னர்பெரும! தாங்கள் கொண்ட எண்ணம் தகுதியானதே. நமது பிருதுகீர்த்தி இளவரசனுடைய அழகுக்கும் குணத்துக்கும் பொருந்தியதாயும் தங்களுக்குச் சமத்துவமுமுள்ளதாயும் சம்பந்தம் செய்யவேண்டியதே முக்கிய நோக்கம். யோசிக்கையில் காசிராஜன் புத்திரியாகிய சுபாங்கி என்னும் ராஜகு

மாரி மிருந்த அழகுவாய்ந்தவள். இன்னும் சில தினங்களில் அவ ளுக்கு சுயம்வரம் ஏற்பட்டு, அது விஷயத்தை உங்களுக்கும் அக் காசிராஜன் தெரிவிப்பான். தங்கள் புத்திரன் அழகை அக்காலத்து அவள் நேரில் காண்பாளேயானால் நிச்சயமாக மாலை சூடுவாள். ஆகை யால் தாங்கள் இளங்குமாரனோடு காசிமன்னனிடம் அச்சமயம் செல்வதுதான் தகுதி. வேறு எந்தவிதமான சம்பந்தங்களும் பொ ருந்தினதாகக் காணப்படவில்லை.'' என இனிதுரைக்க, அவ்வாறு சுயம்வர காலத்தில் இஷ்டரோமனும் தன் மகன் பிருதுகீர்த்தி யோடு காசிநகர் சமீபித்தலும், இதையறிந்த அத்தேசத்து மன் னன் இவர்களிருவரையும் எதிர்கொண்டழைத்து, இன்புடன் வர வேற்று, விடுதிகளில் இருத்தி, எல்லாவித உபசாரங்களும் செய்ய இருவரும் சிலநாள் தங்கியிருந்தார்கள். இப்படியிருக்குங்கால், சூரி யன் மேஷராசியில் உதயமாகிற காலமாகிய சித்திரைவிஷு புண் ணியகாலம் வந்தது. அப்பேர்ப்பட்ட புண்ணியகாலத்தில், கங்கா நதியில் ஸ்நானம் செய்யும் பொருட்டு, இஷ்டரோமனும் மற்றும் பலருடன், பிருதுகீர்த்தியை அழைத்துக்கொண்டு கங்கைக்கரை யை யடைந்தான். அடைதலும், பிருதுகீர்த்தி, புண்ணியகாலம் சமீபித்து விடுகிறதென்று நினைத்து முதலில் தனிமையாகவே விரைந்து கங்காநதியில் இறங்கி மூழ்கினான். இதுசமயம் கடகலக் கினம். இச்சமயத்தில்தான் பூர்வம் சிவபெருமான் அனுக்கிரகித்த படி, கங்கை, கோதாவரி, சரஸ்வதி முதலான தீர்த்ததேவிமார்கள் பிரதிவருஷமும் தங்கள் தங்களுக்கு ஏற்பட்டுள்ள பாபங்களை நீக்க வேண்டி, திருவிடைமருதூருக்கேகி காருண்யாமிருத தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து தங்களைப் புனிதர்களாக்கிக் கொள்வது வழக்கம். அதுகாரணமாக, கங்காதேவியாரும், அந்தர்வாகினியாய் இடை மரு தூருக்குக் காருண்யாமிருததீர்த்தத்தில் ஸ்நானம்செய்ய, இராஜகுமா ரனோடு விரைவாய் ஏகினாள். அப் பிருதுகீர்த்தியும், சாதாரணமாய் மூழ்கி எழுந்திருப்பவன்போல் அத்தடாகத்திலிருந்து கிளம்பினான். இவ்விதம் எழுந்தவுடன் முன்னிலும் பன் மடங்கு அழகும் தேஜ ஸும் பெற்றவனாய் கரையில்வந்து, தீர்த்தங் கொடுத்து, விருஷபவா கனாரூடராய் விளங்கும், பிரஹத்சுந்தரகுஜாம்பாள் சமேத ஸ்ரீ ஜோ திர்மய மகாலிங்கத்தை வணங்கித் துதிசெய்தான். இதைக்கண்ட இப் பூலோகவாசிகள் வியப்புற்று, இது என்ன ஆச்சரியம்! இப் பையன் ஸ்நானம்செய்ய இத்தீர்த்தத்தில் இறங்க ஒருவரும் காண

வில்லையே! திடீரென்று கிளம்பியிருக்கிறான்! யாரோ தெரியவில்லை! அழகிற் தனக்கு ஒப்பில்லாமல் இருப்பதால் 'காமன்' என்று சொல்வோமென்றால், கையில் புஷ்பபாணம் இல்லை! இலக்குமிகாந்தராகிய மகாவிஷ்ணு என்று சொல்வோமென்றால், கரங்களில் சங்கு சக்கிரங்களைக் காணும். இவனை யார் என்று சொல்லலாம்," எனப் பலரும் பலவாறு யோசித்துக் கொண்டிருக்கையில், ஒருவாறு மனந்தெளிந்து, அவ்விராஜகுமாரனை அணுகி, 'எந்த ஊர்' என்று வினவலும், "அப்பிருதுகீர்த்தி, அன்பர்களே! சிலகாலங்களுக்கு முன், எனது பிதா இஷ்டரோமர் என்பவர் புத்திரப்பேறில்லாமல் இத்தலம் அடைந்து, இத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, மருதவாணரைத் தரிசித்துக்கொண்டு பல நாள் தங்கியிருந்தார். இம் மருதவாணர் கிருபையால் நான் பிறந்தேன். பிறகு என் பிதா என்னையழைத்துக்கொண்டு எங்கள் பதியாகிய மிதிலைநகரம் அடைந்துப் பின் காசி மாநகருக்குச் சென்றார். ஆங்கு இப் புண்ணிய தினத்தில், கங்கையில் நான் மூழ்கினேன். இக் காருண்யாமிருத தீர்த்தத்தில் எழுந்தேன். இதுதான் என்வரலாறு." எனப் பணிவுடன் உரைத்தான். இதுவிஷயத்தைக் கேள்வியுற்ற சோழராஜா இச் சிறுவனை யழைத்து அன்புடன் தன்னிடம் வைத்துக் கொண்டான்.

இங்கு இவ்வாறிருக்க, காசிமாநகரில் கங்கைக் கரையில் நின்ற இஷ்டரோமன், கங்கையில் முழுகின தன் அருமைப் புதல்வன் திரும்ப எழுந்திராமை கண்டு, மனக்கிலேசமுற்று, "அந்தோ! ஜெகதீசா! காசிவிசுவேசா! அகிலகாரணா! உன்னுடைய கிருபையால் எனக்கு அளிக்கப்பட்ட மைந்தனைக் காணாது என் மனம் பதைக்கிறது. நான் என்ன செய்வேன்? எவ்வாறு உய்வேன்? எப்படி மனம் துணிவேன்?" எனத் துக்க சாகரத்தில் மூழ்கினவனாய்த் தன்னை யறியாமல் கதறிக் கொண்டிருக்கையில், ஏவலாளர் பலர் பாதாளம் வரைத் தேடிப் பார்த்தும், இராஜகுமாரனைக் காணாமை கண்டு, இஷ்டரோமன் தானும் அக் கங்கையில் வீழ்ந்து இறந்து விடுவதாக நிச்சயித்துக் கங்கையையும் அணுகினான். உடனே, "ஹேமன்ன! நீ துயரப்பட வேண்டாம். உன் புதல்வன் திருவிடைமருதூரில் வெகு சௌக்கியமாய் வளர்ந்து வருகிறான். இப் புண்ணிய தினத்தில் புண்ணிய காலத்தில் கங்காதேவி மருதூருக்குச் செல்லுங்கால் உன் புதல்வனையும் கூடக் கொண்டு பாதாள மார்க்கமாகச் சென்றாள். நீயும் அங்கு சென்றால் உன்

மனம் மகிழும்படி உன் புதல்வனைக் காணலாம்.'' என்று எல்லாரும் ஆச்சரியப்படும்படியாக ஓர் அசரீரி வாக்கு உண்டாயிற்று.

இதைக் கேட்டதும், அம் மன்னன் அளவிலா ஆநந்தங் கொண்டு, அக் காசிமன்னனிடம் விடைபெற்று, பற்பல சைன்யாதிகள் சூழ, அநேக காடு மலை, வனாந்திரங்களைக் கடந்து, திருவிடைமருதூரை யடைந்து, தன் மகனையும் கண்டான். உடனே தன் அன்பே உருவான அப் புத்திரன் தந்தையை நமஸ்கரிக்க, மன்னன் குழந்தையை வாரி எடுத்து, மார்போடணைத்து, உச்சிமோந்து, அக்கினியிற் பட்ட மெழுகுபோல் மனம் உருகி, அவனைப் பிரிந்திருந்த துக்கத்தினாலும், உடனே கண்ட வியப்பினாலும், ஆநந்தபாஷ்பம் தாரைதாரையாய்ச் சொரிய, குழந்தையுடன் பல இன்புற்ற வார்த்தைகளாடி நின்றான். உடனே சோழராஜாவும் ஆங்கு வந்து, அரசனை உபசாரங்களுடன் வரவேற்று, பல தேறுதல்கள் சொல்லவும், இஷ்டசேரமன் தன் புதல்வனுடன், அளவில்லாச் சிறப்புப் பெற்று விளங்குகிற காருண்யாமிருத தீர்த்தத்தில் மூழ்கி, நியமப்படி நித்திய கர்மங்கள் முடித்துக்கொண்டு, மருதவாணர் திருக்கோயிலுட் புகுந்து, ஸ்ரீ ஜோதிர்மய மகாலிங்கப் பெருமானை மனமாரத் துதித்து, "ஹே கருணாநிதியே! அடியார்க் கெளியவரே! ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்னும் ஆறிற்கும் அதிபதியா யிருப்பதன் காரணமாகப் 'பகவன்' எனப் பெயர் கொண்ட ஜோதிலிங்கமே! அன்று உம்மைப் பிரிந்தது முதல், என் சிற்றறிவு காரணத்தால் உம்மைச் சிறிதும் நினைத்திலன். தாம் கருணாநிதியாதலால் என்னைப் பொருட்படுத்தி, தம்மிடம் எனக்கு ஞாபகம் உண்டாகும் பொருட்டு இத் திருவிளையாடல் செய்தருளினீர்கள். எனக்குக் காட்சியும் கொடுத்தீர்கள்.'' ஏ கிருபாநிதே!

"மருவிடை மலர்த்தண் கொன்றை மதிவளர் சடைய போற்றி!
கருவிடைப் புகாம லென்னைக் காத்தருள் கடவுள் போற்றி!
பொருவிடை யூர்தி போற்றி! பூரண புராண போற்றி!
திருவிடை மருதில் வாழுஞ் செய்ய பொற் சோதி போற்றி!"

எனப் பலவாறு மெய்ம்மறந்து துதி செய்தான். எம்பெருமானும் உளமகிழ்ந்து வேண்டிய வரங்களையும் கொடுத்தருளினார்.

பின்னர் அரசன் வருஷப்பிறப்பு உற்சவ வைபவத்தைச் சிறப்புறநடத்தி, அதற்கு வேண்டிய மான்யாதிகள் விடுத்து, ஏகநாயக

மூர்த்திக்கு அலங்காரமான பற்பல இரத்நாபரணங்களும் செய்து வைத்து, பெருமைபெற்று விளங்குகிற காருண்யாமிருத தீர்த்தத்துக்கு நாற்புறமும் படித்துறைகள் செவ்வனே கட்டி வைத்தான். அதன்பின் சோழராஜாவிடம் விடைபெற்று, அளவில்லா மகிழ்ச்சியோடு தன் மகனுடன் மிதிலைக்குச் சென்றான்.

இங்கு இப்படியாக, காசியில் அம் மன்னன் புதல்வியாகிய சுபாங்கி என்பவள் நம் பிருதுகீர்த்தி மன்னனை நேரில் கண்ட பிறகு அவன் அழகையும் ஆண்மையையும் கண்டு, வியப்புற்றுக் காதல் கொண்டு, அவனன்றி வேறு எவர்க்கும் தான் மாலை சூடுவதில்லை என வைராக்கியங் கொண்டவளா யிருக்குங்கால், காசிராஜனும் அவர்களுடைய வரவை எதிர் பார்த்திருந்தான். சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தாற்போல, இஷ்டரோமனும், அவன் மகன் பிருதுகீர்த்தியும் முன்னிலும் பன்மடங்கு அழகிலும் ஆண்மையிலும் சிறந்து, தம் நகரை அடைந்த செய்தியைக் கேள்வியுற்று ஆநந்தங் கொண்டு, தன் புதல்விக்குஞ் சொல்ல, அவளும் அளவில்லாத உவப்பை எய்தினாள். உடனே காசிமன்னன் சுபதினத்தில் திருமணப் பத்திரிகை எழுதுவித்து மிதிலைக்கனுப்பி, பரிவாரங்கள் சூழ இஷ்டரோமனோடு பிருதுகீர்த்தியைத் தருவித்து சகல மங்களங்களையும் கொடுக்கவல்ல உத்தமதினத்தில் தன்மகள் சுபாங்கிக்கும், அப் பிருதுகீர்த்தி மன்னனுக்கும் இறைவனடிகளை மனமாரத் துதிசெய்து, முறைப்படி திருமணம் புரிவித்தான். தன்னிடத்தில் ஸ்நானம் செய்வதினாலேயே அவரவர்கள் வேண்டிய வேண்டியவாறே அஷ்டஐசுவரிய போக மோக்ஷங்களை அளிக்க வல்ல இக் காருண்யாமிருத தீர்த்தத்தின் மகிமையை யறிந்து, கணக்கில்லாத பலர் தீர்த்தமாடி இஷ்டபூர்த்திகளைப் பெற்றிருக்கிறார்கள். இத்தகைய தீர்த்தத்தின் பெருமையைச் சூதமாமுனிவர் நைமிசாரண்ய இருஷிகளுக்குச் சொல்லிப் பின் பாணதீர்த்தத்தின் பெருமையைக் கூறுவாராயினர்.

காருண்யாமிருத தீர்த்தச் சருக்கம்

முற்றிற்று.

பதின்மூன்ருவது

பாணதீர்த்தச் சருக்கம்.

பிரமாதி தேவர்களால் வணங்கப்பட்ட திருவிடைமருதூரின் கண்ணே எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ ஜோதிர்மய மகாலிங்கப் பெருமானின் ஆலயத்துக்கு வடகீழ்த்திசையில் பதினாறு *விற்கடை தூரத்தில் பாணதீர்த்தம் என்னும் பெயர் கொண்ட ஓர் தீர்த்தம் உள்ளது. அதற்குத் தேவதை இராமர், விருக்ஷம் அதன் தென் பக்கத்திலுள்ள அரச விருக்ஷம். தீர்த்தபாலகர் சுப்பிரமணியக் கடவுள். இருஷி வசிஷ்டர். இவ்வளவு மகிமையுடன் இத்தீர்த்தம் உலகெலாம் புகழ்பெற்று விளங்கி வருகிறது.

ஸ்ரீ இராமபிரான் தண்டகாரண்யத்தில் சஞ்சரிக்கும் பொழுது ஒரு தினத்தில் இந்த இடத்தை யடைந்தார். தனக்கு ஸ்நானம் செய்து, நித்திய கர்மானுஷ்டானங்கள் செய்யத் தீர்த்தம் அகப் படாமைகண்டு, தன் கையிலுள்ள பாணத்தை பூமியின்மேல் பிர யோகித்தலும், ஆங்கு ஓர் நீர்த்தொகுதி உண்டாகியது. அதில் உடனே தான் ஸ்நானமுதலான கருமங்களை முடித்துக்கொண்டு இன் புற்று அரசமரநீழலில் தங்கியிருக்கையில், அநாதியாயும், ஜோதி ரூபியாயும், பாண உருவமாயும் ஓர் இலிங்கம் அந்தத் தடாகத் தின் வடபாகத்தில் விளங்கிக்கொண்டிருப்பதைக் கண்டார். காண லும், விரைந்துசென்று, அடிவணங்கி, மெய்ம்மறந்து, ஆவேசமுற்று, தோத்தரித்துப் பின், தன் பாணத்தினால் உண்டாக்கப்பட்ட தடாக த்தினின்றும் தீர்த்தம் கொண்டு அபிஷேகம் செய்து, வில்வாதி புஷ்பங்களால் அருச்சனைகள் செய்து, பலவாறு போற்றி, "ஏ ஜகதீசா! பரமகிருபாநிதியே! இத்தலத்தில் நீ மேற்கு முகமாக எழுந் தருளி, எனக்கும் நல்ல ஞானத்தைக் கொடுத்தருளினாய். உன் மகிமையே மகிமை. இத்தலம் எத்தலத்தினும் சிறப்புவாய்ந்ததா கும்." எனப் பலவாறு தோத்தரித்துப் பின்னும்சொல்லுவார்.

"இத்தடாகம் என் கையிலுள்ள பாணத்தினால் உண்டாக்கப் பட்டதால் இதற்குப் பாணதீர்த்தம் எனும் பெயர் அடைவது தகுதி. இதில் அன்புடன் ஸ்நானம் செய்பவர்கள் தேவர்கள் ஆவார்கள்.

---

*விற்கடை = எய்த ஓர் பாணம் வீழ் தூரம்.

வைகாசி மாதம் பௌர்ணமிதிதி யன்று இத்தீர்த்தத்தில் மூழ்கி, இப் பாணலிங்கத்தை வணங்குகிறவர்களும், அன்போடு அருச்சனை செய்பவர்களும் எம்பெருமான் திருவடியை யடைவது திண்ணம்." என்று தடாகத்துக்குப் பெருமையெல்லாம் உண்டாக்கிப் பின் காருண்யாமிருத தீர்த்தத்தில் மூழ்கி, மருத நிழலில் விளங்கும் ஸ்ரீ ஜோதிர்மய மகாலிங்கத்தைத் தன் மனத்துளிருத்தித் தியானம் செய்து போந்தார்.

அப்பேர்ப்பட்ட ஸ்ரீ இராமருடைய பாணத்தால் உண்டாக்கப்பட்ட பாணதீர்த்தத்தில் மூழ்கி, அந்தணர்களுக்கு, பால், தயிர், நெய், பசு முதலியன தானங்கொடுத்தால் சகல விதமான வினைகளும் நீங்கும். தவிர, பஞ்சாக்ஷர ஜபத்தையும் செய்தால் என்றும் அழியாத பேரின்பம் உண்டாகும். அத் தீர்த்தத்தில் முறைப்படி தில தர்ப்பணாதிகள் செய்தால் கயாவில் செய்யப்பட்ட விசேஷமான பிதுர் பலன்களும் உண்டாகும். இவ்வளவு வளமை பொருந்திய பாண தீர்த்தத்தின் சிறப்பை அன்புடன்கூறிப் பின் சூதமாமுனிவர் பராசர தீர்த்தத்தின் பெருமையைச் சொல்வாராயினர்.

[இப் பாணதீர்த்தம், இப்போது திருவிடைமருதூருக்குச் சுமார் 2-மைலுக்கு அப்பால் வடகீழ்த் திசையில் 'பாணபுரீசுவரர்' என்னும் ஆலயத்தையுடையதாகி பாணபுரம் என்று பெயர் பெற்ற க்ஷேத்திரத்தில் கோவிலுக்குத் தென்புறத்தில் உள்ளது என்று பெரியோரால் சொல்லப்படுகிறது. இதன் நிர்வாகமும் ஸ்ரீ மகாலிங்கசுவாமி கோவிலின் நிர்வாகத்தைச் சார்ந்து உளது.]

பாணதீர்த்தச் சருக்கம்

முற்றிற்று.

பதினொன்காவது

பராசரதீர்த்தச் சருக்கம்.

புகழ் பெற்ற காருண்யாமிருத தீர்த்தத்தின் வடகீழ்த் திசையில் ஒரு விற்கடை தூரத்தில் பெருமைவாய்ந்த ஓர் தீர்த்தம் உள்ளது. அதில் மார்கழி மாதத்தில் ஸ்நானம் செய்தால் எல்லாவித பலன்களையும் கொடுக்கும். அதற்கு அதிதேவதை வாயுபகவான்.

விருக்ஷம் வேம்பு. இருஷி கண்ணுவர். தீர்த்தபாலகர் பைரவக் கடவுள். இந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, அந்தணர்களுக்குத் திலதானம் செய்தால் சகல கொடிய வினைகளும் நீங்குவது திண்ணம். கொஞ்சகாலம் அதன் பக்கத்தில் வசித்திருந்தால் எத்தகைய துன்பங்களும் நீங்கி, மனம் பரிசுத்த முடையவர்களாய் இன்புற்றிருப்பார்கள். அத்தகைய வளப்பங்கள் பொருந்திய இத் தீர்த்தத்தில் மூழ்கித் தங்கள் நீண்ட தீவினைகளைத் தொலைத்தவர்கள் பலர் என்றுரைத்து இத் தீர்த்தத்திற்குப் பராசர தீர்த்தம் எனப் பெயர் கிடைத்தற்குக் காரணமாயுள்ள பராசர முனிவர் இங்கு வந்து உறைந்த வரலாற்றைப்பின் சூதமாமுனிவர் சொல்லத் தொடங்கினர். திரிலோக சஞ்சாரியாகிய பராசர முனிவர், ஒரு சமயம் அழகிய குவிந்த இள முலையையும், தேவாமிர்தம் போன்ற மொழிகளையுமுடைய "மச்சகந்தி" என்னும் பெயரை யுடைய ஓர் செம்படவ ஸ்திரீயின் மேல் அடங்காத காதல்கொண்டுப் புணர்ந்ததின் காரணத்தால், ஏற்பட்ட கொடிய தவறுதலை நீக்கிக் கொள்ளப் பல நாள் வருந்திக் கொண்டிருந்தார். இப்படியிருக்க, ஒரு நாள் உரோமச மாமுனிவர், பராசர முனிவர் முன் தோன்றலும், அவரைக் கண்டு, அவர் பாத மலர்களில் விழுந்து நமஸ்கரித்து, "ஹே தவக்குன்றே! வேதங்கள் உறைவிடமே! சிவபெருமானுக்கு உகந்த அன்பனே! தீன தயாபரனே! நான் கொடிய பாவம் செய்தேன். காதற் பெருக்கினாலும், ஊழ்வினையின் தன்மையினாலும், மனமாகிய மீன்கள், பருத்த தனங்களையும், சந்திர வட்டம் போன்ற அழகிய முகத்தையுமுடைய ஸ்திரீகளாகிய வலையில் அகப்பட்டு, உழல்வது போல, நானும் மதியிழந்து, நிலைதவறி, மிக்க வனப்பு வாய்ந்த ஓர் செம்படவ ஸ்திரீயின்மேல் மோகமுற்று, அவளைப் புணர்ந்தேன். அதனால் உண்டான துக்கம் என் மனதில் குடிகொண்டுவிட்டது. அந்தப் பாவத்தினின்றும் மீள வகையறியாது தவிக்கின்றேன். ஏ முனிபுங்கவ! அதற்குற்ற வழியைச் சொல்லி யருளல் வேண்டும்." எனப் பராசர முனிவர், மனக் கிலேசத்தோடு மிக்கப் பணிவுடன், வேண்டினர்.

இதைக் கேட்ட உரோமச மாமுனிவர், "ஹே பராசர முனிவரே! ஆராய்ந்து பார்க்குமிடத்து, விலை யுயர்ந்த ஆடை யாபரணங்களினால் அலங்கரிக்கப் பெற்று, அழகு வாய்ந்திருக்கும் ஸ்திரீகளின் மேலிருந்து அந்த ஆடையாதி ஆபரணங்களைக் களைந்து விட்

டால் அவர்கள் சரீரமானது மலமும், புழுவும் நிறைந்துள்ள புன் குரம்பை யென்றும், தசை, இரத்தம், எலும்பு, மாமிசம் இவைக ளால் ஆக்கப்பட்ட அவயவங்கள் என்றும் நன்கு புலப்படுமல்லவா? அதன் மேல் அவர்களிடத்துள்ள அருவருப்பினால் அவர்கள் மேல் காதலும் குன்றுமன்றோ? அப்படி அம்மாதர்கள் வலியவந்த ணைந்தாலும், புருஷர்கள், சிவபெருமானையே மனதில்உன்னி, மோக்ஷ இன்பத்தையே நாடி, உறுதியான மனமுடையவர்க ளாயிருந்தால், மாந்திரீகர்களிடத்திலும், வைத்தியர்களிடத்திலும் விஷத்தின் கொ டுமை எப்படிச் செல்ல முடியாதோ, அதே மாதிரி ஸ்திரீகளுடைய மாயா பாசத்தினால் பாதிக்கப்பட முடியாமல் ஆகிவிடுவார்கள். ஏ முனிவரே! நீர் செய்த காரியம் கொடிய தவறுதலா யிருந்தாலும், அதற்காக நீர் மிக்க மனம் வருந்தி, உண்மை உரைப்பதினால் அத் தகைய செய்கையால் உண்டான தீமை உம்மை அடையாது. என்ற ுலும், நீர், திருவிடைமருதூரை யடைந்து கனக தீர்த்தத்தில் மூழ்கி, மருதவாணரை வலம் வந்து, அடிபணிந்து வணங்கினால் உமது கவலை நீங்கி, மனமும் பரிசுத்தமடைவீர்." என்று உரைத்தருளினார்.

இதைக் கேட்டதும் பராசரமுனிவர், அகமகிழ்ந்து, பல முனி வர் சூழ, இடைமருதூர் சென்று, காவிரியில் ஸ்நானம் செய்து, பிறகு கனக தீர்த்தமாதி தீர்த்தங்களில் எல்லாம் மூழ்கி, மருதவா ணப் பெருமானுடைய திருவடித் தாமரைகளில் வீழ்ந்து நமஸ்க ரித்து, மெய்ம்மறந்து, தோத்திரம் செய்து, போற்றி, தன் மனதி லுள்ள அருவருப்பு நீங்கினவராய், சித்தசுத்தி யடைந்து, 'பராச ரதீர்த்தம்' என்று பெயரிட்டு அழைக்கப்படுவதற்குக் காரண பூத ராய் அத் தடாகத்தின் அருகில் வெகுகாலம் வசித்து வந்தார். அந் தத் தடாகத்தையும் சீர் படுத்தி, படித்துறைகளும் கட்டுவித்தார். இத்துணைப் பெருமை வாய்ந்த பராசர தீர்த்தத்தின் பெருமையை யும் அதில் தனுர் மாதத்தில் ஸ்நானம் செய்து தானங்கள் பல செய்வ தனால் உண்டாகும் பலன்களையும், சூத மாமுனிவர், நைமிசாரண்ய இருஷிகளுக்குக் கூறிப் பின், சந்திரனுக்கு உற்ற கொடிய தீவினை நீங்கி, அவனால் ஏற்படுத்தப்பட்ட சோமதீர்த்தத்தின் மகிமையைக் கூறுவாராயினார்.

[தற்போது கீழவீதியும், வடக்குவீதியும் கூடுகிற ஈசான்யதிசையிலுள்ள ரஸ்தாவுக்கு வடபுறம் பிடாரிக்குளமென வழங்குவதே இப் பராசரதீர்த்தம், எனப் பெரியோர்கள் கூறுகிறார்கள்.]

பராசரதீர்த்தச் சருக்கம்,

முற்றிற்று.

பதினைந்தாவது

சோமதீர்த்தச் சருக்கம்.

இந்திராதி தேவர்கள் யாவருக்கும் குருவாய் விளங்கும் வியாழ பகவான் முன்னிலையில் சந்திரன் சென்று கலைகள் பல பயின்றுகொண்டு அக் குருவின் கிரகத்தில் வாசம்செய்து கொண்டிருக்கும் நாளில், மேகத்தைப் பழித்திடும் கூந்தலையும், வாள் போன்ற கண்களையும் உடையவளான அவ் வியாழ பகவானின் மனைவியாகிய தாரை யென்பவள், சந்திரனுடைய ஒளிபொருந்திய தேஜஸைக் கண்டு, மையல் கொண்டு, காதல் மேலுற்றவளாய் சதாகாலமும் அச்சந்திரனையே நினைத்து நினைத்து உருகி அவன் பால் மனதை முற்றும் செலுத்துவாளாயினள். தன்னை யீன்றெடுத்த தந்தையானாலும் சரி, தன் வயிற்றுதித்த பிள்ளையானாலும் சரி, தன் உடன்பிறந்த சகோதரரானாலும் சரி, யாவராயிருந்தாலும் யௌவனமும் அழகும் பெற்றிருந்தால், ஸ்திரீகளுக்கு அவரிடம் காதல் மேலிட்டு, மனம் சலியாது அடையும். அத் தகைய காதல் துன்பம் தாரைக்குச் சந்திரனிடம் மேலிட்டு வருந்தி, சந்திரனை வலிய அழைத்திட்டாள். ஸ்திரீகளின் வேல் போன்ற விழிகளையுடைய முகத்தைக் கண்டாலும், அல்லது அவர்களுடைய இனிய வசனங்களைக் கேட்டாலும், அல்லது அவர்களைப் பற்றி காதலுடன் மனதில் நினைத்தாலும், ஒரு புருஷனுக்குச் சித்தம் சலன மடையும். அப்படிக் கிருக்க, அந்த ஸ்திரீயே வலிய வந்து இழுத்திடில் யார் தான் மறுக்க முடியும்? ஆதலால், மிகுந்த திடமான வைராக்கிய சித்தத்தையுடைய சந்திரனும், தாரையினுடைய நிர்ப்பந்தமான அழைப்புக்கு எப்படி மாறு சொல்ல இயலும். சீடனாகிய சந்திரன் குரு பத்னியாகிய தாரையுடன் கூடிச் சிற்றின்பக் கடலிடை மூழ்கினவனாய்ச் சில காலம் அங்கேயே தங்கி இருந்தான். நாளாக நாளாக அது சம்பந்தமாய் மனம் திடமடைந்து, அத் தாரையுடன் தன் உலகிற் கேகி ஆங்கு அவளுடன் இன்புற்று மகிழ்ந்திருந்தான்.

இதை யறிந்த வியாழ பகவான், சுக்கிர பகவானை யழைத்துக் கொண்டு, தேவர்கள்சூழ, தேவேந்திர சபையிற் சென்று நடந்த வரலாற்றை விரிவாகக் கூறலும், அதைக் கேட்ட மகபதி, வெகுண்டு

ஒன்றுந் தோன்றாமல் திகைத்து, மனக் கிலேச முற்று, சந்திர னுடைய செய்கைக்கு வருந்தி, உடனே அவனை யழைத்து வரும்படி ஆக்ஞாபித்தான். சந்திரனும் தேவேந்திரனுக்கு முன்வரவும், அவனைப் பார்த்து, "ஏ மதியே! உனக்கு, என்ன மதி கெட்டுப் போய்விட்டதா? குரு பத்தினியை நீ சொள்ளத் தகுதியாகுமோ? நீ என்ன அடாத காரியம் செய்தாய்? நாம் எல்லாரும் வணங்கி நமஸ்கரிக்கத் தக்க குருவின் பத்தினி நமக்கெல்லாம் அன்னை போல்வாள் என்பதனை மறந்தாயோ? அவளிடம் நீ காதல் கொள்ளுதல் என்ன அநீதம்? உடனே அவளிடம் உனக்கு உள்ள காதலையும் மறந்து, அவளையும் விட்டு விடு." என இனிய வசனங்கள் கூறினான். இதைக் கேட்ட சந்திரன், தனக்கு ஏற்பட்ட பழி, பாவம், பகைமை, குற்றம் யாதொன்றையும் சிறிதும் மனதில் கொள்ளாதவனாய், கர்வமுற்று, மது பானத்தினுங் கொடிய மயக்கத்தை விளைவிக்கத் தக்க காம வேட்கையின்பாற்பட்டு, தாரையைத் தான் திரும்ப விடுவதில்லை யென்று ஒரே பிடிவாதமாய்ப் பதில் உரைக்கலானான்.

இதைக் கேட்ட தேவேந்திரன் கோபத்தினால் கண்கள் சிவந்து, பற்களை நற நற வென்று கடித்து, சந்திரனுடன் போர் புரியும் வண்ணம் தன் சேனைகளுக்கு உத்திரவளிக்க, அவர்களுடன் தானும் சந்திரனைச் சூழ்ந்து கொண்டான். சந்திரனும் தன் பரிசனங்களையும் சேகரித்துப் படைகளுடன் சூழ்ந்து ஒருவர்க்கொருவர் கடுமையான போர் புரிந்தார்கள். இரண்டு மகா சமுத்திரங்கள் ஒன்று கூடி கோஷிப்பது போல், இரு திறத்தவரும், சிலர் தேரின்மேலிருந்தும், சிலர் விமானத்தின் மேலிருந்தும், நீண்ட வில், அம்பு, கதை, வாள், வேல், மழு, சக்கரம், கூர்மையான திரிசூலம் முதலான ஆயுதங்களுடன் ஆர்ப்பரித்துக் கொண்டு யுத்தம் செய்தார்கள். அந்தச் சமயத்தில் தேவலோகம் அலறியது; அஷ்டதிக்குகளும் நடுங்கின; மண்ணாதி பாதாள உலகங்க ளெல்லாம் அதிர்ந்தன. இவ்வாறு யுத்தம் நடைபெறுங் காலத்தில், பிரமா, விஷ்ணு, சிவன் மூவரும் அங்கு வந்து சேர்ந்தார்கள்.

சிவபெருமான் ஏவலினால் பிரமாவானவர், சமீபத்தில் சென்று, இருதிறத்தவருக்கும் போரை நிறுத்தும்படிச் சொல்லி, சந்திரனைக் கோபத்துடன் பார்த்து, "ஏ முட்டாளே! நீ கொஞ்சமும் புத்தி

யில்லாமல் செய்யத்தகாத இந்தக் கொடிய காரியத்தைச் செய்தாய். அறிவுள்ளவன் குருபத்தினியைக் காதல் கொள்ளுவானே? பலவித மான பழிக்கு ஏன் உள்ளானாய்? இனியாகிலும் நீ செய்த தவறை நினைத்து, வருந்தித் தாரையை விட்டுவிடு.'' எனச் சொன்னார். இதைக் கேட்ட சந்திரன், "நான் தாரையினிடம் கொண்ட காதல் மயக்கத்தினாலும், அவளிடம் உள்ள சபலத்தினாலும் எனக்கு நேர்ந்த பழிகளும் பாவங்களும் பகைமையும் அளவில்லாமல் ஏற் பட்டுவிட்டன. இனி வரப்போவது ஒன்றுமில்லை. அவளை நான் விட்டாலும் விடாவிட்டாலும் எனக்கு ஏற்பட்ட பழிகள் பழிகளே யாகும். ஆதலால், எனக்கு யாதொரு கவலையு மில்லை. நான் அவளை ஒரு போதும் விடமாட்டேன்.'' எனப் பிடிவாதமாய்ச் சொன்னான்.

இதைக் கேட்ட பிரமதேவர், மிக்க கோபமுற்றவராய், "அடே பயலே! நான் இப்பொழுது எல்லாம் வல்ல சிவபெருமான் ஆக்ஞை யின்பேரில இங்கு வந்திருக்கிறேன். அன்று நீ, தக்கன் வேள்வியில் பட்ட பாட்டை மறந்தனை போலும்! உன்னைச் சிவபெருமான் பாதத் தினால் தேய்த்ததை ஞாபகப்படுத்திக்கொள். நீ உடனே தா ரையை விடாமற் போனால் அந் நாளில் சபித்ததுபோல் இப்பொழு தும் சபித்து விடும்படியாயிருக்கும்.'' எனச் சினந்து கூறலும், சந் திரன் நடுங்கி, உடனே தாரையை விட்டுவிட்டான். அந்தக்காலத் தில் தாரையானவள் பூரண கர்ப்பிணியாயிருந்ததினால் வெட்கி, நாணமடைந்து, தன் கணவராகிய வியாழ பகவான் முன் நின்றாள். நிற்றலும் அவளைக் கண்டு, மிக்க துயரங்கொண்டு, அவர் "ஏ, ஸ்தி ரீயே! இதென்ன கொடுமை! இது தான் மாதர்களின் இயல்பான தன்மையோ? அத்திப்பூவைக் கண்டாலும் காணலாம்; ஜலத்தில் மீன் களின் பாதங்களைக் கண்டாலும் காணலாம்; வெண்ணிறமான காகத் தைக் கண்டாலும் காணலாம். ஸ்திரீகளின் மனதை அளந்தறிய யாரால் முடியும்? ஏ வனிதையே! இருந்தாலும் உன்னவ்வளவு இலச்சை இழந்த ஸ்திரீ எவ்வுலகத்திலும் காணப்படார். உன்னால் எனக்கு ஏற்பட்டிருக்கும் அவமானமும் பழிச்சொல்லும் அளவிடத் தகாது.'' எனப் பலவாறு சினந்து கோபித்தலும், இதைக் கேட்ட தாரை, உடல் நடுங்கி, மனங்கலங்கி, மெய்விதிர்க்க ஒரு புறமாய் விலகி நிற்றலும், அந்த இடத்திலேயே ஓர் மகவினைப் பெற்றாள். உடனே சந்திரன் மகிழ்வுடன் அந்தக் குழந்தையைத் தன்னுடைய

குழந்தை யென்று வாரி எடுக்கவந்தான். அதன் முன், விரைவாக வியாழ பகவான் அக்குழந்தையைத் தன்னுடைய குழந்தை யென்று மகிழ்வுடன் எடுக்கச்சென்றான். தன் பத்தினியின்மேல் அளவுகடந்த கோபத்தை யுற்றிருந்த வியாழ பகவானுக்கு மகவினைக் கண்டதும், புத்திரவாஞ்சையினால் மதியிழந்து, பழிபாவம் தோன்றாமல் போனது என்ன ஆச்சரியம்! வியாழ பகவானும் சந்திரனும் அறிவழிந்து, அவரவர் இக்குழந்தை தன்னுடையதென்று வழக்காடிச் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். உடனே பிரமதேவன் வந்து, இருவருக்கும் சமாதானம் கூறி, தாரையை நோக்கி, ‘இந்தக் குழந்தையை நீ யார்பால் பெற்றாய்?’ என வினவலும், தாரை மிகுந்தநாணமுடையவளாய்த் தலை குனிந்து, வெட்கி, மௌனமாயிருந்தாள். இதனை யறிந்த அக் குழந்தை, இது விஷயத்தைக் கேட்டுத் தாயாரைப்பார்த்து, ‘உள்ளது உள்ளபடியே சொல்லுக. ஏன் நீ பயப்படவேண்டும்?’ எனக் கேட்டலும், பிரமதேவன் கையை அமர்த்தி அக் குழந்தையை சும்மாயிருக்கச்செய்து, மறுபடியும் தாரையை நோக்கி ‘அக் குழந்தைக்குத் தந்தை யார்?’ எனக் கேட்டான். அத் தாரை நாணத்துடன் ‘சந்திரன்’ என்று பகர்ந்தாள். உடனே, சந்திரன் அக் குழவியை வாரி எடுத்து, உச்சிமோந்து, அளவில்லா அகமகிழ்ச்சி கொண்டு, அவ்வளவு இளம்பிராயத்தில் அக் குழந்தைக்கு உண்டாயிருந்த புத்தி நுட்பத்தை உணர்ந்து அவனுக்குப் ‘புதன்’ எனப் பெயரும் இட்டான். இதை யறிந்த தேவர்கள் சந்திரனைப் பார்த்து, ‘இவன் குருபத்தினியைப் புணர்ந்த பரம சண்டாளன்’ என, அவனுக்கு, நேரில் பலவாறு பழி மொழி உரைத்தார்கள். வியாழ பகவான் கோபாவேசத்தோடு சீறி, ‘நீ அழகு குறைந்து, க்ஷயரோகம் முதலான துன்பங்களை அடைந்து திரியக் கடவாய்.’ எனச் சந்திரனுக்குக் கடும் சாபம் கொடுத்தான்.

சொல்வதற்கு முன், அச்சாபம் சந்திரனை அடைந்து, அவன் மேனி அழகு குன்றி, பவளச்செவ்வாய் கருநிறமடைந்து, சரீரம் மெலிந்து, உருமாறி, மனம் பதைபதைத்து, வருந்தி, துக்கசாகரத்தில் மூழ்கி, க்ஷயரோகம் முதலான ரோகங்களையும் அடைந்து, பலவித துன்பத்தை அனுபவித்தான். பரஸ்திரீ, அதிலும் குருபத்தினியிடம் சிற்றின்ப வேட்கையில் அனுபவித்த சுகத்தின் பலன் என்னே! பரிதாபம்!!

இத்தகைய நிலையில், சந்திரன் பல இடங்களிலும் திரிந்து, ஒன்றுந் தோன்றாதவனாய், துருவாச மகருஷியை அடைந்து, தான் செய்த குற்றங்களையும், அதனால் தனக்குற்ற சாபங்களையும், துன்பங்களையும் ஒளிக்காமல் நடந்தபடியே சொல்லி, அதற்குப் பரிகாரம் செய்தருளும்படி பணிவுடன் வேண்டினான். தவத்தினால் பெருமை யடைந்தவரும், எவ்வித வரங்களையும் ஈயவல்லவருமாகிய அத் துருவாச மாமுனிவர் சந்திரனைப் பார்த்து, "ஏ விதுவே! நீ மதி யிழந்து செய்யத் தகாத காரியம் செய்தனை. இக் காரியத்துக்குப் பரிகாரம் என்றால் செய்யமுடியாது. நீ செய்ந் நன்றி கொன்ற சண்டாளனாகிவிட்டாய். இருந்தாலும் நீ செய்த குற்றத்தை ஒளிக்காமல் ஒப்புக்கொண்டு வருந்துகிறபடியால், நீ சௌக்கியத்தை அடையலாம். உடனே திருவிடைமருதூர் சென்று அங்குள்ள கனக தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, அம் மருதவாணரையும் உள்ளன்போடு பணிந்து வணங்குவாயானால், உன் மனக்கவலை நீங்கி, ஒருவாறு மனந் தேறலாம். இதைத் தவிர மருந்து வேறில்லை." எனச் சொல்லியருளலும், உடனே சந்திரன் இடைமருதூரைச் சார்ந்து, கனக தீர்த்தத்தில் மூழ்கிப் பின் அன்றலர்ந்த மிக்க வாசனையையுடைய கொன்றைமாலையைச் சூடப்பெற்ற ஸ்ரீ மகாலிங்கப்பெருமானின் சந்நிதியில் சென்று மெய் மறந்து, நமஸ்கரித்து, அடிவணங்கித் தோத்திரம் செய்தலும், இரவியின் முற்பட்ட இருள் போல, அவன் மனதில் உண்டாகியிருந்த துன்பமெல்லாம் நீங்கிற்று.

சிவபெருமானும், மகிழ்ந்து உமாதேவி சமேத விருஷபாரூடராய் ஆகாயத்தில் தோன்றி காட்சி கொடுத்து, வரங்கள் பலவும் கொடுத்தருளினார். பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா என்னும் சிவபெருமானுடைய அஷ்டரூபங்களில் தானும் ஒரு வடிவாயிருக்கும் பேறும், அப்பெருமானுடைய சூரியன், சந்திரன், அக்கினி என்னும் முக்கண்களுள், தானும் ஒன்றாயிருக்கும் பேறும், அச் சிவபெருமானுடைய ஜடாபாரத்தில் சிரோபூஷணமாய்த் தரிக்கப் பெற்ற வாழ்வும் அடைந்து, குருவினால் ஏற்பட்ட சாபத்தின் பலனாகத் தன் கலைகள் தேயவும், ஈசனருளால் அக் கலைகள் வளரவும், இத் தகைய வாழ்வைப் பெற்றுச் சில காலம் சந்திரன் இம் மருதூரிலேயே வாசஞ்செய்து மருதவாணரையும் பக்தியோடு தெரிசித்து வந்தான்.

பிறகு, ஒப்பற்ற பெருமை வாய்ந்த காருணியாமிருத தீர்த்தத்தின் கீழ்த்திசையில் ஒரு விற்கடை தூரத்தில் ஓர் தடாகம் ஏற்படுத்தினன். அது சந்திரனால் உண்டாக்கப்பட்டதால் 'சோமதீர்த்தம்' எனப் பெயர் வழங்கலாயிற்று. அதற்கு அதிதேவதை சோமன். இருஷி கௌதமர். தீர்த்தபாலகர் சண்டேசுவரர். விருக்ஷம் அடம்பு. அந்தத் தீர்த்தத்தில் சோமவாரத்தன்று மூழ்குவது விசேஷம். இப் புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, பாயசம், கனிவர்க்கங்கள், கன்னிகாதான முதலான பல தானங்கள் மறையோர்களுக்குச் செய்திடில் கொடிய பஞ்சமகா பாதகங்கள் தீரும். இத்தடாகத்தில் ஸ்நானம் செய்து இத்தகைய தானங்கள் பல கொடுத்து, அன்புடன் சிவபெருமான் அடி பணிந்து கொடியவினைகள் நீக்கப் பெற்று உய்ந்தவர் பலபேர். இன்னும் அச்சந்திரனால் அமைக்கப்பட்ட இன்னொரு தீர்த்தமும் உண்டு. இது கனகதீர்த்தத்துக்குத் தென்மேற்கில் ஒரு விற்கடை தூரத்தில் அமைந்துள்ளது. அதற்குத் தேவதை சிவபெருமான். இருஷி துருவாஸர். தீர்த்தபாலகர் சந்திரன். விருக்ஷம் மகிழமரம். இதில் ஸ்நானம் செய்து நெய், எள்ளு, வஸ்திரம், அரிசி, சந்தனம், புஷ்பம் இவைகளை அன்போடு பிராமணர்களுக்குத் தானம் செய்தால், பூனையின் உச்சிஷ்டம், ஈனகுலத்தவர் புசித்த உச்சிஷ்டம், காதல் மனையாள் உண்ட உச்சிஷ்டம் முதலானவைகள் உண்பதனால் ஏற்படும் பாவங்கள் நிவர்த்தியாகும். குருவினருளும், சகல ஐசுவரியங்களும் பெருகும்.

தன் கொடிய சாபங்களி னின்றும் ஒருவாறு நீங்கப் பெற்று, சிவபெருமான் அருளையும் அடைந்து, சந்திரன் சில நாட்கழித்துத் தன் இருப்பிடம் சென்றான். ஆங்கு மறுபடியும், விதி வசத்தால் செய்த ஓர் குற்றத்தின் காரணமாகத் தேய்ந்துவரும் தன் கலைகள் பிறகு வளராமல் நின்று விட்டன. இதைக் கண்ட சந்திரன் மறுபடியும் மனக்கிலேசமுற்று, இப் பிணிக்கு உகந்த மருந்து, மருதூரைத் தவிர வேறு இடத்தில் இல்லை என்பதைத் தெரிந்து, அத் தலமடைந்து, காருணியாமிருத தீர்த்தத்தில் முழுகி, மருதவாணரையும் வணங்கித் துதி செய்யலும், எம்பெருமான் அருளால் திரும்பத் தன் கலைகள் வளர ஆரம்பித்தன. சந்திரன் இதைக் கண்டு பேரானந்தங்கொண்டான். பின்பு, தன்னால் முன் ஏற்படுத்தப்பட்ட தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்து, தன்னிருப்பிடம்சென்றான். எத் தன்மையான கொடிய பஞ்சமாபாதகங்களையும் நிவர்த்திக்க வல்ல

சோமதீர்த்தங்களின் பெருமையையும், 'சிவபெருமான் கருணையிருந்தும் குருவினுடைய சாபம் மேலிட்டு நிற்கும்' என்பதன் காரணத்தால் சந்திரனுடைய கலைகள் தேயவும், வளரவும், ஏற்பட்டிருக்கிறது. என்கிற தன்மையையும் சூதமாமுனிவர் நைமிசாரண்ய இருஷிகளுக்குச் சொல்லிப் பின் உருத்திர தீர்த்தத்தின் மகிமையைக் கூறுவாராயினர்.

[இச் சோமதீர்த்தங்களில் முதலில் சொல்லப்பட்டது இப்போது 'ஐயனார்குளம்' என்று வழங்கும் தீர்த்தம் என்றும், இரண்டாவதாக ஏற்பட்டது தெற்குவீதி மேலக்கோடியில் வடுகப்பாளையத்தெருவுக்குப் போகும் பாதையின் வடபுறம் 'சுண்ணும்புக்காரன் குட்டை' என வழங்கும் தீர்த்தம் என்றும் பெரியோர்கள் சொல்லுகிருர்கள்.]

சோமதீர்த்தச் சருக்கம்

முற்றிற்று.

பதினூருவது
உருத்திர தீர்த்தச் சருக்கம்.

முன் திருவிளையாடற் சருக்கத்திற் கூறியபடி சிவபெருமானுடைய கண்களிலிருந்து பொழிந்த நீரில் தென்பாகத்தில் சென்று, ஆங்குள்ள தடாகத்தில் தங்கினதும், உருத்திர தீர்த்தம் எனப் பெயர் பெற்றதுமான இத் தீர்த்தம் ஸ்ரீ ஜோதிர்மய மகாலிங்கப்பெருமானுக்குத் தெக்ஷிணபாகத்தில் அமைந்துள்ளது. இதற்குத் தேவதை ஈசுவரன். தீர்த்தபாலகர் கருடன். இருஷி பிப்லர். விருக்ஷம் தமாலம். இத் தீர்த்தத்தில் ஒருதினம் மூழ்கித், தேன், கம்பளம் முதலியன அந்தணர்களுக்குத் தானம் செய்தால் தீராத கொடிய பாவங்களும், சகலவிதமான வியாதிகளும் நிவர்த்தியாகும். இவ்விதம் ஸ்நானம் செய்து பலன் பெற்றவர்கள் பலர்.

முன் ஒரு காலத்தில் நிமிச்சக்கிரவர்த்தியின் குமாரனை இட்டகேது எனும் மன்னன் நெடுநாள் புத்திரனின்றி வருந்திக் கடுந்தவம் புரிந்து, பின் சிவபெருமான் அருளால் ஓர் புத்திரனையும்

அடைந்தான். திட்டகேது மிக்க மனமகிழ்ந்து, சிவனடியார்களுக்கு உவப்புடன் அளிப்பதற்காகவே தனக்குக் கிடைக்கப்பெற்றிருக்கும் பொருள்களின் பயன் எனக் கருதி, சிவனடியார்களுக்கு வேண்டியன வேண்டியவாறு அன்புடன் அளித்து வந்தான். இப்படியிருக்கு நாளில், தன் அருமைப் புதல்வனுக்கு ஊழ்வினைப் பயனின் காரணமாகக் 'கண்டமாலை' என்று சொல்லப்படும் கொடிய நோய், கண்டத்தில் உண்டாயிற்று. இந்நோயைத் தாங்கமுடியாது புதல்வன் மிக வருந்தினான். இதைக் கண்ணுற்ற திட்டகேது தன் அருமைப் புதல்வன் வருந்துவதைக் கண்டு சகியாதவனாகி, மனக் கலக்கமுற்று, துக்கசாகரத்தில் மூழ்கினவனானான். அந்நோய் தீர வேண்டி, மந்திரங்கள் பல செய்வித்தான். பல பண்டிதர்களைக் கொண்டு ஔஷதாதிகள் கொடுத்தான். எத்தகைய வகையினாலும் குழந்தை நோய் தீரவில்லை. ஆதலால், திட்டகேது மனஞ் சலித்தவனாய் இருக்குங்கால், காத்தியாயன முனிவர் அங்கு வந்து சேர்ந்தார். அவரைக் கண்டதும் திட்டகேது வணங்கி, அவருக்கு அர்க்கிய பாத்திய ஆசமனம் கொடுத்து உபசாரணை செய்து நமஸ்கரிக்க, அம் முனிவர், மன்னன் மனத்திடையுள்ள குறையைக் கேட்டலும், மன்னன் உள்ளது உள்ளபடி உரைத்திட்டான். இதைக் கேட்ட அம் முனிவரும் சிவபிரானை மனதில் தியானித்து, "ஏ மன்னவ! உன் மகன் பூர்வ ஜன்மத்தில் வைசியகுலத்தில் உதித்த ஒரு தனிகன். அவன் வீட்டுப் பக்கத்தில் ஓர் சிவாலயம் இருந்தது. அதன் சார்பில் அக் கோவிலுக்குச் சொந்தமான கருங்கற்கள் பல கிடந்தன. அவன் அக் கற்களைக் கிரயப்படுத்திப் பொருள்சேர்த்துக் கொள்வானாயினன். இத் தீத்தொழில் புரிந்தாலும், அவன், ஜடாபாரத்தையும் பிறைச் சந்திரனையும் கங்கா தேவியையும் முடியில் தரிக்கப்பெற்ற கருணாநிதியாகிய சிவபெருமானை, ஒரு தினம் பக்தியுடன் தெரிசனை செய்த புண்ணிய வசத்தினால் இச் சென்மத்தில் இராஜ குமாரனாகப் பிறந்திருக்கிறான். சிவாலயக் கற்களை விற்று அதனால் கிடைத்த பொருளைக் கொண்டு இன்புறச் சுவையொடு உண்ட தோஷத்தினால் இந் நோய் அவன் கழுத்திடை வந்துளது.

திருநீலகண்டராகிய சிவபெருமானுடைய பொருள்களில் தினையளவு ஒருவன் கவர்ந்தாலும், அவன் தீராத கடும்பிணியுற்று அலைந்து வருந்திப் பின் சூரியசந்திரர்கள் உள்ளவரைக் கடு நரகை அடைந்து உழலுவர். அப் பொருள் சிவபெருமானுடைய பொருள்

ஒருகால் மகாபலிச் சக்கிரவர்த்தி, பூர்வஜென்மத்தில் செய்த கொடிய தீவினையின் பயனாக உற்ற துன்பங்களை, இத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, தானங்களும் பல கொடுத்து, மருதவாணரைத் தெரிசித்த மாத்திரத்தில் தன் துயரம் எல்லாம் ஒழிந்து, இறைவன் அருளால் சொர்க்க, மத்ய, பாதாளம் என்னும் மூன்று உலகங்களையும் ஒரு குடைக்கீழ் ஆண்டு சுகமுற்றிருந்தான். வாசனை பொருந்திய தாமரைப் புஷ்பங்கள் நிறைந்திருக்கும் காரணத்தினால் 'பதும தீர்த்தம்' என்னும் பெயர்கொண்ட இத் தீர்த்தம் நீர்வடிவாக இருந்தாலும் அதில் ஸ்நானம் செய்பவர்களுடைய வெம் பாவமாகிய விறகுக்குக் கடுந் தீப் போன்று விளங்குகிறது. அதில் ஸ்நானம் செய்து தங்கள் கொடிய தீவினைகளைப் பஸ்பமாகச் செய்து நற்கதி யடைந்தோர் பலர். அநாதியாய் விளங்கும் இத் தீர்த்தத்தின் மகிமையைக் கூறிச் சூதமாமுனிவர் பின், பாண்டவ தீர்த்தத்தின் மகிமையைக் கூறுவாராயினர்.

[இப் பதுமதீர்த்தம் தற்போது வாணக்கோடி என்று வழங்கும் தெற்குவீதி மேல்கோடியில் ரஸ்தாவின் மேல்சார்பில் 'சாணார் குட்டை' என்று வழங்கிவரும் தீர்த்தம். என்று பெரியோரால் சொல்லப்படுகிறது.]

பதுமதீர்த்தச் சருக்கம்

முற்றிற்று.

பதினெட்டாவது

பாண்டவ தீர்த்தச் சருக்கம்.

"இருமனப்பெண்டிருங் கள்ளுங் கவறுந் திருநீக்கப்பட்டார் தொடர்பு" என்னும் நாயனார் அருள்வாக்கியப்படி, கவறாடல், கள்ளுண்டல் என்னும் தொழில்கள், ஸ்ரீதேவி, பூதேவி இவர்களால் வெறுக்கப்பட்டவர்கள் செய்யும் கர்மம் என்று அறிந்திருந்தும், ஊழ்வினைப்பயன் காரணமாகத் தருமபுத்திராதிகள் தம் பகைவர்களாகிய துரியோதனாதியர்களுடைய வஞ்சகமான சூதாட்டத்தில்

தங்கள் நாடு நகரங்களை எல்லாம் இழந்து, மனக்கிலேசத்துடன் வனத்தில் யாரும் அறியாத வண்ணம் அஞ்ஞாதவாசஞ்செய்து வருங்காலையில், இவர்கள் துக்கத்தை யறிந்த, ஸ்ரீ கண்ணபிரான் பாண்டவர்களைத் திருவிடைமருதூர் சென்று மருதீசனை வணங்கினால், அவர்கள் தீவினைகள் ஒழியுமென்று உரைத்தருளினார்.

அப்பாண்டவர்களும் அதற்கிணங்கி, திருவிடைமருதூர் சென்று, காருண்யாமிருத தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, மருதவாணர் சன்னிதியிற் சென்று அடிபணிந்து, மனமாரத் துதிசெய்து, "ஹே கருணாசாகரமே! பார்வதிபாகனே! விமலனே! நித்தியனே! தீனதயாபரனே! சங்கர! நீலகண்ட! நாங்கள் அடைந்திருக்கும் துன்பத்தினின்றும் எங்களை மீட்பது எக்காலம்? உமது அருள் எப்பொழுது கிட்டுமோ?" என மெய் மறந்து துதித்து நிற்க, "ஏ பாண்டவர்களே! நீங்கள் துயரத்தை விட்டுவிடுங்கள். கவலை யுற வேண்டாம். கொஞ்ச காலத்துக்கெல்லாம் நீங்கள் உங்கள் பகைவர்களுடன் 'தருமயுத்தம்' செய்து உங்கள் இராஜ்யத்தையும் அடைவீர்கள். பின் நமது பதத்தையும் சேர்வீர்கள்." என அசரீரி வாக்கு உண்டாயிற்று.

இதைக் கேட்டதும் பாண்டவர்கள் மனமகிழ்ந்து, மறுபடியும் பக்தியுடன் சிவபெருமானை வணங்கி, அவர்கள் இம் மருதூரில் தனித்தனி தங்கள் தங்கள் பெயரைக்கொண்டு ஐந்து தீர்த்தங்கள் ஏற்படுத்தினார்கள். பின்பு காலக் கிரமத்தில் தங்கள் நாடு சென்று, பகைவர்களைப் போரில் வென்று, இராஜ்யத்தையும் பெற்று, நீண்ட காலம் நீதியுடன் அரசாண்டு பின் சிவபதம் சார்ந்து சுகித்திருந்தார்கள். அவர்களால் இயற்றபட்ட தீர்த்தங்களாவன:—

(1) தருமதீர்த்தம்:—தேவதையும் தீர்த்தபாலகரும் சம்பு. இருஷி பரத்துவாஜர். விருக்ஷம் நாவல்.

(2) பீமதீர்த்தம்:—தேவதையும் தீர்த்தபாலகரும் நந்தி. இருஷி ஜதுகர்ணர். விருக்ஷம் மா.

(3) அர்ச்சுனதீர்த்தம்:—தேவதையும் தீர்த்தபாலகரும் சுப்பிரமணியக்கடவுள். இருஷி கௌதமர். விருக்ஷம் நெல்லி.

(4) நகுலதீர்த்தம்:—தேவதையும் தீர்த்தபாலகரும் பிருங்கி. இருஷி மாண்டவியர். விருக்ஷம் ஆல்.

(5) சகாதேவதீர்த்தம்:—தேவதையும் தீர்த்தபாலகரும் சண்டேசுரர். இருஷி பயிலர். விருக்ஷம் வேப்பு.

ஆகிய இத் தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து அந்தணர்களுக்கு உதககும்பம், குடை, விசிறி, வஸ்திரம், பாதுகை இவைகள் தானஞ் செய்தால் அஷ்ட ஐசுவரியங்களும் கைகூடும். சகல விதமான பிணிகளும், பகைமையும் இரவியின் முன் இருள்போல நீங்கும். இவ்வாறு இத் தீர்த்தங்களில் மூழ்கிப் பலன் பெற்றோர் பலர் உளர். என்று இப் பாண்டவதீர்த்தங்களின் சிறப்பை நைமிசாரணிய இருஷிகளுக்குக் கூறிப் பின் சூதமாமுனிவர் இந்திர தீர்த்தத்தின் மகிமையைக் கூறுவாராயினர்.

[இப் பாண்டவதீர்த்தங்கள், முன் சொல்லிய பதும தீர்த்தத்துக்குத் தென்புறத்தின் கீழ்சார்பாக ரஸ்தாவுக்குக் கீழ்புறத்திலும் நந்தவனத்துக்கு மேற்புறமாகவும் தெற்குவீதி வடம்போக்கிக்குத் தென்பாகத்திலும் உள்ளது என்றும், தற்போது பாதிபாகம் சாகுபடியில் இருந்து வருகிற தலமே அடுத்தடுத்துள்ள தீர்த்தம் என்றும் பெரியோர் சொல்லுகிறார்கள்.]

பாண்டவ தீர்த்தச் சருக்கம்

முற்றிற்று.

பத்தொன்பதாவது

இந்திரதீர்த்தச் சருக்கம்.

ஸ்ரீ ஜோதிர்மய மகாலிங்கப்பெருமான் ஆலயத்துக்குக் கீழ்த்திசையில் இந்திரனால் ஏற்படுத்தப்பட்ட தீர்த்தம் ஒன்று உளது. அதற்குத் தேவதை இந்திரன். தீர்த்தபாலகர் சங்கரர். இருஷியும் இந்திரன். விருக்ஷம் முள்ளிலவு. இதில் ஸ்நானம் செய்து அந்தணர்களுக்கு இரும்பு, வெள்ளி, எருமை, பால், தாம்பூலம், கனிவர்க்கம் முதலியவற்றைத் தானம் கொடுத்தால் எவ்விதமான கொடிய தீவினைகளும் நீங்கி இன்புறச் செய்யும். பற்பல யாகாதிகளைச் செய்து அடையக்கூடிய பலன்களை யெல்லாம் இத் தீர்த்தத்தில்

ஸ்நானம் செய்து மருதவாணப்பெருமானை வணங்குதலினாலேயே அடைந்துவிடலாம். இவ்வாறு ஸ்நானம் செய்து இம்மை மறுமைப் பயன்களையடைந்தவர் எண்ணிலர்.

முன் ஒரு காலத்தில், சிவபெருமான் அருளைப்பெற்று, தனக்கு எத் தகைய கொடுமையான யுத்தகளத்திலும் போர்புரியுங்காலத்தில், தன் உயிர் நீங்காதவண்ணம் வரம் பெற்றவனும், வலாசுரன் என்னும் பெயர் கொண்டவனுமான ஓர் அசுரன் இருந்தான். அவனுடன் மகபதியாகிய தேவேந்திரன் கடும்போர் புரிந்து தோற்றுவிட்டான். உடனே இந்திரன் இவ்வசுரனை நேரில் கொல்ல முடியாததை அறிந்து வஞ்சனையாகக் கொல்ல வேண்டு மென்று நினைத்து, அவனை அழைத்து, "ஏ பராக்கிரமமுள்ள வலாசுரனே! உனது தீரத்துக்கும், திறத்துக்கும் நான் நிரம்ப மெச்சி, மகிழ்ந் தேன். இனி, நான் உன்னோடு போர்புரிவதாக உத்தேசமில்லை. உனக்கு வேண்டிய வரங்களைக் கேட்பாயாக." என உரைத்தலும், வலாசுரன், "ஏ தேவந்திர! நூறு யாகம் செய்து இந்திர பதத்தை அடைந்து பலவிதமான போக பாக்கியங்களைப் பெற்றிருப்பவனாயினும், அநேகர்களுக்கு வேண்டுவன அளித்திருந்தாலும், இப்போது நீ என்னிடம் போரில் தோற்றுப்போய் களைத்திருக்கிறாய். தோற்றவன் ஜெயமடைந்தவனுக்கு வரங்கள் அளிப்பது நீதியோ! இதைக்கேட்க, எனக்கும் ஆச்சரியம் உண்டாகிறது. ஆகையால், உனக்கு ஏதேனும் வரம் வேண்டியிருந்தால் கேட்பாயாக. நான் அளிக்கின்றேன். அதுதான் ஒழுங்கு முறை." என்றான்.

இதைக் கேட்ட இந்திரன், சற்று ஆலோசித்து, எவ்விதத்திலும் அவனைக் கொல்லவேண்டும் என்கிற எண்ணத்துடன், "ஏ அசுரனே! நான் ஒரு யாகம் இயற்றுவதாய் உத்தேசித்திருக்கிறேன். அதற்கு நீ பசுவாய் வந்து அந்த யாகத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும்." என வஞ்சனையோடு சொல்ல, சிவபக்தி நிரம்பப் பெற்று, சொன்னசொல் தவறாத வலாசுரன், உடனே சம்மதித்து, இந்திரனால் செய்யப்படும் தூயதாம் யாகத்தில் ஓர் பசுவாக வந்தடைந்தான். இந்திரன் விதிப்படி பசுவாகிய அந்த வலாசுரனை வதைத்து, தேவர்களுக்கு அவிர்ப்பாகம் கொடுத்து அந்த யாகத்தையும் பூர்த்தி செய்தான்.

இவ்வாறு, வஞ்சகமாக வலாசுரன் உயிரைக் கவர்ந்ததினால் ஏற்பட்ட பாவமும், கொடிய கோபத்தோடு கூடிய விசேஷ சைன்னியங்களைக் கொண்ட பகனைக்கொன்ற பாவமும், கொடிய ஆலகால விஷம் போல, ஒருங்கே அடையப் பெற்று, அதனால் மனங்கலங்கி, இத் துன்பத்தினின்றும் நீங்கிக்கொள்ள இன்னது செய்வது என்று ஆராய்வானாயினன். கடைசியாக, இம் மருதூரை யடைந்து, காருண்யாமிருத தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, மருதவாணருடைய பொன்னடிகளைப் போற்றி வணங்கினன். உடனே தன்னைப் பற்றியிருந்த, வஞ்சனையாற் கொன்ற கொலை பாதகங்கள் நீங்கி, அகத்திலும் புறத்திலும் இன்புற்று, ஸ்ரீ ஜோதிர்மய மகாலிங்கப்பெருமானுக்கு அருச்சனை பலவும் செய்தான். பின் சிவபெருமான் அருளைப்பெற்று, இத் தலத்தில் தன் பெயரினால் ஓர் தடாகம் ஏற்படுத்தி, அதில் தானும் ஸ்நானம் முதலியன செய்து, பின்னும் அதில் மூழ்குவோர்களுக்குச் சகல துன்பங்களையும், பிணிகளையும் நீக்கி, அவர்கள் இன்புறச் செய்யும் வண்ணம் அத் தீர்த்தத்துக்கு வரம் அருளி, பொன்னுலகமாகிய தன்னுலகு எய்தி இன்புற்றிருந்தான். இவ்வளவு பெருமைபெற்ற இத்தலத்தின் மகிமையையும் அதில் ஏற்பட்ட இந்திரனுடைய தீர்த்த வரலாற்றையும் கூறிப் பின் சூதமாமுனிவர் அக்கினி தீர்த்தத்தின் பெருமையைக் கூறுவாராயினர்.

[இத்தீர்த்தம் சோமதீர்த்தமாகிய 'ஐயனார்குளம்' என வழங்கும் தடாகத்துக்குத் தென்புறம் 'சாரைக்குளம்' என வழங்கும் புண்ணிய தீர்த்தம். என்று பெரியோரால் சொல்லப்படுகிறது.]

இந்திரதீர்த்தச் சருக்கம்

முற்றிற்று.

இருபதாவது
அக்கினி தீர்த்தச் சருக்கம்.

மேற் கூறிய இந்திர தீர்த்தத்திற்குத் தெற்கே மூன்று விற்கடை தூரத்தில் 'சூலகாதம்' எனப் பெயர் கொண்டு ஓர் தீர்த்தம் விளங்குகிறது. அதற்குத் தேவதை ஸ்ரீ சங்கரர், தீர்த்தபாலகர் அக்கினி. இருஷி கபிலர். விருக்ஷம் நெல்லி. இதில் ஸ்நானம் செய்வோர் தயிர், நெய், பால், பசு இவைகளை மறையவர்களுக்குத் தானம் கொடுத்தால், அக்கணமே உயிர் வதைத்திடும் பாதகம் முதலான எல்லாத் தோஷங்களும் நீங்கும். பல பிணிகள் நீங்கும். புகழ் உண்டாகும். அஷ்ட ஐசுவரியங்களும் பெருகும்.

ஆதியில் சிவபெருமானுடைய காவற் கடவுளாகிய வைரவமூர்த்தி, காவல் புரிந்து உலவிவரும் அந் நாளில் பிரகாசம் பொருந்திய தன் கைப் படையாகிய முத்தலைச் சூலத்தினடியைப் பூமியில் நாட்டிப் பின் எடுத்தலும், அப்படி எடுத்த அப்பள்ளமானது ஓர் தடாகமாக விளங்கப்பெற்றது. அவ்வாறுண்டான தீர்த்தமாதலால் அது 'சூலகாதம்' எனப் பெயர்பெற்றது. அதில் ஸ்நானம் செய்து சிவபெருமானை வணங்கி இன்புற்றவர் பலர்.

முன் ஒரு சமயத்தில், அக்கினிபகவான் காண்டவ வனத்தை எரித்துத் தன் பசிக்கொடுமையைத் தீர்த்துக்கொண்ட காலையில், நிஷ்களங்கமாகக் கபடமின்றி அக் காட்டில் யதேச்சையாய்த் திரிந்து வசித்துவந்த மிருகாதி பல் லுயிர்களையும் வருத்தியதின் நிமித்தம் ஏற்பட்ட ஹத்தி தோஷத்தினால், அக்கினிபகவான், கிலேசமுற்று, அப் பழியைத் தீர்த்துக்கொள்ள எண்ணி, எல்லா வளப்பங்களையும் ஒருங்கே அமையப் பெற்ற நம் மருதூருக்கு வந்து சூலகாதம் என்று சொல்லப்பட்ட இத்தீர்த்தத்தில் ஸ்நானம்செய்து, தனக்குற்ற கொலைபாதகங்களும் நீங்கப்பெற்று உளமகிழ்ந்தான். உடனே அவ்வக்கினிபகவான் அத்தடாகத்தைப் புதுப்பித்துச் சீர்படுத்தி, மேன்மை யடையும்படி செய்து, ஸ்ரீ ஜோதிர்மய மகாலிங்கப் பெருமானை மனமார வணங்கித் துதிசெய்து, மிகுந்த ஆநந்தத்தோடு தன்னுலகை யடைந்தான். இது காரணம்பற்றி இதற்கு அன்று முதல் அக்கினி தீர்த்தம் என்றும் ஒரு பெயர் உண்டாயிற்று.

இவ்வாறு சூத மாமுனிவர் அக்கினி தீர்த்தத்தின் வரலாற்றைக் கூறிப் பின் இயமதீர்த்தத்தின் பெருமையைக் கூறுவாராயினர்.

[இத் தீர்த்தம், வைரவமூர்த்தியின் முத்தலைச் சூலத்தால் ஏற்பட்டு, தற்போது முத்தூர் என வழங்கும் ஸ்ரீ மகாலிங்கப்பெருமானின் மான்யகிரமங்களுள் ஒன்றில், அவ்வூருக்குக் கீழ்சார்பில் விளங்கிவருகிறதென்று பெரியோர்களால் சொல்லப்படுகிறது.]

அக்கினி தீர்த்தச் சருக்கம்

முற்றிற்று.

இருபத்தொன்றாவது
இயமதீர்த்தச் சருக்கம்.

மேற்கூறிய அக்கினி தீர்த்தத்துக்கு மேற்கே தென்சார்பாக சுமார் ஏழு விற்கடை தூரத்தில் ஒரு தீர்த்தம் உள்ளது. அதற்குத் தேவதை அகோரமூர்த்தி. தீர்த்தபாலகர் இரிடி என்னும் பெயருடைய இருஷி. விருக்ஷம் பாதிரி. இருஷி இயமன். இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, திலம், இரும்பு, பொன், பருத்தி, கம்பளம், எருமையாகிய இத் தானங்களை அன்புடன் அந்தணர்களுக்கு அளித்தால் இயமவாதனை உண்டாகாது. ஆயுள் விருத்தி உண்டாகும். மிகுந்த துன்பத்தை விளைவிக்கும் குட்டம், பித்தம், சூலை, என்புருக்கிமேக முதலிய நோய்கள் அறவே நீங்கும். இன்பமும், கல்வியும், செல்வமும், மேனியழகும், மிக்க புகழும் உண்டாகும். கொடிய பகையாளிகளும் வந்து தலைவணங்குவர்.

முன் தவநிலைச் சருக்கத்திற் கூறியபடி மீன்போன்ற விழிகளையுடைய உமாதேவியானவர், சிவபெருமானைக் குறித்து அருந்தவம் புரியுங்காலை அத் தவச்சாலையைக் காக்கும் பொருட்டு இயமன் தன் சைனியங்களுடன் காவல் புரிந்தபொழுது, இத் தடாகத்தை உண்டு பண்ணித், தானும் சைனியாதிகளுடன் அதன் கரையில் தங்கி, காவல் காத்துச் சிலகாலம் வீற்றிருந்தான். இதின் காரணத்தால் அத் தீர்த்தத்திற்கு இயமதீர்த்தம் எனப் பெயர் வழங்கியது.

முத்தமிழ்த் தலைவரும், தென்மலைக் கதிபருமான அகத்திய மாமுனிவர் மருதவாணப் பெருமானைப் பக்தியோடு வணங்கித் துதி செய்து, பல மெய்த்தவசிகள் சூழ, தவஞ்செய்ய வேண்டி இத் தீர்த்தத்துக்குத் தென் கரையில் வந்து தங்கினார். வினையகற்றும், விபூதியும், உருத்திராக்கமும் உடல் முழுதும் தரிக்கப்பெற்று, தன்னை மீறி எழும் பஞ்சேந்திரியங்களைத் தன் வசப்படுத்தி, ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும் மலங்களையும் போக்கி, மேன்மையைத் தரவல்ல பதுமாசனமிட்டு, ஊண், உறக்கமின்றி, தன் மூக்கின் நுனியையே நோக்கும்படியான நிலையில் கண்களை நிறுத்தி, சுவாசமானது இடைகலை பிங்கலையி னிடத்துச் செல்லாமல், சுழுமுனையில் தம்பனம் செய்து, உயிருக்கு உயிராய் விளங்கும் சிவபெருமானைத் தன் மனத்திருத்திச் சிலநாள் அகத்தியர் கடுந்தவம் புரிந்தார். அதுகாலை, அடியார்களுடைய அன்பிற்கு எளியவரான சிவபெருமான், அகத்தியர் செய்யும் தவத்துக்கு மெச்சி, உள்மகிழ்ந்து, கோடி சூரியப்பிரகாசம் போல் விளங்கிக் கொண்டும், ஜடையில் ஒளி பொருந்திய இளம்பிறைச் சந்திரனும், விரிந்த மலர் முகமும், சூரியன், சந்திரன், அக்கினி என்னும் மூன்று கண்களும், பவளச் செவ்வாயும், மிகச் சுந்தரம் பொருந்திய மற்ற அவயவாதிகளும் உடையவராகி, ஸ்ரீ ஜோதிர்மய மகாலிங்கப்பெருமான் அகோர மூர்த்தி வடிவமாய், அகத்தியர் முன் தோன்றிக் காட்சி கொடுத்தருளினார். கடலை ஆசமனம் செய்த குறுமுனிவர், இம் மூர்த்தத்தைக் கண்டு, பலமுறை வணங்கி, மெய்ம்மறந்து, புளகாங்கிதராய்ப் பேரானந்தங் கொண்டு,

அணையரவ முடையோனு மரவிந்தக்
கண்ணனு மறியொ ணாத
துணைமலர்ச்சே வடிதனியேன் காணவெழுந்
தருள்புரிந்த சோதி போற்றி
யிணையிலிபொன் னிதழிபுனை வேணியநீ
ளிடைமருதி னெந்தை போற்றி
பணைமுலையின் கொடிமருவு மிடப்பாக
விடைப்பாக பரம போற்றி.

எனப் பலவாறு பக்தியோடு துதிசெய்தார். இதைக் கேட்ட பரமசிவன், "ஏ தவதிலகமே! நீ செய்த தவமும், துதிகளும் நம்மனதிற் பொருந்தி, நமக்கு அளவில்லா ஆநந்தமுறச் செய்தன. உனக்கு

வேண்டிய வரங்களைக் கேட்பாயாக." என உரைத்தலும், அகத்திய மாமுனிவர் தனக்கு சாயுஜ்ய பதவியாகிய முக்தியை அருளல் வேண்டுமெனப் பிரார்த்தித்தார்.

எம்பெருமான், "ஏ முனிவர் சீல! நீ கேட்கும் வரமானது உனக்கு அருமை யுள்ளதல்ல. இருந்தாலும், நீ மகேந்திர மலைக்குச் சென்று அங்கு கொஞ்சகாலம் தங்கி யிருப்பாயானால், நாமும் சில காலஞ் சென்று ஆங்கு வருவோம். அச்சமயம் நீர் வேண்டுகிற வரத்தையளிக்கிறோம்" என்னலும், அகத்தியரும் மகிழ்ச்சி கொண்டு, அம் மலைக்குச் சென்று வாசஞ்செய்வாராயினர். இந்த இயமதீர்த்தக் கரையில் இன்றும் அகோரமூர்த்தி உருவத்துடன் எம்பெருமான் பரிவாரங்கள் சூழத் தங்கி, அங்கு வந்தடைவோர்களுக்கு வேண்டிய வரங்களையும் கொடுத்து வருகிறார். அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம்செய்து அம் மூர்த்தியைத் தரிசித்து வணங்குவோரும், பூஜைக்குரிய உபகரணங்கள் குறைவின்றி அளிப்போரும், இவ் வுலகில் இன்புற்ற வாழ்க்கையைப் பெற்று, சிவபெருமான் திருவடியை அடைந்து சாசுவதமான ஆநந்தவாழ்வையனுபவிப்பது திண்ணம். எனச் சூதமாமுனிவர் கூறிப் பின் நிருதிதீர்த்தத்தின் மகிமையைக் கூறுவாராயினர்.

[இத் தீர்த்தம், தற்போது திருவிடைமருதூருக்கு நேர் தெற்கில் சுமார் இரண்டுமைல் தூரத்தில் ஏனாதிமங்கலம் என்று வழங்கும் கிராமத்தில் அகோரமூர்த்தியின் ஆலயமும், அதன் பக்கத்தில் இயமதீர்த்தமும் இன்றும் உள்ளது. அந்தக் கிராமம் இயமனாதிமங்கலம் எனப் பெயரை யுடைத்தாயிருந்து மருவி ஏனாதிமங்கலம் என்று வழங்குவதாகப் பெரியோர் கூறுகிறார்கள்.]

இயமதீர்த்தச் சருக்கம்

முற்றிற்று.

இருபத்திரண்டாவது
நிருதிதீர்த்தச் சருக்கம்.

மேற்கூறிய இயமதீர்த்தத்திற்கு மேற்கில் மூன்று விற்கடை தூரத்தில் ஒரு தீர்த்தம் உள்ளது. அதற்குத் தேவதை சங்கரர். தீர்த்தபாலகர் நிருதி. இருஷி வசிட்டர். விருக்ஷம் கருங்காலி. இதில் ஸ்நானஞ்செய்து, பூசணிக்காய், உளுந்து, நல்லெண்ணெய், எள்ளன்னம் முதலானவை அந்தணர்களுக்குத் தானம் கொடுத்தால் எவ்வித சுரங்களாதி நோய்கள் ஒரு நொடியில் நீங்கும். இன்பமே மேலிட்டு, இராக்கதர், பேய், பூத முதலானவைகளினால் உண்டாகும் துன்பம் வந்தணுகாது. இந்தத்தீர்த்தத்தில் மூழ்கிப் பிறவித் துன்பத்தினின்றும் நீங்கப் பெற்றவர் எண்ணிலர். பூமியிலுள்ள எளியவரும் மூழ்கி உய்யுமாறு அசுர அரசனாகிய நிருதியினால் ஏற்படுத்திய இத் தீர்த்தத்தின் பெருமையைக் கூறிப் பின் சூதமாமுனிவர் வருணதீர்த்தத்தின் வளமை கூறுவாராயினார்.

[இந்தத் தீர்த்தம், தற்போது திருநாகேசுரம் செல்லும் மார்க்கத்தில் சன்னாபுர மென்கிற சைனபுரம் பத்திரகாளியம்மன் கோவிற் குளம் என்று வழங்குவதே என்று பெரியோரால் சொல்லத் தெரிகிறது.]

நிருதிதீர்த்தச் சருக்கம்

முற்றிற்று.

இருபத்துமூன்றாவது
வருணதீர்த்தச் சருக்கம்.

ஸ்ரீ மருதவாணர் ஆலயத்துக்கு மேற்கே ஐந்து விற்கடை தூரத்தில் ஓர் தீர்த்தம் உளது. அது வருணபகவானால் உண்டாக்கப்பட்டதன் காரணத்தால் அதற்கு வருணதீர்த்தம் என்று பெயர். அதற்குத் தேவதை சத்தியோஜாதமூர்த்தி. தீர்த்தபாலகர் விநாயகர். இருஷி

பரத்துவாஜர். விருக்ஷம் மகிழ். இதில் ஸ்நானஞ் செய்து, அந்தணர்களுக்குத், தாம்பூலம், குதிரை தானம் செய்தால் கொடிய வினைகளை நீக்கும். பலவித அச்சம் நீங்கும். இரும்பு, வெள்ளி, பொன் ஆகிய இவைகளினால் உண்டாக்கிய மூன்று அரண்களையுடைய திரிபுராதிபதிகளாகிய அசுரர்கள், சிவபெருமானிடமிருந்து தாங்கள் பெற்றிருந்த அரிய பெரிய வரங்களின் வலிமையினால் கர்வமுற்று, தேவலோகத்திலுள்ள இந்திராதி தேவர்கள் யாவர்களுக்கும் சதா இடுக்கண்கள் உண்டுபண்ணுவதே தொழிலாக இருந்தார்கள். அத் தேவர்கள் இவ் வசுரர்களின் கொடுமையான துன்பங்களைப் பொறுக்கமாட்டாது, எல்லோராலும் புகழப்பெற்ற இடைமருதூருக்கு வந்து, கனகதீர்த்தத்திலும், காருண்யாமிருத தீர்த்தத்திலும் ஸ்நானம் செய்து, ஸ்ரீ ஜோதிர்மய மகாலிங்கப் பெருமானுடைய திருவடிகளில் வணங்கி நமஸ்கரித்து, அப்பெருமானுடைய திருவடித் தாமரையையே தம் மனத்திருத்தி, 'வருண தீர்த்தம்' என்று சொல்லப்படும் இத் தீர்த்தக்கரையில் தங்கி, அசுரர்களின் கொடுமையை நினைத்து நினைத்து மன நடுக்க முற்றிருந்தார்கள்.

ஸ்ரீ மகாலிங்கப்பெருமான் அவர்கள் முன்னிலையில் சத்தியோஜாதமூர்த்தியாய்த் தோன்றி, 'ஏ தேவர்களே! நீங்கள் அஞ்சவேண்டாம். உங்களுக்குத் துன்பம் இழைத்த அவ்வசுரர்களுக்கு அழிவுகாலம் நெருங்கிவிட்டது. கவலை யுறுதீர்கள்.' எனச் சொல்லி அத் தேவர்களுக்குண்டாயிருந்த மனமெய்களில் உற்ற நடுக்கத்தையும் தீர்த்தருளினர்.

திரிபுராதிகளுக்குச் சிவபெருமான் அளவுகடந்த வரங்கள் அளித்திருந்ததால் அவ் வரங்களை மாற்ற, அவர்களின் பக்திவலிமையைக் குறைக்கும்படியான மார்க்கத்தைச்செய்யும்படி சிவபெருமான் ஆக்ஞாபிக்க, இதை யறிந்த மகா விஷ்ணுவானவர் நாரதமுனிவரைத் தமக்கு சிஷ்யராகக்கொண்டு, தாம் பௌத்தாசாரியராக உருவமெடுத்து, அவ் வசுரர்கள் வசிக்கும் தலத்துக்கு அருகாமையில் ஒரு தீர்த்தத்தின் பால் தாம் கொண்ட மதத்துக்கு ஒப்பப் பூஜையைச் செய்யலுற்றார். அப்பூஜைக்கு வேண்டிய, சந்தனம், புஷ்பம், தூபம், தீபம், சத்திரம், சாமரம், நைவேத்தியாதி உபகரணங்கள் யாவும் பிறர் உதவியின்றித் தம் மாயாசக்தியால் பெற்று, பூஜையை வெகு பக்தியோடு செய்து வருவதை; ஆங்கு தீர்த்தம் எடுத்துப் போக

வந்த அவ்வசுர ஸ்திரீகள் கண்டு ஒருவர்க்கொருவர், "ஆஹா இது என்ன ஆச்சரியம்! இப்பெரியார் யாவர்? இவர் செய்யும் பூஜையோ அற்புதமாயிருக்கிறது. பூஜைக்கு வேண்டிய பஞ்சகவ்வியம் முதலான பூஜாத் திரவியங்கள் எடுத்துக்கொடுப்பவர் ஒருவரையும் காணோம். அப்பொருள்கள் தாமாகவே அவருடைய கரங்களில் எவ்வெக் காலத்தில் எதுஎது வேண்டுமோ அவ்வக் காலத்தில் அந்தந்தப் பொருள்கள் கையில் கூடுகின்றன. நம்முடைய வீடுகளில் நம் பதிகள் செய்யும் பூஜைகளுக்கோ என்றால், நாம் சகல சாமான்கள் சேகரம் செய்வதும், அவைகளைச் சமயமறிந்து எடுத்து உதவுவதும் மிகுந்த சிரமமான காரியமாயிருப்பதை நாம் தினம் அனுபவிக்கின்றோம். இப்பெரியாருடைய அருள் நம் நாயகருக்குக்கிட்டுமேயானால், அவர் செய்கிறபடி பூஜாத் திரவியங்கள் யாவும் அவர்களுக்கும் எளிதில் கிடைத்துவிடும். நமக்கும் அதிகச்சிரமமில்லை. ஆகையால், நாம் நம்நம் நாயகர்களிடம் தெரிவித்து அவருடைய அருளைப்பெறும்படிச் செய்யவேண்டும்." எனப் பேசிக்கொண்டு, உடனே சென்று, தத்தம் நாயகரிடம் தெரிவிக்க, அவ்வசுரர்கள் வந்து அப் பௌத்தாசாரியாரை, அடிவணங்கி, தாங்கள் கொண்ட எண்ணத்தைத் தெரிவித்து, அருள் புரியவேண்டுமெனப் பிரார்த்தித்தார்கள். மாயாரூபியான, அம் மகாவிஷ்ணு சமயமறிந்து அவ்வசுரர்களைப் பார்த்து, பிரம, விஷ்ணு, சிவன் ஆகிய இவர்கள் முதற்கடவுள் எனச் சொல்லப்படுவது சுத்தப் பொய்யென்று அவர்கள் மனதில் படும்படி பலவித மாயா சக்திகளினால் நிரூபித்து, அவர்களிடமுள்ள சிவபூஜை, சிவபக்தி, குன்றும்படிச் செய்து, பௌத்தமதக் கொள்கைகளை மனதிற் பதியும்படி உபதேசித் தருளினர். அக்கணமே அவ்வசுரர்களுக்குச் சிவபக்தி குறைந்து, சிவபூஜையும் மெலிவடைந்து சிவபெருமான் அருளால் அவர்களுக்கு உண்டாகி இருந்த தேகவலிமையும் மனோவலிமையும் குன்றிவிட்டன. இத்தகைய தன்மையைத் திரிபுரத்தசுரர்களுள் தலைமையாயுள்ள மூவரைத் தவிர ஏனையோர்கள் அடையலுற்றார்கள்.

இதுவிஷயத்தை யறிந்த, சிவபெருமான் மகாமேருவை வில்லாகவும், வாசுகி என்னும் சர்ப்பத்தை நாணாகவும், மகாவிஷ்ணுவை அம்பாகவும், பூமியைத் தேராகவும், சூரியசந்திரர்களை அத் தேருக்குச் சக்கரங்களாகவும், நான்கு வேதங்களும் நான்கு குதிரைகளாகவும், பிரமாவை சாரதியாகவும் உடைத்தாகி, தாம் அத் தேரில்

அமர்ந்து புன்முறுவல் செய்தார். அந்த மென்மையான நகைப்பானது கொழுந்து விட்டெரியும் தீப்பொறிகளைப் போல் விளங்கி, திரிபுரம் சென்று, அத் திரிபுராதிகளில் சிவபக்தியை விடாது. சிவபூஜையையே செய்து வந்த மூவர்களைத் தவிர, ஏனைய அசுரர்களை எரித்துவிட்டது. மிகுந்திருந்த மூவரையும் சிவபெருமான அவர்களைத் தாம் ஆட்கொண்டுவிட்டார்.

இதையெல்லாம் அறிந்த தேவர்கள் சிவபெருமானை வணங்கி, "எழுமுழுதற் கடவுளே! துஷ்டசம்ஹார மூர்த்தியே! சிஷ்டபரிபாலன கர்த்தாவே! நாங்கள் உலகெலாம் புகழ் இம் மருதூரினிடையுள்ள உத்தம பெருமைவாய்ந்த இத் தீர்த்தத்தில் மூழ்கினோம். அவ் வெவ்வசுரர்கள் கொடிய தீயினில் மூழ்கினார்கள். எல்லாம் உமது அருட்காரணமே." எனச் சிவபெருமானை வணங்கி, தீர்த்தத்தின் பெருமையையும் கொண்டாடி மகிழ்வுற்றுத் தம் இருப்பிடம் எய்தினார்கள். தேவர்கள் கொண்ட நடுக்கத்தைத் தீர்த்தருளிய காரணத்தினால், அத் தீர்த்தத்தின் அருகில சத்தியோஜாதமூர்த்தியாய் எழுந்தருளிய மருதப்பெருமான் 'கம்பஹரேசுவரர்' என்று அழைக்கப்பட்டு, திரிலோகாதிபதிகளும் வந்து வணங்கும்படி, தர்மஸம்வர்த்தனி ஸமேதராக இன்றைக்கும் வீற்றிருக்கிறார்.

ஸ்ரீ ஜோதிர்மய மகாலிங்கத்தின் பூரண கிருபையைப் பெற்று வருணனால் ஏற்படுத்தப்பட்ட இவ் வருணதீர்த்தத்தின் சிறப்பைக் கூறிப் பின் சூதமாமுனிவர் வாயுதீர்த்தத்தின் பெருமையைக் கூறுவாராயினர்.

[இத் தீர்த்தம், தற்போது தருமபுரம் மடாதிபதிகளின் விசாரணையில் இருந்துவருவதும், இத் தலத்துக்குச் சுமார் முக்கால் மைலுக்கு மேற்கேயுள்ளதுமான திருபுவனத்தில் ஸ்ரீ கம்பஹரேசுவரசுவாமி சந்நிதியில் விளங்குகிற 'திருக்குளமாம்' என்று பெரியோர்கள் கூறுகிறார்கள்.]

வருணதீர்த்தச் சருக்கம்

முற்றிற்று.

இருபத்து நான்காவது

வாயுதீர்த்தச் சருக்கம்.

முற்கூறிய வருணை தீர்த்தத்துக்கு வடமேற்கில் ஒரு விற்கடை தூரத்தில் ஓர் தீர்த்தம் விளங்குகிறது. அதற்கு அதிதேவதை வாயு பகவான். தீர்த்தபாலசர் சுப்பிரமணியக்கடவுள். இருஷி கண்ணுவர். விருக்ஷம் மகிழ். இத் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, கன்னிகா தானம், குடைதானம், சொர்ணதானம் ஆகிய தானங்கள் மறையோர்களுக்குக் கொடுத்தால் வாயு சம்பந்தமான சகல நோய்களும் நீங்கும். இன்பம் பெருகும். இத் தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து பலன் பெற்றோர் அநேகர்.

ஒரு காலத்தில், கிருகலன் என்னும் பெயர்கொண்ட ஓர் பிராமணன், திருட்டுத் தொழில், வஞ்சகத் தொழில், பொய்யுரைத்தலாதிய தீத் தொழில்களில் தேர்ச்சி பெற்றிருந்தான். அவன் தன் குலத்தாராகிய அந்தணர்களுடன் பழக மாட்டான். தன் குலாசாரத்துக் குரிய வேதாத்தியானங்கள் செய்ய மாட்டான். பிறரை மயக்கக் கூடிய தந்திரச் செயல்களிலேயே மனம் பற்றினவனாயும், வேல் விழிகளையும், கருங் கூந்தலையும், உடுக்கை யிடையையும், சந்திர வதனத்தையும் உடைய பரஸ்திரீகளிடம் காமலோலனாயும் திரிந்து வந்தான். இவ்வாறு திரியுங்கால், திருத்தவத்துறை என்று சொல்லப்படும் லால்குடி க்ஷேத்திரத்தில் கார்த்திகை சோமவாரத்தன்று அக் கிருகலன் கோவிலுட் புகுந்தான். கோவிலில் சிவபெருமானுக்கு அப் புண்ணிய தினத்தில் விசேஷமான ஆடை ஆபரணங்கள் அணியப் பெற்றிருப்பதைக் கண்ணுற்ற இப் பாதகப் பிராமணன், திருட்டுத் தொழிலையே தனக்கு உத்தமத் தொழிலாக உடையவனாதலால், சமயம் பார்த்து அவ் வாபரணங்களைக் கொள்ளை கொள்ளும் வண்ணம் உட் சென்றான். அச்சமயம் எம் பெருமானிடமிருந்த விளக்கு சற்று மங்கி யிருந்தமையால், ஆபரணங்கள் இருக்குமிடம் நன்கு விளங்கவில்லை. அதற்காக அவன் அவ் விளக்கைத் தூண்டிவிட்டு நகைகளைக் கவர்ந்தான். அதுசமயம் அவன் ஆயுள் முடிவடைய, இயம கிங்கிரர்கள், உத்தம சர்ப்பத்தின் பற்களினின்று விளங்கும் விஷம்போன்ற இக் கொடிய பிராமணனைப்

பிடித்து எமதருமராஜன் முன்னிலையில் நிறுத்த, அத் தருமராஜன், "ஏ பிராமணா! நீ பூலோகத்தில் செய்த கொடும் பாவங்கள் காரணமாக வேடனாகப் பிறக்கக் கடவாய். இருந்தாலும், கார்த்திகை சோமவாரத் தன்று சிவபெருமான் சந்நிதியில் இருந்த தீபத்தை நீ கெட்ட எண்ணத்தோடு தூண்டி யிருந்தாலும், அந்த வெளிச்சம் சிவபெருமான் சந்நிதியைப் பிரகாசிக்கச் செய்ததால், நீ ஒருவாறு, புண்ணியம் இயற்றினவனானாய். ஆகையால் பூலோகத்தில் வேடனாய்ப் பிறந்து இடைமருதூரையடைந்து ஆங்குள்ள வாயு தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, மருதவாணரைத் தெரிசித்து இன்புற்றிருக்கக் கடவாய்" எனச் சொல்லிப் பூமியில் பிறக்கும்படி அனுப்பி விட்டான்.

அவ்வாறே அப் பிராமணன் வேடர் குலத்திற் பிறந்து, மருதூரை யடைந்து, வாயுதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து, புனிதனாகி, ஸ்ரீ ஜோதிர்மய மகாலிங்கப்பெருமான் அருள் பெற்று, என்றும் அழியாத சிவலோகத்தைச் சார்ந்து பெருமை பெற்றிருந்தான்.

இத்தீர்த்தம் வாயுவினால் உண்டாக்கப்பட்டதனால் 'வாயுதீர்த்தம்' எனப் பெயர் பெற்றிருக்கிறது. என்று சூதமாமுனிவர் வாயு தீர்த்தத்தின் வளமையைக் கூறிப் பின் குபேரதீர்த்தத்தின் பெருமையைச் சொல்வாராயினார்.

[இத் தீர்த்தம் திருபுவனத்தில், ஆற்றுக்குப் போகும் நடைப்புப் பாதைக்குக் கீழ்புறம் இருக்கும் குளமே. என்று பெரியோரால் கூறப் படுகிறது.]

வாயுதீர்த்தச் சருக்கம்

முற்றிற்று.

இருபத்தைந்தாவது
குபேரதீர்த்தச் சருக்கம்.

மேற்கூறிய வாயுதீர்த்தத்திற்குக் கிழக்கே ஐந்து விற்கடை தூரத்தில் குபேரனால் ஏற்படுத்தப்பட்ட ஓர் தீர்த்தம் உள்ளது. அதற்குத் தேவதை குபேரன். தீர்த்தபாலகர் கண்டாகர்ணன். இருஷி மார்க்கண்டேயர். விருக்ஷம் சண்பகம். இதில் ஸ்நானம்

செய்து, மோதகம், கரும்பு, சர்க்கரை, புஷ்பம், கோதுமையாகிய இவைகளை அந்தணர்களுக்கு அன்புடன் தானம் செய்தால் எத்தகைய தீவினைகளும் ஒழியும். அஷ்ட ஐசுவரியங்களும் பெருகும். குபேரன் இத் திருவிடைமருதூரில் இந்தத் தீர்த்தத்தை உண்டுபண்ணி, அதில் ஸ்நானம் செய்பவர்களுக்கு விரும்பும் பலன்களை அளிக்கவேண்டிச் சிவபெருமானைப் பிரார்த்தித்து, அவ்வரங்களையும் அத் தீர்த்தத்திற்கு அருளும்படிச் செய்து, தானும் வேண்டிய வரங்களைப் பெற்றுக்கொண்டு மருதவாணரை வணங்கித் தன்னுலகம் ஏகினன். இத் தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து சகல பாபங்களும் நீங்கப்பெற்று விசேஷ செல்வத்தையும் அடைந்தவர் பலர். என்று குபேரதீர்த்தத்தின் பெருமையைக் கூறிச் சூதமாமுனிவர் பின் ஈசானதீர்த்தத்தின் சிறப்பைக் கூறுவாராயினர்.

[இக் குபேர தீர்த்தம், இத் தலம் வடக்குவீதி அரண்மனைக்குள்ளிருக்கும் தடாகமே என்று பெரியோர்கள் சொல்லுகிருர்கள்.]

குபேரதீர்த்தச் சருக்கம்

முற்றிற்று.

இருபத்தாருவது
ஈசான தீர்த்தச் சருக்கம்.

மேற்கூறிய குபேர தீர்த்தத்திற்கு மேற்கே இரண்டு விற்கடை தூரத்தில் தீர்த்தமொன்றுளது. இதற்கு அதி தேவதை ஸ்ரீ சங்கரர். தீர்த்த பாலகர் மாணிபத்திரன். இருஷி வசிஷ்டர். விருக்ஷம் விளா. இத் தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து, உருத்திராக்கம், வஸ்திரம் இவைகளை வேதியர்களுக்குத் தானமாக அளித்திடில் சிவஞானம் எய்தும். புத்திர சந்தானம் உண்டாகும்.

முன், மிருகண்டு மாமுனிவரின் தவப் புதல்வரான மார்க்கண்டேயமுனிவர் இத்தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து, சிவஞானம் பெற்றுப் பின், மருதவாணரையும் தரிசித்துப் பூஜைசெய்து, அதன்

பின் திருக்கடவூர் சென்று, அங்கு தன்னுயிரைக் கொள்ள வந்த தென் றிசைமன்னனாகிய இயமனையும் வென்று நீடூழிகாலம் இன்புற் றிருந்தார்.

இத் துணைப்பெருமை வாய்ந்த இத் தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து தானாதிகள் கொடுத்து மருதவாணரை வணங்கிப் பல சித்தி களைப் பெற்று, மோக்ஷ பதவியையும அடைந்தவர் அநேகர்.

இத் தீர்த்தம் ஈசானனால் ஏற்படுததப்பட்டமையால் ஈசான தீர்த்த மென்று பெயர் உண்டாயிற்று. என்று சூதமாமுனிவர் நைமிசாரணிய இருஷிகளுக்குக் கூறிப் பின் ஸ்ரீ கண்ணபிரானால் ஏற்படுத்தப்பட்ட கிருஷ்ண கூபத்தின் பெருமையைச் சொல்லுவா ராயினர்.

[இத் தீர்த்தம் மகாதானபுரம் அக்கிரகாரத்திலிருந்து கோவிந்த புரம் செல்லும மார்க்கத்தில் இடைத்தெருவின் கீழ்க்கோடியிலுள்ள தாமரைக் குளம என்று பெரியோர்களால் சொல்லப்படுகிறது.]

ஈசான தீர்த்தச் சருக்கம்

முற்றிற்று.

இருபத்தேழாவது

கிருஷ்ணகூபச் சருக்கம்.

ஸ்ரீ மகாலிங்கப்பெருமான் ஆலயத்தினுள் மூலஸ்தானத் திற்கு ஈசானிய திக்கில், முன கண்ணபிரான் வந்து மருதப் பெரு மானைப் பூஜை செய்யுங்காலையில், கூப ரூபமாய் ஓர் தீர்த்தம் ஏற்ப டுத்தினார். அதில அஷ்டமிதினத் தன்று ஸ்நானஞ்செய்தல் மிக்க உத்தமம். இத் தீர்த்தத்தில் தானங்கள் பல செய்தல் நலம். இத னால் ஒருவர் செய்த எத்தகைய கொடிய வினைகளும் நீங்கும். இரண உபத்திரவங்கள் தொலையும். நற்குணமுடைய மங்கையை மணக்கச் செய்யும். புத்திரசந்தானம் உண்டாகும். சிவபெருமானுடைய கருணையும் மிகுத்திடும்,

முன்னொருகாலத்தில் மகாபலிச்சக்கிரவர்த்தி திரிலோகத்தையும் ஆண்டுவருங்கால், இரப்போருக்கு இல்லையென்று சொல்லாத வள்ளல் எனப் பெயர்பெற்று விளங்கினான். இதைத் தெரிந்த மகாவிஷ்ணு, அச் சக்கிரவர்த்தியின் ஈதல் தன்மைக்கு மெச்சி, அவனை ஆட்கொள்ளும்பொருட்டு, வாமனமூர்த்தி அவதாரமாகி, அவ் வரசனிடஞ்சென்று, தனக்கு யாகம் செய்யவேண்டித் தன் காலால் மூன்று அடி மண் வேண்டலும், மகாபலிச்சக்கிரவர்த்தி, அப்படியே கொடுப்பதாக வாக்களித்தான். பின் கமண்டலத்தில் தீர்த்தம்கொண்டு, கிரமப்படி தீர்த்தம் வார்த்து தானம் செய்ய எத்தனிக்கையில், அச் சக்கிரவர்த்தியின் குருவும், பிருகுவம்சத்திற் பிறந்தவருமான சுக்கிர பகவான், ஸ்ரீ மகாவிஷ்ணுவின் மாயாரூபத்தையும், அவர் கொண்ட எண்ணத்தையும் அறிந்து அத்தகைய தானம் கொடுக்கக்கூடாதென்று தடுத்தார். தடுத்தும், சக்கிரவர்த்தி சொன்னசொல் தவறுவேந்தனுதலால் அவரைப் பொருட்படுத்தாது, கெண்டியை எடுத்துத் தானஞ்செய்வதற்குத் தீர்த்தம் வார்க்க ஆரம்பித்தான். பின், யோசித்து சுக்கிராசாரியார் அக் கெண்டியின் நீர்த்தாரைக்குள் புகுந்து நீரைவிடாமல் அடைத்துக்கொள்ள, இதை யறிந்த வாமனமூர்த்தி, ஓர் தர்ப்பையினால் அத் துவாரத்தைக் குத்தலும், அது சுக்கிரபகவானுடைய ஓர் விழியிற் பட்டுக் கண் மணியொன்று சிதறிவிட்டது. அதைப் பொறுக்க மாட்டாதவராய்த் தன் முகத்தை எடுக்க, பிறகு சக்கிரவர்த்தி தான் கொடுத்த வாக்குப்படி தானம் செய்து, தானும் மகாவிஷ்ணுவின் திருவடிகளுக்கு ஆளாகினான். சுக்கிராசாரியார் ஒற்றைக்கண்ணை இழந்து, மனக்கிலேசமுற்று வருந்தினார்.

நம்மை யாசித்தவர்களுக்கு நாம் இல்லையென்னாது கொடுத்தல் வேண்டும். கொடுக்க சக்தியில்லாவிட்டால், கொடுக்கக் கூடிய வொருவரைக் காட்டி உதவிசெய்யவேண்டும். அதுவும் முடியாவிட்டால் தான் வாளா இருத்தல் வேண்டும். தானம் கொடுப்பவர்களிடம் குறுக்கேநின்று தடுப்பவர்கள் பல துன்பத்தை யடைவார்கள் என்பது ஒரு ஆச்சரியமன்று. தானதருமங்கள் செய்கிறவர்கள் தாம் இன்பத்தை யனுபவிப்பதுந் தவிர, பூர்வம் துன்பம் நேர்ந்திருந்தாலும், அது நீங்கி, உலகெங்கும் அவர் கீர்த்தி பரவும். அப்படிக்கின்றி அத் தான தருமங்கள் செய்வதற்கு இடையூறாயிருப்பவர்கள், துன்பத்தை யடையப்பெற்று, பூர்வம் கொஞ்சம் நன்மையைச் செய்திருந்தாலும், அது நீங்கி, உலகெங்கும் வசைச்சொல்லே

பரவப்பெற்று மனங் குன்றுவார்கள். என்னும் இந்நீதிகளை வரிசைக் கிரமமாக மகாபலிச்சக்கிரவர்த்தி, சுக்கிராசாரியாராகிய இவர்களி டமிருந்து அறிந்து கொள்ளலாம். இதற்கொப்ப, சக்கிரவர்த்தி, நித்தியானந்தப் பதம் அடையவும், அவனுடைய ஆசாரியார் கண்ணிழந்து வசைச்சொல்லுக்கு ஆளாகித் துன்புற்று, வருந்துவாரானார்.

கடைசியாக நம்மிடைமருதூர் வந்து, மகாவிஷ்ணுவின் அவதாரமான 'ஸ்ரீகிருஷ்ணபகவானால்' ஏற்படுத்தப்பட்ட இக்கிருஷ்ண கூபத்தில் ஸ்நானம் செய்ததும், இவர் ஈதலைத் தடுத்தோர் என்பதைக் காட்டும் அறிகுறியாகப் பார்ப்போருக்கு மட்டும் ஊனமாய்த் தோன்றும்படிக்கும், தனக்கு நன்றாய்த் தெரியும்படிக்கும், இழந்த கண்மணியைப் பெற்று, ஆநந்தங்கொண்டு, புளகாங்கிதராய், மெய்ம்மறந்து, பரவசமாகி, உமாதேவி சமேத ஸ்ரீ ஜோதிர்மய மகாலிங்கப்பெருமானைத் தன் இருகண்களாலும் மனமாரத் தரிசித்து, நானாவித நறுமலர் கொண்டு, அப் பெருமானை அருச்சனை செய்து, தோத்தரித்து, தனக்கு உற்ற தீவினை நீங்கினவராய் விளங்கித் தன்னிருப்பிடம் ஏகினார். எனச் சூதமாமுனிவர் இத் தகைய உத்தமதீர்த்தங்கள் இத்தலத்தில் கணக்கிலவென்று கூறிப் பின் சிவபெருமான் திருக்கண்களிலிருந்து பெருகி உண்டான தீர்த்தமாகிய கனக தீர்த்தத்தின் பெருமையைக் கூறுவாராயினர்.

கிருஷ்ணகூபச் சருக்கம்
முற்றிற்று.

இருபத்தெட்டாவது
கனகதீர்த்தச் சருக்கம்.

முன் தவநிலைச் சருக்கத்திற் கூறியவாறு சிவபெருமானின் திருக்கண்களிலிருந்து பொழிந்த கருணை நீரின் ஒரு பகுதி பொன்னிறத்தோடு வாயுதிக்கில் தங்கின காரணத்தினால் அந் நீர்த்தொகுதிக்குக் 'கனகதீர்த்தம்' என்றும் அதில், காகமானது மூழ்கி முக்தி பெற்றதன் காரணமாகக் 'காகதீர்த்த' மென்றும் வழங்குகிற ஓர் தீர்த்தம் திருக்கோயிலின் வாயுதிக்கில் அமைந்துள்ளது.

இத் தீர்த்தத்தின் மகிமையைச் சொன்னாலும், அதைக் கேட்டாலும், அதைத் தரிசித்தாலும் ஊழ்வினை நீங்கும். அத் தீர்த்தத்தைக் கையினால் தொட்டால் எல்லா வினைகளும் பறக்கும். அதில் ஒரு துளி புரோக்ஷணம் செய்துகொண்டால் பதினாயிரம் யாகம் செய்த பலன் கிடைக்கும். கொடிய பிணிகள் நீங்கும். அஷ்ட ஐசுவரியங்களும் பெருகும். ஒரு தரம் அதில் மூழ்கினால் இம்மையில் கருதிய எல்லாம் வந்தடையும். மறுமையில் அழிவில்லாத உருத்திர கணங்களோடு சேர்ந்து உறையும் பெருமையும் உண்டாகும். அதிலும் பங்குனிமாதப் பிரவேசத்தில் ஸ்நானம்செய்தல் நிரம்ப விசேஷம்.

குருபத்தினியைப் புணர்ந்ததன் காரணமாகக் கொடிய சாபத்துக்காளாகி, வருந்திய சந்திரன், இத் தீர்த்தத்தில் மூழ்கித் துன்பம் நீங்கி, இன்புற்றிருந்த விருத்தாந்தம் முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் பலர் இத் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து விசேஷபலன் அடைந்திருக்கிறார்கள். என்று சூதமாமுனிவர் கூறிப் பின் கங்கா கூபத்தின் வரலாற்றைக் கூறுவாராயினார்.

[இத் தீர்த்தம் வடக்குமடவிளாகத்தின் மேல் கோடியில் மேலவீதிக்குக் கீழ்சார்பில் அமைந்துளது.]

கனகதீர்த்தச் சருக்கம்

முற்றிற்று.

இருபத்தொன்பதாவது

கங்கா கூபச் சருக்கம்.

முன் குமாரபூஜைச் சருக்கத்திற் கூறியபடி ஸ்ரீ குமாரக் கடவுள் அருளினால் மூலஸ்தானத்திற்கு ஈசான திக்கில் 'கங்காகூபம்' எனப் பெயருள்ள ஓர் தீர்த்தம் உள்ளது. சிவபெருமான் அருளால் இக் கூபத்தில் கங்காதேவி ஸ்திரவாசமாகத் தங்கியிருக்கும், இத் தீர்த்தத்தை நோக்கினாலும், ஸ்பரிசித்தாலும் முன் செய்த கொடிய வினைகள் யாவும் நீங்கும் என்றால், ஸ்நானஞ் செய்தோர்

அடையும் பலனையுங் கூறவும் வேண்டுமோ! இதில் ஸ்நானஞ் செய்து சிவலிங்கம், சிவிகை, இரதம், வெண்குடை, வெள்ளி, பொன் இவைகளில் தங்களுக்கியன்ற அளவு தானஞ் செய்தால், பகைவர்களின் வலிமை குன்றும். எல்லா இன்பங்களும் வந்து அடையும். சிவபெருமானுடைய திருவடித்தாமரையை அளிக்கும்.

இத் தீர்த்தத்தின் அதிதேவதை அதன் வட சார்பிலுள்ள அர்த்தநாரீஸ்வரரும், இருஷி அதன் அக்கினிதிசையிலுள்ள விபண்டக முனிவரும், தீர்த்தபாலகர் கிழக்கேயுள்ள பைரவக்கடவுளும், நிருதிதிக்கிலுள்ள பிரமதேவருமாகப் பெற்று, மேற் றிசையில் மருத விருக்ஷத்தையும் உடையதாகி விளங்குகிறது. அதில் மூழ்கி, ஒருதரம் பிதுர் தர்ப்பணஞ் செய்தால், ஒரு வருஷத்திற்குரிய தொண்ணூற்றாறு பிதுர் தினங்களிலும் காசி க்ஷேத்திரத்தில் கங்கைக் கரையில் செய்த தர்ப்பணத்தின் பலன் அவ்வளவும் கூடி, இன்புறுவார்கள். அதன் புறத்தே யிருந்து ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை நூறு உருச் செபிப்பார்களேயானால் ஏனைய தலங்களில் அதை ஆயிரங் கோடி உருச் செபித்தலின் பலனை அளிக்கும்.

இத் தீர்த்தத்தில் நீரை எடுத்து ஸ்நானஞ் செய்து அவரவர்களின் கொடிய வினைகள் யாவும் நீங்கி, ஸ்ரீ ஜோதிர்மய மகாலிங்கப் பெருமானை வணங்கி இன்புற்று சாயுச்சிய பதவியை அடைந்தோர் எண்ணிலர். என்று சூத மாமுனிவர் சௌனகாதி மகருஷிகளை நோக்கிக் கூறிப் பின் கருடதீர்த்தாதி பத்து தீர்த்தங்களின் மகிமைகளையும் கூறுவாராயினர்.

[இக் கங்காகூபமே, ஸ்ரீ மகாலிங்கப்பெருமானுக்கு இன்றும் அபிஷேகத்திற்குத் தீர்த்த மெடுக்கும் கேணியாம்.]

கங்கா கூபச் சருக்கம்

முற்றிற்று.

முப்பதாவது

கருடதீர்த்தாதிச் சருக்கம்.

ஸ்ரீ மருதவாணப்பெருமான் சந்நிதிக்கு எதிரில் ஒப்புயர் வற்று அநாதியாய் விளங்கும் தீர்த்தம் ஒன்று உளது. கருடபகவான் அதில் ஸ்நானம்செய்து தான் கருதியவற்றை யடைந்து, இன்புற்ற காரணத்தால், அதற்குக் 'கருடதீர்த்தம்' என வழங்கலாயிற்று. இதில் மூழ்கித் தம் கொடிய வினைகளும், தீராப் பிணிகளும் நீங்கப் பெற்று, சிவபெருமான் அருளையும் அடைந்தவர் பலர். கருடபகவான் அதில்மூழ்கிப் பெற்றபேற்றைக் கூறுகிறேன் கேளுங்கள்.

தக்கனுக்கு அநேக புதல்வியர் உண்டு. அவர்களுள் காசியப முனிவரை மணந்திட்டவர்களான, விநதை, கத்துரு இருவர்களும் ஒற்றுமையாகக் கூடிவாழுங்காலத்தில், வேடிக்கையாய் ஓர் நாள் உலக சமாசாரம் பேசிக்கொண்டிருந்தார்கள். அச் சமயம் விநதையானவள், தேவேந்திரனுடைய குதிரையின் வால் வெண்மைநிறம் எனத் தான் கண்டதைச் சொன்னாள். அதற்குமாறாக, கத்துரு, அது கருநிறம் என்றாள். இருவர்களுக்கும் வாக்குவாதமுற்றிக் கடைசியாய், அதைப் போய்ப் பார்ப்பதென்றும், வார்த்தையில் பொய்யானவள் மற்றவளுக்குக்குற்றேவல்புரிந்து, அடிமைவேலை செய்யவேண்டுமென்றும், பிரதிக்ஞை செய்துகொண்டார்கள். இதற்குள் கத்துரு, வஞ்சனையினால் தம் பிள்ளைகளான பாம்பினங்களை யழைத்து, அக் குதிரையின் வாலைக் கருநிறமாகும்படி செய்யச் சொல்ல, அவைகளில் ஒன்று சென்று, தன்னிடமுள்ள விஷத்தை அக் குதிரையின் வாலில் கக்கலும், அந்த வால் கருநிற மடைந்துவிட்டது. பிறகு, விநதை, கத்துரு இவர்கள் இருவரும் போய்ப்பார்க்க, வால் கருமையாயிருந்ததால் இக் கொடிய வஞ்சனையை அறியாத விநதை, திகைத்து, சொன்னசொல் தவறாமல், அன்றுமுதல் கத்துருவுக்குக் குற்றேவல் புரியும் அடிமையாகிவிட்டாள்.

அதனால் தன் சரீரம் மிக்க இளைப்படைந்து, மனம் நொந்திருப்பதை, அவ் விநதையின் உத்தமப் புதல்வனாகிய கருடநாயகன் கண்டு, வருத்தமுற்று, அதன் வரலாற்றைத் தெரிந்து, மனமுளைந்து, தன் சிறிய தாயாகிய கத்துருவிடம் சென்று, "ஏ அன்னையே!

உலகத்தில் உங்களுக்குத் தெரியாத தருமநெறி யாதொன்று மில்லை. தாங்களே முறை தவறிவிட்டால் எம்போன்ற சிறியார் என்ன செய்யமாட்டார்கள்? மூத்தாள், இளையவளுக்குப் பணிவிடை செய்தல் தகுமோ? இது தருமநெறியோ? என தாயாகிய விநதையை அடிமைத் தொழிலிலிருந்து விடுவிக்கவேண்டும்.'' எனப் பணிவுடன் உரைத்தான். கத்துரு, இவ் விஷயத்தைத் தன் புத்திரர்களாகிய பாம்பினங்களுக் குரைத்தலும், அப் பணிகள், இவ் வார்த்தைகளைக் கேட்டு, தேவாமிருதத்தைக் கொணர்ந்து கொடுத்தால், அவன் அன்னையை அவ் வடிமைத் தொழிலிலிருந்து விடுவிக்கலாமென்று சொல்லவும், கத்துருவும் இதைக் கருடனுக்குத் தெரிவித்தாள். உடனே கருடன், சகல வளப்பங்களும் அமைந்து கருதியதைக் கருதியவாறே அளிக்கும் தன்மையையுடைய இடைமருதூருக்கு வந்து, கருடதீர்த்தம் என்று சொல்லப்படும் இந்த அநாதியான தீர்த்தத்தில் மூழ்கி, ஸ்ரீ பிருஹத்சுந்தரகுஜாம்பிகா சமேத ஸ்ரீ ஜோதிர்மய மகாலிங்கப்பெருமானைத் தரிசனைசெய்து, பணிந்து, துதித்துப் பின் தேவலோகம் சென்றது. ஆங்கு எவரும் உள்ளே நுழையவொண்ணுதபடி சுற்றிக்கொண்டிருக்கும் ஆக்ஞா சக்கரத்தின்பால் படாமல் அணுவுருவாகி, கருடபகவான், உட்சென்று, ஆங்கு விளங்கப்பட்ட அமிருதகலசத்தை மெல்ல எடுத்துத் திரும்புங்கால், தேவர்கள் கண்டு, கடுஞ்சினங்கொண்டு, போர்புரிய, அவர்களைத் தோற்கும்படிச் செய்துவரப் பின்தொடர்ந்து தேவர்கள் கருடனைத் துதித்துப் பிரார்த்திக்க, கருடன், 'ஏ தேவர்களே! நான் நாககணங்களுக்குக் கொடுத்த வாக்குத் தவறாமல், இதைக் கொண்டுபோய் வைத்து, என் தாயாரை அடிமைத் தொழிலினின்றும் விடுவித்துக் கொள்ளுகிறேன். பிறகு நீங்கள் எடுத்துச் செல்லுங்கள்.'' என உரைத்து, அவ் வமிருதத்தைக் கொணர்ந்து, தருப்பாசனத்தில் வைத்து, பாம்பினங்களை நோக்கி, ஸ்நானம் செய்துவிட்டு அதைத் தொடும்படி தெரிவித்தான். உடனே விநதை, அடிமைத் தொழிலினின்றும் நீங்கப்பெற்றாள். நாககணங்கள் ஸ்நானம்செய்து வருமுன், தேவர்கள் அக்குடத்தை எடுத்துச் சென்றுவிட்டார்கள். பாம்பினங்கள் வந்து பார்த்துத் திகைத்தன. குடத்தைக் காணாமல் வருந்தின. அவ் வமிருதகலசம் வைக்கப்பட்டிருந்த தருப்பையைப் பார்த்து ஆசையோடு நாவினால் நக்கின. உடனே நாக்கு இருகூறாகப் பிளவுபட, வருந்திச் சீறிக்கொண்டு போய்விட்டன.

இவ்வளவு வலிமையும் உண்டானதற்குக் காரணம், அக் கருடன் மருதவனத்தில மேற்சொன்ன தீர்த்தத்தில ஸ்நானஞ்செய்து மருத வாணரை வணங்கின பெருமையினாலானது. என்று, நைமிசாரணிய இருஷிகளே உங்களுக்கே தெரியும் எனக் கூறிப் பின் வசுதீர்த்தத்தின் பெருமையைக் கூறுவாராயினர்.

[இத் தீர்த்தம், வணக்குடிசாலையின் வடபுறம் தற்போது அம்புப்பிரிய னோடை என வழங்குவதெனச் சொல்லுகிறார்கள்.]

வசுதீர்த்தம்:-முற்கூறிய இயமதீர்த்தத்துக்கு ஈசான திக்கில் வசு தீர்த்தம் என்று ஒன்றுளது. இதில் சுக்கிலபக்ஷம் அஷ்டமிதிதியில் ஸ்நானஞ்செய்வோர் சகல பிணிகளும் நீங்கி, புகழுடன் அஷ்ட ஐசுவரியங்களைப் பெற்று, மருதவாணப் பெருமான் அருளையும் அடைவார்கள். இது வசுக்களால உண்டாக்கப்பட்டதால் இப் பெயர் வந்தது.

[இத் தீர்த்தம், ஏனாதிமங்கலம் செல்லும் பாதையில் ஆண்டவிநாயகன் பேட்டைக் கிராமத்தின மேற்புறமுள்ள குளம் எனப் பெரியோர் கூறுகிறார்கள்.]

சூரியதீர்த்தம்:—இது வசுதீர்த்தத்துக்கு வடக்கேயுள்ளது. இதில் பானுவாரத்தில, அருணோதயகாலத்தில் ஸ்நானஞ் செய்து மருதீசரை வணங்கினால் எத்தகைய கொடிய பிணிகளும் நீங்கும்.

[இத் தீர்த்தம், மேற்கூறிய ரஸ்தாவிலுள்ள பாக்குளம் என வழங்குவதே எனப் பெரியோர் கூறுகிறார்கள்.]

மருத்துதீர்த்தம்:—இது சூரிய தீர்த்தத்திற்குப் பக்கத்தில் உள்ளது. இதில் ஸ்நானஞ்செய்தால் எத்தகைய வாதநோயும் நீங்கும். மருத்துக்கள் கருப்பவாசஞ் செய்யுங்கால் இந்திரனால் குடல் அறுபட்டு வருந்தி, இத் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, தம் குடல் வளரப்பெற்றார்கள். இதனால் இதற்கு இப் பெயர் வந்தது.

நரசிங்கதீர்த்தம்:-முற்கூறிய வருணதீர்த்தத்திற்குத் தென்புறத்தில் ஓர் தீர்த்தம் உள்ளது. இது நரசிங்கமூர்த்தியினால் உண்டாக்கப்பட்டது. இதைத் தொட்டமாத்திரத்தில் குட்டம் முதலான கரும நோய்கள் நீங்கினோர் பலர். ஆனால் மூழ்கிப் பலன் பெற்றவரின் தன்மையுஞ் சொல்லவேண்டுமோ என்று சொன்னார்.

[இத் தீர்த்தம, வருணதீர்த்தத்திற்கு நேர, திருபுவனம் தெற்குவீதியின் தென்புறமுள்ள குளம் என முதியோர் சொல்லுகிறார்கள்.]

நந்திதீர்த்தம் :- அவ் வருணதீர்த்தத்துக்குக் கிழக்கே ஒரு தீர்த்தம் உளது. இது நந்திதேவரால் உண்டுபண்ணப்பட்டது. இதில் மூழ்கினோர் சிவஞானம் மேலிட்டவராய்ச் சிவபெருமான் அருளுக்குப் பாத்திரருமாவார்கள்.

[இத் தீர்த்தம், திருபுவனம் போகும் சாலையிலுள்ள தாத மண்டவக்குள மெனச் சொல்லுகிறார்கள்.]

துரோணதீர்த்தம் :— அவ் வருணதீர்த்தத்திற்கும் இந் நந்தி தீர்த்தத்திற்கு மிடையில் ஓர் தீர்த்தம் உளது. அதில் துரோணாசாரியார் வந்து மூழ்கித் தவஞ்செய்து, அசுவத்தாமன் என்னும் புதல்வனை யடைந்தார். இதில் மூழ்குவோர் புத்திரப்பேற்றை யடைவார்கள்.

இராகவ கூபம் :— ஸ்ரீ ராமர் இராவணனைக் கொல்ல ஏகுங்கால் இத் தலத்தில் சிவபெருமான் அனுக்ரகத்தால் அம்பிகை சந்நிதியில் ஓர் தீர்த்தம் ஏற்படுத்தினார். அதில் ஸ்நானஞ்செய்து சத்துரு முதலான பயம் நீங்கப்பெற்றோர் பலர். இதில் ஸ்நானஞ்செய்வோர், பகைவர் பயம் நீங்கி மனம் சந்தோஷத்தையடைவார்கள்.

சுரதீர்த்தம் :— வருண தீர்த்தத்துக்கு வடக்கே பதினெட்டு விற்கடை தூரத்தில் ஓர் தீர்த்தம் விளங்குகிறது. இதில் தேவர்கள் ஸ்நானஞ்செய்து சிவபெருமானைத் தரிசனம் செய்து இன்புற்றார்கள். இதில் ஸ்நானஞ்செய்தால் சிவலோகத்தை யடையச்செய்யும். தேவர்கள் மூழ்கிப் பேறு பெற்றமையால் சுரத்தீர்த்தமென்று பெயர்பெற்றது.

முனிதீர்த்தம் :— மருதவாணப்பெருமானுக்குத் தென்புறத்தில் ஓர் தீர்த்தம் உளது. இதில் ஸ்நானஞ்செய்தால் சிவபெருமான் அருளுக்குப் பாத்திரராகச் செய்யும்.

[இத் தீர்த்தம், சிங்கனீர் குளம் என்று சொல்லுகிறார்கள்.]

இத்தகையாக மேற்கூறிய கருடாதி பல தீர்த்தங்களின் மகிமைகளைக் கூறிப் பின் சூதமாமுனிவர் கச்சபதீர்த்தத்தின் மகிமையைக் கூறுவாராயினர்.

கருடாதிதீர்த்தச் சருக்கம்

முற்றிற்று.

முப்பத்தொன்றாவது
கச்சபதீர்த்தச் சருக்கம்.

விலை யுயர்ந்த மாணிக்கங்களைத் தன்னிடத்தே அடைந்துள்ள பொதிய மலையில் வீற்றிருக்கும் அகஸ்திய மாமுனிவரின் கமண்டலத்தினின்று பெருகி, கீழ்த்திசையை நோக்கி உலகெலாம் ஓங்கிப் புகழ் பெறும்படி உலவிவரும் காவிரி நதியின் கரையில் பல புண்ணிய தீர்த்தங்கள் உண்டு.

'வாரணம்' என்னும் வெள்ளையானையின் மேல் ஊர்ந்து, 'அரம்பையர்' என்னும் மாதர்கள் சூழ, 'புலவர்' என்னும் தேவர்கள் வந்திறைஞ்ச, 'வஜ்ரம்' என்னும் ஆயுதத்தை யுடைய தேவேந்திரன் பவனி வருவதுபோல, அக் காவிரியானது 'வாரணம்' என்னும் வெண்மையான சங்குகளைத் தன் அடிவாரத்தில் தாங்கப்பெற்றும், 'அரம்பை' என்னும் வாழைகள் இருபுறத்திலும் சூழப் பெற்றும், 'புலவர்' என்னும் வித்துவான்கள், தன்னிடம் படிந்து வாழ்த்தவும், 'வஜ்ரம்' என்னும் இரத்தினங்களை உடையதாகி இப் பூவுலகில் ஊர்ந்து வரும்.

'பெருமை' (பெரு + மை) என்னும் பெரிய ஆட்டுக்கடாவை வாகனமாய் உடையதாகியும், தென் கீழ்த் திசை யென்னும், அக்கினி திக்கை அடையப்பெற்றும், பஞ்ச பூதங்களுள் ஒன்றாகியும், ஜோதி ரூபியாகிய சிவபெருமானுக்கு ஓர் கண்ணாயுமுள்ள அக்கினி பகவானைப்போன்று, அக்காவிரி 'பெருமை' என்னும் மகாத்மியத்தை அடைந்து, 'தென் கீழ்த்திசை' யென்னும் அழகிய கிழக்குத்திசையை நோக்கிச் சென்றும், ஜோதி ரூபியாகிய சிவபெருமானைத் தன் கண்ணே உடைத்தாகியும், பஞ்சபூதங்களுள் தாமும் ஒன்றாகி விளங்கும்.

தன்னிடத்து அடைந்தோருடைய கொடிய வினைகளை நீக்கி, வலிமை பெற்ற 'எருமை'க் கடாவை வாகனமாகக் கொண்ட இயமனைப் போன்று, அக்காவிரி தன்னிடத்து அடைந்து படிந்தோர் கொடுவினைகளை நீக்கி, வலிமைபொருந்திய 'எருமை' முதலானவைகளை உருட்டிக் கொண்டு விரைவாய்வரும்.

மிக்க கார் என்னும் கரிய ரூபத்தைக் கொண்டு, 'நிசி' யென்னும் இரவில், 'அலை'யென்னும் சஞ்சரித்தலை உடைய நிருதியைப்போன்று,

மிக்க 'கார்' என்னும் ஜலத்தை உடையதாகி, 'நிசி' என்னும் பொன்னை அலையில உடைத்தாகி விளங்கும்.

பாசத்தை யுடைமையால் 'பாசி' என்னும் பெயரையுடைய வருணனை, அக்காவிரி தன்னிடத்திலும் பாசியை யுடையதினால் ஒத்து விளங்கும்.

உயிர்க் குயிராய் எங்கும் பரவி விளங்கும் வாயுபகவான் போலக் காவிரியானது உலகத்தி லுள்ள ஜீவராசிகள் ஜீவித்திருப்பதற்கு முக்கியமாயப் பரவி விளங்கும்.

நவரத்னங்களைத் தன்னிடத்தே யுடையவனும்ச் சிவபெருமான் பக்கலி லிருக்கும் உரிமையைப் பெற்ற குபேரன் போன்று, காவிரி, தன்னிடத்தேயும் நவரத்னங்களையும் உடையதாகி, சிவபெருமான், தன் பக்கலி லிருக்கும் பெருமையும் பெற்று விளங்கும்.

அர்ச்சிக்கப் பெற்ற அறுகை அணிந்து 'காமதகனம் நிரப்பி' என்னும் மன்மத் தகனத்தைப் பூர்த்தி செய்து, ஈசான திக்கில் அமர்ந்துள்ள ஈசானனைப் போன்று, அக்காவிரி, தன்னிடத்தும், மலராலும் அறுகினாலும் அர்ச்சிக்கப் பெற்று, காமதகனம் (கா + மதகு + அனம்) நிரப்பி என்னும் சொல்விறகேற்க சோலைக ளென்ன, மதகுகள் என்ன, இவைகளைத் தண்ணீரினால் நிரப்பி, அன்னத்தைத் தன்னிடத்தே நிரம்பப்பெற்ற காரணத்தால் 'காமதகனம் நிரப்பி' என்னும் பெயரும் பொருந்தும் தன்மை யுடையதாகி விளங்கும்.

இன்னும் பற்பல காரணங்களினால் சரஸ்வதியாகவும், இலக்குமியோடும், அம்பிகையாகவும் யாவராலும் புகழ்ந்து கூறும் தன்மையால், தன்னிடத்துள்ள மண் மணல் முதலிய யாவும், சிவரூபமாகி, ஒப்புயர்வற்று விளங்குவதாகிய அக் காவிரியின்மேல் பரவி உலவி வரும் காற்று எவர் மீதிற் பட்டாலும், உடனே அவர்களின் வினை யாவும் நீங்கிப் பறக்கும். இத்துணைச் சிறப்பு வாய்ந்த காவிரிநதியினின்றும் வருங் காற்றிற்கே இவ்வளவு மகிமையானல், அத் தீர்த்தத்தை நோக்கினோரும், அதைப் பரிசித்தோரும், அதில் ஸ்நானஞ் செய்தோரும் அடையும் பேற்றையும் சொல்லவும் வேண்டுமோ! அதில் ஸ்நானஞ் செய்தவர்களைத் தரிசனஞ் செய்தாலும் இப் பலன்கள் உண்டாகும். என்பதற்கும் ஐயமுமுண்டோ!

திரிலோகாதிபதிகளாலும் கொண்டாடப் பெற்ற கங்காநதியில் மூன்று நாட்களும், யமுனை நதியில் ஐந்துநாட்களும், முறைப்படி ஸ்நானம் செய்வதினால் அடையக் கூடிய பலன்கள், நம் காவிரியில் ஒரு தினம் ஸ்நானம் செய்வதினாலேயே எளிதில் அடைந்து விடலாம். இத் தீர்த்த ஸ்நானத்தினால், கொடிய பகைமை நீங்கும். எத் தகைய வியாதிகளும் நிவர்த்தியாகும். ஞானம் பெருகும். அஷ்ட ஐசுவரியங்களும் உண்டாகி இன்பம் மிகும். அத் தீர்த்தத்தினால் தில தர்ப்பணங்கள் செய்தால், கொடிய நரகிற் கிடந்து உழலும் பிதுர்க்களெல்லாம் அந் நரகத்துன்பம் நீங்கி, சொர்க்கத்தையடைந்து, தம் வர்க்கத்தாரையும் இன்புடன் வாழ்த்துவார்கள்.

இத்தகைய வளப்பம் பொருந்திய பொன்னி நதியின் கரைகளில், சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் தலங்கள் பல உள. அவற்றுள், மிகுந்த விசேஷம் பெற்றவை, திருவானைக்காவல், திருவையாறு, திருக்குடந்தை, திருவிடைமருதூர், திருமயிலை என்னும் மாயூரம் முதலான பல தலங்கள் உண்டு. இந் நதியில் துலா மாதத்தில் புகழ் உறும் அறுபத்தாறுகோடி புண்ணிய தீர்த்தங்களும் வந்து மூழ்கி தம்மை யடைந்த பாவங்களை நீக்கிக் கொள்ளும். அக் காலத்தில் காவிரியில் ஸ்நானம் செய்வோர் இந்த அறுபத்தாறு கோடி தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்த பலன்களை யுடைவார்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

இப் புண்ணியநதி, கவேரனுடைய புத்திரியாயும், சமுத்திர ராஜனுக்கு உயிர்த் துணைவியாயும், இப் பூவுலகின்கண் விளங்குகிற ஜீவராசிகளுக்கெல்லாம் அன்னையாகவும், 'காவிரி' என்னும் பெயருடன் அநாதியாய் விளங்கும் தீர்த்தமாகும். இதன் மகாத்மியம் இன்னும் பல உள.

இத் தகைய சிறப்புக்கள் வாய்ந்த காவிரி நதியில், இம் மருதூர் தலத்தில் வடகரையில் 'கச்சப தீர்த்தம்' என்று ஓர் துறை உண்டு. அதற்கு அதி தேவதை வாமதேவர். இருடி கச்சபமுனிவர். தீர்த்த பாலகர் வீரபத்திரர். விருக்ஷம் மா. இத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து அந்தணர்களுக்கு எள்ளன்னம், சிவிகை, தானியங்கள் முதலியன தானம் செய்தால், தான் செய்த கொடிய தீவினைகள் நீங்கப் பெற்று, பூலோகாதிபதி யாவார்கள். கொஞ்சமேனும் களங்கமில்லாத மனதையுடைய கச்சபமுனிவர் இத் துறையில்

கொஞ்சகாலம் தவம் புரிய அவர் தவத்திற்கு உகந்து, ஸ்ரீ ஜோதிர் மய மகாலிங்கப்பெருமான், வாமதேவ மூர்த்தியாய் அவருக்குக் காட்சி கொடுத்தருள, அம் முனிவரும், அம் மூர்த்தியை அடி பணிந்து துதிசெய்ய, எம்பெருமான் மகிழ்ச்சி யுற்று, 'உனக்கு வேண்டிய வரங்களைக் கேள்,' எனலும், அம் முனிவர், சிவபெரு மானை வணங்கி, 'ஏ கிருபாநிதியே! சங்கர! சதாசிவ! கங்கா தரனே! சம்புவே! தங்கள் தரிசனம் கிடைத்த பின், நான் வேண் டும் வரம் வேறு உளதோ? நான் தவஞ் செய்த இத் தீர்த்தத்துக்கு அருகில், நானும் இன்னும் மற்ற பக்தகோடிகளும் என்றும் தரி சித்து இன்புறும் வண்ணம் தாங்கள் வாமதேவ ரூபியாய் இத் தலத்தை இடங்கொண்டு வீற்றிருந் தருளல்வேண்டும்.'' எனப் பிரார்த்திக்க, சிவபெருமான் உமாதேவியாருடன், வாமதேவ மூர்த்தியாய் 'இடங்கொண்டேசுவரர்' என்னும் நாமத்துடன் எழுந்தருளியிருக்கிறார். அம் முனிவரும் உளமகிழ்ந்து ஆங்கு உறைவாராயினர். கச்சபமுனிவர் தவஞ் செய்து தங்கின காரணத் தினால் அத்துறைக்கு கச்சப தீர்த்தம் என்று பெயர் பெற்றது. இதில் ஸ்நானம் செய்து அவ் விடங்கொண்டேசுவரரைப் பணிந்து, இன்புற்றவர் பலர். என்று சூத மாமுனிவர் நைமிசாரணிய இருஷி களுக்குக் கூறிப் பின் கௌதம தீரத்தின் மகிமையைக் கூறுவா ராயினர்.

[காவிரியின் வடபுறம் வேப்பத்தூர் போகும் சாலையிலிருக்கும் 'இடங்கொண்டேசுவரர்' ஆலயமும், அதற்கு நேராக உள்ள துறை, 'கச்சப தீர்த்தம்' என்றும் பெரியோரால் சொல்லப்படுகிறது. இக் கோவிலிலிருந்து தைப் பூசகாலத்தில் வாமதேவர் விருஷபாரூடராய் எழுந்தருளி மேற் சொன்ன தீர்த்தத்தில் தீர்த்தம் கொடுப்பது வழக் கம். இக் கச்சபதீர்த்தம் கிழக்கில் ஓர் அம்புவீழ் தூரம் வரையில் பரவியிருக்கிறது. என்றும் சொல்லப்படுகிறது.]

கச்சபதீர்த்தச் சருக்கம்

முற்றிற்று.

முப்பத்திரண்டாவது

கௌதம தீர்த்தச் சருக்கம்.

மேற் கூறிய கச்சப தீர்த்தத்திற்கு மேற்கே ஓர் விற்கடை தூரத்தில் பொன்னி நதியின் வடகரையில் கௌதம தீர்த்தம் என்று சொல்லப்படும் ஓர் துறையுள்ளது. அதற்குத் தீர்த்தபாலகர் சண்டேசுரர். இருஷி கௌதமர்.

தேவேந்திரன் வஞ்சனையான காதற் பெருக்கினால் மாறுவேடம் பூண்டு கௌதமரின் பத்தினியாகிய அகலிகையின் பதிவிரதா தர்மத்துக்குப் பங்கம் ஏற்படுத்த, அதன் காரணத்தால் அகலிகாதேவி கல்லாகச் சபிக்கப் பெற்று, ஸ்ரீ இராமபிரான் சீதா கல்யாண நிமித்தம் மிதிலைக்கு ஏகுங்கால், அவருடைய திருவடிப்பட்ட மாத்திரத்தில், அகலிகாதேவி, தன் சாபம் நீங்கி இயற்கை உருவத்தையடைந்து, தனக்கு ஏற்பட்டுள்ள பழி தீராததைக் கண்டு, மனத்துயரமுற்று, பொன்னி நதியில் இக் கௌதம தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து மருதவாணப் பெருமானை வணங்கி, மனத்துயர் நீங்கிப் பிரதி தினமும் யாவராலும் போற்றப்படும் பஞ்சகன்னியர்களுள் ஒருவளாய் விளங்கும் பேற்றையும் பெற்று, தன் கணவரையும் இன்புடன் அடைந்தாள்.

இத் தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து பூதானம், கோதானம் ஆகிய தானங்களைப் புரிந்து, மருதீசரை வணங்கினால் எவ்வித கொடிய வினைகளும் நீங்கி, அஷ்ட ஐசுவரியங்களும் அடையப் பெற்று, இம்மையில் இராஜ்ய போகங்களை அனுபவித்து, மறுமையில் தேவேந்திர பதவியையும் அடையச்செய்யும். இம் மாதிரி இத் தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து, உயர் பதங்களை நண்ணினர் பலர். இத்தீர்த்தம், கௌதமர் இதில் தங்கித் தவஞ்செய்துகொண்டிருந்தமையால் கௌதம தீர்த்தம் எனப் பெயரையும் உடையதாயிற்று. என்று சூதமாமுனிவர் கௌதம தீர்த்தத்தின் மகிமையைக் கூறிப் பின், கல்யாண தீர்த்தத்தின் வைபவங்களைக் கூறுவாராயினர்.

[இத்துறை, காவிரியின் வடகரையிலுள்ள வேப்பத்தூர் கிராமத்துத் துறையின் கீழ்சார்பில் உள்ளது. என்று பெரியோர்களால் சொல்லத் தெரிகிறது.]

கௌதம தீர்த்தச் சருக்கம்

முற்றிற்று.

முப்பத்துமூன்றாவது

கல்யாணதீர்த்தச் சருக்கம்.

விசேஷ மகிமை வாய்ந்த காவிரிநதியின் தென்புறத்தில் இருக்கும் துறையில் கல்யாணதீர்த்தம் என்று ஒன்று உளது. இது கிழக்குமேற்கில் மூன்று விற்கடைதூரம் பரவியிருக்கும் பெருமையையுடையது. அதிதேவதை மத்தியார்ச்சுனேசுவரர். தீர்த்தபாலகர் திருநந்திதேவர். இருஷி உரோமசர். விருக்ஷம் அசுவத்தம்.

ஒருவர், இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்யவேண்டி எழுந்திடில், அவரைப் பற்றிய தீவினை சில விலகும். தெரிந்தோ தெரியாமலோ ஒருமுறை ஸ்நானம் செய்பவர்களுடைய பிரமஹத்தி முதலான கொடிய தீவினைகள் நீங்கும். சகல ரோகங்களும் நீங்கிச் சொஸ்தமாகும். பசு, பொன் முதலான உத்தம தானங்கள் அந்தணர்களுக்குக் கொடுத்திடில் கைலையை அடைவர். பக்தியுடன் அங்கிருந்து பஞ்சாக்ஷரத்தை ஜபித்தால், சிவ ஸ்வரூபத்தையே அடைவார்கள்.

கின்னரர், கிம்புருடர், இயக்கர், இராக்கதர், அசுரர், தேவர்கள், பன்னகர், பூதத்தலைவர், கந்தருவர், தவமுனிவர், சித்தர் இன்னும் அநேக பூலோகவாசிகள் முதலான யாவரும் அத் துறையில் ஸ்நானம் செய்து, நித்திய கர்மங்களை முடித்து, மருதீசரை வணங்கி இன்புற்றிருக்கிறார்கள். இத் துறையில் ஸ்நானம் பண்ண ஒவ்வொரு தினமும் விசேஷமானது. அவற்றுள் சோமவாரம் மிக்க விசேஷமானது. மாசப் பிரவேச தினம் அதற்குமேல் விசேஷமானது. அமாவாசை தினம் அதினும் அதிக விசேஷம். அதினும் கிரகண புண்ணிய காலங்கள் மிக்க விசேஷமானது. இவ் வளவினும் தைப்பூச தினம் மகா விசேஷம். ஆகையால்; அப் பூச தினத்தில் உலகோர் யாவரும் வந்து மூழ்கி, இஷ்ட காமியாதி பலன்களை அடைந்து உலகெங்கும் 'பூசத்துறை' எனப் பெயரிட்டு அழைப்பதனால், இத்தீர்த்தத்துக்குப் 'பூசத்துறை' என்றும், அதில் ஸ்நானம்செய்வோர் அஷ்டமங்கள ஐசுவரியங்களையும் பரமசிவனருளால் பெறுவதன் காரணமாகக் 'கல்யாண தீர்த்தம்' என்றும் சொல்லப்படுகிறது. இதில் மூழ்கிப் பலதீவினைகள் நீங்கப்பெற்று இன்புற்றவர் பலர்.

1. ஒரு காலத்தில் கார்க்கோடகன் என்னும் நாகம் மகா தூய்மை வாய்ந்தவரான பரீச்சித்து மகாராஜாவைக் கடித்துக் கொன்றமையால், தனக் கேற்பட்ட ஹத்தி தோஷத்தை, இத் துறையில் ஸ்நானம்செய்து, தன் தீவினை நீங்கி, மருதீசரை வணங்கி இன்புற்றுச் சென்றது.

2. கலிபுருஷனுடைய கொடுமைக்காளாகி, தன், நாடு, நகரம், மனைவி, மக்கள் முதலிய யாவையும் இழந்து, தன்னந்தனியாகக் காடு வனாந்தரங்கள் எல்லாம் அலைந்து, மனம் நொந்து, சரீரம் மெலிந்து, வாடியிருந்த நளமகாராஜன் இததீர்த்தத்தில ஸ்நானம் செய்து, கலி விலகப் பெற்று மனச்சோர்வு நீங்கி, மருதவாணர் அருளும்பெற்று, திரும்பத் தன் நாடு சென்றுத் தான் முன்பு இழந்தவைகளை மறுபடியும் பெற்று, மனைவிமக்களுடன் சுகித்து அரசாண்டு வந்தான். இதற்குக் காரணம் இக் கல்யாண தீர்த்த ஸ்நானமே.

3. 'முன்பு பலராமர் என் முன்னே வரவும், நான் அவரைக் கண்டு வணங்காதிருந்ததைப் பார்த்து, அவர் கோபித்து ஆங்கிருந்த தருப்பையொன்றைக் கொண்டு என்னை அடித்து, என் உயிரை மாய்த்ததினுல் உண்டான பாவத்தைத் தொலைக்க, அவர் இத் தீர்த்தத்தில் மூழ்கித் தன் தோஷம் நீங்கி, இன்புற்று, மோக்ஷ பதவியையும் அடைந்தார்.' எனவும் சூதமா முனிவர் உரைத்தார்.

4. இன்னும், முன் பகீரதச்சக்ரவர்த்தி, தம் முன்னோர்களாகிய அறுபதினாயிரம்பேர்களும் நற்கதியடைய வேண்டி, தேவலோகத்திலிருந்து கங்காதேவியைத் தருவிக்கப் பல தவங்கள் புரிந்தும், கடைசியாக, இதில் தைப்பூச தினததில் ஸ்நானம் செய்ததின் பலனுக அவன் கோரிக்கைப்படி கங்காதேவியாரும் பூலோகம் வந்து அவன் எண்ணத்தைப் பூர்த்திசெய்தாள்.

5. ஒருகாலத்தில் ஒரு கொடிய திருடன், சிவராத்திரி தினத்தன்று, கல்யாணதீர்த்தத்தில் மூழ்கிப் பின் மருதீசர் கோவிலுட் சென்று, ஆங்குள்ள சில பொருள்களைக் கவர்ந்து செல்லுகையில், இயமகிங்கிரர்கள் அவனைப் பிடித்துக் கட்டி தருமராஜன் முன்னிலையில நிறுத்தினுர்கள். அத் தருமராஜனும் அவனைக் கண்டு 'நீ சிவராக்திரியில் கல்யாணதீர்த்தத்தில் ஸ்நானம் செய்தபடியால், எவ்வளவு கொடிய தீத்தொழிலைச் செய்தவனுயிருந்தாலும், நீ கைலைக்குப் போகவேண்டியவன்.' எனச் சொல்லிக் கைலாசத்துக்கு அனுப்பிவிட்டான்.

இந்த மந்திரி இக் கல்யாண தீர்த்தத்தில் மூழ்கி இன்பமுற்றவர் இன்னும் அநேகர் உளர். அவர்களைப்பற்றிப் பின் சந்தர்ப்பம் நேருமிடத்துக் கூறுவோம். என்று சூதமாமுனிவர் உரைத்து, சேட தீர்த்தத்தின் மகிமையைக் கூறுவாராயினர்.

[இத்தீர்த்தம், தற்போது கல்லியாண தீர்த்தமென வழங்கும் பூசத்துறைக்கு மேற்கு மூன்று விற்கடை தூரம் பரவியுள்ளது என்றும், ஆதிகாலத்தில் இம் மேற்கெல்லையிலேயே, ஸ்ரீ மகாலிங்கேசர் தைப்பூசதினத்துத் தீர்த்தம் கொடுத்து வந்ததாகவும், மகாதானபுறம் அக்கிரகாரம் ஏற்பட்டதற்குப் பின் இக்கீழெல்லையில் தீர்த்தங் கொடுத்து வருவதாயும் பெரியோர் கூறுகிறார்கள். இன்றும் மேற்கெல்லைத் துறையாகிய துண்டிவிநாயகன் பேட்டைக்கு நேர்த்துறைக்குப் 'பழய பூசப்படித்துறை' என்னும் நாமம் வழங்கிவருவதோடும் அறிகுறியாகப் பழய மண்டபங்களும், படித்துறைகளும் சில இருந்து வருகின்றன.]

கல்யாண தீர்த்தச் சருக்கம்

முற்றிற்று.

முப்பத்துநான்காவது

சேடதீர்த்தச் சருக்கம்.

ஹே முனிபுங்கவர்களே! எங்கும் புகழ்பெற்றிலங்கும் பூசத்துறையின் கீழ்சார்பில் ஒரு துறை உள்ளது. ஆதிகாலத்தில் ஆதிசேடன், இப் பூமியைத் தாங்கச் சக்தியில்லாமல், உடல்மெலிந்து, மனங்கலங்கி, ஏக்கமடைந்து, சிவபெருமான் திருவடியை மனதில் தியானம் செய்துகொண்டு ஒருவாறு மனந் தெளிந்து, இவ்விடை மருதூரை யடைந்தான். மிக்க அழகு வாய்ந்த காவிரி நதியில் இத்துறையில் ஸ்நானம் செய்தான். உடனே இப் பூவுலகமல்லாது எல்லா உலகத்தையும் வசிக்கத் தக்க வல்லமையை அடைந்து, மேருவை வில்லாகவுடைய மருதீசரையும் மகிழ்வுறப் பணிந்து, வாயாரத் துதித்து நின்றான். இன்னும் புகழுறு சிவஞானத்தையும்

பெற்று, பல வரங்களும் அடைந்து தன் னிருப்பிடமாகிய பாதாள லோகம் சென்றான். ஆதி சேஷன் மூழ்கி, இத்தகைய மகிமையைப் பெற்ற தீர்த்த மாதலால் இத் தீர்த்தத் துறைக்குச் 'சேட தீர்த்தம்' எனப் பெயர்வந்தது. இதில் ஸ்நானஞ் செய்து பலன் அடைந்தவர் கள் பலர். என்று சூத மாமுனிவர் சேடதீர்த்தத்தின் மகிமையைக் கூறிப் பின் கந்ததீர்த்தத்தின் வரலாற்றைக் கூறுவாராயினார்.

சேடதீர்த்தச் சருக்கம்

முற்றிற்று.

முப்பத்தைந்தாவது

கந்ததீர்த்தச் சருக்கம்.

மேற் கூறிய சேடதீர்த்தத்திற்குக் கீழ்பால் மிகச் சிறப்பு வாய்ந்த தீர்த்தம் ஒன்று உளது. இத் துறையில் ஸ்நானம் செய்வோர் அளவில்லாத செல்வங்களும், வெற்றியும், கீர்த்தியும் அடையப் பெறுவர். இதில் திருதியை, சஷ்டி இந்தத் திதிகளில் ஸ்நானம் செய்தால் விசேஷ பலன்கள் உண்டாகும்.

ஸ்ரீ முருகக் கடவுள், உயர்ந்த பருத்த மலைகளைக் கையால் எடுத்து அம்மானை ஆடிக் கொண்டுவரும் இரண்டாயிர வெள்ளம் பூத சைனியங்களும், வச்சிராயுதத்தோடு கூடிய தேவேந்திரனும், அநேக தேவர்களும், வீரபாகு முதலான தம்பிமாராகிய நவவீரர் களும், இன்னும் பல வீரர்களும் தம்மைச் சூழ்ந்துவர, தேவகண்ட னாகிய சூரபதுமனை வதைசெய்ய ஏகினார். அச் சமயம், மிக்க புகழ் பெற்ற திருச்சேய்ஞலூர் என்னும் திவ்ய தலத்திற்கு எழுந் தருளிச், சிவபெருமானைப் பூஜை செய்து, அவரால் பாசுபதாஸ்திரம் அளிக்கப் பெற்று, உளம் மகிழ்ந்து, திருவிடைமருதூரை யடைந் தார்.

சரவணப் பொய்கையில் உதித்தவரும், கார்த்திகைப் பெண்கள் அறுவர்களால் வளர்க்கப் பெற்றவரும், ஞானசக்தி ஸ்வரூபமான வேலாயுதத்தைக் கையில் ஏந்தினவருமான முருகக்கடவுள் ஒப்

பற்ற மகிமை பெற்று விளங்கும், இக் காவிரி நதியின் தென்புறத்தில் மேலே கூறிய தீர்த்தத்தில் இன்புற்று ஸ்நானம் செய்து, மருதவாணப் பெருமானை வணங்கித் துதித்து, அவரால் சில வரங்களும் அருளப் பெற்று, தான் கருதியுள்ள சூரபதுமனின் நகரமாகிய வீரமயேந்திரபுரத்துக்குச் சென்று, அவனுடன் எதிர் எதிரிடையாக யுத்தம் பண்ணி, அவன் படைகளை வீரசொர்க்கத்திற்கு அனுப்பி, அச் சூரபதுமனால் அழிக்கப்பட்ட தேவலோகத்தைப் புதுப்பித்து, தேவர்களைச் சிறைமீட்டு, ஆங்கு குடியேறும்படிச் செய்தருளினார். அழகிய மயில் வாகனத்தில் இனிது அமர்ந்துள்ள ஸ்ரீ முருகபிரான் இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, அசுரனைக் கொன்று தேவர்களைக் காப்பாற்றும்படியான பெருமகிமையையுற்ற காரணத்தால் இத் தீர்த்தத்துக்குக் 'கந்ததீர்த்தம்' என வழங்குகிறது. என்று சூத மாமுனிவர் கூறிப் பின் ஐராவத தீர்த்தத்தின் மகிமையைக் கூறுவாராயினர்.

[இது சேட தீர்த்தத்துக்கும் ஐராவத தீர்த்தத்திற்கும் இடையே உள்ள துறை என்று பெரியோர்களால் சொல்லப்படுகிறது.]

கந்ததீர்த்தச் சருக்கம்

முற்றிற்று.

முப்பத்தாறுவது
ஐராவத தீர்த்தச் சருக்கம்.

முன் ஒருகாலத்தில் செந்தாமரை மலரில் வாசஞ் செய்கிற ஸ்ரீ இலக்குமி தேவியானவள், சரஸ்வதி தேவியிடம் ஓர் அழகிய நவரத்ன மணிமாலையைக் கொடுத்தாள். சரஸ்வதி தேவியாரும் வெகு அன்போடு அம்மாலையைத் துர்வாச மகருஷிக்குக் கொடுத்தார். இதனைப் பெற்றுக் கொண்டு துர்வாசரும் தேவலோகஞ் சென்றார். ஆங்கு தேவேந்திரன், தேவ அரம்பையர்கள் புடைசூழ்ந்து, சாமரமாதி உபசாரங்கள் செய்யவும், திலோத்தமை நடனஞ் செய்யவும், தேவ கணங்கள் பூமாரி பொழிந்து வாழ்த்தவும்,

சந்திரவட்டக் குடை மேலே தாங்கப் பெற்றும், பல ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட ஐராவதத்தின்மேல் பலவித வாத்திய கோஷங்களுக்கிடையில வீதியில் பவனி வந்துகொண்டிருந்தான். ஆங்கு அத்தேவேந்திரனைக் கண்டு, முனிவர் பல ஆசிகள் கூறி அம்பணிமாலையையும் அவனிடம் கொடுக்க, "கேடு வரும் பின்னே, மதி கெட்டு வரும் முன்னே' என்ற பழமொழிப்படி, தேவேந்திரன் வெகு அலக்ஷியமாக யானையின் மீதிருந்தபடியே ஒரு கையை நீட்டி அம் மாலையை வாங்கி, ஐராவதத்தின் மத்தகத்தின் மேல் போட்டான். மிருகத்தினுடைய சுபாவத்திற்கு ஏற்ப, அந்த யானையும் அம்மாலையைத் தன் துதிக்கையால் எடுத்துத் தரையில்போட்டுத் தன் காலினால் நசுக்கிப் பாழ் செய்தது. இதெல்லாம் கண்ணுற்ற துர்வாசமாமுனிவர் கடுஞ் சினங்கொண்டு, 'ஏ இந்திரா! திருநீலகண்டப் பெருமானின் அடியவர்களால் முற்றும் வெறுத்துத் தள்ளப்பட்ட செல்வத்தை நீ அடைந்திருக்கும் மமதையினால் அன்றோ, நான் கொடுத்த மாலையை ஒரு கையை நீட்டி வாங்கினாய்! ஏ கர்வி! பின்னும் நீ அதன் பெருமையை உணராமல் ஓர் மிருகமாகிய யானையின் தலைமேல வைத்தாய்! உன் மமதையே மமதை! அந்த யானையும் அதைத் தன் காலின்கீழ் போட்டுத் தேய்த்ததையும் கண்ணாரக் கண்டு வாளா இருந்தனை! இதெல்லாம் நீ அடைந்திருக்கும் செல்வச் செருக்கினாலல்லவா! ஏ துஷ்டா! இவ்வளவு கர்வத்துக்கும், அலக்ஷியத்துக்கும் காரணமாயிருக்கும் உன்செல்வங்களெல்லாம் சமுத்திரத்தில் போய்ச் சிந்தக்கடவது. உன் யானையும், தன் வெண்மை நிறம் மாறிக் காட்டானையாகிப் பூலோகத்தில் சஞ்சரிக்கக்கடவது." என வெகு கோபத்துடன் சாபம் கொடுத்தார். உடனே இந்திரனுடைய செல்வங்களெல்லாம், ஈசனருளைப் பெற்றவர்களுடைய தீவினைகளைப் போல நீங்கி, சமுத்திரத்தை அடைந்தன. இந்திரனும் இதைக் கண்டு மனக்கிலேசமுற்று நின்றான். அந்தோ பாவம்! எவ்வளவு செல்வமுடையவர்களாயிருந்தாலும், அவர்களும் அவர்கள் செல்வமும் பெரியோர்களுடைய கோபத்துக்குமுன் ஈடாக நிற்கவும முடியுமோ? பின் தேவர்கள் அத்திரவியங்களைக் கடலைக் கடைந்து அமிர்தம் அடையுங்கால் பெற்றார்கள். அந்த ஐராவதமும் பூலோகத்தில் உற்றுக் கரிய காட்டானையாக மாறி உலாவியது.

தன்னுயிரையும் பாதுகாத்துத் தன்னை யடைந்தோரையும் பாதுகாக்கும் மன்னவர்களைச் சார்ந்து வாழ்கிற வாழ்க்கையே பெருமையுடையது. அஃதன்றி, தரித்திர நிலையால், பிறரால் துன்பம்

அடையப் பெற்று, மெய் நடுங்கி, மனங் கலங்கித் தீவினை, தன்னைத் தொடரப் பல இடுக்கண்கள் உற்று ஆதரவின்றித் தனியே உழலும் வாழ்க்கை என்னே! பின் பூமியில் அலைந்து அலைந்து, திரிந்து உழலும் நாளில், இடைமருதூரை யடைந்து, ஆங்கு தன்னைப் போல் கொம்புகளையும் துதிக்கையையும் உடைத்தாகி, காவிரி நதியின் தென்கரையில், கந்த தீர்த்தத்திற்குக் கீழ்ப்புறம், இண்டு விற்கடை தூரத்தில், விநாயகப்பெருமான் எழுந்தருளி யிருப்பதைக் கண்டு அதன்பால் உள்ள விநாயக தீர்த்தத்தில் மூழ்கினதும், தன்னுடைய பழிபாவங்கள் நீங்கிப் பழைய அழகிய தன் உருவம் தோன்றலும், அந்த யானை ஆச்சரியமுற்று, மனச் சோகம் தீர்ந்து, ஆநந்தம் மேலிட்டு, மருதவாணப்பிரானை அடிவணங்கித் துதிசெய்து நின்றது. பிறகு, அச் சிவபெருமானை விட்டுப்பிரிய மனமில்லாமல், அத்தலத்தின் கீழ்சார்பாகத் தனக்கு ஓர் இருக்கை ஏற்படுத்திக்கொண்டு, 'ஏ பரமபிதாவே! நான் மறுபடியும் கருவினிடைப் புகாது, ஜீவன் முக்தி அடையும் வண்ணம் அருள் புரியவேண்டுமெனப் பிரார்த்தித்து, இலக்குமி தேவியைத் தன் மார்பில் வைத்துள்ள மகாவிஷ்ணு முதலான எல்லாருடைய வாழ்க்கையின் பெருமையும், சிவபெருமான் அனுக்கிரகத்தினாலேயே கிடைக்கப் பெற்றது, எனத் தெளிந்து, தான் பிரதி தினமும் அச் சிவபெருமானைப் பூஜை செய்யத் தொடங்கியது. இவ்வாறு திரிகாலமும் காலையில் இத்துறையில் ஸ்நானம் செய்து, துதிக்கையில் தீர்த்தம் கொண்டு, நறுமலர்களை ஏந்தி, அன்புடன் சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்து, அருச்சனைகளும் புரிந்து, துதியும் பல செய்தது. கொஞ்ச காலத்துக் கெல்லாம் மருதவாணப் பெருமான் மிக்க மகிழ்வுற்று, அவ் யானையின் முன் தோன்றி காட்சி கொடுத்து, "ஏ ஐராவதமே! நீ நம்மிடம் உள்ளன்போடு செய்த பூஜையை மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டோம். இனி உனக்கு வேண்டிய வரங்களைக் கேட்பாயாக! என அருள, அந்த யானை எம்பெருமானை வணங்கிப் பணிவுடன், 'ஏ கிருபா நிதியே! தீன தயாபரனே! உங்கள் திருவருள் மகிமையினால் இக் காவிரியின் துறையில் ஸ்நானம் செய்தவளவில், பூர்வம் துர்வாச மகருஷியால் எனக்கு ஏற்பட்ட சாபம் நீங்கிற்று. நானும் அழகிய பழைய உருவையும் அடைந்தேன். தங்களைப் பூஜிக்கும் பாக்கியமும் பெற்றேன். இதன் பின் யான் அடைய விரும்புவது யாது உளது? இனி இப்படியே எந் நாளும் நான் தங்களைப் பூஜை

செய்துகொண்டிருந்து, தங்களுடைய பாதத்தை அடையும் பாக்கியத்தை அன்புடனருள வேண்டும்' எனத் துதித்து வேண்டிற்று. இவ்வாறு ஐராவதம் வேண்டலும், மருதவாணப் பெருமான் 'ஏ கஜேந்திரா! இத்தலத்தில் ஏதேனும் ஒரு தினத்தில் நம்மை அன்புடன் பூஜித்தவர்கள் சிவலோகம் அடைவது திண்ணம். அப்படியிருக்க, நீ நம்மைப் பலகாலம் பூஜை செய்திருக்கிறாய். இருந்தாலும், தேவேந்திரன் நம்மிடத்து அளவு கடந்த பிரீதி உள்ளவன். நீ அவன்பாற் சென்று சிலகாலம் ஆங்கு தங்குக. அதன் பின் நமது அருளால் உனக்குச் சிவலோகம் சித்திக்கும். நீ கவலையுற வேண்டாம். ஆகையால் உடனே நீ தேவலோகம் செல்வாயாக.' என உரைத்தலும், ஐராவதம் இம் மொழிகளுக்கு மாறு சொல்லத் துணியாது, அவர் ஆக்ஞைப்படி தேவர்கள் போற்ற, விண் உலகத்தை யடைந்து தேவேந்திரனுடன் இன்புற்றிருந்தது.

நீடூழி காலமாக விநாயக தீர்த்தம் என வழங்கிய இத்துறையில் ஐராவதம் என்னும் யானை வந்து ஸ்நானம் செய்து, தன் சாபம் நீங்கப் பெற்று, அவ்விடத்தையே தனக்கு உறைவிடமாகக்கொண்டு, மருதவாணரைப் பூஜை செய்து அவர் அருளை அடைந்த மகிமையினால் அன்றுமுதல் இத் தீர்த்தத்திற்கு 'ஐராவத தீர்த்தம்' எனப் பெயர் வழங்குகிறது. இத் தீர்த்தத்தின் மகிமையைக் கூறிப் பின் வீரசேனன் பெற்ற பேற்றைச் சூத மாமுனிவர் உரைக்கலுற்றார்.

ஐராவத தீர்த்தச் சருக்கம்
முற்றிற்று.

முப்பத்தேழாவது
வீரசேனன் சருக்கம்.

மிக்க வளப்பம் பொருந்திய தாமிரபர்ணிநதி பாயப்பெற்ற தென்னாட்டிலே, அந் நதிக்கரையில், சந்திரனைச் சுற்றி இருக்கும் வளையம்போல் ஓர் அழகிய ஆழமான அகழியினால் சூழப்பட்ட நகரம் ஒன்று உளது. அதில், வீரசேனன் என்னும் பெயரையுடைய

ஓர் அரசன் இருந்தான். அவன் பெரிய நீதி மன்னன். சற்றும் கோபமில்லாதவன். கூரிய பிரகாசம் பொருந்திய வேலாயுதத்தையே ஆயுதமாக உடையவன். பகைவர்களுக்கு அஞ்சாத சிங்கம்போன்றவன்.

அவன் ஒருநாள் வேட்டையாடும் வண்ணம் தன் சைனியங்களுடன் காட்டிற்குச் சென்று ஆங்கு, செந்நாய், கவரி, மான் முதலான பல மிருகங்களை வேட்டையாடினான். அப்படிச் செய்யும் வேட்டையின் வேடிக்கையைப் பார்க்க ஆங்கு ஒரு வேதியன் வந்திருந்தான். மேகம் மாரியைச் சொரிவது போல், அவ் வரசன் பாணங்களைப் பொழிந்தான். அப்பாணங்களில் ஒன்று அங்கிருந்த ஓர் பன்றியின் வயிற்றுட் புகுந்து, பின்புறமாய் வெளிவந்து, அதன் மறைவிலிருந்த அந்தப் பிராமணன் மேற்பட்டு அவனும் உயிர் துறந்தான்.

இதை யறிந்த அரசன், மெய் நடுங்கி, பதறி, ஆங்கு விரைந்து சென்று, சோக முற்றிருந்த அவ் வந்தணனைப் பார்த்து, ' அந்தோ! என்ன பாவம்! நீர் இங்கு இருப்பதை நான் பார்க்கவில்லை. அறியாமல் பாணத்தை எய்து விட்டேன். ஆஹா! தெய்வமே! இதற்கு நான் என் செய்வேன். எவ்வாறு மனந் தெளிவேன். என்னால் அநியாயமாய் ஓர் பிராமணர் உயிர் துறந்தனரே!" எனப் பலவாறு கதறிப் புலம்பினான். இதனிடையில், ஓர் பெரிய கரிய வடிவத்தையும், கூரிய வளைந்த பற்களையும், செம்பட்டை மயிரையும், இடிமுழக்கம் போன்ற குரலையும், இருப்புலக்கையைக் கொண்டு ஓங்கப்பட்ட கரங்களையும் உடைத்தாகிய ' பிரமஹத்தி யானது ' அரசன் முன் தோன்றிப் பழிக்குப் பழி கொடுக்கும்படி அவனைப் பற்றிக் கொண்டது. இதைக் கண்டு, அரசன் ஏங்கி, மனங் கலங்கி, உடல் நடுங்கி, அவ் வுருவைக் கண்டு அஞ்சினான். கண்களை மூடிக் கொண்டான். பிறகு திறந்து நாற்புறமும் திரும்பினான். எந்தப் பக்கம் திரும்பினாலும், அந்தப் பிரமஹத்தி இருப்பு உலக்கையுடன் ஓங்கின வண்ணம் நிற்பதைக் கண்டான். ஒன்றுந் தோன்றவில்லை. கட்குடித்த பைத்தியன் போல், தன் நினைவு தனக்கில்லாமல் ஆகிவிட்டான். இவ்வாறு அரசனுக்கு ஏற்பட்ட நிலைமையைக் கண்டு அவன் ஆசாரியர் முதலான பெரியோர்கள், அவ் வரசனைப் பற்றிய பழியானது, அவன் பல தலங்கள் சென்று ஆங்குள்ள புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தா லன்றி நீங்காது என உரைத்தார்கள்.

இதைக் கேட்டலும் மந்திரி முதலானவர்கள், அவ் வரசனை ஓர் சிவிகையில் வைத்து, பல படைகள் சூழ, அநேக புண்ணிய ஸ்தலங்களுக்குக் கொண்டுபோய் ஆங்காங்குள்ள தீர்த்தங்களினால் ஸ்நானம் செய்வித்தார்கள். அப்படி வருங்கால், எந்நாட்டினும் நன்றாகிய சோழநாட்டை யடைந்து, ஆங்கு காவிரி நதிக் கரையில் சகல மகாத்மியங்களும் பொருந்தி விளங்குகிற இடைமருதூர் தலம் வந்து சேர்ந்தார்கள். உடனே, அரசனைப் பூசத்துறை என்னும் கல்யாண தீர்த்தத்துக்குக் கொண்டு வரலும், அரசன் தானே விரைவில் ஓடி, அத் தீர்த்தத்தில் மூழ்கினான். உடனே அவனைப் பற்றியிருந்த பிரமஹத்தி விலகி எதிர் நின்றது. அவ் வரசனும் தன் தலைச் சுமை நீங்கப் பெற்றவன் போல் உணர்ந்தான். மனம் தெளிவுற்றான். நிரம்பச் சந்தோஷங் கொண்டான். எல்லாரும் ஆச்சரியப்பட்டனர்கள். அரசன் அப்பழியைப் பார்த்து, "ஆஹா! இது என்ன ஆச்சரியம்! உலகத்துத் தலங்களி லெல்லாம் மேன்மையானது இவ் விடைமருதே! தீர்த்தங்களில் மகிமையுள்ளது இக்கல்யாணதீர்த்தமே! இது விஷயத்தை எனக்கும் உலகத்தாருக்கும் தெரிவிக்கும் வண்ணம் நீ என்னை வந்தடைந்தாய். இந் நன்றிக்குப் பதில், நான் உனக்கு யாது செய்யப் போகிறேன்." எனச் சொல்லி, அப் பிரமஹத்தியையும் கூட அழைத்துக் கொண்டு மருதீசருடைய ஆலயத்துட் சென்றான். அரசன் உள்ளே சென்றதும், வெளிப் புறத்தில் காவல் புரிந்துவரும் நந்திதேவர் முதலான சிவகணங்கள் அப் பிரமஹத்தியை உள்ளே செல்லவொட்டாமல் தடுக்க, அப் பழியும் வாசற்படியின் பக்கத்தில் நின்றது.

ஸ்ரீ உமாதேவியாருடன் சிவபெருமான் ஆங்கு கைலாசமாகிய மருத விருக்ஷத்தின் கீழ், பெருநலமாமுலைபம்மை சமேத ஸ்ரீ ஜோதிர்மய மகாலிங்கமாய் விளங்கும் அப் பெருமானை அன்புடன் வணங்கி, மனமார வாழ்த்தி,

அகில காரண! நிற்குண! நிராமய! அமல!
தகு நிரஞ்சன! நித்திய! தற்பரானந்த!
சகள! நிட்கள! சங்கர! சதாசிவ! மருத
மிகு நிழற்கண் வீற்றிருந்தருள் வித்தக! சரணம்.

எனப் பலவாறு, மெய்ம் மறந்து, நெஞ்சு நெக் குருகிட, இரு கரங்களையும் தலை மேற் குவித்து, கண்களினின்றும் ஆநந்த பாஷ்பம் பொழிய, பக்தி மேலிட்டவனாய், உரை குழற, துதிகள் பல செய்து, மிக்க மகிழ் வுற்றனன்.

அரசன் இத்தலத்தை விட்டு நீக்க மனமில்லாதவனாய் அவன் ஆயுள் பரியந்தம் இத் தலத்திலேயே இருந்து, மருதவாணப் பெருமானைத் தரிசனை செய்து கொண்டிருப்பதாகத் தீர்மானம் செய்து, சோழ மகாராஜாவுடன் மகிழ்ந்து, பல நாட்கள் வசித்துப், பின் சிவபெருமான் அருளைப் பெற்று, கைலையைச் சார்ந்து இன்புற்று வாழ்ந்தான்.

இவ்வாறு கல்யாண தீர்த்தத்தின் மகிமையையும், இத் தலத்தின் சிறப்பையும் உலகத்தார் அறியும்படி வீரசேன மன்னனுடைய சரிதையைக் கூறிப் பின் சூத மாமுனிவர் சித்திரகீர்த்தி மன்னன் அடைந்த பேற்றைக் கூறுவா ராயினர்.

வீரசேனன் சருக்கம்

முற்றிற்று.

முப்பத்தெட்டாவது

சித்திர கீர்த்திச் சருக்கம்.

இயல், இசை, நாடகம் என்னும் முத் தமிழ்க்கும் தலைமையாய் விளங்கும் மதுரை மா நகரில் வேப்ப மாலை தரித்த திரண்ட தோள்களை யுடையவனாகியும், பாண்டிய அரசர்களுள் பராக்கிரமம் பெற்றவனாயும், மிகுந்த அழகு வாய்ந்தவனாயும், கல்வியிற் சிறந்தவனாயும், சித்திரகீர்த்தி என்னும் பெயரையுடைய ஓர் அரசன் நீதி தவறாமல் அரசு செலுத்தி வந்தான். இம் மன்னன் ஒருநாள் தனிமையாக இளந்தளிரையுடைய பூஞ்சோலையில் உல்லாசமாய் உலாவிக் கொண்டிருக்கையில், பல தோழிமார் பின்னே சூழ்ந்து வர, மின்னல் கொடி போன்று, நுண்ணிய இடையை உடைய ஓர் இளமாது, புஷ்பம் பறித்துக் கொண்டு வருவதைக் கண்டான். அவளைக் காணலும், அரசன் மையல் கொண்டு, தன் இரு விழிகளும் அவளையே நோக்க, "ஆஹா! இம் மாது யார்? தெய்வப் பெண்ணோ? இலக்குமியோ? அல்லது தேவர்களுக்கு சதா ஆநந்தம் விளைவிக்கும் தேவ அரம்பையோ? இந்திராணியோ? அன்றி பூலோகப்

பெண் தானோ?'' எனப் பலவாறு சந்தேகப்பட்டு, பிறகு அவ ளுடைய கண் இமைத்தலை நோக்கி, அவள் பூலோகத்திலுள்ள ஓர் மாது என்று நிச்சயம் செய்துகொண்டான்.

உடனே அரசன், தன் மனதில் உண்டாகியிருக்கும் காம வேட்கையையும், அதனால் தான் அடைந்திருக்கும் தன்மையையும் குறித்து அவளிடம் நேரில் சொல்லலாமென்று துணிந்து, 'ஏ பெண் ணே! நீ தனியே இங்கு நிற்பது யாது காரணம்? உன் தோழி மார்களின் வரவை எதிர்பார்த்தோ, அல்லது என் அன்பான வரவை எதிர்பார்த்தோ? ஏன் பேசாமல் நிற்கிறாய்? வாய் திறந்து பதில் சொல்க,' எனச் சொல்லு முன்னர், அவளுடைய தோழிமார்கள் சமீ பத்தில் வந்துவிட்டார்கள். உடனே, அவர்களில் ஒருத்தி, மன்ன னைப் பார்த்து, 'ஏ மன்னவ! இம் மாது உன் வர்க்கத்தைச் சார்ந்த இன்னவருடைய புத்திரி. நீ அம் மன்னனிடத்தில் சென்று, பேசி, இவளை மணம் புரிந்து இன்புறுவீர். இதுதான் ஒழுங்கான முறை' என்று தெரிவித்தாள். அரசனும் சம்மதித்து அதி விரைவில், அரண்மனை சென்று, அன்புள்ள தன் மந்திரிகளிடத்தில் இவ் விஷ யத்தைக் கூறிப் பின் முறைப்படி அம் மாதும் மனமகிழும்படி மணம் புரிந்து அவளுடன் மிக்க இன்புற்றிருந்தான். அவள் பொறு மையில் பூமாதேவியைப் போலும், அழகில் இலக்குமியைப் போலும், உலகத்தாரால் புகழப் பெற்று, இடுகுறியினாலும் காரணத்தினாலும் 'சுகுணை' எனப் பெயர் பெற்று, தானும் தன் புருஷனும், உயிர் ஒன் றும் உடல் இரண்டுமாக வாழ்ந்து வந்தார்கள்.

ஆனாலும், அவர்களுக்குப் பிள்ளை இல்லாததால் மனதில் தீராத குறை யுடையவர்களாகி தம் ஊழ்வினையை நினைத்து வருந்தி, தரு மம் பல புரிந்தார்கள். அதனாலும் பயன் பெறாமல் வருந்திக், கடைசியாக அத் தம்பதிகள் திரிகால ஞானியாகிய சாபாலி முனிவர் முன் சென்று, அடி வணங்கி, கைகட்டி, வாய்புதைத்து நின்றார்கள். அம் முனிவரும் கருணையுடன் திருநீலகண்டப் பெருமானை மனதில் தியானம் செய்து, பின் அம்மன்னனைப் பார்த்து, ''ஏ மன்னவ! பூர்வ ஜென்மத்தில் நீ வைசிய குலத்தைச் சார்ந்தவன். இப் பெண் மணியே உனக்கு இன்புற்ற மனைவி. இவள் புஷ்பவதியானவுடன், ஸ்நானத்துக்குமுன், சாந்தியன்னியில், நீ அவளிடம் மையல் கொண்டு, அவளை அணைந்து இன்புற்றாய். இது செய்யக்கூடாது

என்று உனக்குத் தெரிந்திருந்தும் செய்தாய். அதன் தோஷத்தினல் இந்த ஜென்மத்தில் உனக்குப் புத்திர சந்தானம் உண்டாகவில்லை. ஆனல் நீ அக்காலத்தில் மாதந்தோறும் வருகிற சிவராத்திரி புண்ணிய தினங்களில் விரதம் அனுஷ்டித்து வந்த காரணத்தால் இச்சென்மத்தில் அரசனகப் பிறந்தாய். உன் மனதில் உண்டாகி யிருக்கும் குறை நீங்கி நீ இன்புற்று மகிழும்படி செய்வோம். கவனமாய்க் கேள்.

இலங்கு மந்திரங்கள் தம்மில் இசைக்கும் அஞ்செழுத்து நீடு
நலந்தரு நூல்கள் தம்மில் நவின்றிடு மறையும் எண்ணும்
பலந்தரு தேவர் தம்மில் பரமனு மதிகம் என்னத்
தலங்களி லதிகமாகும் தனி இடைமருது மன்னே.

என, மந்திரங்களில் உயர்ந்தது பஞ்சாக்ஷரமும், சாஸ்திரங்களில் உயர்ந்தது வேதமும், தெய்வங்களில் மிக்க பலனை யளிப்பது சிவபெருமானும் போல, தலங்களில் உயர்ந்த இடைமருதூருக்கு உன் மனைவியோடு சென்று, அங்கு விளங்கும் கனக தீர்த்தத்திலும், காவிரியில் கல்யாண தீர்த்தத்திலும், காருணியாமிருத தீர்த்தத்திலும், ஸ்நானம் செய்து, மருதவாணப் பெருமானுடைய திருவடித் தாமரையை வணங்கித் துதிப்பாயே யானல் உன்னைப் பற்றியுள்ள பாவமும் நீங்கும். புத்திர சந்தானமும் உண்டாகும். அதன் பின்னர் மீன ராசியில் சூரியன் பிரவேசிக்கும் காலமாகிய பங்குனி மாதப்பிறப்புப் புண்ணிய தினத்தில் சந்திரசேகரராகிய சிவபெருமானை அக்கனகதீர்த்தத்தில் தீர்த்தங் கொடுத்தருள, திருவிழாவைச் சிறக்கச் செய்வாய்" என்றார்.

அப் பாண்டிய மன்னனும் தன் மனைவியோடு அம் முனிவரிடம் பணிவுடன் விடை பெற்று, அவர் உரைத்தருளியபடி மருதூர் சென்று ஆங்கு அத் தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து, பெருநலமாமுலையம்மை சமேத ஸ்ரீ மருதவாணப் பெருமான் சந்நிதியிற்சென்று அடிவணங்கித் துதிசெய்து சிலகாலம் இத் தலத்தில் வசித்திருந்தான். இப்படி யிருக்குங்கால் அவன் மனைவியும் சிவபெருமான் அருளால் ஓர் இனிய அழகிய ஆண்மகவையும் பெற்றெடுத்தாள். இதை யறிந்த அரசன் ஆநந்த வெள்ளத்தில் மூழ்கினவனய், யாவராலும் புகழப் பெற்ற காவிரியில் ஸ்நானம் செய்து, அந்தணர்களுக்கு அளவில்லாத தானங்கள் பல புரிந்து, மருதவாணப் பெரு

மானுக்கும் உற்சவாதிகள், என்றும் ஒழுங்குபெற நடைபெறும் வண்ணம், விசேஷ மான்யாதிகளும் விடுத்தான். அக் குழந்தைக்கு 'சித்திரத்துவசன்' என்னும் பெயரையும் கொடுத்து, மகிழ்வுடன் பங்குனி உற்சவம் சிறப்பாக நடைபெறச் செய்து, தானும் தன் மனையாளுடன் அருமைப் புதல்வனோடு தன் நகர்க்கு ஏகினன்.

இவ்விதம் இத்தலத்தில் சித்திரகீர்த்தி மன்னன் அடைந்த பெருமையைச் சொல்லிப் பின் சூதபௌராணிகர் விசுவாமித்திரச் சருக்கத்தின் பெருமையைக் கூறுவாராயினர்.

சித்திரகீர்த்திச் சருக்கம்

முற்றிற்று.

முப்பத்தொன்பதாவது
விசுவாமித்திரச் சருக்கம்.

மிக்க வளப்பம் பொருந்திய துங்கபத்திரை நதிக் கரையில், தேவர்களால் புகழ்ந்து உரையாடும்படி தேவலோகத்தினும் சிறந்து சகல வளப்பங்களையும் உடைத்தாகிய சத்தகோடீசுராலயம் 'என்னும்' ஓர் ஊரில் வேதாத்தியானங்களால் பெருமை பெற்றவரும், அறநெறியே தன்னெறியாய்க் கொண்டவருமான ஓர் அந்தணாளர் வசித்து வந்தார். அவர் பரம சிவபக்தர். சிவபூஜையில் அன்பு வாய்ந்து சிவபெருமான் அருளையும் பெற்றவர். பிரதிதினம், பஞ்ச பஞ்ச உஷக்காலத்தில் எழுந்திருந்து, உத்தம தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து, திருநீறணிந்து, தும்பை, முல்லை, மல்லிகை முதலாதி நறுமலர்களும், வில்வமும் கொண்டு சிவபெருமானை மனத்திடை இருத்திச் சிவபூஜை செய்வது வழக்கம்.

இவ்விதம் அன்புடன் சிவபூஜை செய்பவர்கள், சேகரிக்கும் புஷ்பங்களில், காய்ந்து போனதும், சிலந்தி முதலாதி பூச்சிகளில் எச்சில் பெற்றதும், சுருட்டையானதும், புழுக்களாற் கடி யுண்டதுமான புஷ்பங்களைப் பரிசீலனை செய்யாது அருச்சிப்போர்கள், தம் கண் பார்வை இழந்து, குருடராய் விடுவார்கள். அப் பூஜைக் குரிய மற்ற பொருள்களையும் அவ்வாறே சோதனை செய்தல் வேண்டும்.

ஒருநாள் அவ் வந்தணர் தாம் அருச்சனை செய்யும் புஷ்பங்களைச் சோதனை செய்யாது பூஜை செய்யுங்கால், அதில் புழுவினால் கடியுண்ட மலர் ஒன்று இருந்தது. அதைக் கவனியாது அருச்சித்து விட்டார். இதன் காரணத்தினால் அவ் வந்தணர், தமது கண் பார்வை குன்றி, குருடான உடனே, மனம் நடுங்கி, மெய் சிலிர்த்து, ஏங்கி, ஒன்றுந் தோன்றாதவராய்த் திகைத்து நின்றார். அப்பால், உத்தம தவசிரேஷ்டராகிய வசிஷ்ட மாமுனிவரிடம் சென்று, "ஏ முனிபுங்கவரே! நான் மிகுந்த பக்தியுடன் சிவபூஜை செய்து வருகிறேன். யாதொரு விதமான கெடுதலும் நினைத்திலன். எனக்கு இத்தகைய கெடுதி உண்டானதற்குக் காரணம் இன்னது என்று தெரியவில்லை. யான் யாது சிவாபராதம் செய்தேனோ? எனக்குத் தோன்றவில்லை. தெளிவுறச் சொல்லவேண்டும்." என வேண்டலும், வசிஷ்ட மாமுனிவர், பார்வதி ரமணனாகிய சிவபெருமானை மனதில் தியானித்து, அந்தணரை நோக்கி, 'ஏ பிராமணோத்தமரே! நீர் சிவபக்தியில் சிறந்தவர். ஆனால் ஒருநாள் பூஜையில் புஷ்பங்களைச் சோதனை செய்யாமல் அருச்சனை செய்தீர். அதில் ஓர் புழுவினால் கடியுண்ட மலர் ஒன்று இருந்தது. அதை நீர் கவனிக்கவில்லை. அதன் காரணமாக இத் தீவினை உம்மைப் பற்றியது. நீர் வருந்த வேண்டாம். நீர் தலங்களில் உத்தமமாகிச் சகல தீவினைகளையும் போக்க வல்ல இடைமருதுக்குச் சென்று, ஆங்கு கனகதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து மருதவாணப் பெருமானையும் வணங்கினால் சுகம் பெறலாம்' எனச் சொல்லி யருளினார்.

அவ் வந்தணரும் முனிவரிடம் விடைபெற்று, மருதூர் சென்று, பசும் பொன்வடிவமான காகதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து எழலும், தன் பார்வை முன்னிலும் பதின் மடங்கு பிரகாசமானதுடன் மிக்க பரிசுத்தமான மனதையும் உடையவராய் விளங்கினார். உளம் மகிழ்ந்தார். எல்லோரும் ஆச்சரியப் பட்டனர். மன்மதனை நெற்றிக்கண்ணால் எரித்த சிவபெருமானைத் தன் மனதில் தியானம் செய்து, மருதவாணர் சந்நிதியை யடைந்து, அடி பணிந்து, நானாவித நறுமலர் கொண்டு, அருச்சனை செய்து, பல வரங்களும் பெற்று தன்னூருக்கு ஏகினார்.

இவ்வாறு சிலகாலங் கழித்து, இவ்வுடலம் நீங்கப் பெற்று, சச்சிதானந்த ஸ்வரூபியாயும் நித்தியராயும் விளங்கும் சிவபெருமானைப்

பணிந்து, பூஜை செய்த தன்மையினால், இப் பூவுலகினைக்கண், மறு ஜன்மத்தில் விசுவாமித்திரர் என்னும் பெயரையுடைய மன்னனாய்ப் பிறந்து, தவத்திலும் சிரேஷ்டமானவராக விளங்கினார். அவர் தான் இயற்றிய தபோமகிமையினால், படைத்தற் கடவுளாகிய பிரமாவுக்கு நேர் எதிரிடையாய், திரிசங்கு மகாராஜா நிமித்தம் அந்தரத்தில் ஓர் சொர்க்கலோகம் இயற்றியும், இன்னும் பலவிதமான படைப்புத் தொழில்களையும் செய்தார். இத்துணைப் பெருமையும், மான் மழு வேந்திய கரங்களையுடைய மருதவாணப் பெருமானின் இனிய தலமாகிய அம் மருதூரில் ஸ்நானம் செய்து, அம் மருதீசனைத் துதி செய்த நற்பயனே காரணம் என உரைக்கவும் வேண்டுமோ!

இம்மாதிரி, வேதாத்தியானத்தில் சிறந்தவராயும், தூயதாம் மனமுடையவராயும் சிவபூஜையிற் பக்தி யுடையவராயு மிருந்த பிராமணர் இம்மருதிடைப் புகுந்து, தீர்த்த ஸ்நானம் செய்து, மருதவாணரைப் பணிந்த பலனாகத் தவத்திற் சிறந்த விசுவாமித்திர மன்னனாய்ப் பிறந்து பிரகாச முற்ற தன்மையைக் கூறிப் பின் சூத மாமுனிவர் மதுராபுரிக்கு அரசனாகிய வரகுண பாண்டியன் அடைந்த பேற்றைக் கூறுவா ராயினார்.

விசுவாமித்திரச் சருக்கம்
முற்றிற்று.

நாற்பதாவது
வரகுண தேவச் சருக்கம்.

மிக்க வனப்புப் பொருந்திய தாமரை மலர்களை மீன்கள் தொட்டில்கள் போல ஆட்டவும், ஆங்குள்ள சோலைகளின் மலர்களிலிருந்து வண்டுகள் தேனைக் குடித்த மயக்கத்தால் ரீங்காரம் செய்து தாலாட்டவும், அத் தாமரையாகிய தொட்டில்களில் ஆமைகள் நித்திரை செய்யும் தாமரைத் தடாகங்களும், கரும்பென்ன மயங்கும் படியான செந்நெற் பயிர்களையுடைய வயல்களும், வைகை நீர் பாயப் பெற்று, சகல வளங்களும் பொருந்தியிருக்கும் தன்மையை யுடை

பது பாண்டியநாடு. அந் நாட்டிற்குத் திலகம்போல் விளங்குவதும், இலக்குமியே இன்புற்று வாசஞ் செய்யப் பெற்றதும், விராட்புருஷனுக்குத் துவாதசாந்த ஸ்தானமாயும் விளங்குகிற மதுரை மாநகரம் அந் நாட்டிற்கு முக்கிய பட்டணமானது. பாண்டிய வம்சத் தரசர்கள் இயற்றிய கருமங்கள் ஒருங்கே சேர்ந்து ஓர் உருக் கொண்டாற் போல; சுந்தரேச பாதசேகர பாண்டியனுடைய உயிர்க் காதலன் வரகுண பாண்டியன் என்பவர் செங்கோல் செலுத்திவந்தார். அவர் பகைவர்களுக்கு சிம்மம் போன்றும், எளியோருக்கு இனியவராயும், ஈதலில் கற்பகம் போன்றும், எல்லோரும் கண்டு காதலிக்கும் படியான அழகை யுடையவராயும் விளங்கினார்.

இப்படி யிருக்கும் நாளில், ஓர்தினம், சில தூதுவர்கள் ஓடி வந்து, "ஏ மன்னர் ஏறே! நம் நகரத்துக்கு மேல் புறத்துக் காடுகளிலுள்ள, புலி, கரடி, மான், செந்நாய், நரி முதலிய துஷ்ட மிருகங்கள் செய்யும் கொடுமையைச் சகிக்கக் கூடவில்லை. அவைகளை உடனே ஒழிக்காவிட்டால் நாசம் பல உண்டாக்கும்." எனச் சொன்னதைக் கேட்ட அம் மன்னர், உடனே வேட்டைக்கு வேண்டிய சைனியாதிகள் எத்தனம் செய்வித்து, முன்னர் அனுப்பி விட்டுப் பின் தானும் ஒரு பெரிய குதிரையின்மீது ஏறிக்கொண்டுசென்றார்.

முதலில் சென்றவர்கள், ஆங்கு காட்டு மிருகங்களின் அடிச் சுவடுகளைக் கவனித்து, உயர்ந்த மோப்பவாசனை அறியக்கூடிய பல நாய்களையும் நாற்புறமும் செலுத்தி, பரந்த வலைகளையும், கண்ணிகளையும் வீசினார்கள். அரசன் அங்குற்றதும் ஏவலாட்கள் சென்று, தாங்கள் செய்திருக்கும் முன்னேற்பாடுகளைத் தெரிவித்ததும், அம் மன்னர் மகிழ்ந்து, உடனே பல இடி முழக்கமான சப்தங்களைச் செய்து அம் மிருகங்களை உசுப்பி விடும்படி உத்திர வளித்தார், அஷ்டதிக்குகளும் அதிரும்படியாகக், கொம்பு, பேரிகை, சங்கு, தாரை, தப்பட்டம் முதலான வாத்தியங்களைக் கொண்டு இடிமுழக்கம் போல் சப்தம் செய்ய, அம் மிருகங்கள், சிறித் திகைத்து ஒன்றுந் தோன்றாமல், நாற்புறமும் அலமலந்து, குறுக்கும் நெடுக்குமாக ஓட ஆரம்பித்தன. அரசனும், வேடுவர்களோடு அம் மிருகங்களின் மேல் மேகத்தினின்றும் மழை பொழிவது போல், அம்புகளைச் சொரிந்து, அன்று மாலைவரை வேட்டையாடலும், அதனால் அம் மிருகங்கள் பல கொடுமைகளை அடைந்து மாண்டன. வரகுணபாண்டி

யரும் இன்புற்று, தம் படைகள் பின்னே சூழ்ந்துவர, தான் அஸ்த மன சமயத்தில் சந்திர வட்டக் குடை தாங்கப்பெற்று, தன் உயர்ந்த அசுவத்தின் மேல் ஏறிக்கொண்டு தன் நகரத்துக்குத் திரும்பி வந்தார். வரும் மார்க்கத்தில் ஓர் பிராமணன் அயர்ந்து நித்திரை செய்து கொண்டிருந்தான். அதைக் கவனியாது அக் குதிரையை வேகமாய்ச் செலுத்தும்போது, வேகத்தோடு அக் குதிரையின் கால்கள் அந்தப் பிராமணன் மார்பிற் பட்டு அவனும் இறந்தான். இதனையறியாது, அரசரும், தன் நகர்க் சேகிவிட்டார். மறுநாள் பொழுதும் விடிந்தது. இது விஷயத்தை அறிந்த அம் மன்னருடைய தூதுவர்கள், அவரிடம் தெரிவிக்கவும், உடனே அரசர், மெய்நடுங்கி, பயந்து, மனந்நழுறி, தான் அறியாமற் செய்த தீங்கை நினைந்து நினைந்து ஏங்கி, அந்தப் பிராமணனுக்கு உத்திரகிரியைகளை நடத்தும் பொருட்டு உரியாரிடம் விசேஷ திரவியங்களைக் கொடுத்தார். அப்படிச் செய்தாலும், பிராமணனைக் கொல்ல தான் காரணமாக இருந்ததனால் பிரமஹத்தியும் இவரைப் பற்றிக் கொண்டதென்றால் அதனை யார்தான் விலக்க முடியும்?

அப்பழி, அரசனைப் பற்றியகாரணத்தால், அவ் வரசர், அடிக்கடி பெருமூச்சு விடுவார்; ஒன்றுந் தோன்றுமல் மயங்கி நிற்பார்; தானே சிரிப்பார்; கையைக் கொட்டுவார்; பற்களை நறநற வென்று கடிப்பார்; கூத்தாடுவார்; கொக்கரிப்பார்; அப்பழி பயமுறுத்த அஞ்சுவார்; அலறுவார்; திடுக்கிடுவார்; இடைஇடையே சற்று நல்லுணர்வையும் அடைவார்.

இக் கொடிய துன்பத்தி னின்றும் நீங்கத், தானங்கள் பல புரிந்தார்; கோக்களுக்கு அறுகம் புல்லைப் பிடுங்கிப் போட்டார்; கோ பூஜையும் செய்தார்; விசேஷ அன்னதானுதிகள் அளவறப் புரிவித்தார்; அகமருஷண ஹோமங்களும் செய்தார். இவ்வளவு சாந்திகளும் செய்யச்செய்ய அக்கினியில் நெய் வார்க்கப் பட்டாற் போல் அப் பழியின் கொடுமை அதிகரித்ததே ஒழிய நீங்கவில்லை. இதைக் கண்ட பெரியோர்கள், கூடல் நாயகனுகிய ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானுடைய ஆலயத்தை வலம் வந்தால், அப்பழி நீங்கும் என்று சொன்னுர்கள். அரசரும் அப்படியே செய்து வருங்கால், ஒருநாள், சோமசுந்திரக்கடவுள், 'ஏ மன்னவ! நீ அஞ்சன்மின். கொஞ்ச காலத்துக் கெல்லாம் சோழநாட்டரசன் உன்னுட்டின் மேல் படையெடுத்து உன்னேடும் போர் புரிவான். அவனை நீ தோற்கடித்து

வெருட்டி அவனைத் துரத்திக் கொண்டே பக்தகோடிகளுக்குப் பூஜிக்கும் முறையைத் தெரிவிக்கும் பொருட்டு, நம்மை நாமே அருச்சித்துக் காட்டியதும், பல புண்ணிய தீர்த்தங்களை யுடையதுமான திருவிடைமருதூருக்குச் செல்வாய். ஆங்குச் சென்றதும், உன்னைப் பற்றியுள்ள பழி நீங்கும். நீயும் இன்புறுவாய்" என அசரீரியாய்த் திருவாய் மலர்ந்தருளினர். அவ்வாறே, சின்னாட்களுக் கெல்லாம் சோழராஜா, திரண்ட சேனையுடன் பாண்டிய நாட்டின்மேல் படையெடுத்துவர, இருவருடைய, இரத, கஜ, துரக, பதாதி என்னும் நால்வகைப் படைகளும், அகோர யுத்தம் புரிந்தன. வில், வாள், கதை முதலிய பல ஆயுதங்கள் பிரயோகப் படுத்தப்பட்டன. இரு திறத்திலும், பல யானைகள், குதிரைகள் மாண்டன. பல இரதங்கள் முறிந்தன, இரத்த வெள்ளமும் பெருகிற்று.

இதைக் கண்டு மீனக்கொடியை யுடையவரும், தேவர்களையும் போர் புரிந்து வென்ற தீரருமான பாண்டிய மன்னர், தானே நேரில் ஆயுதபாணியாய் யுத்தத்துக்குச் சென்று, சோழராஜாவினுடைய சைன்னியங்களைச் சின்ன பின்னப் படுத்தி, திரிலோகமும் நடுங்கும் படிப் போர் புரிந்தார். உடனே தான் தப்பும் வழியறியாமல், மிகுதியா யிருந்த, தன் படைகளுடன் சென்னிமன்னன் ஓட லாற்றான். வரகுணதேவரும் அவனை வெருட்டினார். இவ்வாறு வெருட்டுகையில், காடு, மலை, பல சிவஸ்தலங்கள் எல்லாம் தாண்டி, கடைசியாக, அநாதியானதும், பல உத்தம தீர்த்தங்களைத் தன்னிடத்தே உள்ளதும், அடியார்களுக்குக் கருதிய கருதியவாறே அளிக்கும் பெருமையையும், எத்தகைய தீவினையையும் தன்னிடத்தில் அடைந்த மாத்திரத்தில் இரவியைக் கண்ட இருள் போல் நீங்கச் செய்வதும், நானாவித வளப்பங்களும் பொருந்தியதுமான நம் மருதூர்ச் சமீபம் அணுகி, மருதவாணப் பெருமானுடைய அழகிய திருக்கோவிலின் கோபுரங்களையும் கண்டார். உடனே வரகுணமன்னரும் தன் தேரை விட்டிறங்கினர். கோபுர தரிசனம் செய்தார். தன் சரீரத்தில் உள்ள நடுக்கமும் தீர்வுற்றார். உளம் மகிழ்ந்தார்.

கோபுரங்களின் மேல் ஆடிக் கொண்டிருக்கும், வெண்மையான கொடிகள் அசைவன, சந்திரன் தன் வம்சத்தரசனாகிய பாண்டிய மன்னரைப் பற்றி யிருந்த பழி இன்றோடு தீர்ந்தது என்று அறிந்து வெகு குதூகலத்துடன் மகிழ்வதைப் போன்று இருந்தன. அத் தலத்தில் கனகதீர்த்தத்துடன் ஏனைய மாடமாளிகை கூடகோபு

ரங்கள் முதலான யாவும் ஒரே பொன் மயமாக விளங்கின. தடாகங்களிலுள்ள தாமரை மலர்களில் சங்குகளால் ஈன்ற பருத்த முத்துக்களை, அன்னங்கள் தம்முடைய முட்டைக ளென்று மயங்கி அவைகளை அடைகாத்திடும். மதில்க ளெல்லாம் மேகமண்டலம் வரை உயர்ந்து, ஆகாயத்தை அளாவி இருந்தன. இவ்வளவு வளப்பங்களும் பொருந்தி யிருக்கும் மருதூரைக் கண்டு, பாண்டியமன்னர் உளம் பூரித்தார்.

இன்னும், ஆங்குள்ள சோலைகளில் மணம்பொருந்திய பல கனிவர்க்கங்கள் நிறைந்திருந்தன. மயில்கள் நடனஞ்செய்தன. பல பூவையும், கிளிகளும் பாடிக்கொண்டிருந்தன. இவைகளை யெல்லாம் நோக்குங்கால், மகா வீரத்தன்மைவாய்ந்த பாண்டிய மன்னரை, பல கனிவர்க்கங்களுடன் நாட்டியப் பெண்கள் நர்த்தனம் செய்ய, வாத்திய கோஷங்களுடன், இத்தலம் எதிர்கொண்டழைப்பதுபோல் விளங்கிற்று.

இவ்வளவு பெருமையுடன் வரகுணதேவர் நம் மருதூர் வீதியை வலமாக வந்து, நாகுவிந்த அறுகு முதலான மலர்களால் அருச்சிக்கப்பட்டு வரும் காவிரியில், எத்துறையிலும், நற்றுறையாக விளங்கும் 'பூசத்துறையில்' ஸ்நானம் செய்து, அந்தணர்களுக்கு அளவில்லாத தானங்களும் செய்தார். பின் தன் மனமும் மேனியும் தெளிந்து, ஸ்ரீ உமாதேவியாரின் திருக் கண்களி லிருந்து பெருகி வந்து, தன்னை யடைந்தோர்களுக்குச் சகல தீவினைகளையும் களைந்து, அஷ்டஐசுவரியங்களையும் ஈயவல்ல காருணியாமிருத தீர்த்தத்தில் மூழ்கி, ஸ்ரீ ஜோதிர்மய மகாலிங்கப்பெருமானின் சந்நிதிக்கு ஏகினர். ஏகவும், இவனைப் பற்றியிருந்த பிரமஹத்தி, கீழக்கோபுர வாயிலிலேயே தங்கிவிட்டது. 'இம் மருதூரை யடைந்தோர் எத்தகைய கொடிய பாதகங்களும் என்றும் நீங்கப்பெறுவார்' என்னும் விஷயத்துக்கு இப் பிரமஹத்தி ஓர் சாட்சியாக விளங்கிக்கொண்டு அக் கோபுரவாயிலிலேயே நின்றது. மன்னரும் தன்னைப் பற்றியிருந்த பந்தமும் நீங்கப்பெற்று, சிவபெருமான் சந்நிதியிற் சென்று, அப் பெருமானுடைய திருவிளையாடல்களையும், மகிமையையும் நினைந்து நினைந்து, மெய்ம்மறந்து, அடி வணங்கி, ஆநந்த பரவசமாகி, சித்திரம் போல் நின்று, "ஹே கருணாகரக்கடவுளே! தேவாதி தேவனே! காலசம்ஹார மூர்த்தியே! சந்திர சூடா! திருநீல

கண்ட! சங்கர! சம்புவே! ஜோதிலிங்கமே! தம்மைத் தரிசிப்பதற்கு நான் பெரும் பாக்கியம் பெற்றேன். என்னை ஆட்கொண்டு அருளல் வேண்டும்.

தொல்லைவன் பிறவியென்னுந் தொடுகட
 லிடையின் வீழ்வுற்று
அல்லலில் அழுந்துவேனை அருளெனுந்
 தோணி தன்னில்
வல்லைவந் தேற்றிக்கொண்டுன் மலரடித்
 துணைக ளென்னும்
மல்லலொண் கரையிற்சேர்த்த மருதநா
 யகனே போற்றி.

எனப் பலவாறு நெஞ்சம் நெக்குருகிடத் துதி செய்யலும், "ஏ பாண்டியமன்ன! உன் பக்தியை மெச்சினேம். உன்னைப் பற்றியிருந்த பிரமஹத்தியும் கீழக்கோபுர வாயிலில் நின்று விட்டது. நீ இனி அஞ்சேல். நீ நம் சக்தியாகிய அம்பிகையின் சந்நிதி சென்று, பின் மேலக்கோபுர வாயிலாகச் செல்வாய்." என, ஓர் அசரீரி உண்டாயிற்று. இதைக் கேட்டு உளமகிழ்ந்து பேராநந்தங் கொண்டு, மறுமுறையும் பணிந்தெழுந்துப் பின் ஸ்ரீ பெருநலமாமுலை யம்மையின் திருச்சந்நிதியை யடைந்தார்.

ஆங்கு, கனகக்குழையும், சந்திர வதனமும், நெத்திச்சுட்டியும், கருணை யொழுகும் விழியும் விளங்கப்பெற்று, இறுக்கிய கச்சணிந்து கனத்துப் பருத்த தனமும், துடி யிடையும், மென்மையான பாதமலர்களும் உடைத்தாகி, பூம் பட்டாடையும், நவரத்ன கசித மயமான ஆபரணங்களும், பாதச்சிலம்பும், கனகநூபுரமும், ஒளிர் ஒட்டியாணமும் பூங் கைப் பொற்றொடியும், அணியப் பெற்றவளாயும், மெய்யன்பர்களுக்கு எளிதில் வேண்டியனவேண்டியவாறு அளிக்கும் அபயஹஸ்தங்களையும் உடைத்தாகி விளங்குகிற பெருநலமாமுலை யம்மையைக் காண்டலும், அம்மன்னர் அச் சக்திஸ்வரூபத்தை மனமாரத் தரிசித்து அடிவணங்கி, ஆநந்த பாஷ்பம் பொழிய, "பருவத ராஜன் புத்திரியாகிய கருணாகரக்கடலே! பிரணவமாகிய கூட்டில் உறை பசுங்கிளியே! பிரஹத் சுந்தர குஜாம்பிகையே! பெண் நாயகமே!" எனத் துதித்துப் பின்னும்

குருமணி விளக்கே இசைதரு வேதக் கொம்பரிற்
படரிளங் கொடியே
வரமுறு பலன்மிக் குதவுபா கமத்தே மாவில்வாழ்
சிறுகருங் குயிலே
பரவிடும் இமையோர் மணிமுடி யுரிஞ்சு
பதயுகத் தொருசுவைக் கரும்பே
மருதிடைத் திறையோன் மனத்தடத் துலவு
மடப்பெடை யன்னமே போற்றி.

பல தோத்திரங்கள் செய்து, எம்பெருமான் அருளியபடி மேலக் கோபுரவாயில் வழியாய் வெளியே சென்று, இத்தலத்தையே தனக்கு உறைவிடமாகக்கொள்ள விரும்பி, வீதியில் தனக்கு ஓர் விடுதியும் ஏற்படுத்திக் கொண்டு, மற்ற அரசர்கள் கப்பம் கட்டவும், சுகித் திருந்தார்.

இவ்வாறு வரகுண பாண்டிய மன்னர், இத் தலத்தில் தன் பிரமஹத்தி தோஷம் நீங்கி, இன்புற்றிருக்கும் செய்தியை அவர் பகையாளியான சோழராஜா கேள்விப்பட்டுப், பெரியோர்களை அனுப்பி அவரிடம் பகைமை நீங்கி, சமாதானம் செய்து கொண்டு, தன் பெண்ணையும் அவருக்கு விவாகம் செய்து கொடுத்துத் தானும் உளமகிழ்ந்தான். அப் பாண்டிய மன்னரும், ஸ்ரீ மருதவாணப் பிரானைத் தினம் நூறு பிரதக்ஷணம் செய்து வணங்கி, மேலக் கோபுரத்தையும் கட்டிப் பின் அக் கோவிலுக்கு வடபால், தன் குல தெய்வமாகிய சோமசுந்தரப் பெருமானுக்கு ஓர் ஆலயம் இயற்றி, அதற்கு வேண்டிய பூஜை முதலானதுகளுக்கும் மிகுந்த வசதிகள் செய்து, பின் அரிய தவங்களைச் செய்துகொண்டு காலங்கழித்தார். இவ்வாறாகத் தினம் நூறு அசுவப் பிரதக்ஷணம் செய்து, தவமியற்று தலினால் சரீரம் இளைத்து, மெலிந்து, வருந்தியிருப்பதை எம்பெருமான் கண்டு மகிழ்ந்து, 'வரகுணா வருக' என அவரை நோக்கி யழைத்துப் பின்னும், 'கைலேயங்கிரியி லுள்ள அழகிய கொடுமுடிக் குச் சமானமான ஒரு மதிலை, நம் பக்கல் எழுப்பி, அதை நீ ஒரு முறை வலம் வந்தால், நம்மை ஆயிரம் பிரதக்ஷணஞ் செய்வதற்கு ஒப்பாகும்' என அருளினர். மன்னரும் அவ்வாறே செய்து முடித்துச் சிவபெருமானுடன் நேருக்கு நேராக இனிது வசனிக்கும் படியான அரிய பேற்றையும் அடைந்து, அத்தலத்தில் இன்புடன் வாழ்ந்து வந்தார்.

கண்ட! சங்கர! சம்புவே! ஜோதிலிங்கமே! தம்மைத் தரிசிப்ப தற்கு நான் பெரும் பாக்கியம் பெற்றேன். என்னை ஆட்கொண்டு அருளல் வேண்டும்.

தொல்லைவன் பிறவியென்னுந் தொடுகட
 லிடையின் வீழ்வுற்று
அல்லலில் அழுந்துவேனை அருளெனுந்
 தோணி தன்னில்
வல்லைவந் தேற்றிக்கொண்டுன் மலரடித்
 துணைக ளென்னும்
மல்லலொண் கரையிற்சேர்த்த மருதநா
 யகனே போற்றி.

எனப் பலவாறு நெஞ்சம் நெக்குருகிடத் துதி செய்யலும், "ஏ பாண்டியமன்ன! உன் பக்தியை மெச்சினோம். உன்னைப் பற்றி யிருந்த பிரமஹத்தியும் கீழக்கோபுர வாயிலில் நின்று விட்டது. நீ இனி அஞ்சேல். நீ நம் சக்தியாகிய அம்பிகையின் சந்நிதி சென்று, பின் மேலக்கோபுர வாயிலாகச் செல்வாய்." என, ஓர் அசரீரி உண்டாயிற்று. இதைக் கேட்டு உளமகிழ்ந்து பேராநந்தங் கொண்டு, மறுமுறையும் பணிந்தெழுந்துப் பின் ஸ்ரீ பெருநலமா முலை யம்மையின் திருச்சந்நிதியை யடைந்தார்.

ஆங்கு, கனகக்குழையும், சந்திர வதனமும், நெத்திச்சுட்டி யும், கருணை யொழுகும் விழியும் விளங்கப்பெற்று, இறுக்கிய கச்ச ணிந்து கனத்துப் பருத்த தனமும், துடி யிடையும், மென்மையான பாதமலர்களும் உடைத்தாகி, பூம் பட்டாடையும், நவரத்ன கசித மயமான ஆபரணங்களும், பாதச்சிலம்பும், கனகநூபுரமும், ஒளிர் ஒட்டியாணமும் பூங் கைப் பொற்றொடியும், அணியப் பெற்றவளா யும், மெய்யன்பர்களுக்கு எளிதில் வேண்டியனவேண்டியவாறு அளிக் கும் அபயஹஸ்தங்களையும் உடைத்தாகி விளங்குகிற பெருநலமாமுலை யம்மையைக் கண்டலும், அம்மன்னர் அச் சக்திஸ்வரூபத்தை மன மாரத் தரிசித்து அடிவணங்கி, ஆநந்த பாஷ்பம் பொழிய, " பருவத ராஜன் புத்திரியாகிய கருணாகரக்கடலே! பிரணவமாகிய கூட்டில் உறை பசுங்கிளியே! பிரஹத் சுந்தர குஜாம்பிகையே! பெண் நாய கமே!" எனத் துதித்துப் பின்னும்

குருமணி விளக்கே இசைதரு வேதக் கொம்பரிற்
படரிளங் கொடியே
வரமுறு பலன்மிக் குதவுபா கமத்தே மாவில்வாழ்
சிறுகருங் குயிலே
பரவிடும் இமையோர் மணிமுடி யுரிஞ்சு
பதயுகத் தொருசுவைக் கரும்பே
மருதிடைத் திறையோன் மனத்தடத் துலவு
மடப்பெடை யன்னமே போற்றி.

பல தோத்திரங்கள் செய்து, எம்பெருமான் அருளியபடி மேலக் கோபுரவாயில் வழியாய் வெளியே சென்று, இத்தலத்தையே தனக்கு உறைவிடமாகக்கொள்ள விரும்பி, வீதியில் தனக்கு ஓர் விடுதியும் ஏற்படுத்திக் கொண்டு, மற்ற அரசர்கள் கப்பம் கட்டவும், சுகித்திருந்தார்.

இவ்வாறு வரகுண பாண்டிய மன்னர், இத் தலத்தில் தன் பிருமஹத்தி தோஷம் நீங்கி, இன்புற்றிருக்கும் செய்தியை அவர் பகையாளியான சோழராஜா கேள்விப்பட்டுப், பெரியோர்களை அனுப்பி அவரிடம் பகைமை நீங்கி, சமாதானம் செய்து கொண்டு, தன் பெண்ணையும் அவருக்கு விவாகம் செய்து கொடுத்துத் தானும் உளமகிழ்ந்தான். அப் பாண்டிய மன்னரும், ஸ்ரீ மருதவாணப் பிரானைத் தினம் நூறு பிரதக்ஷணம் செய்து வணங்கி, மேலக் கோபுரத்தையும் கட்டிப் பின் அக் கோவிலுக்கு வடபால், தன் குல தெய்வமாகிய சோமசுந்தரப் பெருமானுக்கு ஓர் ஆலயம் இயற்றி, அதற்கு வேண்டிய பூஜை முதலானதுகளுக்கும் மிகுந்த வசதிகள் செய்து, பின் அரிய தவங்களைச் செய்துகொண்டு காலங்கழித்தார். இவ்வாறுகத் தினம் நூறு அசுவப் பிரதக்ஷணம் செய்து, தவமியற்று தலினுல் சரீரம் இளைத்து, மெலிந்து, வருந்தியிருப்பதை எம்பெருமான் கண்டு மகிழ்ந்து, 'வரகுண வருக' என அவரை நோக்கியழைத்துப் பின்னும், 'கைலேயங்கிரியி லுள்ள அழகிய கொடுமுடிக்குச் சமானமான ஒரு மதிலை, நம் பக்கல் எழுப்பி, அதை நீ ஒரு முறை வலம் வந்தால், நம்மை ஆயிரம் பிரதக்ஷணஞ் செய்வதற்கு ஒப்பாகும்' என அருளினர். மன்னரும் அவ்வாறே செய்து முடித்துச் சிவபெருமானுடன் நேருக்கு நேராக இனிது வசனிக்கும் படியான அரிய பேற்றையும் அடைந்து, அத்தலத்தில் இன்புடன் வாழ்ந்து வந்தார்.

பின் ஒரு நாள் சில காவலர், கொடிய ஒரு திருடனைப் பிடித்து இரு கைகளையும் பிணியுறக் கட்டி அரசன்முன் னிறுத்தலும், நம் வரகுணதேவர் அக் கள்வன் மேனியில் அணிந்திருந்த சிவச்சின்ன மாகிய திருநீற்றைப் பார்த்து, உடனே அவனைக் கட்டவிழ்த்து, விடு வித்து, அவனைச் சிவபக்தனென்று போற்றிப் பொருள் பல கொடுத் தனுப்பினார்.

பின் ஒரு சமயம், நரிகள் ஊளையிடுவதைக் கேட்டு, அம்மன்னர் அவைகள் ஆலவாய் சொக்கலிங்கப் பெருமானை அழைப்பதாக எண் ணி, உடனே அவைகளைப் பிடித்து வரச்செய்து, ஆடையாபரணாதி களால் அலங்கரித்து விடுவித்தார்.

பின்னொருநாள், தாமரைத் தடாகங்களில் தவளைகள் கத்து வதைக் கேட்டு, அவைகள் சிவபெருமானைக் குறித்து 'ஹர ஹர' என்று கத்துவதாக நினைத்து, ஆங்கு, இரத்தினங்களையும், சொர் ணங்களையும் வாரி இறைத்தார்.

திருக்கோவிலில் பணிவிடை செய்யும் ஒருவன், அம் மருத பிரானுடைய திரு மஞ்சனத்துக்காகக் காய வைத்திருந்த எள்ளை வாரித் தின்று கொண்டிருக்கும்பொழுது, அவனைக் கண்டு, அரசன் முன் கொண்டுவிட, அப் பணிவிடையாளன், மறுஜென்மத்தில் இம் மருதவாணப் பெருமானுக்கே பணிவிடை செய்யவேண்டுமென்கிற விருப்பால் 'எள்ளு தின்ற கடன் உழைத்தே தீரவேண்டும்' என் னும் பழமொழிப்படி எள்ளைத் தின்றதாகச் சொல்லவும், அப்பாண்டி யரும், அவன் அன்பிற்கு மெச்சித் தானும் அவ்வாறே மறுபிறப் பெடுத்து, மருதவாணப் பெருமானுக்குப் பணிவிடை செய்ய வேண்டுமென்று ஆவல் கொண்ட உனக்கே யாளாக வேண்டு மென்று சொல்லி, அவன் மென்ற உச்சிஷ்டத்தைத் தானும் கொஞ் சம் வாங்கித் தின்றார்.

பாபத்தையே செயலாகக் கொண்ட கீழ்மக்கள் ஜாதியில் உதித்த ஒரு கள்வன் வெட்டுண்டு, மாமிசங்கள் எல்லாம் நீங்கிக் கிடந்த அவன் வெண்டலையைத் தரும சொரூபியாகிய வரகுண பாண்டியர் கண்டு, அதை எடுத்து, கண்ணீர்ப் பெருக்கினால் ஸ்நானம் செய்வி த்து, அந்த மண்டையைப் போல் தன் மண்டையோடும் இத் திவ்ய ஸ்தலத்திலேயே கிடக்க வேண்டும் என வேண்டினார்.

ஓர் தினம் வீதி வலம் வரும்பொழுது, ஆங்கு, வேப்பங்கனிகள் உதிர்ந்து கிடப்பதைக் கண்டு, அவை சிவலிங்கம் போல் உருக் கொண்டிருப்பதைப் பார்த்து, இவ் லிங்கரூபமான பழங்களைத் தரும் வேப்பமரங்கள் வெய்யிலிற் காய்ந்து உலராவண்ணம், அம்மரங்களுக்கெல்லாம் பந்தல்கள் போட்டு மேற்கட்டிகளும் கட்டுவித்தார்.

ஒருநாள் காருணியாமிருத தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து வலம் வருங்கால், சந்நிதியில் நாய் மலம் கிடந்ததைக் கண்டு, அதை எடுத்து அப்புறப்படுத்துவோருக்குத் தன் ராஜ்யத்தில் நாலில் ஒரு பாகம் கொடுப்பதாகத் தெரிவித்தார். அதை ஒருவரும் எடுக்கவில்லை. இரண்டாவது பிரதக்ஷணத்தில் எடுபடாததைப் பார்த்து தன் ராஜ்யத்தில் இரண்டில் ஒரு பாகம் கொடுப்பதாகச் சொல்லியும், அம்மலம் எடுபடவில்லை. மூன்றும் பிரதக்ஷணம் வருமுன் எடுப்பவருக்குத் தன் ராஜ்யத்தில் நாலில் மூன்றுபாகம் கொடுப்பதாகச் சொன்னார். அப்போதும் எடுபடவில்லை. கடைசியாக நாலாவது பிரதக்ஷணம் செய்யுங்கால் அப்போதும் எடுபடா திருக்கக் கண்டு, தன் ராஜ்யம் முழுமையும் அதை அப்புறப் படுத்துவோருக்குக் கொடுப்பதாகவும் சொல்லி நான்காவது பிரதக்ஷணமும் செய்து, வந்து பார்க்கையில், அப்பொழுதும் எடுபடாதிருக்கக்கண்டு, தன் ராஜ்யம் தனக்கே உரியது. என எண்ணித் தானே அந்த மலத்தை எடுத்து அப்புறப்படுத்திவிட்டார்.

முன் வரகுண பாண்டியருக்குச் சோழமன்னனால் விவாகம் செய்து கொடுக்கப்பட்ட பெண்ணை, ஓர் உத்தம தினத்தில், ஆடையாபரணாதிகளினாலும், நானாவித நறுமலர்களினாலும், பற்பல வாசனைத் திரவியங்களினாலும் அலங்கரித்து, சேடியர்கள் அவளை அப் பாண்டிய மன்னருடைய அந்தப்புரத்தில் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். அப் பாண்டிய மன்னர், அவளுடைய மேகத்தைப் பழிக்கும் கூந்தலையும், மலர்ந்த தாமரை முகத்தையும், முத்துப் போன்ற பல் வரிசைகளையும், இனிய மொழிகளையும், வாள் போன்ற கூரிய கண்களையும், சங்கு போன்ற கழுத்தையும், கச்சினைக் கிழித்தெழு தனங்களையும், நீண்ட கரங்களையும், உடுக்கைப் போன்ற இடையையும், வாழை போன்ற துடைகளையும், தாமரை போன்ற செம்பஞ்சு ஊட்டிய பாதங்களையும் அமையப் பெற்ற அப் பெண்மணியைக் கண்டு, 'இவள் எம்பெருமானாகிய சிவபெருமானுக்கே

உரியவள்' என்று அவளை, ஒருவரும் அறியாமல், உடனே அழைத்துக் கொண்டு திருக்கோவில் வாயில் நின்று 'ஏ மருதநாயக' என்றழைத்தலும், சிவபெருமானும் 'வரகுண வருக' என்று சொல்லிக் கதவையும் திறந்தார். உடனே வரகுணதேவர் 'ஹே, கருணாநிதியே, அன்பர்க் கெளியனே! முப்பத்திரண்டு இலக்ஷணங்களும் ஒருங்கே குறைவற அமையப் பெற்ற இப் பெண்மணி தங்களுக்கே உரியள். ஆகையால், அவளை அங்கீகரிக்க வேண்டும். இல்லையேல் இவ்விடத்தே என் உயிரை மாய்த்துக்கொள்வேன்.' எனப் பிடிவாதமாய் உரைத்த மன்னரின் அபிப்பிராயப்படி, ஸ்ரீ மகாலிங்கப் பெருமான் அப் பெண்மணியின் வலது கை மாத்திரம் வெளியில் நீட்டியிருக்கும்படி அவளைத் தானுட்கொண்டு விட்டார். இதைக் கண்ட அரசர்பெருமான், "சங்கர! சம்போ! பார்வதிபாகா! பாவியாகிய அடியேன் தொட்ட காரணத்தினால் அன்னவள் கரத்தை மாத்திரம் உட்கொள்ள வில்லையோ? இது யான் செய்த தீவினையோ? நான் தொட்ட கரம் எனக்கு இருந்தென்ன?" எனச் சொல்லி வருந்தி நிற்கச் சிவபெருமான், "ஏ மன்னவ! நம்மிடம் உனக்குள்ள அன்பையும், உன்னால் கொடுக்கப்பட்டு நான் உட்கொண்டிருக்கும் இப் பெண்மணியையும், உலகோர் அறியும்படி கையை மாத்திரம் நீட்டி வைத்திருக்கிறோம். நீ அஞ்சேல்." என்னலும், அரசரும் மகிழ்வுற்றுத் தன் இருப்பிடம் ஏகினார். பின் கோவிற் கதவுகளும் மூடிக்கொண்டன.

அரண்மனையி லுள்ளவர்கள், வரகுண தேவரையும், அவர் மனைவியாளையும் காணாது, பல விடங்களும் தேடி, மயங்கிப் பின் அவரைமாத்திரம் தனியே கண்டு, தேவியாரின் வரலாற்றை விசாரிக்க, 'அவள் ஜோதிர்மயமான ஸ்ரீ மகாலிங்கப் பெருமானிடம் அடைவுற்றாள்' என விடையளித்தார். இதைக் கேட்டு அவர்கள் ஆச்சரிய முற்றார்கள். பொழுதும் விடிந்தது. பூஜைக்காகக் குருக்கள் முதலினோர் கோவிலுக்குள் சென்றார்கள். அரசனும் அவளைச் சார்ந்தோரும் வந்தடைந்தார்கள். சிவ பெருமான் முடிமீது பொற்றொடியோடு கூடிய ஓர் அழகிய மலர்க் கையை எல்லோரும் கண்டார்கள். கண்டலும் அக் கையும் மறைந்தது. அரசரும் மகிழ்ந்தார். தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள். எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள்.

உடன் வரகுண பாண்டிய மன்னர், மருதவாணப் பெருமானை வணங்கி, இனித் தான் செய்யும் பணி யாதெனக் கேட்டலும், மருதீசன், ஏ! மன்னர் பெரும! இனி உன் நாடாகிய மதுரைக்கு ஏகி, ஆங்கு கொஞ்சகாலம் தங்கிய பின், தான் அத்தலத்திலேயே அவனுக்கு நற்கதியளிப்பதாகச் சொல்லி யருளினர். அவ்வாறே அம் மன்னரும் சிவபெருமானைப் பலவாறு துதிகள் செய்து, விடைபெற்று மதுரைக்குப் புறப்பட்டார்.

சதா ஸ்ரீ மகாலிங்கப் பெருமானையே மனதிற் கொண்டவராய், அவர் நாமத்தையே உச்சரித்துக் கொண்டும், பல படைகள் சூழ மதுராபுரியை யடைந்தார். சிவாகமப் புராணங்கள் யாவும் சிவலோகத்தின் பெருமையை வியந்து கூறுவதைக் கேட்ட மன்னர், தானும் அச் சிவலோகத்தை நேரில் காணவேண்டு மென்று ஆசைப்பட்டு, சிவபெருமானை வேண்ட, மதுராபுரியில் சொக்கலிங்கப் பெருமான், தன் ஆலயத்தில், சிவலோகத்தைத் தருவித்து, ஆங்கு அம்மன்னரை அழைத்துச் சென்று, நந்திதேவரைக் கொண்டு அதிலுள்ள பிரமபதம், விஷ்ணுபதம், உருத்திரபதம் முதலானவைகளி லுள்ள பெருமைகளையுங் காண்பித்து, பின்னும், நந்திகேசுரர், ஏ அரசனே! உம் முன்னோர்களான மலயத்துவசன் முதலாக உன் பிதா சுந்தரேச பாதசேகரன் வரையுமுள்ள ராஜ ராஜாக்க ளெல்லாம் வாழும் திவ்ய ஸ்தானங்கள் இன்னது இன்னதெனக் காண்பித்து, மகிழும் படிச் செய்தார். அரசரும் கண்டு வணங்கி, இன்புடன் சிவபெருமானைத் துதி செய்து வணங்கினர். பின் கொஞ்சநேரத்துக்கெல்லாம், மதுரைமாநகரம் பழய நிலையை அடைந்தது. அரசரும் சில காலம் இன்புற்று வாழ்ந்திருந்து, பிறகு சிவபெருமா னருளால் சிவலோகம் சென்று, சாரூப பதவியைப் பெற்று ஆநந்த மடைந்திருந்தார்.

இவ்வாறு சூதமாமுனிவர் ஸ்ரீ ஜோதிர்மய மகாலிங்கப் பெருமானின் அருளைப் பெற்ற வரகுணபாண்டிய மன்னரின் பெருமைகளைக் கூறிப் பின், அம் மருதூரின் ஆலயத்தின் பிரதக்ஷிண மகிமையைக் கூறுவாராயினர்.

வரகுண தேவச் சருக்கம்

முற்றிற்று.

நாற்பத் தொன்றுவது

பிரதக்ஷண மகிமைச் சருக்கம்.

"கேளுங்கள்! முனிவர்களே! இதுகாறும் ஸ்காந்த புராணத்தில் சொல்லப்பட்ட இத் தலமகிமையைக் கூறினோம். இனி இலிங்க புராணத்தில் கூறியுள்ளதைச் சொல்லுவாம்.

இத் தலத்தில் ஸ்ரீ மகாலிங்கப் பெருமான் ஆலயத்தின் வெளிப் பிரகாரம் என்று சொல்லப்படும் முதற் பிரகாரத்தை வலம் வருவதனால் உண்டாகும் பலன்கள் அனந்தம். அப் பிரதக்ஷணத்தினால், அசுவமேதயாகம் செய்த பலன் சித்திக்கும் காரணத்தால் இதற்கு 'அசுவமேதப் பிரதக்ஷணம்' எனப் பெயர் வழங்கும். அப்படி வலம் வருவதால், மேனி நல்ல தேஜஸ்ஸை அடையும். அஷ்ட ஐசுவரியங்களும் பெருகும். சிறந்த புத்தியுண்டாகும். சிவஞானம் உதிக்கும். புத்திர சந்தானம் பெறுவார்கள். பகைவர்கள் பணிவார்கள். சகல விதமான பிணிகளும் நீங்கும். பலராலும் புகழப்படும்படியான கீர்த்தியை அடையலாம். எவ்விதமான சித்தப்ரமை, பிரமஹத்தி தோஷம் முதலான யாவையும் நீங்கும். எல்லாவற்றிற்கும் மேலான சிவபெருமான் அருள் கிட்டி, சிவபதமும் பெறலாம். இன்னும் இப் பூமியை வலம் வருவதனால் உண்டாகும் பலன் இப்பிரதக்ஷணம் செய்வதனாலேயே அடைந்து விடலாம்.

"கேளுங்கள் முனிபுங்கவர்களே! இவ்வளவு மகிமை பொருந்திய பிரதக்ஷணத்தைச் செய்யுமுன், இத் தலத்தில் மேற்கூறிய உத்தம தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து, ஸ்ரீ விநாயகப் பெருமான் சந்நிதியிலும், முருகபிரான் சந்நிதியிலும், அந்தணர்கள் முன்னிலையிலும் சங்கல்பம்செய்துகொண்டு, தானங்கள் பலபுரிந்து, அப்பெருமானிடம் அநுமதிபெற்று, ஸ்ரீ பிரஹத்சுந்தர குஜாம்பாள் சமேத ஜோதிர்மய மகாலிங்கப் பெருமானை மனத்திடை தியானித்து, அஷ்டதிக்குப் பாலகர்களையும் போற்றி, வலம் வருதல் வேண்டும். இதனால் கொலைபாதகம் முதலான பஞ்சமா பாதகங்கள் யாவும், மயங்கி, வெருண்டு ஓடிவிடும்.

இத் தகைய பிரதக்ஷணத்தை ஒருமண்டலம் அதாவது நாற்பத்தைந்து நாள், அல்லது அரைமண்டலம், அல்லது கால்மண்டலம்

செய்வதாக, சக்திக் கேற்ற அளவு சங்கற்பம் செய்து கொண்டு ஆரம்பிக்க வேண்டும். அதில் ஒவ்வொரு தினமும், இருபத்து நான்கு, அல்லது பனிரெண்டு, அல்லது ஏழு பிரதக்ஷிணத்துக்குக் குறையாமல் சக்தியளவுக்குச் செய்தல் வேண்டும். இந்த மாதிரி வலம் வந்து பலன் அடைந்தவர்கள் பலர் உளர்.

இரு கரங்களையும் குவித்து, அஞ்சலி செய்து கொண்டு, முகமலர்ச்சியோடு, மகிழ்வுடன், சிவபெருமானையே தன் இருதய கமலத்தில் தியானித்து, அங்கப் பிரதக்ஷிணம் செய்தால், அக்கணமே சகல தீவினைகளும் நீங்கித் தன் மனோபீஷ்டங்களெல்லாம் நிறைவேறி, சிவபதமும் பெற்று இன்புறலாம். அதிலும் உற்சவ காலத்தில் இவ்வாறு செய்தால் பலன் பன்மடங்கு அதிகம் உண்டாகும்.

இவ்வளவு பெருமை வாய்ந்த அசுவமேதப் பிரதக்ஷிணத்துக்கு உட்புறமாக, பிரமாதி தேவர்கள் புடைசூழ, வலம் வந்து, தங்கியிருக்கும் கைலையங்கிரியாகவே விளங்குகிற கொடுமுடிப் பிரதக்ஷிணம் என்று சொல்லப்பட்ட பிரகாரம் ஒன்று உளது. இதை வலம் வந்தால், விசேஷ வனப்பு வாய்ந்து, சகல பிணி முதலிய தீவினைகளெல்லாம் நீங்கி, அருட்செல்வம் பொருட்செல்வம் முதலிய யாவும் குறைவறப் பெற்று மகிழ்வார்கள். புத்திரப் பேறு அடைய விரும்புவோர் இப் பிரதக்ஷிணம் செய்யவேண்டியது அவசியம். அதி சீக்கிரத்தில் எம்பெருமான் திருவருளால் புத்திரசந்தானம் உண்டாகும். மிகுந்த பக்தியும் அன்பும் பெருகி, கைலையங்கிரியை வலம் வருவதனால் உண்டாகும் பலன் இப் பிரதக்ஷிணத்தினால் உண்டாகும் என்பது மிகையாகாது. இதற்குள்பட்டிருக்கும் பிரகாரங்களைப் பிரதக்ஷிணம் செய்வதினாலும் இத்தகைய பலன்கள் உண்டாகும்.

இவ்வாறு, எம்பெருமான் சந்நிதியில் அஷ்டாங்க நமஸ்காரமும் ஐந்துமுறை செய்து, பிரணவ ஸ்வரூபியாகிய ஸ்ரீ ஜோதிர்மய மகாலிங்கத்தை மனத்திடையிருத்திக் கைகளைக் கட்டிக்கொண்டு, நிஷ்களங்கமான மனதுடன் சிவபெருமானையே துதிசெய்து கொண்டு பிரதக்ஷிணம் செய்வது ஒழுங்கான முறை யென்று வேத ஆகமங்கள் கூறுகின்றன.

என்று சூத மாமுனிவர் சொல்லிப் பின், இவ்வாறு பிரதக்ஷணம் செய்து பலனை அடைந்தோர்களில் சிலருடைய வரலாற்றை இனிக் கூறுவாம் எனச் சொல்லி, முதலில் யுவனாசுவ மன்னன் இவ்வாறு வலம் வந்து பெற்ற பேற்றைக் கூறுவாராயினர்.

பிரதக்ஷண மகிமைச் சருக்கம் முற்றிற்று.

நாற்பத்திரண்டாவது

யுவனாசுவச் சருக்கம்.

புகழ்பெறு சூரிய குலத்தில் உதித்தவனும், தருமத்திற் சிறந்த மன முடையவனும், கொடும் பகைவர்களுக்கு சிம்மம் போன்ற பராக்கிரம முடையவனும், பரவிய கீர்த்தி பெற்றவனும், யுவனாசுவன் என்னும் பெயரை யுடைய ஓர் மன்னன், அயோத்தியா பட்டினத்தில் அரசு புரிந்து வந்தான்.

அவனுக்கு எல்லாப் பாக்கியமும் உண்டாகி யிருந்தும், புத்திரனில்லாத குறையினால் மனம் வருந்தித் தன் குலகுருவாகிய வசிட்ட மாமுனிவரை யணுகி, தனக்குற்ற குறையைத் தெரிவித்தலும், அம் முனிபுங்கவர், 'ஏ மன்னவ! நீ வருந்த வேண்டா. நீ உன் இனிய காதலியுடன் திருவிடைமருதூர் என்னும் தலத்துக் கேகி, ஆங்குப் 'புத்திர காமேஷ்டி யாகத்தை' அன்புடன் இயற்றுவா யானால், நீ வேண்டுகிறபடி ஓர் மகவினை அடைவாய். கவலையுற வேண்டா. உடனே புறப்படுவாய். எனத் திருவாய் மலர்ந்தருளினர். இதைக் கேட்ட மன்னன், உள மகிழ்ந்து அவ் வசிஷ்ட மாமுனிவரையும் தன்னுடன் கூட வர வேண்டுமென்று வேண்டலும், அம் முனிவர் பெருமானும் அரசன் வேண்டுகோளை மறுக்கொணாது சம்மதித்து, ராஜ தம்பதிகளுடன் பரிவார சைனியங்கள் புடைசூழ இடைமருதூரை நோக்கிப், பிரயாணமானர். போகும் மார்க்கத்தில் உள்ள பல சிவஸ்தலங்களையும், விசாலமான புண்ணிய நதிகளையும், தபோதனர்கள் வாசஞ் செய்யும் ஆச்சிரமங்களையும், புகழ் பெற்ற பல மலைகளையும் அம் மன்னனுக்குக் காட்டிக் கொண்டே சென்றார்.

இவ்வாறு, காசி, காஞ்சி, காளத்தி, திருக்கழுக்குன்றம், திருவண்ணாமலை, திருப்பாதிரிப்புலியூர், சிதம்பரம், சீர்காழி, திருவெண்காடு, திருக்கடவூர், மாயூரம், திருவாவடுதுறை முதலிய பல சிவஸ்தலங்களிலும் தங்கி, ஆங்காங்குள்ள தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து, ஆங்காங்கு எழுந்தருளி யுள்ள சிவபெருமானைத் தரிசிக்கும் படிச் செய்வித்து, அதனதன் மகிமைகளைக் கூறிக் கொண்டே கடைசியாக, யாவராலும் புகழப்படும் இம் மருதூரில் காவிரியில் பூசப்படித்துறை என்னும் கல்யாணதீர்த்தம் அடைந்தார். பின் மன்னவன் முதலான அனைவரும் ஸ்நானம் செய்து, மருதவாணப் பெருமான் சந்நிதிக்குச் சென்று, அடி பணிந்து, துதிகள் பல செய்து, அத்தலத்தில், ஓர் சார்பாகத் தங்களுக்கு ஓரிடம் ஏற்படுத்திக் கொண்டு, தங்கி யிருந்தார்கள். பிறகு அரசன் வேதாகமங்களில் கூறியபடி தான் விரும்பிய புத்திரகாமேஷ்டி யாகத்தைச்செய்ய, யாகசாலை, வேதிகை முதலானவைகள் ஏற்படுத்திக் கடஸ்தாபனம் செய்து முறைப்படி யாகத்தை இயற்றினன். இதனிடையில் அம் மன்னனுக்கு, ஓர் இரவு, அடக்கமுடியாத தாகம் மேலிட்டு, அருகிற் பருகத் தண்ணீரின்றி வருந்தி, யாகசாலையில் புத்திரப் பேற்றின் பொருட்டு, தன் பத்தினி சாப்பிட வேண்டி யிருந்த கும்ப தீர்த்தத்தை மன்னன் எடுத்துப் பருகிவிட்டான். உடன் தாகம் தணிதலும், தான் செய்த காரியம் தவறு என்று தெரிந்து, திகைத்து, மயங்கி நின்றான். அத் தீர்த்தத்தைப் பருகின காரணத்தால், அம் மன்னவன் வயிற்றில் கருத் தரித்து விட்டது. இதை யுணர்ந்த, ஏனையோர்கள் மன்னன் செய்த காரியத்துக்கும், அதனால் அவனுக்கு உற்ற கர்ப்பத்தையும், நினைத்து மிக வருந்தினார்கள். அவன் வயிற்றில் அக் கருவும் வளர்ந்து கொண்டே வந்தது. பக்குவமான காலம் வந்தவுடன், அக் குழந்தை, வயிற்றில் எவ்வாறு தங்க முடியும்? ஆகையால், அரசனுடைய வயிற்றைப் பீறிக் கொண்டு, குழந்தையும் வெளியுற்றது. மறுபடி மன்னன் வயிற்றைத் தைத்து சொஸ்தம் செய்ய, பல வைத்திய நிபுணர்கள் பற்பல ஔஷதங்கள் கொண்டு, பிரயத்தனம் செய்தும், சொஸ்தம் ஆகாமையால் மன்னன் சகிக்கக்கூடாதவனாய் வருந்திக் கொண்டிருந்தான்.

இதை யறிந்த வசிஷ்டாதி முனிவர்கள், மன்னன் வருந்துவதைக் கண்டு சகியாமல், ஸ்ரீ மருதவாணப் பெருமானின் ஆலயத்துட் சென்று, சிவபெருமானை மனதில் இருத்தி, முறைப்படி அசுவ

மேதப் பிரதக்ஷணம் செய்தால், மன்னனுக்கு உற்ற துன்பம் தீரு மென்று தெரிவித்து, அவ்வாறே அம் மன்னனை மெல்ல அழைத் துக் கோவிலுட் சென்று, பிரதக்ஷணமும் செய்து வைத்தார்கள். மன்னன் ஒருதரம் வலம் வந்ததும், அவனுடைய வயிற்றிலிருந்த புண் காய்ந்து, அவன் செய்த இருவினைகளும் நீங்கப்பெற்று, மனம் தெளிந்தான். மறுபடியும் ஆறு பிரதக்ஷணம் செய்து, மனத் திடை பரமாநந்தம் உற்று, ஸ்ரீ ஜோதிர்மய மகாலிங்கப் பெருமானை யும் அன்புடன் வணங்கி, சிவபெருமான் பூஜைக்கு வேண்டிய மானியாதிகள் விடுத்து, அந்தணர் முதலானவர்களுக்குப் பூதானம், கோதானம் முதலிய பல தானங்கள் அளித்தனன். பின் தனது இருப்பிடம் சென்று, தன் அருமைப் புதல்வனைக் கண்டு, பேராநந் தக் கடலில் மூழ்கி, இம்மருதூரிலேயே சிலகாலம் தங்கியிருந்து, பின் அம்மன்னன் தன் புத்திரனும், தன் மனைவியும், கூட வந்த வசிஷ்டாதி முனிவர்களும், ஏனைய பரிவாரங்களும் புடைசூழ, அயோத்தி மாநகரை யடைந்து இன்புற்றிருந்தான். இவ்வாறு சூதமாமுனிவர் பிரதக்ஷணமகிமையைத் தெரிவிக்க, யுவனாசுவ மன் னன் அடைந்த பேற்றைக் கூறிப் பின் அவன் புத்திரனாகிய மாந் தாதா இத் தலத்தில் பெற்ற மகிமையைக் கூறுவாராயினார்.

யுவனாசுவச் சருக்கம்

முற்றிற்று.

நாற்பத்து மூன்றாவது

மாந்தாதாச் சருக்கம்.

<—:0:—>

கோடிசூரியப் பிரகாசம் போல் ஜொலித்துக் கொண்டு, யுவ னாசுவ மன்னவன் வயிற்றில் உதித்த அக்குழந்தைக்கு மாந்தாதா என்னும் நாமஞ் சூட்டப் பட்டது. அவன் அழகில் மன்மதனை வெற்றி கொண்டவன். கல்வியில் ஆதிசேஷனை வென்றவன். புஜ பலத்தில் மகாமேருவைப் போன்றவன். கொடையில் மேகத்தை ஒத்தவன். இவ்வளவு புகழ் பொருந்தி, பகை யரசர்களை நாசஞ் செய்யும்படியான வேலாயுதத்தையும் ஏந்தி, நீதிமுறை தவறாமல் அரசு செலுத்தி வந்தான்.

இப்படி யிருக்கும் நாளில் ஓர் சமயம், கலிங்கநாட்டு மன்னன் கிரமப்படி கப்பம் கட்டாத காரணத்தினுல், தன் கொடிய தேர்ப் படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை என்னும் நால் வகைப் படையோடும், மாந்தாதா மன்னவன் கலிங்கநாட்டு அரச ேனாடு யுத்தஞ்செய்யச் சென்றான். இருவருடைய சேனைகளும் கடு மையான போர் புரியுங்கால், கலிங்க தேச மன்னன் தோல்வி யடைந்து, தன் சேனைகளுடன் திரும்பி ஓடினுன். ஓடலும், மாந் தாதா, புறங்காட்டி ஓடும் மன்னனைக் கொல்லுதல் முறையாகாது. என விடுத்துத் திரும்பி விட்டான். புறங் காட்டி ஓடின கலிங்க மன்னனையும் அவன் சேனையையும், மாந்தாதாவினுடைய சைனியங் கள், வெருட்டி, யுத்தம் செய்து, அம் மன்னனையும் விண்ணுல குக்கு அனுப்பிவிட்டார்கள்.

தன் சைனியங்கள் இவ்வாறு செய்த அநீதியை, மாந்தாதா தெரிந்து, வருத்தமுற்று, மெய் நடுங்கினுன். முதுகு காட்டி ஓடின மன்னனைக் கொன்ற சைனியங்களுக்கு அதிபதியாகிய மாந்தா தாவை, அக்கொலைப்பழி வந்து பற்றியது. அதனுல் அரசனும் ஏக்க முற்று, மெலிந்து, தன் குலகுருவாகிய வசிட்ட மாமுனிவரிடம் சென்று, தனக்குற்ற விபத்துக்களைக் கூறி, அப் பழியினின்றும் நீங் குவதற்குள்ள மார்க்கத்தைத் தெரிவித் தருளும்படிப் பரிவுடன் வேண்டினுன். அம் மாமுனிவரும், மன்னனுடைய நிலைமையைக் கண்டு மனமிரங்கி, 'ஏ மன்னர் மன்ன! நீ அஞ்சேல். உன் சேனை கள் செய்த அநீதமான காரியத்தினுல் நீ பழியைச் சுமக்கிறாய். கவலையடைய வேண்டா. யாவராலும் துதிக்கப் பெற்ற திருவிடை மருதூர் என்னும் தலத்தை யடைந்து, ஆங்கு உள்ள தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து, பெருமை பெற்று விளங்கும் அம் மருதவாணப் பெருமானின் கோவிலுட் சென்று, அசுவமேதப் பிராகாரத்தை ஒரு தரம் வலம் வருவாயானுல், உன்னைப் பற்றியுள்ள பழி பாவங் கள் யாவும் உடனே நீங்கும். பின் அம் மருதவாணப் பெரு மானை வணங்கி, அக் கோவிலுக்குத் திருப்பணிகள் பல இயற்றி, வைசாக மாதத்தில், விசாக நக்ஷத்திரத்தில், சிறப்புற அப்பெருமா னுக்கு உற்சவமும் நடாத்திச் சிவபெருமான் அருளையும் பெற லாம். ஆகையால் இக்கணமே நீ உன் காதல் மனையாளுடன் மரு தூருக்கு ஏகுதல்தான் முறையாகும்." எனக் கூறிய மொழிகளை, மன்னன் இன்புறக் கேட்டுப் பல சைனியங்கள் சூழத் தன் மனையா

ளுடன் இடை மருதூர் சென்று, தன் குருவாகிய முனிவர் உரைத்த வாறே, அசுவமேதப் பிரதக்ஷணம் வரலும், தன்மனச்சோர்வு மாறித் தீயிற் பட்ட பஞ்சு போலத் தன் பழி, பாவங்கள் நீங்கப்பெற்று, அக த்திடை மகிழ்வு எய்தினன். பின், மருதவாணப்பெருமானைத் தரிசித்து, அம் மருதூரில் ஓர் வசதி ஏற்படுத்திக் கொண்டு தங்கியிருந்தான். அத் திருக்கோயிலுக்கு வேண்டிய திருப்பணிகள் செய்து, மண்டபம் முதலியன பல கட்டுவித்து, பொற்பணி பலவும் செய்வித்தான். பிறகு திருவிழா நடத்த மனத்துட்கொண்டு எத்தனிக்கையில், வசந்தகாலமும் நெருங்கி வந்தது.

உலகத்திலுள்ள தேவர் மனிதர்களும், அவர்கள் ஒழிந்த ஏனைய ஜீவராசிகளாகிய விலங்கு, பறவை, செடி, கொடி, முதலான சராசரங்களும், தத்தம் உல்லாசத்துக் கேற்பக் கொண்டாடும்படியான மந்த மாருதத்தை வீசிக்கொண்டு, மன்மதனுடைய திருவிளையாடல்களுக்கு உபசாதகமாய் விளங்கும்படி செய்யக் கூடியதுமான இவ் வசந்த காலம் உலக இன்பங்களை அனுபவிக்க எண்ணுவோருக்கு அக்கால மின்றி வேறு எக்காலமும் பொருந்தாது எனின், இதன் விசேஷத்தை எடுத்துரைக்கவும் கூடுமோ?

இக்காலத்தில், எம்பெருமானுக்குக் குதூகலத்துடன் உற்சவம் நடத்துவதைக்குறித்துப் பல தேய மன்னர்களுக்கும், பத்திரிகைகள் அனுப்பி, திருக்கோவிலை மிக்க ரமணீகரமாக அலங்காரம் செய்து, எம்பெருமானை நானாவித நறுமலர்களினாலும், ஆடை யாபரணாதிகளாலும் அலங்கரித்து, அன்றன்றைக்குரிய வாகனாதிகளில் அமரச்செய்து, வஸந்தஉற்சவம் என்னும் திருக்கல்யாணவிழாவை நடத்தி, திருவீதி பவனிவந்து, பக்தர்களுக்கு இன்புடன் தீர்த்தம் கொடுத்தருளவும் இயற்றினன். இவ்வாறு எம்பெருமானை மகிழச் செய்ததுடன், இவ்வுற்சவம் என்றும் நடைபெறும் பொருட்டு, பல மான்யாதிகள் விடுத்து, விசேஷமான திருப்பணிகளையும்செய்தபின், அந்தணர் முதலான அடியார்களுக்குக் கோதானம், பூதானம், சொர்ணதானமும் பல கொடுத்தான். அநேக தீர்த்தங்களையும் சீர்திருத்தம் செய்தான். மறுதினம் அம்மன்னன் திருக்கோவிலுட் சென்று, மருதவாணப்பிரான் சந்நிதியில் வணங்கி நிற்றலும், எம்பெருமான் உவகைகொண்டு, 'ஏ மன்னவ! நீ இன்புற்று இயற்றிய திருவிழாவை நாமும் இன்புடன் ஏற்றுக்கொண்டோம். மகிழ்வு எய்தினோம்.

இனி நீ உன் நகரத்துக்குச் சென்று, களிப்புடன் அரசு செலுத்தி வருவாயாக. கொஞ்ச காலம் கழிந்த பின் நாம் உனக்கு நம்முடைய பதம் அழைப்போம்.' எனத் திருவாய் மலர்ந்தருளினர். இதைக் கேட்ட மன்னவனும் பேரானந்தத்துடன் இறைவனை இறைஞ்சி, விடைபெற்றுக் கொண்டு, தன் சேனைகளுடன் அயோத்திமாநகரம் சென்று, இன்புடன் அரசு செலுத்தி வாழ்ந்திருந்து பலகாலஞ் சென்றபின், சிவலோகத்தையும் சார்ந்து இன்புற்றிருந்தான். இவ்வாறு சூதமாமுனிவர், புறங்காட்டி ஓடிய மன்னனைக் கொன்ற பழியைத் தீர்த்துக் கொள்ள, மாந்தாதா மன்னவன் இத்தலத்தில் அசுவமேதப் பிரதக்ஷணம் செய்து அப்பழியைத் தீர்த்துப் பின் 'வஸந்த உற்சவத்தைச்' சிறப்புற இயற்றிய வரலாற்றைக் கூறி, வசுமன்னவன் பெற்ற பெருமையைக் கூறுவாராயினர்.

மாந்தாதாச் சருக்கம்
முற்றிற்று.

நாற்பத்து நான்காவது
வசுமன்னவச் சருக்கம்.

நீர்வளம் நிலவளம் குறைவின்றி அமையப்பெற்று விளங்கும், காஞ்சீபுரத்தில் வசுமன்னவன் என்னும் பெயர் கொண்ட ஓர் அரசன் அரசாண்டுவந்தான். அவன் மலையைப் போன்ற உருண்டு திரண்ட தோளையுடைய பராக்கிரமமுள்ளவன். உலகத்தை இரக்ஷிப்பதில் இலக்குமி காந்தனாகிய விஷ்ணுவுக்குச் சமானமானவன்.

இவன் நீதி தவறாது அரசு செலுத்திவரும் நாளில், தன் மந்திரிமார் புடைசூழ, காசியாத்திரை சென்றான். ஆங்குக் கயா முதலான பல தலங்களுக்குச் சென்று, சிராத்த முதலியன இயற்றிப் பின் தன்னாட்டுக்குத் திரும்பினன். இதனிடையில் சமயம் பார்த்துக் கொண்டிருந்த பகைஅரசர்கள், இவன் இல்லாத காலத்தில், இவன் நாட்டின்மேற் படையெடுத்து, இராஜ்யத்தைக் கைக்கொண்டு விட்டார்கள். இதைக் கண்ட மன்னவன் மணியை யிழந்த

சர்ப்பம்போல மனம்வருந்தி, சகல வலிமைகளும் ஒடுங்கப் பெற்றவனாய், வங்கி, நித்திய ஞான சொரூபத்தை யடைந்தவரும், தவசிரேஷ்டருமான சாபாலி முனிவரிடம் சென்று, வணங்கி, "ஹே முனிவர் பெரும! என் இராஜ்யத்தை இழந்து நிற்கிறேன். நான் சிவபெருமான் பொருள்களை அபகரித்தேனோ! அந்தணர்களுடைய சொத்தைக் கவர்ந்தேனோ! அல்லது தவச்சிரேஷ்டர்களுடைய பொருள்களைக் களவு செய்தேனோ! ஆதரவான ஏழைகளை வருத்தமுறும்படி இம்சை செய்தேனோ! அன்னமிட்டவர்களுக்குத் துரோகம் செய்தேனோ! குரு நிந்தனை புரிந்தேனோ! முனிபுங்கவரே! என் நாடு நகர மெல்லாம் இழந்து, நான் இவ்விதமான அந்தரத்தில் உழலும் கதி எனக்கு யாது காரணம்பற்றி வந்தது. இச்சென்மத்தில் என் மனமறிந்து நான் யாருக்கும் துன்பம் இயற்றிலனே! இதை எவ்வாறு நான் சகிப்பேன்!" என மனங்கசிந்து உரைத்தான். திரிகால ஞானியாகிய அம் முனிபுங்கவரும் இதைக் கேட்டு, "ஏ மன்னர் மன்னவனே! கேள். நீ பூர்வஜென்மத்தில் வைசியகுலத்தைச் சார்ந்த ஓர் தனவந்தனாயிருந்தாய். பலசரக்கு முதலான எல்லாப் பண்டங்களும் விற்பவன். உன் வீட்டுக்குப் பக்கத்தில் ஓர் அந்தணர் வசித்து வந்தார். அவர் உன் கடையில் தனக்கு வேண்டிய அரிசி முதலிய சாமான்கள் வாங்குவது வழக்கம். பின் ஒவ்வொரு மாதமும் கணக்குப் பார்த்துச் சேஷமின்றிப் பணம் கொடுத்துத் தீர்த்து விடுவது வழக்கம். ஆனால் நீ கொடுக்கிற சாமான்களை மாத்திரம் 'பத்து' எழுதி, அவர் கொடுத்த பணத்தை 'வரவு' வைக்காமல், அப்பிராமணர்மேல் கணக்கெழுதி வந்தாய் இவ்வாறு ஐம்பது வருஷங்களும் கடந்தன கணக்கு காலகதி ஆகாமல் மாத்திரம் கவனமாயிருந்தாய். சில நாட்களுக்கெல்லாம் நாலைந்து குழந்தைகளை விட்டுவிட்டு, அவரும் மனைவியும் இறந்து விட்டார்கள். நீ உன் கணக்கில் அவரால் கொடுத்த பொருளை வரவு வைக்காமல் எழுதிவந்து, அப்படிக் கூடுதலாயிருக்கும் தொகையைக் கூட்டி, அப் பிள்ளைகளின் பேரில் ராஜசபையில் வாதம் தொடர்ந்து, உன் பொய்க் கணக்குகளைக் காட்டித் தீர்ப்புப் பெற்று, அப் பிள்ளைகளுடைய சொத்துக்களையும் உன் வசமாக்கிக் கொண்டு விட்டாய். இம்மாதிரி, நீ அநீதிபாகப் பிராமணர் சொத்தைக் கவர்ந்த காரணத்தால், இச்சென்மத்தில் உன் நாடு, நகரங்களை நீ இல்லாத காலத்து, உன் பகைவர்கள் கைப்பற்றிக்கொண்டு விட்டார்கள். ஆனால் நீ அக்காலத்து, சிவாலயத்துக்கும், சிவ

ணடியார்களுக்கும் சொஞ்சம் பொருள் கொடுத்து உதவின புண்ய விசேஷத்தால் இப்பிறப்பில் நரபதியாகி விளங்குகிறாய். நீ இப்பொழுது ஓர் அசுவமேதயாகம் சிறப்புற இயற்றினால், நீ இழந்த நாட்டைத் திரும்ப அடையலாம்." என முனிவர் உரைத்தருளினார். இதைப் பரிவுடன் கேட்ட மன்னவன், "ஹே தவத்திலகமே! தாங்கள் சொல்வது உண்மையே. நாடு நகரம் முழுமையும் இழந்து கதியற்று நிற்கிற எனக்கு, யாகம் செய்வதற்கு வேண்டிய திரவியங்கள் எங்கிருந்து கிடைக்கும்? நானோ பரம ஏழையினும் ஏழையாகத் தவிக்கிறேன். தற்போதைய என் நிலைமையை யறிந்து உரைத்தல் வேண்டும்." என வேண்டினான்.

முனிவர், 'மன்னவ! சகல தெய்வீகத் தன்மைகளும் பொருந்தி சகல வளங்களுடன் விளங்குகிற திருவிடைமருதூர் என்னும் தலத்திற்கேகி, ஆங்கு உத்தம தீர்த்தமாகிய பொன்னி நதியில் ஸ்நானம் செய்து, மருதவாணப் பெருமான் ஆலயத்துட் சென்று, அதில் அசுவமேதம் என்னும் பிராகாரத்தை ஒருதரம் வலம் வருவாயேயானால், நீ விரும்பிய காரியங்கள் யாவும் நிறைவேறும். பகைவர்களை வென்று உன் நாட்டைத் திரும்பவும் பெறுவாய். உடனே செல்க.' என உரைத்தலும், மன்னன் மகிழ்வுற்று, முனிவரிடம் விடைபெற்று, இடைமருதூருக்குச் சென்று, முனிவர் அருளியபடி, காவிரியில் ஸ்நானம் செய்து, மருதவாணப் பெருமான் ஆலயத்துட் சென்று, அப்பெருமானை வணங்கிப் பின், அசுவமேதப் பிரதக்ஷணம் ஒருமுறை செய்தலும், தன் மனதில் உற்றிருந்த சோகம் நீங்கி, மன மகிழ்ச்சி யடைந்தான்.

உடனே தான் ஆங்கு ஓர் வசதியிலே தங்கி, தன் மந்திரியை அனுப்பி, தன்னாட்டைக் கைப்பற்றிய பகை யரசர்களின்மேல் போர் புரியும்படி அனுப்பினான். அம் மந்திரிகளும் பரிவாரங்களுடன் சென்று எம்பெருமான் திருவருளினால், பகை யரசர்களைப் போரில் வெல்லவே, தன் நாட்டைத் திரும்பப் பெற்றது மன்றி, எதிரியினுடைய நாட்டையும் ஜெயித்துக் கொண்டு, அரசன்முன் வந்தார்கள். வசுமன்னனும் உளமகிழ்ந்து, தன் பகை யரசனிடமிருந்து கைப்பற்றிய அவனுடைய நாட்டை மருதவாணப்பெருமானுக்கு நல்கினான். பின்னும் மகிழ்வுடன் இத்தலத்தில், தனுர் மாதத்தில், உவஞ்சற்றிரு நாள் என்று சொல்லப்படும் திருவாதிரை உற்சவத்தைச் சிறப்புற

நடத்தி, அதற்காகவும், பல மான்யாதிகளும் விட்டான். பிறகு சிவபெருமான் அருளைப் பெற்றுத் தன் மந்திரிமார் சூழத் தன் நாடாகிய காஞ்சிமாநகரம் சென்று, அநேக காலம் அரசாண்டு வாழ்ந்திருந்தான்.

இவ்வாறு சூதமாமுனிவர், முற்பிறப்பில் பொய்க்கணக் கெழுதி பொருள் கொண்ட காரணத்தால் மறுபிறப்பில் தன் நாடு நகரமுழுமையும் இழந்த வசுமன்னவன், இடைமருதூரில் அசுவமேதப் பிரதக்ஷணம் செய்து, அதன் பலனாகத் தன் நாட்டைத் திரும்பப் பெற்ற மகிமையைக் கூறிப் பின் உறையூர் மன்னனாகிய அஞ்சத்துவச மன்னன் மித்திரனைக் கொன்ற பாவத்தைத் தீர்த்துக்கொண்ட கதையைச் சொல்வாராயினர்.

வசுமன்னவச் சருக்கம்

முற்றிற்று.

நாற்பத்தைந்தாவது

அஞ்சத்துவசச் சருக்கம்.

பல வளங்களும் பொருந்திய காவிரி நதி பாயப்பெற்ற சோழநாட்டிலே, உறையூர் என்னும் பட்டினத்தைத் தன் உறைவிடமாகக்கொண்ட நீதி மன்னன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் அஞ்சத்துவசன். அவன் அஞ்சாத நெஞ்சமுடையவன். கல்வியிற் கரை கண்டவன். இரப்போர்க்கு இல்லையென்னுது ஈதற் குணமுடையவன். மன்மதனை வெட்கித் தலைகுனியும்படியான அழகும் வாய்ந்தவன்.

அம் மன்னனுக்கு அந்தணர் குலத்தில் உதித்த ஆப்த மித்திரர் ஒருவர் இருந்தார். அவர் பெயர் மித்திரன். அவரும் மிகுந்த கல்வி வாய்ந்தவர். மன்னனும் அவ் வந்தணரும் புராண ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கையில், கங்கையின் விசேஷமான மகாத்மியத்தைப் பற்றி விரிவாகப் பேசினார்கள். அம் மன்னன் கங்கையில் ஸ்நானம் செய்ய விரும்பினான். ஆனால், அது வெகு தூரத்திலிருப்பதாலும், மன்னர் மன்னனாகிய தான் பிறர் நாட்டுக்குப் போவது

தகாது என்றும், மனதில் கொண்டான். ஆகையால் தனக்கு உயிருக்கு உயிராகியும், என்றும் இணை பிரியாமலு மிருந்த மித்திரன் என்னும் தன் சிநேகிதரை நோக்கி, தனக்காக கங்கைக்குப் போய் ஸ்நானம் செய்துவிட்டுக் கங்கை கொண்டுவருவதோடும், அதனால் உண்டாகும் பலனையும் தனக்கு அளிக்க வேண்டுமென்று வேண்ட, அவ் வந்தணர், மன்னனைப் பார்த்து, "மன்னவ! தாங்கள் சொல்வது சரியே. நானும் தங்களுக்கு உபகாரம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், என் மனைவி ஓர் யௌவனப் பெண். எனக்கு வீட்டில் உதவிக்கு வேறு மனுஷியாள் இல்லை. அவளைத் தனியே விட்டுவிட்டு நான் போதல் தகுமா? ஆகையால் நான் யோசிக்க வேண்டியிருக்கிறது." என்னலும், மன்னவன், அதற்குத் தகுந்த காவல் ஏற்பாடுகள் தான் செய்வதாயும், தினம் தானே நேரில் காவல் புரிந்துவருவதாயும் பலவாறு சமாதானம் சொல்லி, அந்தணர் காசிக்குப் போகச் சம்மதிக்கும்படிச் செய்தான். உடனே மித்திரர், இது விஷயங்களைத் தன் மனைவிக்குத் தெரிவித்துவிட்டு, வீட்டுக்கு வேண்டிய பொருள்கள் சேகரம் செய்துவைத்துப் பின், அரசனிடமிருந்து விசேஷ திரவியங்களையும் பெற்று, காசி மா நகருக்குப் புறப்பட்டார். காடு, மலை பல கடந்து, நடந்து, காசிக் கேகி, கங்கையில் ஸ்நானமும் செய்பவுற்றார். கயா முதலிய தலங்களில் சிராத்தமும் செய்தார்.

இஃது இவ்வாறு இருக்க, மித்திரர் காசிக்குச் சென்றபின், அரசன் காவல் ஏவலாளர்களை அழைத்து, தன் நண்பர் மனைவி வசிக்கும் வீதியை முன்னினும் பன்மடங்கு ஜாக்கிரதையாய்க் காவல் புரியும்படிக் கடுமையான உத்திரவளித்து விட்டுப், பிரதிதினமும் தானும் அவர் வீட்டின் பக்கலிலிருந்து காவல் புரிந்து, விடியற்காலம் தன் அரண்மனைக்குத் திரும்புவது வழக்கம். இப்படிச் செய்துவருநாளில் ஓர் தினம், காசிக்குச் சென்றிருந்த அந்தப் பிராமணர் அதிசீக்கிரத்தில் ஸ்நானம் முதலியன முடித்துக் கங்கையையும் எடுத்துக்கொண்டு, தன் இல்லம் வந்துசேர்ந்தார். அன்று இரவு பொழுதாகிவிட்டபடியால், மறுநாள் காலை அரசன்முன் செல்லலாமென்று இருந்துவிட்டார். தான் காசிக்கு யாத்திரை போய் வந்த வரலாற்றைத் தன் அருமை மனையாளுக்குச் சொல்லிக்கொண்டிருந்தார்.

வழக்கம்போல் பாதுகாக்கவந்த அரசன் பிறர் குரலைக் கேட்டு, யாரோ காமுகன் வீட்டுக்குள் சென்று விட்டானென்று நினைத்து, மனம் சலனமடைந்து, சந்தேகமுற்று, 'ஆஹா! இதென்ன ஆச்சரியம்! நம் மித்திரர் திரும்பி வந்திருப்பாரோ எனின், அது இயலாத காரியம். கங்கை நதியோ வெகு தூரத்திலிருக்கிறது. அப்படி ஒரு சமயம் வந்திருந்தாலும் என்னைப் பாராமல் வீட்டுக்கு வரமாட்டார். ஆகையால், அக்குரல் அவருடைய குரல் அல்ல. சோர புருஷனது குரலோ என்றால், இப் பெண்மணியோ கற்பரசி. அவளைப் பற்றிக் கெடுதலாகப் பேசினாலும் நாக்கு அழுகிவிடும். சோர புருஷனுமல்ல. இது யாராயிருக்கலாம்?' என மயங்கி, ஒன்றும் தோன்றாமல், சற்று நிதானித்து, அவரைத் திருடன் என எண்ணி, அவனைக் கொன்றுவிடுவதாகத் தீர்மானித்தான். உடனே கூறை வழியாய் ஏறி உள்ளே குதித்துத் தன் உறைவாளால் அந்த உத்தமரை ஒரே வெட்டாகத் துணித்து விட்டான். பாவம்! பிராமணர் காசிக்கு நடந்து போய் வந்ததால் மெலிந்து, மேனி வாடியும், தீக்ஷைவைத்துக் கொண்டிருந்ததால், முகம் வாட்டம் அடைந்தும் இருந்தன. இன்னார் என்றும் விசாரியாமல் அரசன் அவரைத் திருடன் என்ற எண்ணத்தோடு தவறு இழைத்துவிட்டான்.

அப் பெண்மணி, தன் புருஷன் வெட்டுண்டதைத் தன் கண்களால் நேரில் கண்டு, சகிக்கக் கூடாதவளாய்க் கைகளை நெரித்துக் கொண்டு, ஆஹாஹா! ஐயோ! இது என்ன அநீதம். என் பிராணநாதரே! தாங்கள் கங்கையில் மூழ்கி வந்த பலன் இது தானோ! அதுவும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் கிடைத்து விட்டதோ! இது அநியாயம்!" என்று உரக்கக் கதறிக் கதறி அழுதாள். பின்னும், "ஏ! ஜெகதீசா! யாரோ ஒரு திருடன் வந்து, என் அருமைக் காதலனை அகாரணமாய் அகாலத்தில், வாளால் துணித்துவிட்டானே! அந்தோ! இவ்வூரில் கேள்விமுறை இல்லையோ! ஆன்றோர் இல்லையோ! அரசனில்லையோ! நீதி இல்லையோ! காவல் இல்லையோ! நான் யாருமற்ற பாவியாய்ப் பரதவிக்க நேர்ந்ததே! ஏ! என் உயிர்க்குயிரான நாதரே! என்னை வெகு நாளாய்ப் பிரிந்து, தாங்கள் கங்கைக்குச் சென்று இக்கணம்தானே களைப்புடன் இல்லம் வந்தடைந்தீர்கள்! அதற்குள் என்னைத் தனியே அலறவிட்டு, எங்கு சென்றீர்கள்! கங்கையாடிப் பின் கடல் ஸ்நானத்துக்குச் சென்றீர்களோ! என் நாயகரே! நான் எப்படி உயிர் தரிப்பேன்! எவ்வாறு உய்வேன்!

பல தலங்களிலும் சிவபெருமானைத் தரிசனம் செய்யச் சென்றிருக்கிறீர்களோ! இத் தகைய காரியங்களுக்கு உலகத்தில் இல்லாளோடு செல்வதல்லவா தகுதி! அந்தோ! என்னை விட்டு எங்கு சென்றீர்கள்! என் உளம் பதைக்கிறதே! தேவ ஸ்திரீகளிடம் காதல் கொண்டு, என்னை வஞ்சித்து ஈண்டு விடுத்து, விண்ணுலகம் சென்றீர்களோ! என் அன்பரே! வாய்திறந்து ஒருமொழியும் உரைக்கலாகாதோ! விண்ணுலகத்திலிருக்கும் என் தந்தையார் தங்களைக் கண்டு "என் மகள் என்ன குற்றம் செய்தாள், அவளை நீக்கிவிட்டு ஏன் இங்கு வந்தீர்கள்' என்று உங்களைக் கேட்டால், நீங்கள் என்ன விடை அளிப்பீர்கள்!" எனப் பலவாறு புலம்பிப் புலம்பி மெய் சோர்ந்து, மனமுருகி, பிரக்ஞை யற்றவளாய்க் கீழே வீழ்ந்தாள்.

இவைகளையெல்லாம் கண்ட மன்னன், உளம் நடுங்கி, மெய் விதிர்த்து, தரையில் வீழ்ந்து, பயந்து, அரண்டு, அலமந்து, கதறினன். தான் கொன்ற அந்தப் பிராமணரை எடுத்துத் தன் மடிமீது வைத்து அணைத்துக் கொண்டு, "ஏ மித்திர! உலகத்தில் நான் பரம சண்டாளனாக ஆகிவிட்டேனே! வேதவித்தே! அந்தணர் குல திலகமே! என் ஆருயிர் நண்ப! நானே உனக்கு இயமனாக உதித்தேனே! என்செய்வேன்! என்னைப் போல் சண்டாளத் தன்மையான அரசன் இப் புவியில் உளனோ! நீ அறியாயோ! செய்ந் நன்றி கொன்ற மா பாவியாகினேனே! எனப் பலவாறு அலறி அலறி மெய் சோர்ந்து, பின்னும், "ஏ நண்ப! நீ காசிக்குப் போனது முதல் நான் உனக்கு வாக்களித்தபடி, நான் நேரில் வந்து உன் வீட்டின் பக்கலில் யாரும் அறியாமல் இருந்து காவல் புரிந்து போவது வழக்கம். இன்று உனக்கு இயமனாக வந்தேனே! நீ காசியிலிருந்து திரும்ப வந்திருப்பதை அறிகிலேனே. வீட்டினுள் ஆண்குரல் கேட்டுக் கள்வன் என்றே துணிந்தேன். விசாரியாமல் உன்னையும் இவ்வாறு செய்து, நான் கொடிய பழிக்கு ஆளாகினேனே. கங்கை நீரினால் என்னையும், என் மரபினரையும் புனிதர்களாக்க, நீர் காசிக்குச் சென்று, கங்கை கொணர்ந்துத் திரும்பியதும், நேராக என் அரண்மனைக்கு வாராமல், தங்கள் மனையை அடைந்தது, நானும், என் மரபினரும் என்றும் தீராத பழியை யடையத் தாங்கள் செய்த வஞ்சனையோ! நான் மதியிழந்தேனே! யாது செய்வேன்!" எனப் புலம்பிப் புலம்பிக் கதறினன்.

இப்படி அப் பெண்மணியும், அம்மன்னவனும் கதறுவதைக் கேட்டோர் யாவரும், இச் சம்பவத்தைக் கண்டு, துக்கமும், வியப்பும், எய்தி, இதன் விபரத்தைக் கேட்கலுற்றார்கள். உடனே மன்னன், தனக்காக அவ் வந்தணர் பெருமான் காசிக்குச் சென்றதையும், அவர் திரும்பி வரும் வரைத் தான் வாக்களித்தபடி அம் மனையை நேரில் காவல் புரிந்து வந்ததையும், அன்றையதினம் வீட்டுக்குள் ஆண்குரல் கேட்க, தான் வீட்டின்மேல் ஏறிக்குதித்து, ஆராயாமல் செய்த தவறையும் ஒளிக்காமல் சொல்லி, மனமும் கசிந்து துக்க சாகரத்தில் மூழ்கினான். இதைக் கேட்ட யாவரும், பரிதாபப்பட்டு 'இதெல்லாம் தெய்வச் செயல்' என்று சொல்லி, அப் பெண்மணியையும் பல இனிய வசனங்களால் தேற்றி, அரசனையும் ஒருவாறு சமாதானப்படுத்தி, அனுப்பினார்கள். தன் அன்பே உருவாகிய கணவன் இறந்தபின் அம்மனைவி உயிர் தரிக்கப்பெறுமல் வருந்தி நின்றாள். மன்னனும் மித்திரரின் ஈமக்கடன்களை முறைப்படி செய்வித்தான். கொடிய பிரமஹத்தியும், அம்மன்னனைப் பற்றிக் கொண்டது.

அப் பிரமஹத்தி அவன்முன் நிற்கும்; நகைக்கும்; உதட்டை மடித்துப் பற்களை நறநற வென்று கடித்துப் பயமுறுத்தும்; பழிக்குப் பழி கேட்கும்; கையைப் பிடித்திழுக்கும்; சிறிது தூரம் செல்லும்; திரும்பி வரும்; சமீபத்தில் இருந்து பல கொடுமைகள் செய்யும். இதைக் கண்ட அரசன் மனம் நடுங்கி, மெய் பதைத்து, மதி இழந்து, பெருமூச் செறிந்து, மலை போன்ற தன் புஜங்கள் மெலிந்து, பாம்பின் வாய்ப்பட்ட தேரைபோல் தவித்து நின்றான். இதற்கு சாந்தியாக, அம் மன்னன், பசுக்கூட்டங்களுக்கு அறுகம் புற்களைத் தின்னும்படிக் கொண்டுவந்து போட்டான். அந்தணர்களுக்குக் கோதானம், பூதானம் முதலிய பல தானங்கள் செய்தான். பிரமஹத்தியின் உபத்திரவம் நீங்கினதாகக் காணப்படவில்லை. பல சிவஸ்தலங்களில் சென்று, புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து, சிவபெருமானை வணங்கினால் தீருமென்று சொல்லக் கேட்டு, அம் மன்னனும் அதற்கிசைந்து, நானாவித சைனியங்களுடன் உடனே புறப்பட்டு, திருசிரபுரம் முதல் பல சிவ ஸ்தலங்களிலும் தங்கி, தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி, ஆங்கு ஆங்கு வீற்றிருக்கும் சிவபெருமானையும் வணங்கிக், கடைசியாகத் திருவிடைமருதூர் ஸ்தலம் அணுகலுற்றான். வரும் மார்க்கத்தில், திரிபுவனம் என்னும் தலத்தில்

அமைந்துள்ள, இடைமருதைச் சார்ந்த வருணதீர்த்தக் கரையை அடைந்தான். ஆங்குள்ள மா தவ முனிவர்கள், மன்னனை நோக்கி, "மன்னவ! சிறப்புவாய்ந்த இவ் வருண தீர்த்தத்தில் ஸ்நானம்செய்து, இங்கு அமர்ந்திருக்கும் சத்தியோஜாதமூர்த்தமான சிவபெருமானை வணங்கினால் உன் நடுக்கம் தீரு" மென்று சொன்னார்கள். அவ்வாறே அம் மன்னன் ஸ்நானம் செய்து, சிவபெருமான் திருவடியை வணங்க லும், தனக்குற்றிருந்த நடுக்கம் தீர்ந்து, சிறிது உளமகிழ்ந்தான். அங்கிருந்து பல முனிவர்களுடன் பூசத் துறையிலும், மிக்க புகழ் பெற்று விளங்கும் காருண்யாமிர்த தீர்த்தத்திலும் முறையே ஸ்நா னம் செய்து நித்ய கர்மானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு, ஸ்ரீ மருதவாணப் பெருமானை மனதில் தியானித்து வணங்கினான். அந்தணர் முதலானவர்களுக்கு வேண்டிய தானங்கள் கொடுத்து, ஆலயத்தில் அசுவமேதப் பிரதக்ஷணமும் செய்தான். பின், ஸ்ரீ ஜோதிர்மய மகாலிங்கப் பெருமானின் சந்நிதிக்குச் சென்றான். சென்று உள்ளே புகுதலும், அவனைப் பற்றியிருந்த கொடும் பழி யாகிய பிரமஹத்தி வெளிக் கோபுரவாயிலிலேயே தங்கிவிட்டது. என்ன ஆச்சரியம்! சோதியின்முன் இருள் நிற்குமோ! வேந்தனும், தலைச்சுமை நீங்கியவன்போல் துன்பம் நீங்கினான். உளம் மகிழ்ந் தான். ஸ்ரீ மகாலிங்கப்பெருமானைக் கண்ணாரக் கண்டு, மனமார வாழ்த்திப், பேரானந்தத்தை உண்டு களித்தான்; "ஏ பரம தயாளு! தீனதரக்ஷகா! அடியேன் அறியாது செய்த கொடும் வினையினால் உண்டான பழியை நீக்கியருளினீர்கள்! என்னையும் ஆட்கொண்ட புண்ணிய மலையே! புகழ் அருட் கடலே! புனித! மருதத் தலைவ! ஒருகால், கைலையைப் பெயர்க்க எண்ணி, அவதி யுற்ற இலங்கை மன்னனால் துதிக்கப்பட்ட, கானத்திற்கு ஈடுபட்ட தலைவ! உமா தேவியார் தவத்திற்கு மெச்சி, அன்பர்களுக்கு அனுக்ரஹிக்கும் வண்ணம் ஈண்டு இன்புடன் வீற்றிருக்கும் இறைவ! அடியேனையும் அடியார்களுள் ஒருவராகப் பாவித்து, பேரின்பம் அளிக்க வேண்டும்." எனப் பலவாறு மனங்கசிந்து, குவிந்த கரங்களுடன் தோத்திரஞ் செய்து பல வரங்களையும் பெற்று, மனமகிழ்ந்து தன் நகர்க்கு ஏகி னான். பின் சிவபெருமான் அருளால் சிவலோகம் சார்ந்து பேரா நந்தமுற்றான். இவ்வாறு சூதமாமுனிவர் அஞ்சத்துவச மன்னன் இத் தலத்தில் வந்து, ஸ்நானஞ் செய்து, பிரதக்ஷணம் முடித்து,

தன் மித்திரராகிய அந்தணரை அறியாமற் கொன்ற பழியைத் தீர்த்துக்கொண்டு, புனிதனாகிய மகிமையைக் கூறிப் பின், தேவ விரதன் இத் தலத்தில் அடைந்த பெருமையைக் கூறுவாராயினர்.

அஞ்சத்துவசச் சருக்கம்

முற்றிற்று.

நாற்பத்தாறுவது

தேவவிரதச் சருக்கம்.

மனமெனும் நிலத்தில் அஞ்ஞானம் என்னும் களையைக் களைந்து மெய்ஞ்ஞானம் என்னும் பயிரை வளர்த்து சிவம் எனும் பலனை மனத்திடை அடைந்திருக்கின்ற மகருஷிகளே! இதுகாறும் ஸ்காந்தம், இலிங்கம் ஆகிய புராணங்களில் இம்மருதூரைப் பற்றிச் சொல்லப்பட்ட மகிமைகளைக் கூறினோம். இனிச் சூரிய புராணமாகிய பிரமகைவர்த்தத்தில் உலகோருய்யும்படிக் கூறியிருப்பதைச் சொல்லுகிறேன். கேளுங்கள்! அறுபத்து நான்கு கலைகளையும், அவரவர் நினைந்திடும் எண்ணத்தை அறியும் சக்தியையும், தேவர்களிடமும் அசுரர்களிடமும் என்றும் நட்புரிமையையும், உமாபதியினிடம் யாழ் என்னும் வாத்தியத்தில் அவர் கீர்த்தியைப் புகழுந் தன்மையையும், யார் யாரிடத்தில் எங்கெந்த காலத்தில் எந்த எந்த மாதிரி பேசவேண்டுமோ அம்மாதிரி சொல்லுந் தன்மையையும், பெற்று, தவத்திற் சிறந்து, உலகங்களெல்லாம் ஒரு நொடிப்போழ்தில் சுற்றி வரக்கூடியவருமான நாரதமாமுனிவர், தாமரைமலரில் வசிக்கின்ற நான்முகக்கடவுள் முன் சென்று, அடிபணிந்து, "ஏ சுவாமின்! திருநீலகண்டராகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் பலதலங்களின் பெருமைகளை உரைத்தருளினீர்கள். அவற்றுள் மிகுந்த மகிமை பெற்றவை இன்னின்னவை எனஈண்டு உரைத்தருளல் வேண்டும்" எனப் பிரார்த்தித்தார்.

இதைக் கேட்ட பிரமதேவரும் உளமகிழ்ந்து, 'நாரதமுனிவ! உமது எண்ணத்தைக் கேட்க மனம் மகிழ்ந்தேன். கவனமாய்க் கேளும்! அனேக ஜன்மங்களிற் செய்த புண்ணியத்தின் பலனாகத் தான், சிவபெருமான சரிதையைக் கேட்க மனம்நாடும். அப்படிக் கேட்ட வுடன், தனக்கு முன் ஐம்பது தலைமுறை, பின் ஐம்பது தலைமுறை, ஆகத் தன்னையும் சேர்த்து நூற்றொரு தலைமுறை மோக்ஷத்தை யடையச் செய்வான். இவ்வளவு பெருமைபெற்ற சிவ சரித்திரத்தை நீ மகிழ்ந்து கேட்க, அதை நான் அன்புடன் உரைப்பதினால் நானும் தூயனாகிறேன்.

இப் பூவுலகின்கண் ஆராயுங்கால், அநேக சிவஸ்தலங்கள் உள்ளன. அவற்றுள் மேன்மையையுடையன ஏழாயிரத்து நானூறு ஸ்தலங்களாம். அவற்றுள் விசேஷம், ஆயிரத்தெட்டு ஸ்தலங்களாம். அவற்றுள்ளும் பெருமை யுற்றன நூறு ஸ்தலங்களாம் அவற்றினுள் விசேஷமாக விளங்குவன அறுபத்தெட்டு ஸ்தலங்களாம். அவற்றினுள் மிக்க சிறப்புற்றன இருபத்து நான்கு ஸ்தலங்களாம். அவற்றினுள்ளும் மிக்க விசேஷமும் கீர்த்தியும் அடைந்து விளங்குவன, கைலாசபர்வதம், திருவண்ணாமலை, காசி, காளத்தி, மதுரை, சிதம்பரம், திருவாரூர், இடைமருது என எட்டு ஸ்தலங்களாம்.

சிவபெருமான், ஸ்ரீ உமாதேவியாரின் இருதய கமலத்தில் என்றும் நீங்காது விரும்பி உறைவதுபோல, இம் மருதூரில அமர்ந்து விளங்குகிறார். ஆதியில், அம்பிகைக்குப் புற உலகங்களைக் காண்பிக்கும் எண்ணம், விருஷபாரூடராய்ப் பல தலங்களையும் காண்பித்துக் கொண்டு, இம் மருதூருக்கு வருகையில், கைலையங்கிரியானது, சிவபெருமானது பிரிவாற்றாமையால், தானும் ஓர் மருதவிருக்ஷமாகி, ஈண்டு சிவபெருமானுக்கு நிழலைக் கொடுத்து இத்தலத்தில் நின்றது.

வாசநீடுமம் மருதினை மணிவிழி நோக்கில்
தேசிலங்கிடு கயிலையின் தெரிசனப் பலனும்
ஆசையால் வலமியற்றினு மிறைஞ்சினு மதனைப்
பூசைசெய்யினும் அம்மலைக் கியற்றலே போலாம்.

சிறக்குமவ்விடை மருதினிற் பிறக்குதல் செயினும்
இறக்கினுங் கணமிருக்கினு மெதிர்படிந் திடினும்
நெறிக்கண்நேருற நோக்கினு நினைக்கினு மதனை
மறக்கொடும்பவ மகன்றிடு மருவுநீ டின்பம்.

என்றபடி, மிக்க வாசனை பொருந்திய அம் மருத விருக்ஷத்தைக் கண்ணுற் கண்டாலுமே, பிரகாசத்தை யுடைய கைலாசமலையையே நேரில் தெரிசித்த பலன் உண்டாகும். அன்பொடு அதை ஒரு பிரதக்ஷணம் செய்தாலும், நமஸ்கரித்தாலும், பூஜைசெய்தாலும், அக் கைலயங்கிரிக்கே செய்ததாக ஆகும். இவ்வளவு மகிமை பொருந்திய மருதவனம் என்கிற தலத்தில், பிறந்தாலும், இறந்தாலும், அல்லது ஒரு க்ஷணமேனும் வாசஞ் செய்தாலும், அத்தலத்தை நோக்கி, நமஸ்கரித்தாலும், கண்ணுற் கண்டாலும், மனதினுல் நினைத்தாலும், தீராத கொடும் பழிபாவங்கள் நீங்கி, பேரின்பத்தையே அடைவார்கள். இன்னும் மாதா, பிதா, குரு, தெய்வம் முதலியவர்களுக்குச் செய்த துரோகத்தினுல் உண்டான கொடிய பாதகங்களும் இத்தலத்தில் நீங்கும். அஞ்சத்துவசச்சோழனையும், வரகுணபாண்டியனையும், மாந்தாதா அரசனையும் பற்றி யிருந்த பிரமஹத்தியாதி கொடும் பழிகள் இத்தலத்தில் நீங்கியிருக்கின்றன. அத்தலத்தில் உள்ள தீர்த்தங்களின் பெருமையோ அளவிடமுடியாது. அவை யெல்லாம் கங்கையினும் மேம்பட்டதாகவே விளங்கும். ஆங்குச் செய்யப்பட்ட அணுவளவு புண்ணியம் மேருவைப்போல் வளரும்.

அத்தலத்தில், மகா பரிசுத்த மனமுடையவரான விபண்டக மாமுனிவர் பல சிடர்கள் சூழ, எட்டு சதுர்யுக காலம்வரை, தங்கித் தவம் புரிந்து, சிவபெருமானைப் பணிந்து பூஜைகளும் செய்து, ஜோதியின் தாளை யடைந்தனர். பின், நாமும் அப்பெருமை வாய்ந்த தலத்துக்குச் சென்று, சிவபெருமானைப் பூஜைசெய்து, தைப் பூச உற்சவத்தையும் சிறப்புற நடத்தினேம். இப்படியாக என்னைப்போலுள்ள அநேக பிரமாக்களும், வைகுண்டாதிபதிகளும் இத்தலத்தில் வந்து பூஜை செய்து, பல வரங்களும் பெற்றிருக்கிருர்கள். இன்னும் பல வைபவங்கள் உள்ளன. இவைகளெல்லாம் எடுத்துரைப்பதென்றல் ஆயிரம் நாவையுடைய ஆதிசேஷனுலும் இயலாது. அந்த ஸ்தலத்தில், திருக்கோவிலிலுள்ள அசுவமேதப் பிரகாரத்தை ஒரு தரம் வலம்வருவதால், குருடரும் தம் கண்ணைத் திரும்பப் பெறுவார்கள்; பார்ப்பதற்கு அருவருப்பான க்ஷயம், குஷ்டாதி கர்ம ரோகங்கள் நீங்கி, சுந்திர வடிவத்தை அடைவார்கள்; எத்தகைய வறுமைகளும் நீங்கி, செல்வர்களாக ஆவார்கள்; எவ்விதமான சங்காதோஷங்களும், சித்தப்பிரமை முதலான கொடிய தீவினைகளும் நீங்குவார்கள்.

எவரேனும் இங்கு வீற்றிருக்கும் சிவபிரானுடைய பொருள்களில் ஏதேனும் ஒரு அணு அளவு கவர்ந்திடுவாரானால், அவர் நூறு ஜன்மம் நீசனாகவும், அதன்பின் நூறு ஜன்மம் நாயாகவும் பிறந்து, பல துன்பங்களிலும் உழன்று, கடைசியில் புழுவாகப் பிறப்பது திண்ணம். இவ்வாறு, சிவபெருமான் பொருளையே கவர எண்ணிய ஓர் பிராமணன், சிவ சந்நிதியில் நெய்யைக் கவர்ந்த காரணத்தால் புழுவாய்ப் பிறந்து, இத்தலத்தில் புனிதனான கதையைச் சொல்லுகிறேன் கேளும், நாரதரே! இத்தலம் இவ்வளவு மகிமையையுடையது. அதிலும், தைப் பூசதினமும் அளவற்ற விசேஷத்தையுடையது, எனச் சொல்லியருளலும், நாரத மாமுனிவர், மகிழ்வுற்று, அடிவணங்கி, அந்தப் பிராமணனுடைய கதையையும் உரைத் தருளவேண்டும் என, வேண்டினார்.

வேண்டலும் பிரமதேவர், "நாரத முனிவ! கேளும். பல வளங்கள் பெற்ற 'சண்பகவதி' என்னும் நகரத்தில், ஆகாயத்தை அளாவிய கொடிகள் கட்டப்பட்ட அநேக மாளிகைகளையுடைய பல வீதிகள் உண்டு. அவற்றுள் ஓர் வீதியில் வினதன் என்று ஓர் அந்தணர் வசித்துவந்தார். அவர் கல்வியில் தேர்ந்தவர். அவர் மனைவிக்கு 'மாலினி' என்று பெயர். அவள் எல்லா இலக்ஷணங்களும் வாய்ந்தவள். மேகம் போன்ற தன் கூந்தலினாலும, வேலைப் பழிக்கும் விழிகளினாலும், இரதியே வெட்கும்படியான தன் அழகினாலும, கச்சைக் கிழித்தெழு இரு தனத்தினாலும், நடையினாலும், உடையினாலும், மாதவர்களையும் மயங்கச் செய்யும் தன்மையுடையவள். ஆடை யாபரணாதிகளால் அலங்கரித்துக்கொண்டு, வீதியிலும், வீட்டு வாயிலிலும் எந்நேரமும் நின்று, காமுகர்களை மயக்கி இழுக்கும் நோக்கத்தோடு நிற்பதும் வழக்கம். இவ்வாறு, பல காமுகர்களை வசப்படுத்தி, நடைமாறி யிருந்ததைக்கண்ட, வினதன், கண்டித்தலும், அவனையும், ஸ்திரீகளுக்கு இயற்கையாக அமைந்துள்ள வஞ்சனையினால் வசப்படுத்தித் தன் நடைக்கு மாறில்லாமல் இருக்கும்படிச் செய்துவிட்டாள். அத் தகைய மாலினியின் வயிற்றில் உதித்தனன் ஒருவன். இவன்தான், கோவிலில் நெய் கவர்ந்து, புழுவாகப் பிறந்து, புனிதனானதாகச் சொல்லப்பட்ட பிராமணன். அவன் பெயர் தேவவிரதன். அவன் தன் தந்தையாகிய வினதனிடம் முறைப்படி வேதாத்தியயனம் செய்து வந்தான்.

இப்படி யிருக்கும் நாளில் தைப் பூச உற்சவம் வந்துற்றது. அப் பூசதினத்தில் அந்தணராதி பலரும், பூசத்துறையில் ஸ்நானம் செய்து எம்பெருமான் திருவடியை வணங்கலானார்கள். இதனிடையில், ஸ்நானம் செய்துவரும் ஓர் பிராமணர் ஜன நெருக்கமாயிருந்ததால் சற்று ஓர் புறம் ஒதுங்கினர். அச சமயம் புழுப்பிறப்பு எடுத்திருந்த அத்தேவவிரதன் மேல், அந்தப் பிராமணருடைய பாதம் பட்டது. அப் புண்ணிய தினத்தில் காவிரியில் பூசத் துறையில் ஸ்நானம் செய்ததினால் ஈரமாயிருந்த அவ் வந்தணருடைய பாதம் தன்மேல் பட்ட அளவில், அப் புழு, தன் உருவம் நீங்கி, தேவ வடிவம் பெற்றது. உடனே, தேவர்கள் புஷ்பமாரி பொழிய, தேவ அரம்பையர்கள் சாமரம வீச, பஞ்சவாதத்தியங்கள் முழங்க, அவ்வுருவம் தேவவிமானமேறி, தேவர்குழாம் உபசரிக்க விண்ணுலகடைந்தது. ஏ நாரதமுனிவரே! இவ்வாறு அந்த வேதியன் முன் செய்த தீமையும், அதற்காக எமபுரத்தில் அவன் அடைந்த நரக அவஸ்தைகளும், பின் இவ்வுலகத்தில் அவன் எடுத்து அனுபவித்த பிறப்புக்களும், பூசத் துறை நீரின் மகிமையால், புழு, தன் வடிவு மாறித் தேவ உருப் பெற்று, ஆங்குத் தேவர்களால் கொண்டாடப் பட்டு வீற்றிருக்கும் ஆச்சரியம் என்னே! எனப் பிரமதேவர் நாரத மாமுனிவரைப் பார்த்துப், பின் நந்தகன் என்பவனுடைய கதையைச் சொல்லியருளினர்.

எனச் சூத மா முனிவர் மேலும் நைமிசாரண்ய மகருஷிக்குச் சொல்வாராயினர்.

தேவவிரதன் சருக்கம்
முற்றிற்று.

நாற்பத்தேழாவது
நந்தகச் சருக்கம்.

நீர்வளம் நிலவளம் பொருந்திய, விதேக நாட்டில் காபிலம் என்னும் ஓர் ஊரில் ஓர் அந்தணன் வசித்துவந்தான். அவன் எப்பொழுதும் தன் கையில் நாந்தகம் என்னப்பட்ட வாளை ஏந்திக் கொண்டிருந்த தன்மையினால் 'நந்தகன்' எனப் பெயர் கொண்டிருந்தான்.

அவன் தன் எதிர்ப்பட்ட ஸ்திரீகள், பாலர்கள் முதலிய பலரைக் கொன்று, அவர்களிடமிருந்து பல ஆடை யாபரணாதிகளைக் கொள்ளை யடிப்பது வழக்கம். அப்படி அபகரிககப்பட்ட பொருள்களைக் கொண்டு, தனக்கு ஐந்து மனைவிகள் கலியாணம் செய்துகொண்டான்.

பிறர்மனை கற்பை மாய்த்தோர் பிறைநுத லாரைக் கொன்றோர்
இறையவர்க் கிடரிழைத்தோர் இயல்சிவத் துரோகஞ் செய்தோர்
அறைதரு மிவர்கள் மன்ற லெத்தனை யாற்றினாலும்
முறையுடன் ஆற்ற ஆற்ற முடிவரம் மகளிரெல்லாம்.

என்றபடி பரஸ்திரீகளின் கற்பையழித்தவரும், ஸ்திரீஹத்தி செய்தவரும், குருவுக்குத் துன்பம் செய்தவரும், சிவநிந்தனை செய்தவரும், எத்தனை தாரம் விவாகம் செய்துகொண்டாலும், ஒவ்வொருவராகத் தரிக்காது விண்ணுலகு ஏகுவார்கள். இத்தகைய நீதிக்கு மாறில்லாமல் அந் நந்தகனும் கொலைகள் பல புரிந்ததனால் அவனுக்கு ஒரு தாரமேனும் தரிக்காமல், ஒவ்வொருவராக அவன் ஐந்து மனைவியரும் கூற்றுலகு அடைந்தார்கள். இதனால் அவ் வந்தணனும் மனம் வருந்தித் துக்கித்து, இனி தான் கல்யாணமே செய்து கொள்ளுகிறதில்லை யென்று எண்ணங் கொண்டு ஊரூராய்த் திரியலுற்றான்.

இப்படித் திரியும் நாளில், சாணார் சாதியிற்பிறந்த ஓர் யௌவன மாது, தன் பக்கத்தில போய்க்கொண்டிருந்ததைக் கண்டு, அவள் எதிரில் நின்று, வெகுநாள் அறிந்து பழகினவன் போல், 'ஏ பெண்மணி! நீ இங்கு யாது காரணம் பற்றி வந்தாய்? தனியே வரலாமா? எனப் பல இனிய மொழிகளையும் கதைகளையும் சொல்லிக்கொண்டே வந்து, மெல்ல அவள் கையைப் பிடித்திட்டான். கையைத் தொடலும் அவள் சற்று நாணமடைந்து விலகினாள். அவனும் நெருங்கினான். உடனே அப்பெண், அவனைப் பார்த்து, 'அந்தணர் திலகமே! தாங்களோ பிராமணர். யானோ கள் விற்கும் ஜாதியில் தோன்றினவள். தாங்கள் என்னிடம காம விகாரப்படுவது தகுதியன்று.' எனக் கூறினாள். அப் பிராமணன் அதைக் கேட்டு, 'ஆருயிர்க் காதலியே! தாமரையானது சேற்றில் தோன்றினாலும், அதற்கு எந்தவிதத்திலாவது குறைவு உண்டோ! மிக்க சௌந்தர்யமும் அழகும் பொருந்தி விளங்கும் என் உயிரே!' எனச் சொல்லி ஆசைப் பெருக்கினால் அவளைக் கட்டி யணைத்திட்டான். யாது செய்

வாள் அப் பெண்மணி! அவளும் ஈடுபட்டுவிட்டாள். பின் அவளை யும் அழைத்துக்கொண்டு, தன் வீடுசேர்ந்து சிலநாள் அவளோடு சுகமுற்றிருந்தான். இதனால் அவனுக்கு உண்டான உலக அபவாதத்தையும் அவன் ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. அப் பெண்மணியும் கருத்தரித்து, கோடி சூரியன் உதயமானாற் போல ஒரு மகவினையும் ஈன்றெடுத்தாள். அப் பிள்ளை பிறந்த தோஷத்தினால், அப் பெண்மணிக்கு வியாதி தொடர்ந்து, சுகமடையாமல் அவளும் எமபுரம் ஏகிவிட்டாள். அவள் பிரிவைச் சகிக்கக் கூடாதவனாய், நந்தகன் அவள் மரணத்துக்கு அக் குழந்தையே காரணமா யிருந்த தென்று எண்ணி, சோதிவடிவான அக் குழந்தையின் இரு கால்களை யும் பற்றிக் கிழித்து உடலை இரு கூறாக்கி, அங்குள்ள நீரோட்டத்தில் எறிந்துவிட்டான். அந்தோ! பாவம். புத்திர வாஞ்சையினால் தலங்கள் தோறும் சென்று, தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து, தான தருமங்கள் பல புரிந்தும் பயன் அடையாது தவிக்கும் மானிடர்கள் இதைக் கேட்டு மனம் நடுக்க முறாரகளா! காமவேட்கையின் பாற்பட்ட அந் நந்தகன், 'அப் பெண்மணி கருத்தரித்ததற்குக் காரணம் தானே யாவன்' என்பதை உணர்ந்து தன்னை மாய்த்துக் கொள்ளுதல் அல்லவா நீதிமுறை? இப் பழி வீண்பழி யாகுமா?

கேளும் நாரத முனிவரே! அந்தப் பிராமணன் 'நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கிறது' என்று எண்ணி மனத் துயரமுற்று தென்திசை நோக்கிச் சென்றான். எங்கு சென்றாலும் கொலைப் பழி அவனை விடுமோ? அவனுக்குச் சித்தம் பிரமை கொண்டது. பல நோய்களை அடைந்து வருந்தினான். இப்படி பல பிணிகளால் உபத்திரவம் செய்யப்பட்டு, காடு மலை, நாடு நகரம் பல கடந்து, கடைசியாக இம் மருதூரை வந்தடைந்தான். தன் ஞாபகம் தனக்கு இல்லாமல் மனம் சோர்ந்து வீதியின் ஓர் புறத்து வீழ்ந்து கிடந்தான். அன்றையதினம் புஷ்ப உற்சவத்தின் தீர்த்ததினம். காவிரியில் பூசத் துறையில் ஸ்நானம் செய்துவிட்டு, ஓர் பிராமணர் அவ்வீதி மார்க்கமாய் வந்தார். வீதியில் ஒரு சார்பாகக் கிடந்த நந்தகனைக் கண்டார். அவன்மீது இரக்கம் கொண்டார். அவனை யணுகினார். தன் ஈரக்கையினால் அவனைத் தூக்கி எடுத்தார். பூசத்துறையில் ஸ்நானம் செய்து, அதனால் ஈரமடைந்த கையினால் அந்த வேதியர் அவனை எடுத்தலும், ஆஹா! என்ன ஆச்சரியம்! நந்தகன் சோர்வு நீங்கி, மனந்தெளிந்து, பிணிகளும் அகலப் பெற்று

தன் தீவினைகள் எல்லாம் அக்கினியிற் பட்ட பஞ்சுபோலத் தீயப்பெற்றான் என்றால், அத் தீர்த்தத்தில் மூழ்கினதினால் ஆகும் பலனை எவ்வளவு கூறினாலும் மிகையாகாது. பிறகு அந்தப் பிராமணர் நந்தகனை நோக்கி 'நீர் யாவீர்? எங்கிருந்து இங்குற்றீர்? உமது வரலாறு என்னை'? எனக் கேட்டலும், நந்தகன், பால்யம் முதல் தான் இயற்றிய துஷ் கிருத்தியங்களையும், அதனால் படிப்படியாக தனக்குற்ற விபத்துக்களையும் விபரமாய் உரைத்துப் பின், அந்தப் பிராமணர் கை ஈரம் பட்டதும் தான் நல்லுணர்வு பெற்றுத் தீவினைகள் நீங்கி விளங்குவதையும் தெரிவித்தான். அங்குக் கூடியிருந்தவர்கள் இதைக் கேட்டு, பூசத் துறையில் பூச தினத்தில், உற்ற தீர்த்தத்தின் மகிமையை யறிந்து, புகழ்ந்து புகழ்ந்து மெச்சலானார்கள். அந்த நந்தகனும், உடனே பூசத்துறைக்குச் சென்று ஸ்நானஞ் செய்து, புனிதனாகி, மருதவாணப் பெருமான் ஆலயத்துட் சென்று, எம்பிரானை மனமார வாழ்த்தித் துதிசெய்து, எம்பெருமான் அருளையும் பெற்றான்.

பின் சிலகாலம் அத் தலத்தில் தங்கி, கைலையை யடைந்து மகிழ்வுடனிருந்தான்.

நாரத முனிவரே! இம் மாதிரி பூச தினத்தில் காவிரியில் ஸ்நானம் செய்தவருடைய ஈரக்கை ஈரக்கால் பட்டதும், பரமசிவத்துரோகியும் கொலை பாதகாதி சகல சண்டாளத் தன்மைகளை அடைந்தவனும் பரம னருளைப் பெற்றார்கள். என்றால், மிகுந்த பக்தியோடு அன்றையத் தினம் அக் காவிரி நதியில் ஸ்நானம் செய்வோர்கள் இஷ்டசித்திகளை அடைவார்கள் என்று சொல்லவும் வேண்டுமோ? எனப் பிரமதேவர் நாரத மகாமுனிவருக்குச் சொல்லியபின் பூச மகிமையைக் கூறியதைச் சூதமாமுனிவர் நைமிசாரண்ய இருஷிகளுக்குக் கூறுவாராயினர்.

நந்தகச் சருக்கம்

முற்றிற்று.

நாற்பத்தெட்டாவது

பூச மகிமைச் சருக்கம்.

முற்கூறியபடி, ஆதி நாளையில், வீர சோழ மன்னன், உரோமச மா முனிவரை வணங்கி, ஸ்ரீ ஜோதிர் மய மகாலிங்கப் பெருமானுக்கு உற்சவம் நடத்த எண்ணி, அதற்குரிய ஓர் உத்தம தினத்தைக் குறிப்பிட்டருளும்படி வேண்டின காலையில், அம் மகா முனிவரும் சர்வ மங்களங்களையும் அளிக்க வல்ல உத்திராயண புண்ணிய காலத்தில் சூரியன் பிரவேசமாகிற மகர மாதத்தில், நக்ஷத்திரங்களில் உத்தமமானதும் பிரகஸ்பதி பகவானுக்கு உரியதுமான 'பூச நட்சத்திரத்' தன்று, எம்பெருமான் தீர்த்தம் கொடுத் தருளும்படி விழவு நடத்தல் விசேஷ மென்று உரைத்தருள, அம்மன்னனால் நடத்தி வந்ததாம், இத் தைப்பூச தின மகிமை.

இத் தலத்தில், சித்திரையாதி மாதங்கள் தோறும், ஒவ்வொரு மன்னரும் ஒவ்வொரு உற்சவம் ஏற்படுத்தி அது செவ்வனே நடைபெறும் வண்ணம் மான்யாதிகள் விடுத்தும் இருக்கிறார்கள். அத்தகைய விழாக்களில் 'தைப் பூச உற்சவமே' மிக்க பெருமையையுடையது. பிரமாதி தேவர்களும், தேவ கணங்களும், கின்னரர், கிம்புருடர், சித்தர், மாதவர் முதலானோர்களும், அப் பூச தினம் எப்பொழுது வரும் என்று ஆவலோடு எதிர்பார்த்திருப்பார்கள்.

அப் பூசதினத்தில் எம்பெருமான் தீர்த்தம் கொடுத்தருளும்படி, அதற்குப் பத்து நாள் முன்னரே துவஜாரோகணம் செய்து உற்சவ ஆரம்பம் செய்வது வழக்கம். அக்காலத்து, இவ் விடைமருதூரில் வீதிகள் மனைகள் எங்கும், கூந்தல், தோரணம் முதலாதிகளால் விசித்திரமாய் அலங்கரிக்கப் பெற்று, அவ் வீட்டிலுள்ளோர் பலரும் தம்மிடமுள்ள ஆடையாபரணாதிகள் பூண்டு, தம் சுற்றத்தாரோடு வெகு குதுகலத்துடன் நித்திய கல்யாணமாகவே விளங்குவார்கள்.

ஏகநாயகப் பெருமான் வீதியில் பவனி வருங்காலத்து அமைந்திருக்கும் வாத்திய கோஷங்களின் சப்தத்தைக் கேட்டதும், ஒவ்வொரு வீட்டிலுமுள்ள மாதர்களும் மைந்தர்களும், அவரவர்கள்

செய்துகொண்டிருக்கும் தொழில்களை முற்றும் மறந்து, சிவபெருமானைத் தரிசனை செய்ய மிக்க ஆவலுற்று, வீதியில் வந்து நிற்பார்கள். விருஷப முதலாக, அன்றன்றைக்கு பஞ்சமூர்த்திகளும் தத்தமக்குரிய வாகனங்களில் பலவித வாத்திய கோஷங்களுக்கிடையே, குதூகலத்துடன் வீதி பவனி வருவது வழக்கம். ஏகநாயகப்பெருமானின் திருவுருவத்தில் யார் யார் எந்த எந்த அம்சத்தைக் கண்டார்களோ அந்தந்த உறுப்பினழகிலேயே ஈடுபட்டவர்களாக, மற்ற உறுப்பின் இலக்ஷணத்தை அறியாது விழித்து நிற்பார்கள்.

விண்ணினின்றும் உண்டாகும் இடி முழக்கங்களும், கடலிடை உண்டாகும் பேரிரைச்சல்களும், இப் பவனி வருகையிலுண்டாகும் பலவித வாத்திய கோஷங்களுக்குள் அடங்கிவிடும். அவ் வாத்திய கோஷங்கள், மருதவாணரைக் குறித்து அக் காலத்து அடியார்கள் செய்யும் பல துதிகளின் ஓசைக்குள் அடங்கும்; அத் தோத்திரங்களின் ஒலியோ, அடியார்கள் 'ஹர ஹர' என்று சொல்லும் சப்தத்தினுள் அடங்கும். இன்னும், மண்டபத்தின் மீதும், அழகிய மாளிகைகள் மீதும், மேக மண்டலத்தை அளாவிய கோபுரங்கள் மீதும், உயர் மரங்களின் மீதும், தரையின் மீதும், ஜனங்கள் தங்கியிருந்து, ஏகநாயகப் பெருமானையே நோக்கினவர்களாய்ச் சித்திரம் போல் அசையாமல் நிற்பார்கள்.

இன்னும் அரக்கர்கள், தேவர்கள், அசுரர்கள், யக்ஷர்கள், மானுடர்கள், பெருத்த சரீரத்தையுடைய பூதங்கள், மற்றுமுள்ள ஆடவர்களும், அவரவர்கள் பெண்டிர்களும், வீதிகளில் ஒருவரோடொருவர் நெருங்கி, வேற்றுமை யின்றிக் கலந்து நிற்பார்கள். மன்னுதி மன்னர்க ளெல்லாம் நெருக்கத்தில் பல ஏழ்மை யுள்ளவர்களாலும் நெருக்குண்டு, மனஞ் சலியாது நிற்பார்கள்.

இத்துணைப் பெருமை வாய்ந்த இவ் விழாச் சிறப்புக்குப் போக எண்ணும் ஒருவர், அந்தணர்களுக்கும் சிவனடியார்களுக்கும் விசேஷ அன்னதானம் செய்து, பின் முறைப்படி யாத்திரா தானம் பலவும் புரிந்து, அகத்திலும் புறத்திலும் தூயதாம் பஞ்சகவ்வியம் கலந்திடச் செய்து, அவ் வந்தணர்களிடம் விடைபெற்றுத் தன் மனைவி மக்கள் சுற்றத்தார் முதலான யாவருந் தொடர்ந்திட, மருதவாணப் பெருமானையே மனத்திடை யமைத்து, மிக்க மகிழ்ச்சியுடன் செல்லல் வேண்டும். அத் தலத்துக்குச் சென்றதும் ஆங்குள்ள பல

புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து பின் மகிழ்வொடு ஸ்ரீ மகாலிங்கப் பெருமானை வணங்குதல் வேண்டும். அப் பெருமானுக்கு அவரவர்கள் இயன்ற அளவு, பூமி, பொன், வஸ்திரம், ஆபரணம் முதலானவைகள் கொடுத்து, நானாவித நறுமலர்களையும், வில்வங்களையும் கொண்டு அருச்சனை செய்திடல் வேண்டும்.

இவ்வாறு, கொடியேறின நாள்முதல், பத்து தினங்களிலும், இன்பத்தை யளிக்கும் காவிரி நதியில் ஸ்நானம் செய்து, மருதவாணப் பெருமானை வணங்கி, மௌனமாய் வீதி வலம் வந்து, மெய்யன்பர்களுக்கு அன்ன வஸ்திரங்கள் சக்திக்களவு தானம் செய்ய வேண்டும். தினம் அத் தலமகிமையை உரைக்கும் ஆன்றோரிடம், ஸ்தலபுராணம் கேட்கவேண்டும். அவர்களுக்கும் விசேஷமாகப் பொருள் வழங்கவேண்டும். அத் தலத்திலுள்ள வில்வாதி விருக்ஷங்களுக்கு ஜலம் விட்டு, அவைகளையும் பிரதக்ஷணம் செய்து துதி செய்ய வேண்டும். புஷ்ய தீர்த்த தினமாகிய பத்தாவது தினத்தில், மறுபடியும் அத் தலத்திலுள்ள தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து, எம்பெருமான் விருஷபாரூடராய்க் காவிரியில் தீர்த்தம் கொடுக்கும் சமயத்தில் தாமும் ஸ்நானம் செய்து, எம்பெருமானையும் வணங்க வேண்டும். இவ்வாறாக, பத்து தினங்களிலும் உபவாசமாக இருந்து, பதினோராவது தினம் அடியார்கள் சூழ இன்புடன் அருந்தல் வேண்டும். உப வசித்திருக்க இயலாதவர்கள், பால், பழம், மாவு முதலியன உண்டு, வைராக்கியமாக விரதத்தை அனுஷ்டித்தால், இப்பூவுலகில் அவர்கள் மனதில் எண்ணியவை யெல்லாம் அதி சீக்கிரத்தில் அடைந்து, பலநாள் இன்புடன் வாழ்ந்து சிவனருளைப் பெற்றுச் சிவலோகத்தையும் அடைவது நிச்சயம். அப்படிக்கின்றி, ஏகவார போசனம் செய்து கொண்டு, பக்தியுடன் இத் திருவிழாச் சிறப்பைத் தெரிசனை செய்பவரும் எண்ணிய பலன்களைப் பெறுவர். புத்திரப் பேற்றை விரும்பினோர் அப் பத்து தினங்களிலும் உப்பு நீங்கப் புசித்தல் வேண்டும். விசேஷ செல்வத்தை நாடி யிருப்பவர்கள், இப் பத்து தினங்களிலும், நித்திரை, எண்ணெய்முழுக்கு, தாம்பூலந்தரித்தல் ஆகிய இவைகளை நீக்குதல் வேண்டும். இவ்வாறியற்றி தத்தம் ஊருக்குச் செல்லுகையில், மருத நாயகப் பெருமான் முன்னர் சென்று, அடிபணிந்து, விடைபெற்றுத் தம்மூர் சேர்ந்து, அடியார்களுக்கு விசேஷ அன்னதானம் செய்து, அப் பலனை மருதவாணப் பெருமானுக்கு அர்ப்பணம் செய்திடில் பூரண பலனும் உண்டாகும் என்ப

தற்கு ஐயமில்லை. இவ்வா றில்லாவிட்டாலும் அவரவர்கள் தத்தம் சக்திக் கிசைந்தவாறு, அத் தலத்தையடைந்து அன்புடன் அத் திரு விழாக் காட்சியைத் தெரிசித்தவர்கள், தம்மைப் பற்றியிருந்த பாச பந்தங்களும் பிணிகளும், அடியோடு தொலைந்து, நீண்ட காலம் இவ் வுலகத்தின் இன்புற்ற வாழ்க்கையைப் பெற்றுப் பின் கைலையை அடைவார்கள்.

இந்த ஸ்தல புராணத்தை அன்புடன் படிப்பவர், கேட்பவர், கேட்டதைக் கேட்போருக்கு உரைப்பவர் எவர்க்கும், ஆயிரம் கன்னி காதானம் செய்த பலன்களும், கோதானம், பூதானம் முதலி யன செய்யப்பட்டதால் உண்டாகும் பலன்களும், ஆயிரம் வருஷம் அன்ன பானாதி யின்றிச் செய்த உயர் தவத்தின் பலன்களும் ஒருங்கே சித்திக்கும். என்று பிரமதேவர் இத் தலத்தின் பூச உற்சி வத்தின் மகிமையையும், ஸ்தலபுராணத்தின் மகிமையையும் விரிவா கக் கூறக் கேட்ட, நாரத மகா முனிவர் பிரமதேவரை நோக்கி, "ஏ சுவாமின்! நானும் அம் மருதூருக்குப் பலதடவை சென்றேன். காவி ரியில் ஸ்நானமும் செய்தேன். சிவ பெருமானை வணங்கிச் சில வரங் களையும் பெற்றேன். ஆனால் அத் தலம் இவ்வளவு மகாத்மியத்தை உடையது என்று அறியவில்லை. இன்று தான் தங்களிடம் தெளி வாய் அறிந்தேன். தாங்கள் சொன்ன பூச தினமும் சமீபத்தில் நெருங்கியது. ஆதலின் நானும் நாளைக்கே அத் தலம் போக ஆவ லுறுகிறேன். அன்பு கூர்ந்து தாங்கள் விடையளித் தருளல் வேண் டும்." எனப் பிரமதேவரைப் பணிந்து விடை பெற்று, பஞ்சேந்திரி யங்களையும் தம் வயப்படுத்தியுள்ள முனிவர் கூட்டங்களுடன் நாரத மாமுனிவர் இடை மருதூருக்கு ஏகினார்.

அத் தலத்தைக் கண்டார். அக மகிழ்ந்தார். காவிரி நதியி லும் மற்றுமுள்ள பல புண்ணிய தீர்த்தங்களிலும் இன்புடன் மூழ்கினார். மகா மகிமை பொருந்திய அசுவமேதப் பிரதக்ஷணமும் செய்தார். கோவிலுட் சென்று, ஸ்ரீ ஜோதிர் மய மகாலிங்கப் பெருமானைக் கண்ணாரக் கண்டு மனமார வாழ்த்தி வணங்கினார். தான் மனதில் கொண்ட பல வரங்களையும் பெற்றார். அளவில்லாத ஆநந்தத்தை யடைந்து தன்னிருப்பிடம் ஏகினார்.

இவ்வாறு அழகு பொருந்திய தைப் பூச உற்சவத்தின் மான்மி யத்தைச் சொல்லி, சூத மாமுனிவர் நைமிசாரண்ய இருஷிகளுக்குப்

பின்னும், மற்ற புராணங்களில் இம் மருதவனத்தைப் பற்றிக் கூறியிருப்பதைத் தெரிவிக்க எண்ணி, உலர்ந்துபோன மீன்கள் இத் தலத்தில், உயிர் பெற்று உருத்திர ரூபமடைந்த கதையைச் சொல்லத் தொடங்கினார்.

பூச மகிமைச் சருக்கம்

முற்றிற்று.

நாற்பத்தொன்பதாவது

உணங்கன் மீனுயிர் பெற்ற சருக்கம்.

உருத்திர லோகத்தில் கணக்கில்லாத பல உருத்திரர்கள் இருக்கிறார்கள். ஆங்கு ஒருகோடி உருத்திரர்கள் தங்கள் செய்கைகளினால் ஒருமைப்பட்டு, ஒருபால் இருந்தார்கள். அன்னவர்கள், தங்களை உருத்திரர்களென்று எண்ணாமல் கர்வமடைந்து ஒருவருக்கொருவர் 'நாம், எல்லாம் வல்ல சிவபெருமானையே ஒத்திருப்போம். நாமும் அவரும் வேறல்ல. அவரும் நம்மில் ஒருவராக ஆவர்.' எனச் சிவபெருமானை மதித்திடாது பேசிக் கொண்டிருந்தார்கள். எல்லாம் அறிய வல்ல எம்பெருமான் இதை யறிந்து, அவ் வுருத்திரர்களுடைய கர்வத்தை அடக்க எண்ணி, அவர்களைப் பார்த்து, 'நம்மை மதியாது, எம்மையும் உங்களுக்குள் ஒருவர் என்று கருதி கர்வமடைந்த காரணத்தால், நீங்கள் பூமியின்கண் மீன்களாய்ப் பிறந்து கடலில் அலையக் கடவீர்கள்' எனச் சபித்தார். இதைக் கேட்ட அந்த உருத்திரகணங்கள் நடுக்கமுற்று, சிவபிரானை வணங்கித் துதிசெய்து, "ஹே கருணையங்கடலே! அகில காரணா, அன்பர்க்கெளிய! ஈசனே! கள் குடித்தவர்கள் எவரையும் மதித்திடாமல் மயக்கங்கொண்டு பேசுவது போல், நாங்கள் எங்கள் வாய்மதத்தினால் அறிவின்றிப் பேசினோம். எத் தகைய மகா பாதகங்களையும் பொருத்து நற்கதி யருளும் தன்மையை யுடைய தாங்கள் பரம ஏழ்மையாகிய எங்களைக் காத்து அருளல் வேண்டும்." எனக் கெஞ்சி மன்றாடினார்கள். இதைக் கேட்ட ஈசனும், உள மகிழ்ந்து, 'திருவிடைமருதூரில் இந்த சாபத்தை நீங்கள் நீங்கப் பெறுவீர்கள்' என்று அருளிச் சென்றார்.

எம்பெருமான் சபித்தபடி அவ் வுருத்திர கணங்கள், இப் பூவுலகின்கண் கடலில் சிறு மீன்களாகி ஒரு கூட்டமாகத் திரிந்து விளங்கின. சில நாட்களுக் கெல்லாம், பிரமனருளால் ஓர் செம்படவன் அக் கடலில் வலை வீசலும் அக் கோடி மீன்களும் அவ் வலையில் அகப்பட எடுத்துக் கரையேற்றப்பட்டன. அச் செம்படவன் அம் மீன்களை நன்கு உலர்த்தி, பக்குவப்படுத்தி, ஓலைப்பாய்க்குள் வைத்து மூட்டையாகக் கட்டி விற்பனைக்கு வைத்திருந்தான். சத்திமுத்தம் என்னும் ஊரில், தந்தை யற்றிருந்த ஓர் பையன், அங்கு சென்று அம் மீன்மூட்டையைப் பொருள்கொடுத்து வாங்கி, அதை ஒரு காளை மாட்டின்மேல் ஏற்றிக்கொண்டு, அதனை விற்பதற்காக, தன்னைப் போன்ற வியாபாரக் கூட்டத்தாரோடு அப் பையனும் தொடர்ந்து சென்றான். இவ்வாறு ஊர் ஊராய்ப் போய்க் கொண்டிருக்கையில், அஸ்தமனமாய்விட்டதால், அக் கூட்டத்தார் இம் மருதூரை யடைந்து, கோவிலுக்குத் தென்புறமாக உருத்திர தீர்த்தம் என்று வழங்கும் குளத்தின் ஒரு பக்கத்தில், தங்கள் தங்கள் மாடுகளிலுள்ள மூட்டைகளையும் இறக்கி வைத்துக் கொண்டு தங்கினார்கள். இந்தப் பையனும் அவர்களோடு தங்கி இரவைக் கழித்தான். பையன் சிறுவனாதலும் வழிநடந்த களைப்பினாலும் அயர்ந்து நித்திரை செய்து விட்டான். பொழுது புலருமுன் அக் கூட்டத்தார் இப் பையனைக் கவனியாது, தம் பிரயாணத்தில் ஏகினார்கள். பிறகு அப் பையன் விழித்துக் கொண்டான். நாற்புறமும் பார்த்தான். ஒருவரையும் காணும். திகைத்தான். அழுதான். அலறினான். மேற்குப் பக்கம் ஓடினான். எதிர்ப்பட்டவரை வினவினான். ஒருவரும் அவனை கவனிக்கவில்லை. பாவம்! இளம் பிராயமுள்ள அறியாப் பையன்! என் செய்வான்! அன்னையார் அடிப்பாரே என்று அலறினான். அச் சமயம், ஏற்கனவே உருத்திரர்களுக்கு வாக்கு அருளியபடி, எம்பெருமான், சடையிற் சூடிய மகுடமும், மேனி முழுமையும் அலங்காரமாய் அணியப் பெற்ற திருநீறும், மார்பில் முப்புரி நூலும், கரத்தில் சூலாயுதமும், விபூதிப்பையும் விளங்கப் பெற்று, கௌபீனதாரியாய் அப் பையன் முன் தோன்றி, 'அன்ப! நீ ஏன் தனியாய் அழுதுகொண்டிருக்கிறாய்' என இன்புடன் கேட்க, அச் சிறுவன், 'ஏ பெரியவரே! நமஸ்கரிக்கின்றேன். நான் சத்திமுத்தியிற் பிறந்த ஒரு செம்படவச் சிறுவன். என்னைத் தனியே இங்கு விடுத்து விட்டு என் கூட்டத்தார் சென்றுவிட்டார்கள். என் மீன்

பொதியை மாட்டின்மேல் ஏற்றுவதற்கு ஒருவரையும் காணும்.' எனப் பணிவுடன் உரைத்திட்டான். இதைக் கேட்டு எம்பெருமான், 'குழந்தாய்! நீ கவலையுறுதே. நாளைய தினத்துக்குள் இவ் விருஷபத்துடன் நீ உன் அன்னையிடம் ஏகலாம். கண்ணைத் துடைத்துக்கொள். ஆனால் தயவு செய்து உன் மீன் மூட்டையை அவிழ்த்து நான் பார்க்கும்படி, அந்த மீன்களைக் காண்பிப்பாய். எனச் சொல்லி, மீன்பொதியை அவிழ்க்கும்படி செய்தார். ஆஹா! இவ் வண்டங்களுக்கெல்லாம் காரணராயிருக்கிற எம்பெருமான் திருவிளையாடல்கள் என்னே! யார் தான் அறிய முடியும்! மீன்பொதியை அவிழ்த்தலும், அவ்வுலர்ந்த மீன்களெல்லாம் உயிர்பெற்றுத் துள்ளிப் பக்கத்திலிருந்த குளத்திற் பாய்ந்தன. ஒரு க்ஷணப் போழ்தில் வெகு உல்லாசத்தோடு அவைகள் அவ்வாவியில் சஞ்சரித்தன. உடனே அக்குளத்திலிருந்து கோடி சூரியர்கள் உதித்தாற் போல் அம் மீன்கள், தம் உருவம் நீங்கி, நெற்றிக் கண்ணும், நாற்றோளும் பெற்று உருத்திர உருவமடைந்து, தேவர்கள் வாழ்த்த, புஷ்பமாரி பொழிய, அரம்பையர்கள் நிர்த்தனம் செய்ய தேவ விமானத்திலேறி அரன் உலகை யடைந்தன. என்ன ஆச்சரியம்! 'எவ் வகையிலும் புண்ணியமே செய்திடும் தன்மையை யுடையவரானாலும், கேடு வந்தடையுங் காலத்து எவருக்கும் மதி கெட்டு விடும், கொஞ்சமேனும் அறிவில்லாமல், எப்பொழுதும் கொடுந் தீச் செயல்களையே புரியும் தன்மையை யுடையவர்களா யிருந்தாலும், பெருமை யுற்றிடும் காலம் வந்தால் அவர்களுக்கு உயர்ந்த அறிவு, ஞானம் தோன்றும்' என்னும் நீதி இவ்வுருத்திர கணங்களினால் எளிதில் அறியலாம்.

கடலில் திரிந்து, செம்படவர்களாற் பிடிபட்டு, காய்ந்துபோன அம் மீன்கணங்கள் இத் தலத்தில் உயிர்பெற்று இக் குளத்தில் படிந்து, அதினின்றும் உருத்திர கணங்களாகிய மகிமையினால் அக் குளத்துக்கு உருத்திர தீர்த்தம் எனப் பெயர் வழங்குகிறது. அத் தீர்த்தத்துக்கு அருகிலுள்ள திருக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் ஈசன், காய்ந்து உலர்ந்து, உருவற்றிருந்த அம் மீன்களுக்கு உயிரையும் நல் லுருவத்தையும் கொடுத்தருளின காரணத்தால், அப் பெருமானை 'ஆன்மநாயகர்' எனச் சொல்லுவார்கள்.

இவ்வாறு எம்பெருமானை மதித்திடாது பேசிய உருத்திரகணங்களை மீளுகச் சபித்துப் பின் இம் மருதூரின்கண், அவர்களுக்குத் திரும்ப உருத்திர உருவம் கொடுத்தருளின கதையைச் சொல்லிச் சூதமாமுனிவர் பின் பொன் னுருவச் சோழன் பெற்றபேற்றின் கதையைச் சொல்வா ராயினர்.

உணங்கன் மீனுயிர் பெற்ற சருக்கம்

முற்றிற்று.

ஐம்பதாவது
பொன் னுருவச் சோழன் சருக்கம்.

முன் சருக்கத்தில் கூறியபடி மூட்டையி லிருந்த மீன்களெல்லாம் உயிர்பெற்றுக் குளத்தில் குதித்ததும், அம் மூட்டைக்கு உரியவனுன அச் சிறுபையன், அச்சமும் ஆச்சரியமும் கொண்டவனுய், எதிர் நின்ற எம்பெருமானைப் பார்த்து, 'என்ன ஐயா! இது உம்முடைய மாயையோ? அல்லது சாமர்த்தியமோ? என் அன்னைக்கு என்ன சொல்வேன்? இம் மாடு, சுமை யில்லாவிட்டால் துள்ளிக்குதித்து, எனக்கும் அடங்காமல் போய்விடுமே! நான் என்ன செய்வது? எனப் பரிதவித்தலும், எம் பெருமான் முறுவல் செய்து 'குழந்தாய்! இங்கு கிடக்கும் செங்கற்களை யெல்லாம் பொறுக்கிக் கட்டி, உன் மாட்டுக்குச் சுமையாகப் போட்டு உன் ஊருக்குச் செல்' என்றருளினர். பையனும் கற்களைப் பொறுக்கி, மூட்டையிற் கட்டலும், எம்பெருமான் தானும் அம் மூட்டையைத் தூக்கி மாட்டின் மேலேற்றி அந்தப் பையனை ஊருக்கு அனுப்பிவிட்டுத் தானும் திருக்கோயிலுட் சென்றுர்.

அப் பையன் திருச் சத்திமுத்தத்தை யடைந்து, நடந்தவைகளை எல்லாம் விபரமாய்த் தன் தாயாருக்கு உரைக்க, அவள் மனந் தளர்ந்து, 'அந்தோ! எனக்குற்ற சிறிது பொருளையும் இழந்துவிட்டேனே! இனி என்கதி அதோகதி யாகிவிட்டதே!' எனத் துக்கித்து, அவ்வூர் அரசனுகிய சோழ மகாராஜனிடம் முறையிட்டாள். அம் மன்னனும் அவளுக்கு அபயம் கொடுத்து, அவளையும் அவள்

புதல்வனையும் தருவித்து விசாரிக்க, அவன், 'ஏ மன்னவ! இடைமருதூர் என்னும் ஊரில், பரந்த சடையும், மேனியில் திருநீறும், மார்பில் பூணூலும், கையில் திரிசூலமும் பெற்றுக் கோவணத்துடன் தோன்றி, ஒருவர் வந்து மீன் மூட்டையை அவிழ்க்கச் சொல்லி மீன்களைக் காணாலும், அவைகள் உயிர்பெற்றுப் பக்கலிலிருந்த குளத்தில் துள்ளி விழுந்துவிட்டன. அதற்குப் பதிலாக ஆங்குள்ள செங்கற்களைப் பொறுக்கச் செய்து, மூட்டையாகக் கட்டி மாட்டின் மேல் ஏற்றி அனுப்பிவிட்டார். இது என்ன அநீதம்! என்றான்.' இதைக் கேட்ட அரசன் ஆச்சரியமுற்று, அச் செங்கல் மூட்டையைத் தருவித்து, அதை அவிழ்த்துப் பார்த்தான். என்னே! எம்பெருமான் திருவிளையாடல். அக்கற்களெல்லாம் பொற் கட்டிகளாகவும், மாணிக்கக் கற்களாகவும் இருந்தன. அரசன் கண்டான். மெய் விதிர்த்தான். ஆச்சரியமுற்றான். எம்பெருமான் திருவிளையாடல் என்று உணர்ந்தான். மருதீசரால் உங்களுக்கு அளிக்கப்பெற்றது என்று அவர்களிடம் அதைக் கொடுத்துவிட்டு, அவர்கள் அடைந்த பாக்கியத்தோடு இன்னும் விசேஷமான ஆடையாபரணங்களும் கொடுத் தனுப்பினான். உடனே, சந்திர சூடராகிய அத் திருநீலகண்டப்பெருமானைத் தான் நேரில் தெரிசனம் செய்ய எண்ணி, பொன்னால் செய்யப்பட்ட தன் மகவினையும் எடுத்துக் கொண்டு இடைமருதூருக்குச் சென்றான்.

ஆங்கு அம் மருதவாணப் பெருமானைப் பணிந்து, 'ஹே ஜகத் ரக்ஷகா! நிர்மல! தாங்கள் தங்கள் பேரருளால் என் தந்தையையும், என் மூதாதைகளையும் தங்கள் ஜோதித் திருவடிக்கு ஆளாக்கிக் கொண்டீர்கள். அதுபோல் அடியேனையும் ஆட்கொண்டு அருளல் வேண்டும். எனக்குப் பின் என் மரபினர் விளங்கும்படி அரசாள்வதற்கு ஓர் மகவு உதித்திடாமை கண்டு, தான தருமங்கள் பல இயற்றினேன். ஒன்றும் பயன்படவில்லை. பொன்னினால் ஓர் குழந்தையைச் செய்து பார்த்து வருகிறேன். அதுவும் இதோ இருக்கிறது. அதற்குத் தாங்கள் உயிர்கொடுத்து அருளல்வேண்டும். எனப் பரிவுடன் பிரார்த்தித்தான். எம்பெருமான் ஒன்றும் பேசாதவராய் இருந்ததைக் கண்ட சோழ மன்னன், 'என் ஆருயிர்த் தலைவ! உணங்கன் மீனினங்களுக்குத் தாங்கள் உயிர் கொடுக்கவில்லையா? அவைகள் செய்த பாக்கியம் நான் பெறவில்லையா? அடியேன் செய்த குற்றம் யாது? என் குற்றங்களை மன்னித்து என் குலம்

விளங்கும்படி இப் பொன் மகவுக்கு உயிர் அருளல் வேண்டும்' என, மனங் கசிந்து வேண்டினன். எம்பெருமானும், 'மன்னவ! நீ வேண்டுகிறபடி அப் பொன் மகவுக்கு நாம் உயிர் அளிக்கின்றோம். ஆனல் அது உனக்கு உதவாது' எனலும், அரசன் உள மகிழ்ந்தா லும் மனக் குறைவுடனிருந்தான். உடனே தேவர்கள் பூமாரி பொழிய, சந்நிதியில் இருந்த பொன் மகவு உயிர்பெற்றது. அக் குழந்தை உயிர் பெற்றதும் கோடி சூரியப் பிரகாசம் போல் எழுந்து சிவபெருமானை வணங்கிப் பின் கோவிலை வலம்வந்து, எம்பெருமான் சந்நிதியில் நின்று, வேத மொழிகளால் துதி பல செய்தது. இப்படி வேத கோஷஞ் செய்துகொண்டு நிற்கும் பொன் னுருவச் சோழனு டைய தலையின்மேல், எம்பெருமான் தன் திருப்பதத்தை வைத்து, பஞ்சாக்ஷரத்தின் மகிமையையும் தன் உண்மையான தத்துவத்தை யும் கூறி, ஐவகைப் பாசத்தின் தன்மையையும் உரைத்துத் தானும் ஜோதி ரூபமாய் விளங்கினர். பொன் னுருவச் சோழனும் அச் சோதியுட் சென்றான். இதைக் கண்ட தேவர்கள் பல்லாண்டு வாழ்த்துக் கூறினர்கள். புஷ்பமாரி பொழிந்தார்கள். தேவ வாத் தியங்கள் கோஷித்தன.

இதைக் கண்ட மன்னன், எம்பெருமானை நமஸ்கரித்து எழுந்து, 'மருதீசரே! ஆன்மநாதா! உங்களது திருவிளையாடல் கள் அநந்தம்! வித்தில்லாமலே விளைந்திடச் செய்திடும் விமலனே! உங்களை யன்றி நான் உற்ற துணை வேறறியேன். இப் பூமியில் என் மரபினர்கள் புனிதராகும்படி மற்றும் ஓர் புத்திரனைக் கொடுத்த ருளல் வேண்டும்.' என விழைவுடன் இறைஞ்சினன். மருதவா ணப் பெருமானும் உள மகிழ்ந்து, மன்னனை நோக்கி, 'அரச! உன் இஷ்டப்படி ஓர் புத்திரனை அளிப்போம். நீ நமது திருக்கோவில், அழகு பெறத் திருப்பணிகள் பல உடனே செய்தல் வேண்டும்' எனத் திருவாய்மலர்ந்தருள, மன்னன் ஈசனைப் பார்த்து, 'ஹே மருதவாண! ரூபியாயும், அரூபியாயும் விளங்கும் தேவ தேவ! தாங்கள் சொல்வது உண்மையே. ஆனல் அப் பணியை நான் அன் புடன் எவுதற்கு குழந்தை இருந்தா லல்லவோ மனதுக்கு உகந்திருக் கும். திருப்பணிகளை இன்புறச் செய்ய இயலும். ஆகையால் முத லில் தாங்கள் எனக்குப் புத்திர சந்தானம் கொடுத்தருள வேண்டும்'. எனப் பணிந்தான். எம்பெருமான் கனிந்துருகிய மனதையுடைய அன்பர்களின் வேண்டுகோளை எப்படி மறுக்க இயலும்! அக் கரு

ணைக் கடலாகிய சிவபெருமான் அம் மன்னன் மனைவியாரின் வயிற்றில் உடனே கருத்தரிக்க அருள் புரியவும், காலக் கிரமத்தில், அம் மாது திவ்ய தேஜோ மயமான ஓர் ஆண் மகவையும் பெற்றெடுத்தாள். அக் குழந்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, நம் மருதீசருடைய சந்நிதி வந்து, அவர் திருவடிகளில் பணிந்து நின்றான். அப் புதல்வனை எம்பெருமான் தம் கருணை விழிகளால் நோக்கி, 'அரசன் தம்பிரானே வருக' என அழைத்து, 'நீ நம் கோவிலின் பக்கலிலுள்ள காவிரி நதியை சற்று தூரத்தில் வடக்கே ஒதுக்கிப் பின் நம் கோவிலுக்குத் திருப்பணிகள் செய்திடுக என்றுரைக்க அளவிலா ஆநந்தங் கொண்டு, தான் சிவபெருமானை வணங்கினதையும், அப் பெருமான் உரைத்த மொழிகளையும் மிக்க மகிழ்ச்சியோடு தன் தந்தையாரிடம் பகர்ந்தான். அம் மன்னனும் உவகை யெய்தி, ஏற்கனவே எம்பெருமான் அருளியவற்றையும் தன் புதல்வனுக்குத் தெரிவித்து அதற்குரிய எத்தனங்கள் செய்யத் தொடங்கினான்.

உடனே தன் பூத கணங்களை ஏவி, காவிரி நதியை வடபுறம் ஒதுக்கும்படி ஏவினான். அக் காவிரியில் பெருகி வரும் மிகுதியான ஜலம் வடியும்பொருட்டு அதன் வடபால் கொள்ளிடம் என்னும் நதியையும் ஏற்படுத்தினான். சிற்ப சாஸ்திரங்களில் வல்ல பல நிபுணர்களைத் தருவித்து, அவர்களுக்கு வேண்டிய ஆடை யாபரணாதிகள் திருப்தியுற அளித்துப் பின், மிக்கு அழகு பொருந்த இத் தலத்தில் நகரம் நிர்மாணிக்கும்படி, மன்னன் ஆக்ஞாபனம் செய்தான். அவர்கள், உடனே, விசாலமான நீண்ட வீதிகள், சிறிய சந்துகள், அழகிய கொடிகள் கட்டப்பட்ட மாளிகைகள், உயர் அணிக் கோபுரங்கள் பல இயற்றினார்கள். பின்னும் அலங்கார மண்டபங்கள், நிர்த்தன சாலைகள், சங்கீத சாலைகள், விசாலமான முற்றங்கள் பல நிர்மாணித்தார்கள். இன்னும் அநேக விதமான பாடசாலைகள், துறவோர் தங்கு மடங்கள், மன்னர்கள் தங்கும் விடுதிகள் பல அமைத்தார்கள். மேலும் அம்மன்னன் திருக்கோவிலுள் திருப்பணிகள் பல இயற்றி, எம்பெருமானை மகிழ்வுறச் செய்தான். பிறகு இவைகளுக்கெல்லாம் திருஷ்டி தோஷம் கழிக்க சாந்திகள் பல செய்து, இந் நகரத்தில் முறைப்படி பல வருணத்தாரையும் குடியேற்றினான். பின் மருதவாணப் பெருமானுக்கு ஆகமங்களில் கூறிய முறை தவறாது பூசைகளும் செய்வித்து, நித்திய உற்சவங்களையும்,

மாதந்தோறும் நடைபெற வேண்டிய விழாக்களையும் சிறப்புற பக்தியோடு நடத்தினான். விசேஷ பெருமைகள் வாய்ந்து விளங்கப் பெற்ற பூச உற்சவத்தையும் எல்லோரும் கண்டு, ஆநந்திக்கும்படி சிறப்பாக நடத்தினான். இவ்வளவும் மன மகிழ்ச்சியோடு புரிந்து விட்டு, எம்பெருமான் சந்நிதியிற் சென்று வணங்கி, மெய்ம் மறந்து நெஞ்சு நெக்குருகும்படியாய்ப் பல துதிகள் செய்து நின்றான். பரம கருணை நிதியாகிய மருதீசர் உள மகிழ்ந்து, 'மன்ன! நீ செய்த திருப்பணிகளையும், திருக்கோலங்களையும், அன்புடன் ஏற்றுக் கொண்டோம். மகிழ்வு எய்தினோம். உனக்கு நம்முடைய அருளும் நிறைவுற அருளினோம். இன்னும் கொஞ்ச காலம் நீ இப்பூவுலகின் கண் இன்புற்று வாழ்ந்து, பின் நமது அருளினால் நம் பதத்தை அடைவாய். கவலை யுறவேண்டாம். உன் தனயனுக்கும் நமது அருள் பூரணமாய் அனுக்ரகித்தோம். நம் அடியார்களுள் ஒருவனாக அவனையும் அங்கீகரித்தோம். என உரைத்தருளினார். இவையெல்லாம் கேட்ட சோழமன்னன் மனந்தெளிந்து, சதாகாலம் எம்பெருமானையே மனதில் தியானித்தவனாய் தன் அருந்தவப் புதல்வனுடன் படைகள் சூழத் தன்னிருப்பிடம் ஏகினான்.

இவ்வாறு அப் பொன்னுருவச் சோழன் உயிர்பெற்றுச் சோதியை யடைந்ததையும், அதன் பின் மன்னனுக்குத் திருக்குமாரன் தோன்றிப் பக்தியோடு அம் மன்னன், மருதவாணருக்குச் செய்த வைபவங்களையும், எம்பெருமான் அம் மன்னனோடு நேருக்கு நேராய் வார்த்தைக ளாடினதையும், பக்தனின் மனம் கோணாது அருளுந் தன்மையை யுடையவராய் இத் தலத்தில் வீற்றிருக்கும் பெருமையையும், சூத மா முனிவர் நைமிசாரண்ய இருஷிகளுக்குக் கூறிப் பின், சுணங்கன் கதி பெற்ற வரலாற்றைக் கூறுவாராயினர்.

பொன்னுருவச் சோழன் சருக்கம்

முற்றிற்று.

ஐம்பத்தொன்றாவது

சுணங்கன் கதி பெற்ற சருக்கம்.

←═══:0:═══→

இப்பூவுலகில் ஒருவன் பூர்வ ஜன்மத்தில் மானிடனாய்ப் பிறந்து திருநீலகண்டப் பெருமானின் திருக் கோவிலில் நிர்வாக அதிகாரம் பெற்றுத் தேவஸ்தான விசாரணை நடத்துங்கால், சில சிவா பராதமான கொடு வினைகளைச் செய்ய அதன் பயனாகப் பல தாழ்ந்த பிறவிகளைப் பெற்றுக் கடைசியில் நாயாகப் பிறந்து திரிந்தான்.

இப் பூதலத்தில் அந்நாய், ஊரூராய்த் திரிந்து அலைந்து வருங்கால், ஓர் தினம் இவ்விடைமருதுரை யடைந்து, அங்கு, பவக்கடலை நீந்தி முத்தியாகிய கரையை அடைய தவக்கலனை நடத்தும் ஓர் சிவயோகியார் தங்கியிருந்த மடத்தின் வாயிலிற் சென்று, மிக்க தளர்வுற்ற மனத்தோடு படுத்திருந்தது. அத் தவயோகியாரும், அந் நாயைக் கண்டு மனமிரங்கி, தான் இல்லந்தோறும் சென்று இரந்து வந்த அன்னத்தில் தான் உண்டு, மிகுந்ததை அந் நாய்க்குப் போடுவது வழக்கம். அச் சேஷ அன்னத்தை உண்ட, நன்றியறிவுள்ள அந் நாயும் வேறிடம் புகாமல் தினம் அங்கேயே தங்கியிருந்தது.

இவ்வாறு சிவயோகியாரின் உச்சிஷ்டத்தைப் புசித்து வளர்ந்த அந் நாய் மறுபிறப்பில், கங்கை யென்னும் பிரபல நதி விளங்கப் பெற்ற காசி தேசத்தை யாளும் மன்னன் மன மகிழும்படி, அவனுக்குப் பெண்ணாகப் பிறந்தது. அப் பெண்மணியும் சுக்கில பக்ஷத்துச் சந்திரன் போல், சகல இலக்ஷணங்களும் பொருந்தி, பூர்வஞானத்துடன் தினே தினே தேஜஸ் பெருக வளர்ந்துவந்தாள். இதைக் கண்ட காசி மன்னன், அவளுக்கு உகந்த நாயகன் சோழ வம்சத்து ராஜ குமாரனே யெனத் தீர்மானித்து முறைப்படி அவளை அன்னவனுக்கு விவாகமும் செய்து வைத்தான். இவ்வாறு மணக்கோலங் கொண்டு, அப் பெண்மணி சோழ மன்னனுடன் ரதியும் மன்மதனும் போல், ஓருயிராயும், இரண்டு உடலாகவும் விளங்கி வாழ்ந்தாள்.

இப்படி யிருக்கும் நாளில், அப் பெண்மணிக்கு நம் இடைமருதீசரைத் தெரிசனை செய்ய வேண்டு மென்கிற ஆர்வம் மனதில்

---

*சுணங்கன் = நாய்.

உதித்தது. உடனே தன்னுயிர்க் காதலனிடம் தன் எண்ணத்தைத் தெரிவித்தாள். அம் மன்னனும் மருதீசரிடம் பரம பக்தி வாய்ந் தவன் ஆதலால், அவள் எண்ணத்துக்கு மெச்சி, அன்புடன் அவள் அத் தலம் ஏக விடையளித்தான். உடனே அழகிய சிவிகையின் மேல் ஊர்ந்து பல கன்னியர்கள் புடை சூழ, வாளாயுதத்தை யேந் திய பல வீரர்கள் முன்னே செல்ல, பல வித வாத்யங்கள் முழங்க, ஊர் வலத்துக்குரிய இராஜ சின்னங்கள் பலவும் சூழ்ந்துவர, மகிழ்ச் சியுடன் காஞ்சிமா நகரத்திலிருந்து இவ் விடைமருதூர் வந்து அடைந்தாள். காவிரியில் ஸ்நானம் செய்து, நித்திய விதிகளை முடித்துக் கொண்டு, அப் பெண்மணி, கால் நடையாகத் தனக் குப் பூர்வ ஜன்மத்தில் அன்ன மளித்த சிவ யோகியாரினுடைய மடத்துக்குச் சென்றாள். அங்கு அவரைத் தரிசித்து, நமஸ்கரித்து எதிர் நின்று, 'ஹே முனிவர் பெரும! அடியேனைத் தாங்கள் அறி வீர்களா?' என வினவலும், அம் முனிவர் அவளை அறியாது, அவள் வரலாற்றை அவளையே சொல்லும்படிச் சொன்னார். அம் மாது சிரோமணி, 'யோகீச்சுரரே! பூர்வ ஜன்மத்தில் தங்கள் பரிகல சேடத்தை உண்டு, மடத்தின் எதிரிற்கிடந்த நாயெனப் பணி வோடு இசைத்தாள்.

இதைக் கேட்ட அத் தவயோகியார், மன நெகிழ்ந்து, மெய்ம் மறந்து, பதறி வீழ்ந்து, 'ஏ ஜெகதீசா! தீனதயாபரா! சிவனடி யார்களின் உச்சிஷ்டத்தை உண்டவர்களுக்கும் மறு பிறப்பு இல்லை யென்றல்லவோ இருந்தேன்! பல சாஸ்திரங்கள் கூறுவதும் பொய் யா! காயக் கிலேசப் செய்து, காய் கனிகளைத் தின்று, தவம் புரிவ தனால் என்ன பயன்! அடியார்கள் உண்ட மிகுதியைப் புசித்த இந் நாய், சாஸ்திரங்களில் கூறுகிறபடி ஜோதியை அடைதல் அல்லவா தகுதி! இப் பிறவியை அடைந்தது என்னே! அந்த சாஸ்திரங்க ளும், ஆன்றோர் வாக்குகளும் பொய்யாகும் என்று நான் இதுவரை உணர இல்லையே! ஐயோ! அகில காரணா! நான் தவவேடம் பூண்டு, இதுகாறும் நம்பியிருந்த பெருமைகளெல்லாம் வீணாயிற்றே! என் வாழ்நாளும் வீணாயிற்றே! அல்லாது, என்னை அடியார்க ளுட் கொள்ளவில்லையோ! என வியப்பும ஐயமும் உற்று, அம்முனி வர் அப் பெண்மணியுடன் எம்பெருமான் சந்நிதியை அடைந்தார்.

மருதவாணப் பெருமானின் உபய திருவடித் தாமரைகளிலும் பணிந்து, கைகுவித்து நின்று, 'மின்னற்கொடி போன்ற இடையும்,

பரந்து குவிந்த தனங்களும், பொற்றொடி யணிந்த கரமும், ஒரு பாகத்தில் விளங்கப் பெற்ற அர்த்த நாரீச்சுவரரே! பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா இவைகளையே உருவங்களாகப் பெற்று விளங்கும் எம்பெருமானே! வேதக் கொழுந்தே! சோதியே! அண்டர் நாயக! நிர்மல! நிர்க்குண! நிராமய! பராபர! அடியார்க்கெளிய! என் அன்ப! மருதீச! பரசிவ! 'அடியார்கள் உச்சிஷ்டத்தை உண்டவர்க்கும் மறு பிறப்பு உண்டோ' என உரைக்கலும், சிவபெருமான் 'இல்லை' என அருளி, ஒரே ஜோதி வடிவமாக விளங்கினார். அஜ்ஜோதிக்குள் முதலில் அப் பெண்மணியும் பின் அம் முனிவரும் அடங்கினார்கள். இதைக்கண்டோர் அனைவரும், ஆநந்தங் கொண்டனர். விழிநீர் சொரிந்தனர். தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள். வேத ஒலிகள் முழங்கின. தேவ வாத்தியங்கள் ஆர்த்தன.

இவ்வாறு அடியார்கள் உச்சிஷ்டத்தினால் நாய் ஜன்மம் நீங்கி, பூர்வஞானத்துடன் சிவபக்தி குன்றாமல் இராஜகுமாரியாகிப் பின், எம்பெருமான் ஜோதியுட் கலந்த வரலாற்றைக் கூறிப் பின், சூத மாமுனிவர் திரியம்பக முனிவரின் பெருமையைக் கூறுவாராயினார்.

சுணங்கன் கதி பெற்ற சருக்கம்

முற்றிற்று.

ஐம்பத்திரண்டாவது

திரியம்பகச் சருக்கம்.

சோழவளநாட்டில் ஓர் நகரில், அந்தணர் குலத்தில் உதித்து, ஒப்பற்றவராய்த் 'திரியம்பகர்' எனப் பெயர்கொண்டு விளங்கும் ஒருவர் வசித்துவந்தார். அவர் நான்கு வேதம், ஆறு சாஸ்திரம், அறுபத்துநான்கு கலைக்ஞானம், பதினெண் புராணம் முதலியன நன்கு உணர்ந்தவர். அந்த சிவபக்தர், மிக்க தாகமுற்றோர் நந்நீரை நாடிச் செல்வதும், பிணியுற்றோர் வைத்திய நிபுணர்களை நாடுவதும், கொடிய வெயிலிலிருந்தோர் குளிர் நிழலைச் சார்வதும்

உலக இயற்கையன்றோ! அதுபோல் ஊழ்வினை நீங்கிப் பேரின்பம் உற்றிடக் குருவருள் முதன்மையன்றோ? இந் நெறியை உணர்ந்த அவ் வந்தணர்,

> குலனுட னருளுந்தெய்வங் கொள்கையு மேன்மை தானுங்
> கலைபயி றெளிவு நேடுங் களங்கறு பதங்க ளன்கு
> நிலன்மலை நிறைகோல் பூவி னிலவுறு குணனு மன்பு
> முலகிய லறிவும்வல்ல வொருகுரவனைக கண்டேத்தி.

மேற்கூறிய நற்குணங்கள் ஒருங்கே வாய்ந்த ஓர் குருவைக் கண்டு வணங்கித் தான் நற்கதியடையும்வண்ணம் அனுக்ரகம்பெற எண்ணினார். எண்ணியவாறே சென்று, ஓர் தினம் எதிர்நின்று கைகட்டி வாய் புதைத்துக் குருவைப் பிரியாமல் தொண்டு செய்துவரும் நாளில் 'என் குருமணியே! அடியேன் தங்கள் அருளைப் பெற்றேன். கல்வியும் கற்றேன். எம்பெருமானை என்றும் பிரியாதிருக்கும் தன்மையையும் பசு பதி பாசம் என்னும் முப்பொருள்களின் விசேஷத்தையும் ஆராயுங்கால் என் மனதில் தெளிவு உண்டாகவில்லை. இதை உணர இன்னும் ஏதேனும் வழி உளதோ?' எனப் பணிவுடன் வினவலுற்றார். அக்குரவரும், அத் திரியம்பகருடைய அறிவுக்கு மெச்சி, அவரை நல்வழிப் படுத்தும் வண்ணம், 'இன்னும் உண்டு' எனப் பதிலளித்தார்.

இதைக் கேட்ட அந்தணர், கொடுந் துன்பங்கள் பல இயற்றக் கூடிய பைசாசங்களைக் கண்டு, அவைகளை நீக்குதல் போல், தன் வீடு, மனை, மனைவி மக்கள், மற்றுமுள்ள எல்லாப் பொருள்களையும் வெறுத்தவராய், பரிசுத்தமான மனதுடன், அக் குருமணியைத் தான் கொண்ட பொருளாக மதித்து, அவருக்குப் பணிவிடைகள் பலவும் புரிந்துவந்தார். நாளடைவில் அக் குருவின் அருளால் அவ் வந்தணர் உயர்ந்த மெய்ஞ்ஞானத்தை யடைந்தார். இப்படி யிருக்குங் காலை அக் குருமணிக்கும், சிவோகம் மேலிட்டுச் சிவபிரான் திருவடியை அடையுங்காலம் சமீபித்து விட்டது. இதனை யறிந்த திரியம்பகர், அவரை விட்டகலாது பக்கத்திலேயே இருக்குங்கால், அன்னார் தாகமுற்று, தண்ணீர் கேட்கலும், அத் திரியம்பகர் பக்கத்திலுள்ள ஓர் தடாகத்திற்கு ஓடிச் சென்றார். தான் திரும்பி வருமுன், அக் குருமுனிவர், 'முன்னிசைத்ததே வாய்மை' எனப் பொருள் படத் தரையில் நன்றாக விளங்கும்படி எழுதிவிட்டுத் தான் சிவ

பதத்தை யடைந்து விட்டார். இதனிடையில் அவ்வழியாக வந்த ஓர் கழைக்கூத்தி, பூமியின் மேல் எழுதப்பட்டிருந்த அவ்வசனங் களைத் தன் காதிலுள்ள ஓலையில் எழுதிக் காதில் அணிந்து கொண்டு, தரையிலிருந்ததைக் கலைத்துத் தன் குடிசைக்குச் சென்றனள்.

திரியம்பகர் திரும்பி வந்து, தன் குருமுனிவர் சிவலோகம் சார்ந்ததைக் கண்டனர். தரையில் ஏதோ எழுதி அழிக்கப்பட்டிருந்ததைக் கவனித்தார். தியங்கினார். மயங்கினார். தன் குருவினுடைய தாகத்தைத் தணிக்கக் கையில் கொண்டிருந்த நன் னீருடன் கண்ணீரையும் உகுத்துக் கதறினார். தரையில் வீழ்ந்தார். புரண்டழுதார். மெல்ல எழுந்தார். ஒருவாறு களைதெளிந்தனராகி மன முருகினர். என் செய்வார் பாவம்! குருவுக்கு உகந்த இச் சீடர்! பின் வேத ஆகமங்களில் கூறிய முறைப்படித் தன் குருவுக்கு ஈமக் கடன்களை முடித்தார். பிறகு, தரையில் எழுதி அழிக்கப்பட்டது இன்னது என்று அறிந்து கொள்ள ஆராய்வாராயினர். அங்கிருந்தோரை வினவினர். அக் கழைக்கூத்தி அங்கு வந்து செய்த காரியங்களை அங்குள்ளோர் சொல்லக் கேட்டு, அவளுடைய வீட்டைத் தேடிச் சென்று, அக் கழைக்கூத்தியை வினவ, அவளும் அக் குருமுனிவரால் தரையின்மேல் எழுதப்பட்டிருந்ததைத் தன் காது ஓலையில் எழுதிக் கொண்டு, அதைக் கலைத்து விட்டதை உள்ளபடியே உரைத்திட்டாள். உடனே அவ் வேதியர் மன மகிழ்ந்து, அவளையே அன்று முதல் தனக்குக் குருவாகக் கொண்டு, மிக்க விருப்புடன் அவளுக்குக் குற்றேவல் பல புரிந்து, அவளை மகிழ்வித்து, அவளுடன் ஊர் ஊராய்த் திரிவாராயினர். இவ்வாறு, அவ்வந்தணர் கழைக் கூத்தியுடன் அவள் ஆடும் இடங்களுக் கெல்லாம், அதற்குரிய மூங்கில்கள், கயிறுகள், குண்டு சட்டிகள், பறைகள் எல்லாம் தூக்கிச் செல்வது வழக்கம். ஆட்டம் ஆரம்பமானவுடன், அந்தந்த சாமான்களை அதனதன் இடத்தில் முறைப்படி வேதியர் வைப்பார். திரியம்பகர், விசேஷ குருபக்தி யுள்ளவராதலால், அவரால் வைக்கப்பட்ட பொருள்கள் தத்தம் வேலைகளைத் தாமே செய்யும். மூங்கில்கள் தாமே நிற்கும். கயிறுகள் தாமே நாற்புறமும் வலுவாக அமையும். பறைகள் முழங்கும். இதைக் கண்ட யாவரும்

விசேஷமாகப் பொருள் கொடுப்பார்கள். கழைக்கூத்திக்குப் பொருள் விசேஷமாய்க் கிடைப்பதனால், ஒருவாறு சந்தோஷமுண்டானாலும், இவ்வற்புதச் செயல்களைப் பார்த்து மனம் மயங்குவாள்.

அந்தோ! தாழ்ந்த குலத்து உதித்து, அதிலும் கல்வி யறிவில்லாத ஸ்திரீஜாதி யல்லவா! ஆழ்ந்த புத்தி உண்டாக வில்லை. தன் ஏவலாளர்களைக் கொண்டு, அவ்வேதியரைப் பல விதத்திலும் வைதும், பிரம்புகளினால் அவர் சரீரத்தில் புடைத்தும், தொந்திரவு பல செய்வாள். இவைக ளெல்லாம் குருவினால் அளிக்கப்பட்ட தண்டனையெனக் கருதி அவ் வேதியர் மகிழ்ந்திருப்பார். அவ்வடிகளினால் அவர் சரீரத்தில் தழும்பும் இராது. இதைக் கண்டு எல்லோரும் ஆச்சரியப்படுவார். ஏனைய அந்தணர்கள், இவரை நோக்கி, 'நீர் கழைக்கூத்தியுடன் அன்னம் அருந்தினீர். சண்டாளனாக ஆகிவிட்டீர். எங்களுடன் கலக்கத் தகாது' என இழிவாய்ப் பேசுவார்கள். இதையெல்லாம் திரியம்பகர் வெகு பொறுமையுடன் ஏற்று மனம் சலியாமல் இருப்பார். எத்தினை முயற்சி யெடுத்துக்கொண்டாலும் ஆகுங்காலம் வந்தாலல்லவோ காரிய சித்தி யுண்டாகும். திரியம்பக முனிவருக்குக் குருவினருள் கிடைக்கும் காலம் இப்பொழுதுதான் நெருங்கினது.

ஒரு தினம், அக் கழைக்கூத்தி, வடக்கயிற்றின்மேல் இருந்து, பற்பல வேடிக்கைகள் காட்டி வருகையில், அவ் வேதியரைப் பார்த்துத் தனக்குத் தாகத்துக்குக் கொஞ்சம் தண்ணீர் கொண்டுவரும்படி சொன்னாள். அவள் சொல்லலும், அவளுடைய கரத்தில் அமிர்தம்போன்று உருசியுள்ள நன்னீருடன் கலசம் வந்தது. இதைக் கண்டதும் அவள் வியப்புற்று, அத் திரியம்பகப் பெருமானுடைய மகிமையை உள்ளங்கை நெல்லிக் கனிபோல் அப்பொழுதுதான் உணர்ந்தாள். உடனே கீழே இறங்கினாள். திரியம்பக முனிவரிடம் மன மிரங்கினாள். அவர் அருகில் சென்றாள். அடி பணிந்தாள். ஓலையை அவரிடம் கொடுத்தாள். பின்னும், 'ஏ வேதியர் திலகமே! தாங்கள் இங்குற்ற நோக்கத்தையும், தங்கள் மகிமையையும் சிறிது தெரிந்திருந்தும், மூடத் தனத்தினால் பல குறைவுகள் இயற்றினேன். 'பெண்புத்தி பேதமை யுடைய தல்லவோ?' அதிலும் நான் ஈனசாதி ஸ்திரீ யல்லவா, நான் செய்த பெரும்பிழையை யெல்லாம் பொறுத்தருளல் வேண்டும்.' எனப்

பரிவுடன் உரைத்தனள். அத் திரியம்பக முனிவரும், அவளையும், அவளிடமுள்ள குரு மொழிகளையும் வணங்கி, அவ்வெழுத்துக் களைப் பார்க்கலுற்றார். 'முன் உரைத்ததே உண்மை. அதைத் தழுவு. சித்தமே சிவம்.' என எழுதி யிருந்ததைத் தெரிந்து பேரா னந்தங் கொண்டார்.

அம் மொழிகளின் பொருள்களையும், அதனுடைய விரிந்த மகிமையையும் நினைந்து நினைந்து, தன் குருவினருளை மனதில் தியா னித்து, தன்னையும் மறந்து, விழிகளி னின்றும் ஆநந்தக் கண்ணீர் பெருக, அதனால் உடம்பெல்லாம் நனைந்து, ஓர் பதுமைபோல் நின் றார். பின் அக் கழைக் கூத்தியிடம் விடை பெற்றுக்கொண்டு, அவளை விட்டு நீங்கி, ஸ்ரீ உமாதேவிசமேத எம்பெருமான் வீற்றிரு க்கும் பல சிவஸ்தலங்களுக்குச் சென்று, தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து, எம்பெருமானைத் தெரிசனை செய்து வந்தார். இவ்வாறு வருகையில் எத்தகைய கொடிய தீவினைகளையும், தெரிசித்த மாத் திரத்தில் போக்கவல்ல மிக்க சிறப்பு வாய்ந்த புஷ்ப உற்சவத்தின் மகிமை யாவர்க்கும் தெரிந்ததே! அத்தகைய உற்சவத்தின் தீர்த்த தினமாகிய புஷ்ப தினத்தன்று அத் திரியம்பகர் இடைமரு தூரை அடைந்தார்.

அகத்தியாதி இருஷிகளிடமுள்ள பேரன்பினால் உமாதேவியா ரின் தவத்துக்கு உகந்து, எம்பெருமான் ஏகநாயக மூர்த்தியாய் அன் பர்க் கெளியராய் வீற்றிருக்கும் ஜோதியைக் கண்டார். மிருகண்டு மாமுனிவரின் புதல்வரான மார்க்கண்டேயருடைய விருப்பத்துக்கு இணங்கி, அமைந்திருக்கும் அர்த்தநாரீசுவர வடிவையும் தரிசித் தார். கருணை நிதியாய் விளங்கும் பெருநலமாமுலை யம்மையையும் வணங்கினார். குருவி னருளால் அவ் வந்தணருக்குச் சிவபக்தி மேலிட்டு உள்ள நெக்குருகிடத் துதிகள் பல செய்தார். ஆநந்தக் கண்ணீர் வடித்தார். பின் பல புண்ணிய தீர்த்தங்களில் அத னதன் சிறப்புக்களை யெல்லாம் மனதில் நினைந்து கொண்டு ஸ்நானம் செய்தார். பூசத்துறையையும் வந்தடைந்தார். இதற்குள் தீர்த் தம் கொடுத்தருள பஞ்சமூர்த்திகளும் விருஷபாதி வாகனங்களில் எழுந்தளினார்கள். இச்சமயம், எம்பெருமானைத் தரிசனம் செய்ய, திரியம்பகர் சமீபம் சென்றார். இதைக் கண்ட அந்தணர்களும், ஏனை யோர்களும் அம் முனிவரைப் பார்த்து, 'ஏ சண்டாள! நீ கழைக்

கூத்தியிடம் கழுதை மேய்த்தும், அவளுடன் அயின்றும், சுமை சுமந்தும் இருந்தனே. ஆதலால் நீ இங்கு வருதல் தகுதியல்ல. தூர நில்.' எனக் கடிந்துரைத்தார்கள்.

இதைக் கேட்டு, திரியம்பகர், 'ஏ வேதியர்களே! என்னைத் தாறுமாறாகப் பேசாதீர்கள். என் மனோ நிலைமையைச் சிவபெருமானே நன்கு அறிவர். நீங்கள் உங்களிடமுள்ள கோபத்தை நீக்கிவிட்டுக் கேட்பீர்களானால், எம்பெருமானே நேரில் அருள் புரிவார்.' எனப் பணிவுடன் வினயமாகப் பதில் உரைத்தார்.

உடனே அவ் வந்தணர்கள் எம்பெருமானை நோக்கி, 'ஏ சங்கரா! மருதீசா! எல்லோராலும் இகழப்படும் கழைக்கூத்தியுடன் ஊர் தோறும், பன்றியைப்போல் திரிந்து வந்த இத் திரியம்பகன், பூசத் துறையில் ஸ்நானம் செய்யவும், தங்கள் அடியார்களுடன் கலந்து இருக்கவும் தகுமோ' என ஐயமுற்றுக் கேட்கலுற்றார்கள். பெரியோர்கள் அன்புடன் கலங்கமில்லாத மனதோடு செய்யப்படும் பாவச் செயல்களும் புண்ணியமாகவே கருதப்படும். மழலைச் சேய்களின் வன் சொற்களைப் பெற்றோர் கடுஞ் சொற்களாகப் பாவிப்பார்களா? அவைகளைக்கண்டு ஆநந்த முறுதல் அல்லவா இயற்கை! இத் தன்மையையே, எம்பெருமானும், உள்ளன்புள்ள தன் பக்தர்களிடத்தில் உடைத்தாயிருக்கிறார். கன்றுக் குட்டியானது தாயினைக் காலால் உதைத்து உபத்திரவித்தால், பசு வருந்தினாலும் கன்றுக்குத் தீங்கிழைக்குமா? அவ்வாறே விருஷபாரூடராய் எழுந்தருளியிருக்கும் மருதவாணப் பெருமானை நோக்கி, வினவினார்கள். அசரீரியாக 'இத் திரியம்பகன் நமக்கு மெய்யன்பன். நீங்கள் அவனை அடியார்களுக்குள் சேர்த்துக்கொள்ளுதல் தகும் தகும் தகும்.' என யாவரும் கேட்கும்படி மும்முறை சப்தம் உண்டாயிற்று. ஆஹா! என்ன ஆச்சரியம்! அங்குத் தலை வணங்கி நின்ற திரியம்பக முனிவரைக் காணப்படவில்லை. எம்பெருமான் அன்புடன், 'திரியம்பக வருக' என அழைத்துத் தமது திருவடிகளில் சேர்த்துக்கொண்டுவிட்டார். தேவ துந்துபிகள் முழங்கின. புஷ்பமாரி பொழிந்தன. தேவமாதர்கள் நிர்த்தனம் செய்தார்கள். இதை யெல்லாம் கலை மறை வல்லோராகிய அந்தணர்கள் கண்டார்கள். உளம் நடுங்கினர்கள். மெய் பதைத்தார்கள். ஆகாயத்திடை முழங்கின ஐவகை ஒலியையும் கேட்டார்கள். எம்பெருமானைப் பலவாறு துதித்து நின்றார்கள்.

'ஏ முனிவர்களே! குருவின் அருளுக்கு எம்மாத்திரம் மகிமை உண்டு என்பதை எம்பெருமானே நேரில் அருளியிருக்கும் தன்மையை உணர்தலே மேலாகும்.' எனச் சூதமாமுனிவர் உரைத்தலும், சவுனகாதி முனிவர்கள், முனிவர் பெரும! இம் மருதூரின் மகிமையை நாங்கள் இதுகாறும் அறிந்திலோம். ஈண்டு நன்கு உணர்ந்தோம். இன்றே அத்தலத்துக்குச் சென்று அங்குள்ள தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து, மருதவாணப் பெருமானை வணங்க அவாவும் உற்றோம். அதற்கு வேண்டிய முறைகளையும் உரைத்தருளல் வேண்டும்' எனப் பணிந்தார்கள்.

முனிவர்களே! நீங்கள் இதுகாறும் இத்தலத்தின் மகிமையைக் கேட்டுப் பின் அத்தலத்திற்குப் போய் அவ் வைபவங்களை நேரில் தெரிசித்து ஆநந்திக்கா விட்டால், ஒருவன் ஓர் ஊருக்குப் போக வழி கேட்டுத் தெரிந்து, பின் அவ்வூருக்குப் போகாமலிருப்பதை ஒக்கும். ஆகையால், நீவிர் கொண்ட எண்ணமும் தகுதியானதே. நாமும் அப்படியே எண்ணினோம். தேனும் பாலும் கலந்தாற்போல் ஆயிற்று என்றார்.

உடனே சூதமா முனிவரைத் தலைமையாகக் கொண்டு, சௌனகாதி இருஷிகள் யாவரும் கங்கையாதி பல தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்து, பல சிவஸ்தலங்களிலும் தங்கி, இம் மருதூரை வந்து சேர்ந்தார்கள். காவிரி முதலாதி பல புண்ணிய தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்து, அந்நகர் வளங்களையும் நேரில் கண்டு மகிழ்ச்சியடைந்தார்கள். சூதமா முனிவர் வர்ணித்துச் சொன்னதைக் காட்டிலும், பன்மடங்கு அதிகமாயிருப்பதைக் கண்டு உளமகிழ்ந்து, பெருநலமாமுலை யம்மை சமேத ஸ்ரீ ஜோதிர்மய மகாலிங்க மூர்த்தியையும், ஏகநாயகப் பெருமானையும், மனமார வாழ்த்தித் தெரிசனை செய்தார்கள். அப் பெருமானைப் பூசை செய்து, சைவம் குன்றாமல் காத்துவந்த, ஆண்ட விநாயகரையும் மருதவாணப் பெருமானையும், அன்பொழுகத் தொழுது வணங்கினார்கள். அசுவமேத முதலான பிரதக்ஷணமும் செய்தார்கள். இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி என மூவகை சக்திகளையும் தன்னிடத்தே கொண்டு கலியுக வரதராய் விளங்கி, எம்பெருமான் உமாதேவியாருக்கு உபதேசித்த மொழிகளைத் தாயின் மடியிலிருந்தபடியே கேட்டு, உலகோர் உய்யும்-